
# அருணாசலம்

## நூற்றாண்டு விழா மலர்

1910-2010




யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
அளவெட்டி

[illegible]

# அருணாசலம்

வெளியீடு :
யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
அளவெட்டி
2010

# பொருளடக்கம்


01. தமிழ்மொழி வாழ்த்து i
02. பாடசாலைக் கீதம் ii
03. கொடிக்கீதம் iii
04. மாணவர் உறுதிகீதம் iv
05. தூரநோக்கு v
06. நுழைவாயில் vi
07. அருணாசலம் மலர்க்குழு உறுப்பினர்கள் vii
08. அருளாசிச் செய்தி viii
09. செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி ix
10. பங்குத் தந்தையரின் ஆசிச்செய்தி x
11. Messsage To The Arunasalam Magazine xi
12. அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xii
13. சாதனை படைத்த கல்வியாலயம் xiii
14. வாழ்த்துச்செய்தி xiv
15. அளவெட்டியில் மின்னும் வைரம் xv
16. வாழ்த்துச்செய்தி xvi
17. நூற்றாண்டு மலருக்கான ஆசிச் செய்தி xvii
18. துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி xviii
19. வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம்..... xix
20. கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xx
21. வாழ்த்துச் செய்தி xxi
22. முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி xxii
23. அருணாசலம் வித்தியாலயம் xxiii
24. நூற்றாண்டு விழாக் காணும் xxv
25. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் xxvi
26. பழைய மாணவர் சங்கம் xxvii
27. மலர் ஆசிரியரின் xxviii
28. அதிபரின் உள்ளத்தில் xxix
29. வித்தியாலயத்தின் தோற்றுவாயும் .... 01
30. அருணாசல அன்னையின் ...... 07
31. அளவையூரின் ஆன்மீகச் செல்வர் 10
32. கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் .... 11
33. பாம்பின் தலையிலுள்ள குழிகள்ஆபத்தைக் ... 18
34. விண்ணிலே தவழும் வெண்ணிலா 21
35. எனது மனதில் எழுந்தவை 23
36. பசுமை நிறைந்த நினைவுகள் 25

| | | |
|---|---|---|
| 37. | வாழ்க்கைப் பதிவிலிருந்து... | 27 |
| 38. | அளவை மண்ணை அலங்கரித்த அருட்கவி...... | 28 |
| 39. | Internet | 32 |
| 40. | இறைவன் விரும்பிய இசை.... | 33 |
| 41. | மனிதனும் சூழலியலும் | 35 |
| 42. | இலங்கைத்தமிழ் இலக்கியத்தின் ........ | 38 |
| 43. | ஆசிரியர்களது கடமைகள் | 42 |
| 44. | "19ஆம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்கள் | 47 |
| 45. | சமூகமயமாக்கலில் பாடசாலையின் பங்கு | 54 |
| 46. | அருணாசல அன்னையை தேசியத்தில்தடம் பதிக்க வைத்த ..... | 57 |
| 47. | வெற்றியை நோக்கி | 60 |
| 48. | சுடர்விடும் அருணாசலம் | 61 |
| 49. | பரதக்கலை | 65 |
| 50. | Develop web Sites using | 67 |
| 51. | எண்ணங்கள் | 69 |
| 52. | கல்வியும் அதன் சமூக முக்கியத்துவமும் | 71 |
| 53. | விதி வரைந்த பாதை வழியே..... | 76 |
| 54. | KEYS OF LIFE | 81 |
| 55. | திருமணத்திற்கு தயாராகும் மணப் பெண்களுக்கு | 82 |
| 56. | அளவையூர் கலைப்பாரம்பரியம் | 84 |
| 57. | நீரிழிவு | 89 |
| 58. | சரித்திரம் படைத்திடுவோம் | 91 |
| 59. | சோமசுந்தரப்புலவர் | 93 |
| 60. | விட்டில்கள் | 96 |
| 61. | The Computer | 97 |
| 62. | எமது பாடசாலை | 99 |
| 63. | கல்வியின் சிறப்பு | 100 |
| 64. | எனது ஏணி | 101 |
| 65. | மாணவனது பூரண வளர்ச்சி | 102 |
| 66. | உலகமயமாக்கல் (Globalization) | 106 |
| 67. | காயங்கள் ஆறவில்லை | 112 |
| 68. | அன்னையே நூறாண்டுகள் வாழ்க | 116 |
| 69. | Computers and internet | 118 |
| 70. | Advantages and Disadvantages | 121 |
| 71. | தாயன்பு | 125 |
| 72. | தாயே நீ நூறாண்டு வாழி! | 126 |
| 73. | நட்பு என்றுமே நட்புத்தான் | 127 |
| 75. | சிந்திக்க சில வரிகள் | 130 |
| 76. | கிராமிய நடனம் | 131 |
| 77. | தரவட்டங்கள் (Quality Circles) | 133 |
| 78. | நல்வாழ்வு | 135 |
| 79. | Our Staff List 2010 | 136 |
| 80. | பாடசாலை நிதியுதவி நல்கியோர் | 138 |
| 81. | நூற்றாண்டு விழாவிற்கு அன்பளிப்பு | 140 |
| 82. | பிரதி பெறுபவர்கள் | 144 |
| 83. | நன்றியுரை | 154 |

# சமர்ப்பணம்

அருணாசலத்தாயே அன்பொளி விளக்கே
அருணாசல உடையார் ஈன்ற முத்தே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தினிலே
ஆண்களுடன் பெண்களும் செந்தமிழ் சுவைத்திட
சூரியனாய் உதித்த அருணாசல அன்னையே
நூற்றாண்டகவையில் தீன் மாறாச்சேவையில்
தோன்றிய புதல்வரில் மாசறக்கற்று
தெளிந்த பல ஆசிரியர், சான்றோர், மருத்துவர்
பொறியியலாளர், சட்ட வல்லோர் என
பார்புகழும் நன்மக்களை ஈன்றளித்தாய்
இயல்இசை நாடக முத்தமிழுடன்
இணையற்ற விளையாட்டும் ஓங்க
தேசியத்தில் எம்மைச் சிறகடிக்கவைக்கும்
நூற்றாண்டுத்தாயே உன் பொன்னடிக்கு
சமர்ப்பணமாகச் சார்த்தி மகிழ்ந்தனம்
ஏற்றருள் புரிதியெழில் முகமலர்ந்தே

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தண்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# பாடசாலைக் கீதம்

போற்றி போற்றி அருணாசலம் வித்தியாலய தாயே
போற்றி அளவையூர் பொலிதரு கற்பக கலைச்சோலை தாயே

முத்தமிழ் ஆங்கிலம் கணித விஞ்ஞானம் தொழில்புரி முன்னிலைகள்
சித்திரம் இன்னிசை சித்திகள் பெறவே தந்தாய் பல கலைகள்
(போற்றி......)

வைத்திய யந்திர வல்லுனர் சட்டத்தரணிகள் ஆசிரியர்
கைத்தொழில் வித்தகர் கவிஞர்கள் எனமிகு மணிகளை ஈன்றவளே
(போற்றி......)

அருணாசல உடையார் எனும் பெரியோர் ஆக்கிய நெடுங்கினிலே
தருணமுகில்போல் தமிழினம் வாழ வளர்மதி களஞ்சியமே
(போற்றி......)

அன்பு மலர்ந்திட அறிவு நிறைந்திட அறநெறி மேலோங்க
இன்பம் மலர்ந்திட ஒளிவிளக்காக திகழ்வாய் புகழ்வாங்க.
(போற்றி......)

அருட்கவி சீ.விநாசித்தம்பி

# கொடிக்கீதம்

அவனி போற்றும் அளவையூரில் அருணாசல உடையாரால்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து பத்தினிலே உருவான
ஆலம் விருட்சமென அருணாசல அன்னையின்
பறக்கும்கொடி வாழியவே சிறக்கும்கொடி வாழியவே

ஏற்றுகின்ற பச்சைநீல சிவப்புவர்ணக் கொடியிதுவே
வித்தைபல கல் என்று கூறியாடும் கொடியிதுவே
சித்தம் மகிழ் நிறங்களுடன் ஏற்றுகின்றோம்
கொடி யினையே ஏற்றுகின்றோம் கொடியினையே

விளையாட்டு பரிசளிப்பு பலவகைவிழாக்களிலும்
நினைவில் நின்று ஆடுகின்ற கொடியிதுவே கொடியிதுவே
ஒற்றுமையும் ஒழுக்கமும் உயர்ந்து அசையும் கொடியிதுவே
உயர்ந்து அசையும் கொடியிதுவே

பற்றுடனே பான்மையுறு போற்றிடுவோம் கொடியினையே
பறக்கும் கொடிவாழியவே சிறக்கும் கொடி வாழியவே
உயரப்பறந்து நலந்தந்து வாழியவே வாழியவே
கல்விச்சிகரம் முட்டப் பறந்து தினம் தினமும் வாழியவே

திருமதி.சந்திரவதனி முருகவேள்

# மாணவர் உறுதிகீதம்

அருணாசலத்தின் மாணவர் நாங்கள்
ஆனந்தமாய் கல்வி கற்றிடுவோம்
கல்வியில் உயர்வோம்
கலை பலபயில்வோம்
மெய்ந்நெறி காப்போம்
மேன்மை அடைவோம்
வித்தை பலகல்
வித்தை பலகல்
என்றே தினமும்
வித்தை பலவும்
கற்றிடுவோம்.

திரு.கு.ஜெகந்நாதன்

# தூர நோக்கு

"எமது மாணவர்கள் மாறிவரும் உலகின் சவால்களை
வெற்றி கொள்வர்"

# OUR VISION


Our students will win the challenges of the changing world.

# நோக்கக் கூற்று

"பாடசாலையின் சகல வளங்களையும் ஒன்றிணைத்து
பயன் உறுதி மிக்க கல்விச்
செயற்பாடுகளின் ஊடாக எமது மாணவர்களின் உள்ளார்ந்த
ஆற்றல்களை மேம்படுத்தல்".

# OUR MISSION

"We will integrate all the resources of the school for improving the inate abilities of our students through effective Educational activities"



எங்கள் வித்தியாலய ஸ்தாபகர்

நாகமுத்து அருணாசல உடையார்

# நுழைவாயில்

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர்ஏழைக் கெழுத்தறி வித்தல்"

என்ற சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றுக்கமைய அளவெட்டி மண்ணிலேயே நாகபூசணி வித்தியாலயம் என்ற அறிவொளியகத்தை அருணாசல உடையார் என்ற வள்ளலார், 1910இல் திறந்து வைத்தார். அன்று இடப்பட்ட வித்து பெருவிருட்சமாகி தண்ணிழல் பரப்பி இன்னறுங்கனிச் சோலையாக விரிந்து இன்று நூறாவது அகவையைக் கொண்டாடி மகிழ்வது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

கல்வி வரலாற்றில் பல கல்விமான்களையும் புலமைசார் அறிஞர்களையும், கலை வல்லுநர்களையும் தொழில்வல்லுநர்களையும் உருவாக்கி வளர்ந்தோங்கி மேலோங்க வைத்த பெருமையுடன் எமது வித்தியாலயம் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

எனவே இவ்வறிவாலயத்தின் நூற்றாண்டு நிறைவை பூஜிக்க வேண்டியவர்களாகின்றோம். பூஜிக்க வந்த பூவே "அருணாசலம்" என்ற மலராகும்.

எமது வித்தியாலயத்தின் மூலதார வரலாற்று ஆவணங்கள் முழுமையாக கிடைக்காது விட்டாலும் கிடைத்தவற்றைத் தகவல்களாகத் திரட்டித்தந்துள்ளோம். எனினும் ஏதாவது தவறுகள், திரிபுகள் காணப்பீர்களாயின் அவற்றைப் பொறுத்துக் கொள்வீர்கள் என்றும் மனமார வேண்டி நிறைவு செய்கின்றோம்.

மலர்க்குழுவினர்

# "அருணாசலம்"

## மலர்க்குழு உறுப்பினர்கள்

தலைவர்

திரு. கு. ஜெகநாதன் (அதிபர்)

உபதலைவர்

திரு. ச. நித்தியானந்தம் (உபஅதிபர்)

இதழாசிரியர்

திருமதி. ஜீ. சிறிதரன்

பொருளாளர்

திருமதி. அ. குமாரானந்தன்

ஏனைய உறுப்பினர்கள்

செல்வி. சி. சுகந்தகுமாரி

திருமதி தா. ஆரூரன்

திருமதி. ப.இராசேந்திரன்

திரு. உ. பிறேமானந்

செல்வி. சி. ஜஜிதா

திரு. நி.பாஸ்கரன்


செல்வி. ம. வரதாயினி

செல்வி த. தர்ஷா

செல்வி. ஜெ. துபீரா

செல்வி. நா. ஜெனனி

திருமதி. த. சிவஜனந்தன்




எங்கள் அதிபர்

திரு.குட்டி ஜெகநாதன்




எங்கள் உப அதிபர்

திரு. சதாசிவம் நித்தியானந்தம்

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,




யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் இன்று தனது 100வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கல்விக்காக இந்நாட்டில் ஒவ்வொரு பாடசாலையும் நற்பணியாற்றி வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பழைமையும் பெருமையும் வாய்ந்த பாடசாலைகள் நிறைவான கல்விப்பணியை ஆற்றியமையினால் யாழ்ப்பாணம் அன்றும் இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. சமயப்பண்பாட்டினையும், கல்விப் பாரம்பரியத்தையும் நூறாண்டு காலமாக கட்டிக்காத்த பெருமை அளவெட்டி மண்ணிற்கு உண்டு. எல்லோருக்கும் கல்வி என்ற கோட்பாட்டிற்கமைய கல்வியின் உயர்நிலையை எடுத்தியம்பும் வகையில் வள்ளுவரின் வாக்கு இவ்வாறு அமைந்துள்ளது.

"கல்லாதான் ஒட்பம் கழியநன்றாயினும்
கொள்ளார் அறிவுடையோர்"

இவ்வழியில் நூறாண்டுகள் பல்லாயிரக் கணக்கான அறிவாளிகளைத் தந்த இப்பாடசாலை கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பணியாற்ற வாழ்த்துகிறேன். இந்த நூறாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் "அருணாசலம்" சஞ்சிகையின் ஆசிரியர் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர் மாணவர்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



ஆன்மீகமும், அறிவும் நிறைந்த அழகிய திருவூர் அளவெட்டி கலைவளமும், கல்விவளமும் நிலவளமும், பாடுபட்டு உழைக்கும் தோள்வளமும், நிறைந்த இத்திருவூருக்கு குறையேலதுமில்லை. பண்புடையளார் சிலர் பள்ளித்தலங்களை உருவாக்கியமையால் பல நன்மைகள் ஒருங்கே கிடைத்தன. அவ்வகையில் நூறு ஆண்டுகளுக்கு முன் உதயமாகிய அளவை அருணாசலம் வித்தியாலயம் நூற்றாண்டு நிறைவு கண்டு விழா எடுத்து மகிழ்வது பெருமைக்குரிய விடயமாகும் பல்லாயிரம் ஏழைச்சிறார்கள் பயன்பெற்ற உன்னத பாடசாலை. இது இப் பாடசாலையின் பெருமை இன்றும் நிலைபெற்று சிறப்புற்று விளங்குகிறது. விளையாட்டுத்துறையில் அகில இலங்கை ரீதியில் பங்கு கொண்டு வெற்றிகளைச் சந்தித்துவருவது பெருமைக்குரிய விடயமாகும். சிறந்த அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையால் இப்பாடசாலையின் வளர்ச்சி உயர்நிலையை வந்தடைந்துள்ளது. நூற்றாண்டு விழாக்காணும் இப்பாடசாலை சூரியன், சந்திரன் நிலைகளால் விளங்குவது போல் என்றும் பிரகாசிக்கப் பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

செஞ்சொற் செல்வர்
ஆறு.திருமுருகன்,
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

# பங்குத்தந்தையாரின் ஆசிச்செய்தி



யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் 2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. என்பதனை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு விதையாக இருந்து ஆலமரம் போன்று தழைத்து பல்வேறு துறைகளில் இன்று சாதனை படைக்கின்ற அளவிற்கு வளர்ந்து வருவதனையிட்டு வாழ்த்து கின்றேன். கடந்த ஏழு ஆண்டுகள் அளவெட்டி திருச்சபையிலே பணியாற்றிய காலங்களில் பாடசாலையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளிலும் விழாக்களிலும் கலந்து கொண்டிருக்கின்றேன். பாடசாலையின் வளர்ச்சியைக் கல்வி விளையாட்டு போன்றவற்றிலே காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் பாடசாலை அன்னை ஈன்ற கல்விமான்கள் உயர்அதிகாரிகள் சமூகசேவையாளர்கள் போன்றவர்களினை இந்த வேளையிலே நினைத்துப் பெருமைப்படக்கூடியதாக இருக்கின்றது. பாடசாலையின் வளர்ச்சிக்காகப்பாடுபடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவச்செல்வங்கள், பெற்றோர்கள் , நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களினைத் தெரிவிக்கின்றேன்.

நூற்றாண்டுவிழா கொண்டாடப்படுகின்ற இந்தக் காலகட்டத்திலே பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பிரார்த்திப்பதோடு இன்னும் அதிகமாக வளர வேண்டும் என இறைவனை வேண்டி எனது ஆசிச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

**வண .A.E.சுரேந்திரன்**
**மானிப்பாய் திருச்சபை,**
**அமெரிக்கன் இலங்கைமிஷன்**
**திருச்சபை.**

## MESSAGE TO THE 'ARUNASALAM' MAGAZINE OF J / ARUNASALAM VIDYALAYAM, ALAVEDDY, JAFFNA IN JUNE 2010



It is with much pride , as Governor Northern Province ıat I contribute a message to the 'Arunasalam' magazine f J /Alaveddy Arunasalam Vidyalayam.

The Founder of this school, Nagamuthu Arunasa dayar, established it in the year 1910. The school was ıen known as 'Nagapoosani Vidyalayam ' Children ttending this school. I am made to understand, are from less affluent ımilies and as at present have over 350 students following their education ı classes varying from Grade 1 to 11 Mr.K.Jeganathan who is the Principal f the school proudly states that they have had fair results at the G.C.E O/L xamination held recently.

Where facilities are concerned the school could boast of having a family quipped library and also a computer room, In the field of extra curricular ctivities they indulge in volley ball and athletics and have taken part in onal, District, Provincial and National level competitions , Their etermination to carry on regardless of what ever short coming or difficulties very well seen in their effort where they are now celebrating their entenary.

My congratulations to them, especially, the Principal staff and students nd also the parents and well wishers, May you have a prosperous future.

G.A Chandrasiri
Governor
Northern Province

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வளமிக்க வயல்களும், பசுமைமிகு தோட்டங்களும் அணிசெய்ய, கலைமணம் கமழும் அளவையூரில் கல்வி வளம் நல்கும் யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் இன்று நூற்றாண்டு காண்கின்றது. 1910ஆம் ஆண்டில் அருணாசல உடையாரினால் நாகபூசணி வித்தியாலயம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, ஆரம்பப் பாடசாலையாய் அரும்பி, கனிஷ்ட வித்தியாலயமாய் வளர்ந்து, இன்று யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமாய் மலர்ந்துள்ளது. இன்று 355 மாணவர்களுடன் இயங்கிவரும் இப் பாடசாலையின் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள், பிரபல கல்லூரிகளின் பெறுபேறுகளை ஒத்திருத்தல் இவ்வித்தியாலயத்தின் கல்விச் சிறப்பிற்குச் சிறந்த சான்றாகும். "வித்தை பல கல்" என்ற இப்பாடசாலையின் மகுடவாசகத்திற்கிணங்க, இப்பாடசாலை மாணவர்கள் வித்தைகள் பல கற்றிருக்கக் காண்கின்றோம். இப்பாடசாலை மாணவர்கள் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளாய் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தான் சார்ந்து நிற்கும் கிராமத்திற்கான அடிப்படைக் கல்வியைத் திறம்பட வழங்கிவரும் யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் பணி போற்றற்குரியதாகும். பல படிமுறை வளர்ச்சிகளுடன் இன்று நூற்றாண்டினை நிறைவுசெய்யும் யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், மேன்மேலும் வளர்ச்சி பெற்று, அளவையூரின் ஆக்கத்திற்கு, அரும்பணியாற்றி பல்லாண்டு நிலைத்திருக்க மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# சாதனை படைத்த கல்வியாலயம்



நூறாண்டுகள் மனிதன் உயிர்வாழ்வது அரிது. ஆனால் மனிதர்களால் நடாத்தப்படும் ஒரு ஸ்தாபனம் நூறாண்டுகள் கல்வித் தொண்டாற்றியுள்ளது என்பது இமாலய சாதனையாகும். கிராமப் புறங்களில் உள்ள வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பப் பிள்ளைகளுக்கு அறிவுக் கண்ணைத் திறந்த ஒரு கலாலயமாக யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் திகழ்கிறது. இப் பாடசாலை அண்மைக் காலமாக கல்விச் சாதனைகளை முக்கியமாக விளையாட்டுத்துறை வடமாகாணத்தில் சாதனைகளை நிலைநாட்டி மாகாணத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இப்பாடசாலையின் கல்விப்பெறுபேறுகளும் திருப்திகரமானவை இதற்காக அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை இன்னும் பல ஆண்டுகள் எல்லாவசதிகளையும் பெற்று கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.


சு.இளங்கோவன்<br>
செயலாலளர்,<br>
கல்விப் பண்பாட்டு அலுவல்கள்.<br>
விளையாட்டுத்துறை அமைச்சு.<br>
வடமாகாணம்.

# வாழ்த்துச் செய்தி



"வித்தை பல கல்" என்ற மகுட வாசகத்தைக் கொண்ட யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதோடு "அருணாசலம்" மலரினை வெளியிடுவதை அறிந்து பேருவகை அடைகின்றேன்.

இப்பாடசாலை தரம் 11 பாடசாலையாக உள்ள போதிலும் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஏனைய முன்னணிப் பாடசாலைகளுக்கு நிகராகப் பெறுபேறுகளைப் பெற்று வருவது பாராட்டுக்குரியது இணைபாடச் செயற்பாடுகளிலும் பங்கேற்று வெற்றிகளைப் பெற்று வருவது பலரும் அறிந்ததே தடகளப் போட்டிகளிலும் பெருவிளையாட்டுக்களிலும் தேசிய மட்டம் வரை முன்னேறிய நிகழ்வானது பாடசாலையின் வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.2007இல் உருவாக்கப்பட்ட கரப்பந்தாட்ட அணி தொடர்ந்தும் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இது இப்பாடசாலையின் ஒளி மயமான எதிர்காலத்திற்கு நல்லதோர் சமிக்ஞையாகும்.

இவ்வாறு தொடர்ந்து சாதனைகள் பல படைத்திட, நூற்றாண்டு விழா சிறப்புற, நூற்றாண்டு மலர் நறுமணம் வீச அயராது உழைத்து நிற்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

**வீ. இராசையா,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்**

# அளவெட்டியில் மின்னும் வைரம்



இப்பாடசாலையை ஸ்தாபித்த முன்னோர்களுக்கு எனது தலைசாய்த்து வணக்கத்தை தெரிவித்து இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா விற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையை இவ்வளவு காலமும் வழி நடாத்திய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இப்பாடசாலை எக்காரணங்களுக்காக வேணும் மூடப்படாது இருப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். பல சவால்களுக்கு முகம் கொடுத்து இப் பாடசாலை மாணவர்களைச் சாதனை படைப்பவர்களாக மாற்றியவர்கள் இப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் ஆவார். அதுவும் நண்பர் திரு.கு.ஜெகநாதன் இப்பாடசாலையிற் பொறுப்பேற்றதும் பாடசாலை நாளொரு வண்ணமாக வளர்ச்சி அடைந்து இந் நிலையைப் பெற்றுள்ளது ஒரு பாடசாலையின் நூறாவது ஆண்டில் கடமையாற்றும் அதிபர் , ஆசிரியர்கள் கொடுத்து வைத்தவர்கள் ஆவார் . அதிலும் அர்ப்பணிப்புச் சேவையை வழங்கி பாடசாலையை மாணவர் விருப்பத்துடன் நாடி வரும் இடமாக மாற்றிய பெருமை அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் உரியதாகும். இந் நூற்றாண்டு காலத்தில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்கள் இப் பாடசாலை இன்னும் பல்நெடுங்காலம் கல்வித் தொண்டாற்ற எனது பிரார்த்தனைகள்.

வே.தி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# வாழ்த்துச் செய்தி



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் அளவையூரில் சான்றோர்களையும், கல்விமான்களையும் உருவாக்கி, ஊர் என்றால் "அளவையூர்" என்று சொல்லத்தக்க வகையில் சமூகப் பிரஜைகளைத் தோற்றுவித்த ஒரு சிறந்த பாடசாலையாகும். சுற்றுப்புறச் சூழலில் பல பெரிய பாடசாலைகள் சவாலாக அமைந்துள்ள போதிலும் தன் பெருமை குன்றா நிலையில் நூறு ஆண்டுகளாக நிலைத்து நின்று இன்றைய சிறார்களுக்கு பாலமாகவும் கலங்கரை விளக்காகவும் மிளிர்கின்றது என்றால் மிகையாகாது.

இப்பாடசாலையைத் தோற்றுவித்த நிறுவுனர் அவர்களின் சேவையினை நினைவுகூர்ந்து அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய சேவையாளர்களையும் பெருமைப்படுத்தி வெளியிடும் வரலாற்றுச் சான்றாகிய "அருணாசலம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாசகத்தை மனதிற்கொண்டு இன்றைய நிர்வாகத்தினர் தமது பணியினை நிறைவேற்றுவதுடன் தமது அன்னையின் சிறப்பினை நினைவு கூர்ந்து நிற்கும் இவ்வேளையில் நானும் பங்கு பெறுகின்றேன்.

வருங்கால சமூகத்திற்கு மேலும் மேலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பாடசாலையின் பெருமைகளைக் கட்டிக் காக்க மனவுறுதி வழங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க பல்லாண்டு

ப.விக்னேஸ்வரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# நூற்றாண்டு மலருக்கான ஆசிச்செய்தி



நலிவான பொருளாதர சுழலியல் தன்மையினைத் தன்னகத்தே கொண்ட உன்னதமான சமய பண்பாட்டுச் சுழலில் 1910 ஆம் ஆண்டில் அருணாசல உடையாரின் கருத்தில் தோன்றி செயலில் வடிவம் கண்ட இப்பாடசாலை நூறு ஆண்டுகள் அறிவுப் பட்டொளி வீசி சார்புடைச் சமூகத்தின் கலங்கரை விளக்காக மிளிர்ந்து வருகின்றது.

நூற்றாண்டு நிறைவின் ஞாபக இதழாக அறியாமை என்னும் இருள் அகற்றும் சுடராக "அறிவு என்னும் மகுடம் தாங்கி வெளிவரும் இம் மலரானது மெத்தனமான சமூக வளர்ச்சிப் போக்கில் இருந்து விடுபட்டு புத்தெழுச்சியுடன் புதுமைப் போக்குகள் உடன் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற வழிகாட்ட வேண்டுமென வாழ்த்துகினறேன். இந்த வகையில் ஸ்தாபகரின் இலட்சியங்கள் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் சமூக எழுச்சிக்கு வித்திடக்கூடிய பொருத்தமான ஆக்கங்கள் மற்றும் மாணவர்களின் பல்லாற்றுகைத் திறன்வெளிப்பாடுகள் ஆகியனவற்றைத் தாங்கி வரும் இவ்வறிவுச் சுடரினை ஏற்றுவதற்கு முயற்சி செய்ய அதிபர் ஆசிரியர்கள் மாணக்கர்களைப் பாராட்டுவதுடன் எதிர் காலத்தில் மாணவர்கள் தாம் சுயமாக இயங்கி அவர்களுடைய அறிவை முழுமையாகக் கொண்ட சுடராகப் பிரகாசிக்கச் செய்ய இச் சுடர் வழிகாட்ட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சு.சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
நிர்வாகம்,
வலிகாமம் கல்வி வலையம்.

# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



எங்கள் சமூகத்தின் பெருநிதியம் கல்விக் எங்கள் பண்பாட்டுப்புலங்களின் பெருமையெலாம் கல்வி – கலை ஞானத்தின் வழியானது.

இந்தவகையில் கலைஞான பூமியாக புகழ்பெறும் அளவெட்டியின் மேன்மைக்குக் காலான கல்விச்சாலைகளில் அருணாசலம் வித்தியாலயத்தின் இடம் குறிப்பிடத்தக்கது.

தேசத்தின் மனிதவளமேம்பாட்டில், கலைவளமேன்மைகளில் அருணாசலம் வித்தியாலயத்தின் வரலாறு இரண்டறக் கலந்துள்ளது. வித்தியாலயத்தின் நூற்றாண்டு கால கல்விப்பணியை கொண்டாடும் அருணாசலம் மலரின், வரவு மனதுக்கு பெருமை தருகின்றது.

கடந்த காலத்தின் பயனாக தடங்களிலேயே எதிர்காலத்தின் உயர்வெல்லாம் தங்கியுள்ளது. பயனாக தங்கள் வரலாற்றை பதிவாக்கும் அதிபர் ஆசிரியர் மாணவர் பெற்றோர் சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையில்லா என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர், நா.சண்முகலிங்கன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

# வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலராக வெளிவரும், "அருணாசலம்" மலருக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நூற்றாண்டு காலமாக கல்விப் பணியாற்றும் இவ்வித்தியா லயத்தின் ஸ்தாபகர் மற்றும் நிர்வாகத்தை வழிநடாத்தி வந்துள்ள அதிபர்கள் ஆகியோருக்கு எமது பிரதேச மக்கள் சார்பான பாராட்டுக்களையும், நன்றிகளையும் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்போதும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக ஸ்தாபகரின் குடும்பத்தவர்களின் பங்களிப்பு தொடர்நது செல்வதையிட்டும், அண்மைக்காலமாக இப்பாடசாலையின் கல்விப் பெறுபேறுகள் மற்றும் கலை, விளையாட்டுத்துறை பெறுபேறுகள் முன்னேற்றகரமாக அமைந்து கொண்டிருப்பதையிட்டும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இந்நூற்றாண்டு விழாக்காலத்தில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களின் சேவையை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இப்பாடசாலையானது பல கல்விமான்களையும் உயர் அதிகாரிகளையும், நல்ல சமூகப் பிரஜைகளையும் உருவாக்குவதில் முன்னின்று உழைத்திட எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.முரளிதரன்
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



செழுமையும் வரலாற்றுப் பெருமையும் மிக்க அளவெட்டி, கலை கலாசார கல்வி மேம்பாட்டை வளர்ப்பதில் முன்னின்று உழைக்கும் நற்பிரசைகளைக் கொண்ட ஓர் அழகிய கிராமமாகும்.

இக்கிராமத்தின் கண்ணே 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிறுபள்ளி இன்று விருட்சமாக வளர்ந்து நூற்றாண்டைக் கொண்டாடுகிறது.

அருணாசல உடையாரின் தீர்க்க தரிசனம் பிரகாசித்து இன்று தேசிய மட்டம் வரை தனது பெயரை நாட்டி நிற்கும் வலிகாமப் பிரபல பாடசாலைகளுடன் கை கோர்த்து உலாவுகிறது யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

2010 ஆம் ஆண்டு அருணாசலத்தின் நூறு வயது பூர்த்தியில் பல்வேறு பெருமைகளையும் சாதனைகளையும் மாலையாக்கி அருணாசல மாதா அணிந்து உவகை அடைகிறாள்.

இவ்வேளை "அருணாசலம்" மலர் அவள் பெருமைகளைச் சுமந்து வெளிவருகிறது அதன் சுமை என்றுமே குறையக் கூடாது. மனரார வாழ்த்துகிறேன்.

வாழ்க, அருணாசல வித்தியாலயம்
வளர்க அதன் புகழ்

திரு.ச.சகைலாசநாதன்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பளை கல்விக் கோட்டம்
(முன்னாள் அதிபர் - யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

# வாழ்த்துச் செய்தி



இன்று நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கல்விப் பணி மேன்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

கல்வி நிலையங்களை நிறுவி வியக்கத்தக்க பணி செய்தவர்கள் எமது மண்ணில் ஒரு சிலர் உள்ளனர். அவர்களை நினைவு கூருவதும் அவர்களால் நிறுவப்பட்ட கல்வி நிலையங்களைப் பாராட்டுவதும் கற்றறிந்தோர் கடனாகும். அளவெட்டி தந்த பெரியார் திருவாளர் அருணாசலம் உடையார் அவர்களால் நிறுவப்பட்ட மேற்படி பாடசாலை இன்று நூற்றாண்டு விழாக் காணுகின்றது. "கல்வியே கருந்தனம்" என்பதை எமது முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகம் இதனை நன்கு உணர்ந்து போற்ற வேண்டும் இதற்கு ஒரு சான்றாக நூற்றாண்டு நிறைவு மலர் வெளியிடப்படுவது குறிப்பிட்ட பாடசாலையின் நன்றிக் கடனாகும். கல்வி நிறுவனங்கள் அனைத்தும் இதனை நன்கு பின்பற்ற வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையில் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தராக ஒரு வருடகாலம் (1999-2000) கடமையாற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமையடைகின்றேன். மேன்மேலும் இப்பாடசாலையின் பணிகள் உயர்ந்து ஓங்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.


என்.எஸ்.ஆர்.சிவரூபன்.<br>
மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர்,<br>
நிகொட்,<br>
யாழ்ப்பாணம்.

# முன்னாள் அதிபர் திரு.ப.கனகரத்தினம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



இயற்கை வனப்பு மிக்க அளவெட்டிக் கிராமத்தில் சைவசமயப் பண்பாட்டின் கல்விக்கூடமாக அமைந்துள்ள யா /அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் நூற்றாண்டு விழாவை எட்டியுள்ளது. தனது வளர்ச்சிப்பாதையில் தடம் பதித்துச் செல்லும் இப் பாடசாலையின் முன்னேற்றத்தையிட்டு பெரும் மகிழ்ச்சிய டைகின்றேன்.

ஏழை மாணவர்களது கல்வி அபிவிருத்திக்காக இங்கு கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களது அயராத உழைப்பும், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் மூலம் மாணவர்களது திறன்களை வளர்ப்பதில் காட்டும் ஆர்வமும் பெருமைக்குரியதே.

சகலதுறைகளிலும் பலசாதனைகளைப்புரிந்துள்ள இப்பாடசாலை மேலும் முன்னேறிச்செல்ல வேண்டும். மாவட்ட மாகாண தேசியரீதியான வெற்றிகளைப் பெற்றுவருவதும் பாராட்டத் தக்கதாகும். அன்று தொட்டு இன்று வரை பல பெருமைக்குரிய மனிதர்களை உருவாக்கிய இப்பாடசாலையில் நானும் அதிபராக கடமையாற்றி யுள்ளமையை இட்டு மிகவும் மனமகிழ்வடைகிறேன். இக்காலங்களை எனது வாழ்நாளின் பொற்காலங்களாக எண்ணிப்பார்க்கின்றேன்.

இன்றைய உலகில் வாழத்தக்க தேர்ச்சிமிக்க நல்ல மனப்பாங்குடையவர்களை உருவாக்குவதற்காக செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இப்பணியின் நோக்கங்கள் இனிதே நிறைவடையப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

**முன்னாள் அதிபர்,**
**திரு.ப.கனகரத்தினம்**

# அருணாசலம் வித்தியாலயம் அன்று போல் இன்றுபோல் என்றும் வாழ்க!



அளவெட்டியில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் பாடசாலையாக மாறிய போது தோன்றித் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட பாடசாலை அருணாசலம் வித்தியாலயம் என்பதை எவரும் உடன்படுவர் என்பது எனது எண்ணம். இப்பாடசாலை 1910ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதென அதன் நிர்வாகிகள் கூறினாலும் அது 1884 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டதென்று முன்னைய தலைமையாசிரியர் ஒருவர் வாய் கேட்ட ஞாபகம் உண்டு. இப்போதைய நிர்வாகிகள் பாடசாலை தொழிற்பட ஆரம்பித்த காலத்தைக் கணக்கில் எடுத்திருக்கலாம் எனக் கருதுகிறேன்.

அருணாசலம் வித்தியாலயத்துக்கும் அயலில் இன்று அருணோதயாக் கல்லூரியாக நிமிர்ந்து நிற்கும் அன்றைய அளவெட்டி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலைக்கும் ஒரே முகூர்த்தத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட தென்பதும் அத்தலைமையாசிரியர் தந்த மற்றொரு செய்தி. இரண்டு பாடசாலைகளுக்கும் அளவெட்டியில் வாழ்ந்த பெருமகனார் அருணாசலம் உடையாரே அடிக்கல் நாட்டிவைத்தார். என்பதும் அவர் தந்த செய்தியின் தொடர்ச்சி.

அளவெட்டியில் மாத்திரமல்ல யாழ்ப்பாணத்திலேயே சிறந்த தமிழ்ப்பாடசாலைகளில் அருணாசலம் வித்திவித்தியாலயமமும் ஒன்றென்பது மறுக்க முடியாத உண்மை. அளவெட்டிக் கிராமப்பிள்கள் அல்லா தூர இருந்தும் பல பிள்ளைகள் இப் பாடசாலையை நோக்கி வந்த காலம் ஒன்றிருந்தது.

முகாமையாளர் சிலர் தமது பள்ளிக்கூட வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு நல்லாசிரியர்களைத் தமது பாடசாலைக்கு நியமித்ததால் கல்வி வளர்ச்சி உச்சநிலையில் இருந்தது. ஒழுக்கம் பற்றி முகாமையும் ஆசிரியமணிகளும் மிகக் கவனஞ்செலுத்தினர். ஆசிரியர்கள் பலர் செய்யுள் இயற்றும் வன்மை படைத்திருந்தனர். மாணவர்களுக்குச் செய்யுள் இயற்றுவது ஒரு பாடமாக இல்லாத போதும் மாணவர் நன்மைகருதிச் செய்யுள் இயற்றப் பழக்கிய ஆசிரியர்களும் அங்கு காணப்பட்டனர். அருட்கவி விநாசித்தம்பி தாம் அருணாசலம் வித்தியாலயத்தில் படித்த போது திரு.சி.கதிரவேலு என்பவரிடம் செய்யுளியற்றப் படித்ததாகக் கூறக் கேட்டுள்ளேன்.

அரசினர், பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்பு தமிழ்ப் பாடசாலை என்ற மணமும் குணமும் அற்றுப் போனதாகவே கருத வேண்டியுள்ளது. இந்த நிலையிலும் சில பாடசாலைகள் கல்விவிருத்திக்குப் பாடுபடுகின்றன வென்றால் அப்பாடசாலைகளில் மாணவர் கல்வியில் கரிசனை உள்ள ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதே அர்த்தமாகும். அருணாசல வித்தியாலயத்திற்கு அதிர்ஷ்டவசமாக நல்ல அதிபர்கள் கிடைத்துவருவதால் அது முன்னேறி வருகிறது. இன்றைய அதிபர் கு.ஜெகநாதன் அவர்கள் கல்வி வளர்ச்சியிலும் பிறவளர்ச்சியிலும் கண்ணுங் கருத்துமாக இருப்பது பாராட்டத்தக்கது. அருணாசலம் வித்தியாலயம் மேன்மேலும் வளர இறையருள் கிட்டுக.

**பண்டிதர் க. நாகலிங்கம்.**

# நூற்றாண்டு விழாக்காணும் அருணாசல வித்தியாலயத்திற்கு வாழ்த்து



ஒரு கிராமத்தின் கல்வி பண்பாட்டு விழுமியங்களின் பாரம் பரியங்களை பேணிவரும் நிறுவனங்களில் முதன்மையானது அப்பிரதேசத்தில் இயங்கிவரும் பாடசாலைகளே. அந்தவகையில் அருணாசலம் உடையார் அவர்களின் சிந்தனையில் உதித்து உருவான யா/ அருணாசலம் வித்தியாலயம் நூற்றாண்டுவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அருணாசல வள்ளலாரின் தீர்க்கதரிசனப்பார்வையினை உறுதிப் படுத்தும் வகையில் மலர்ச்சியடைந்து வளர்ந்து நூற்றாண்டு விழாமலருக்கு கலைத்தாயின் சார்பாக நல்லாசிகளை தெரிவிக்கின்றேன். அளவெட்டிக்கிராமத்திற்கு மாத்திரமல்லாது அயல் கிராமங்களுக்கும் கல்விக்கண் கொடுத்த பெரியார் அருணாசல உடையாரெனின் அது மிகையாகாது. உத்தியோகம் வகித்ததோடு பெரும் பிரபுவாக வாழ்ந்தவர் அருணாசல உடையார். கல்விச் செல்வம் இன்றி கஷ்டப்பட்டோருக்கெல்லாம் தன்னாலான உதவிசெய்தவர், ஆதலால் உடையார் என அழைக்கப்பட்டவர்.

அருணாசல உடையார் அளவெட்டி மக்கள் கல்வி கற்பதற்கு என்று இரு பாடசாலைகளை நிறுவினார். ஒன்று அவர் பெயரை மறைமுகமாக வெளிப்படுத்தி 116 வருடங்களை கடந்து பெரும் புகழோடு ஒளிவீசிக் கொண்டிருக்கும் யா / அருணோதயக்கல்லூரி மற்றையது நாகபூசணி வித்தியாலயமாக மலர்ந்து வளர்ந்து இன்று புகழ்பெற்று நூற்றாண்டுவிழாக்காணும் அருணாசல வித்தியாலயம் அளவெட்டி கிராமத்தின் அறிவுப்பசி தீர்த்ததோடு அயல் கிராமங்களுக்கும் பயனுள்ள தென்பது மறுக்க முடியாத உண்மை.

பாடசாலை இவ்வளவு வளர்ச்சியடைந்து வருவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவமாணவிகள், நலன்விரும்பிகள், பழையமாணவர்கள் எல்லோரையும் நாம் மறந்து விடக்கூடாது. தற்போது அதிபராக கடமையாற்றும் திரு.கு.ஜெகநாதன் மிகவும் போற்றத்தக்கவர். பாராட்டுக்குரியவர் பாடசாலை வளர்ச்சியிலும், மாணவர்களின் முன்னேற்றத்திலும் பெரும்பங்கு வகிப்பவர். ஆசிரியர் குழாம்களை ஒன்றிணைத்து பாடசாலை வரலாற்றில் வெற்றி அடைபர். பாடசாலைக்கு ஒரு நிரந்தர விளையாட்டு திடல் வேண்டுமென உறுதிகொண்டு காணியின் உரிமையாளர்களிடம் என் மூலம் தொடர்பு கொண்டு முயற்சி செய்து கொண்டிருப்பவர். காணியை மனம்விரும்பி இலவசமாக அன்பளிக்க முன்வந்திருக்கும் குடும்பத்தவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் என்சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளாந்தம் வளர்ச்சியடைந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் வெற்றிகண்டு இன்று நூற்றாண்டு விழாக்காணும் அருணாசல வித்தியாலயத்திற்கு மீண்டும் இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அருணாசல உடையார் வழி, பேரன்,**
**செ.செல்வநேசன்.**

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



அளவெட்டி வாழ் அறிவொளி ஏற்ற , அருணாசல உடையாரால் 1910 இல் உருவாக்கப்பட்டது தான் யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம். இன்று இப்பாடசாலை அவரதும் அவரைத் தொடர்ந்து வந்த ஏற்றமிகு அதிபர்களினதும் அயரா முயற்சியினாலும் தளராத உறுதியாலும் தனக்கென ஒரு இடத்தை அளவையூரில் தனிப்பதித்து ஒரு நூற்றாண்டு நிறைவைக் காண்கின்றது.

பெறுதற்கரிய மானிடப் பிறப்பிலே அடைதற்கரிய செல்வம் கல்வி, அக்கல்விச் செல்வத்தை வழங்கும் இக்கலை ஆலயங்கள் கிராமத்தில் கல்வி கலை கலாசாரம் பண்பாடு என்பவற்றை முதிர வைப்பவை.

"வித்தை பல கல்," என்னும் உயர் மகுடம் கொண்ட எம் வித்தியாலயம் இன்று அனைவரும் வியந்து போற்றும் பெருமையுடன் வெற்றி நடை போடுகிறது. பார்போற்றும் பல்வேறு சாதனைகள், தன்னகத்தே கொண்டு கல்விகலைகளில் மிளிர்ந்து நின்று விளையாட்டுத்துறைகளில் கோட்ட, வலய, மாவட்ட மாகாண மட்டங்களைத் தாண்டி தேசிய மட்டத்திலும் தன் தடம்பதித்து இன்று நூற்றாண்டு கொண்டாடி அதன் பதிவுச் சுவடாய் "அருணாசலம்" என்னும் நூற்றாண்டு மலரை வெளியிடுகிறது.

பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஏற்றமிகு சாதனைகளுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது என்றும் அயராது உழைக்கும் "அருணாசலம்," நூற்றாண்டு மலருக்கு சங்கத்தின் செயலாளர் வகையில் எனது மனங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.ஏரம்பமூர்த்தி
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

# பழைய மாணவர் சங்க செயலாளரின் இதயத்திலிருந்து



காலத்தின் தேவையறிந்து, கல்வியின் பெருமை உணர்ந்து, உன்னத நோக்கோடு இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு அருணாசல உடையார் அவர்கள் தமிழையும், நம்மவர்களையும் வாழ வைக்கும் நோக்கில் இப்பாடசாலையை நிறுவினார். அவரது நோக்கம் இற்றை வரை நிறைவேறிக் கொண்டே வருகின்றது.

1910 யூன் 30 அன்று "நாகபூஷணி வித்தியாலயம்" என்ற பெயரில் நிறுவப்பட்ட இப்பாடசாலையானது, உயர் விழுமியங்களைக் கொண்டு பல மகான்களை உருவாக்கி இடையில் "அருணாசல வித்தியாலயம்" என்று பெயர் மாற்றம் பெற்று பயன்தருவிருட்சம் போல அகலக்கிளை பரப்பி, ஓங்கி உயர்ந்து, நூற்றாண்டை எட்டியிருக்கும் இவ்வேளை அருணாசல அன்னையின் "அருணாசலம்" நூற்றாண்டு மலரானது எங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கையில் மட்டி ல்லா மகிழ்வடைகின்றோம்.

இம்மலர் வெளியீடானது மிகப் பொருத்தமானதும், தனிச்சிறப்பு வாய்ந்ததுமான ஓர் நிகழ்வாகும். இந் நூற்றாண்டு காலத்தில் அருணாசல வித்தியாலமானது கல்வித்துறையிலும் சரி, விளையாட்டுத்துறையிலும் சரி தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று சமூகத்தில் மேம்பாடு அடைந்திருப் பதையும் அளவையம்பதிக்கு பெருமை சேர்த் திருப்பதையும் நாம் கண்கின்றோம்.

யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமானது நூற்றாண்டைத் தாண்டியும், சர்வதேசத்தில் உயர்ந்து விளங்கி, தன் பெயர்பதித்து, தனிப்புகழுடன் பிரகாசிக்க, பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.கவிதா,**
**செயலாளர்,**
**பயைழ மாணவர் சங்கம்,**
**யா / அருணாசலம் வித்தியாலயம்,**
**அளவெட்டி.**

# மலராசிரியரின் இதயத்தில் இருந்து......



உலகை உய்விக்க ஒளி கொடுப்பவன் அருணன், அவனில்லா விட்டால் அவனி அசையாது. இயற்கையின் ஒவ்வொரு அசைவுக்கும் அவனே காரணன். அருணனின் உதயத்திலிருந்து உதித்தெழுந்து உங்கள் கரங்களில் தவழுவது "அருணாசலம்"

அருணாசலம் இன்று பெரு விருட்சமாகி விழுது பரப்பி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற வேளையில் அருணாசலம், என்ற அரும்பு மொட்டவிழ்ந்து மணம் பரப்பி நிற்பது மனதிற்கு நிறைவைத் தருகிறது.

இம்மலர் வித்தியாலயத்தின் வரலாற்றுத் தகவல்களோடு கல்விப் புலம் சார்ந்த பெரியோர்களின் படைப் புக்கள், ஆசிரியர்கள் மாணவர்களது ஆக்கங்கள், பழைய மாணவர்களின் ஆக்கங்கள் அனைத்தையும் தாங்கி அணி செய்கின்றது. இவற்றின் தரத்தையும் பெயரையும் நிறைவையும் காண்பது நீங்கள் தான். இம் மலரின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டினால் எதிர் காலத்திற்கு உதவுவதாக அமையும்.

நூற்றாண்டு விழாவிற்கு மலர் வெளியிட வேண்டும் என்ற முனைப்போடு அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்த எங்கள் மதிப்புக்குரிய அதிபர் அவர்களுக்கும், மலர்க்குழு சார்பில் நன்றி கூறுகின்றேன். "அருணாசலம்" மலர் உரிய காலத்தில் பொலிவுடன் திகழ உறுதுணை புரிந்த மலர்க்குழு உறுப்பினர்கள் உதவிகள் நல்கிய ஏனைய ஆசிரியர்கள், படைப் புக்கள் பலவற்றைத் தந்து உதவிய உள்ளங்கள், ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கி வாழ்த்தியவர்கள், புகைப்படம் எடுத்துதவிய விமல் போட்டோ அன் ஸ்ருடியோ ஸ்தாபனத் தாருக்கும். மலரை அழகுற வடிவமைத்து தந்த அன்ரா பிறிண் நிறுவனத்தாருக்கும் இம்மலர் சிறப்புற வெளிவர பல்வேறு வகையிலும் செயற்பட்டுத் தோளோடு தோள் நின்று உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

**திருமதி. ஜீ.சிறிதரன்**

# அதிபரின் உள்ளத்திலிருந்து.....

நாகமுத்து அருணாசல உடையார் என்னும் வள்ளல் பெருந்தகையின் அகத்தின் கண் ஊற்றெடுத்த சிந்தனையில் உதித்து உருவான ஆலயமே இன்று விழாக்கோலம் காணும் அருணாசலம் வித்தியாலயம். சிறு கொட்டகையிலே உருவான இவ்வறிவாலயம் இன்று தரமான நூலகம், ஆய்வுகூடம், என்பவற்றையும் மாடிக்கட்டடிடத்தையும், கொண்டு விளங்குவதுடன் மாணவர்களது நவீன தொழில் நுட்பஆற்றல்களை வெளிப்படுத்தும் களமாக கணினி அறையையும் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது.

2002.06.2007 ஆம் திகதி இப்பாடசாலையில் நான் அதிபராக நியமனம் பெற்றேன். அக்காலம் வளம் குன்றிய நிலையிலேயே பாடசாலையைப் பெறுப்பேற்றேன். மாணவர்களது கற்றல் செயற்பாட்டுக்குதவியாக வசதிகளுடன் கூடிய நூலகத்தை 2004ஆம் ஆண்டிலும், அனுபவப் பட்டறிவை வளர்ப்பதற்காக 2008ஆம் ஆண்டில் விஞ்ஞான ஆய்வுகூடமும் திறந்து வைக்கப்பெற்றது. மாணவர்களின் உடலியக்கத் திறன்கைள வெளிப்படுத்த ஆடுகளமாக வசதியான விளையாட்டு மைதானம் ஒன்றையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் பாடசாலைக்கு அருகிலே உள்ள காணி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலையின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அக்கறை கொண்டு செயற்படும் பழையமாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், ஸ்தாபகரின் வழித் தோன்றல்களும் வெளிநாட்டில் உள்ள அளவெட்டி மக்கள் மன்றம் கனடா, லண்டன் நிர்வாகத்தினரும் உதவிகளை நல்கிய வண்ணம் உள்ளனர். இவர்களின் உதவி மூலம் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்திலும் இவ்வுவிகள் மேலும் அதிகரிக்கும் என்பதிலும் அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

கல்விச் செயற்பாட்டிலும் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் நான் பாராட்டுகின்றேன். மேலும் கல்விக்கு வலுவூட்டும் இணைபாடச் செயற்பாடுகளிலும் எமது பாடசாலை முன்னேறி வருவது பலரும் அறிந்ததே. மைதான வசதிக்கேற்ற வகையில் உருவாக்கப்பட்ட கரப்பந்தாட்ட அணிகள் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட்டு பல மட்டங்களிலும் சாதனைகள் படை த்து வருகின்றன. அதற்கு உறுதுணையாக இருக்கும் விளையாட்டுத்துறை ஆசிரியரையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூறு ஆண்டுகள் நிறைவில் முதன் முதலாக தனக்கென "அருணாசலம்" என்னும் மலரினை உருவாக்கி அதன் வாயிலாக தனது வரலாற்றையும் தனது சாதனைகளையும் வெளிக் கொண்டு வருகின்ற எமது பாடசாலையின் 18வது அதிபர் என்ற வகையில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடை கின்றேன்.

வித்தியாலயத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்தும் வித்தியாலய வரலாற்றை ஆவணப்படுத்தக் கூடிய சான்றுகள் போதியளவு கிடைக்காமையால் கிடைத்த தகவல்களைக் கொண்டு ஓரளவு வரலாற்றை எழுதியுள்ளோம். இவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வீர்கள் என எண்ணுகின்றேன்.

பௌதீக வளத்தைப் பொறுத்த வரையில் எமது பாடசாலை போதியளவு வகுப்பறைகளைக் கொண்டிராமை பெரிய பிரச்சினையாக உள்ளது. சங்கீதம், மனையியல், விவசாய கூடங்கள், மற்றும் ஆசிரியர் ஓய்வுஅறை என்பனவும் அமைக்கப்பட வேண்டும். இக்குறைகள் எதிர்காலத்தில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் மேலும் வசதிகளுடன் கூடிய பாடசாலையாகக் கட்டியெழுப்ப எம்முடன் தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைக்குமாறு பாடசாலையுடன் தொடர்புடைய அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

# வித்தியாலயத்தின் தோற்றுவாயும் வளர்ச்சிப் போக்கும்

கோயிலும் சுனையும் வயலுடன் சூழ்ந்த அழகிய வளம் பொருந்திய மருதநிலமாக அளவையூர்க் கிராமம் விளங்குகிறது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று பசுமைப் போர்வை போர்த்திக் காணப்படுகின்ற இக் கிராமமானது சுமார் ஒன்பது சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. குடாநாட்டில் ஒரேயொரு ஆறான வழுக்கை யாறு இக்கிராமத்திலேயே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

"நாடென்ப நாடா வளத்தன் - நாடல்ல
நாடா வளந்தரும் நாடு"

என்ற குறளுக்கமைவாக மக்கள் வளங்களை அலைந்து திரிந்து தேடாமலும் நாடாமலும் இருக்க வாழ்க்கைக்குரிய வளங்களை மக்களுக்கு தானாக அள்ளி வழங்கும் கிராமமாக இக்கிராமம் விளங்குகிறது. கலை மலிந்த கிராமமான இக்கிராமம் பல கலை வல்லுநர்களையும், புலமைசார் அறிஞர்களையும், பரோபகாரியங் களையும், உருவாக்கித் தந்துள்ளது. அந்த வகையில் இவ்வூரைச் சேர்ந்த மகான் நாகமுத்து அருணாசல உடையார் அவர்களின் மனதில் உருவான எண்ணத்தின் வடிவமாக 1894ஆம் ஆண்டு கிராமத்தின் மத்தியிலே தலை நிமிர்ந்து நிற்கும் அருணோதயாக் கல்லூரியை அமைத்தார். ஆங்கிலக் கல்வியை போதிக்கும் கல்லூரியாக அருணோத யாக்கல்லூரி விளங்க அருகிலேயே தமிழ்க்கல்வி போதிக்கும் கூடம் ஒன்றுஅமையவேண்டும் என்ற நோக்கில் 1910ஆம் அண்டு, இன்று நூற்றாண்டு விழாநிறைவை கோலாகல த்துடன் கொண்டாடி நிற்கும் அருணாசலம் வித்தியாலயத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பத்திலேயே 60 அடி X 10 அடி அளவு ஓலைக் கொட்டகையாயக இவ் வித்தியாலயம் விளங்கியது. அப்போது அயலில் றோமன் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலை ஒன்று இருந்ததினால் அரசாங்கம் அனுமதி தர மறுத்தது. பின் 1916 ஆம் ஆண்டில் இது உதவி நன்கொடை பெறும் பாடசாலை யாக பதிவு செய்யப்பட்டது. இப் பாடசாலைக்கு நிலமும் கட்டிடங்களும் வழங்கிய திரு.தி.குமாரவேலுப்பிள்ளை அவர்களின் புதல்வியின் நினைவாக நாகபூஷணி வித்தியாலயம் என ஆரம்பத்தில் பெயரிடப்பட்டது. திரு.குமாரவேலுப்பிள்ளை என்பவர் அருணாசல உடையார் அவர்களின் மகனான சுப்பையா உடையாரது மாமனாவார் 1939ஆம் ஆண்டில் நாகபூஷணி வித்தியாலயம் என்ற பெயர் அருணாசலம் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பித்த இவ்வித்தியாலயம் வளர்ச்சியடைந்து ஒரு கனிஷ்ட வித்தியாலயமாக மாறியது. பாடசாலையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அருணாசல உடையாரின் மகன் திரு.சுப்பையா

உடையார் அவர்கள் பெரும் தொண்டாற்றினர். திரு.சுப்பையா உடையார் அவர்களின் முயற்சியால் 1931ஆம் ஆண்டளவில் இரத்தினவேல் ஞாபகார்த்தமண்டபம் 60 அடி X 28 அடி அளவில் அமைக்கப் பட்டது. பின்னர் 1978ஆம் ஆண்டு 40 அடி X 20 அடி கொண்ட கட்டிடத்தை அரசாங்கம் அமைத்துத் தந்தது.

திரு.சுப்பையா உடையார் அவர்கள் காலம் சென்றபின் 1960ஆம் ஆண்டு வரை அவரது சிரேஷ்ட புதல்வன் திரு.சு.சிவசுப்பிரமணியம் (கல்வியதி காரி) அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினார். அவர் காலத்தின் பின் தலைமையாசிரிய ராக திரு.பரமு.சட்டம்பியார் அவர்கள் பணிபுரிந்தார். இவருடைய காலத்தில் பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி பெற ஆரம்பித்தது. அடுத்து திரு. கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இவருடைய காலத்தில் பாடசாலை பல விதங்களிலும் வளர்ச்சி கண்டது. இக்காலப் பகுதியில் 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை (தமிழ்மொழி) என்பவற்றில் பெரும் பான்மையான மாணவர்கள் சித்திய டைந்தனர். இக்காலத்தில் காலஞ் சென்ற வைத்தியகலாநிதிஇ.மகேந்திரன் பொறியியலாலராகச் திரு.க.குலசிங்கம் உதவி அரசாங்க அதிபராக விளங்கிய திரு.கோ.அருணாசலம் வருமானவரி உதவி ஆணையாளர் திரு.ப.தம்பிப் பிள்ளை, வைத்திய கலாநிதி சு.சிவதாசன், வைத்திய கலாநிதி செ.மகேசன் முதலானோரைப் பழைய மாணவர்க ளாகச் கொண்ட பெருமை எமது வித்தியாலயத்திற்கு உண்டு.

15.02.1963 - 31.12.1964 வரையான காலப்பகுதியில் திருவாளர்.எம் . கணபதிப்பிள்ளை அவர்கள் கடமை யாற்றினார். இவரைத் தொடர்ந்து திரு.ச.நடராசா அவர்கள் 01.01.1965 - 06.01.1966 வரை அதிபர் பொறுப்பை ஏற்றார். திரு.க.கனகசபை அவர்கள் 15.07.1966 - 29.02.1968 வரையான காலப்பகுதியில் அதிபராகக் கடமை யாற்றினார். திரு.ந.சிவகுரு அவர்கள் 10.09.1968- 07.07.1969 வரை காலப் பகுதியிலும் திரு.சி.வல்லிபுரம் அவர்க்ள 08.07.1969 - 31.12.1970 வரையான காலப்பகுதியிலும் திரு.க.மாரிமுத்து அவர்கள் 01.08.1972 - 31.12.1974 வரையான காலப்பகுதியிலும் திரு.க. மாரிமுத்து அவர்கள் 01.08.1972 - 31.12.1974 வரையான காலப்ப குதியிலும் திரு.க.கதிரவேலுப்பிள்ளை 01.01.1975 - 31.01.1976 வரையான காலப்பகுதியிலும் திரு.க. பொன்னுத் துரை 01.02.1975 ஆம் ஆண்டிலும் அதிபர்களாகக் கடமையாற்றி யுள்ளார்கள். இவ்வதிபர்கள் பல துறைகளிலும் வளர்ச்சி பெற அயராது உழைத்து பாடசாலை வரலாற்றிலே முக்கிய இடத்தைப் பெற்று முடிசூடா மன்னர்களாக பணி புரிந்தார்கள். பாடசாலையின் வளர்ச்சிப் போக்கில் இவர்கள் ஏணிப்படிகளாக இருந்து சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர்களது பணி எமது கிராம மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி யுள்ளமை பாராட்டப்படக்கூடியதாக அமைந்திருந்தது.

அடுத்து 26.03.1979 முதல் 31.03.1991 வரையான காலப்பகுதியில் திரு.ப. கனகரட்ணம் அவர்கள் அதிபராக (தரம் 1) கடமையாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் மாணவர் தொகையின் வளர்ச்சிப் போக்கிலும் கட்டிடங்களின் வளர்ச்சிப் போக்கிலும் மாற்றத்தைத் தந்த காலமாகும். இவ்வதிபர் இன்றும் தனது பிள்ளைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். என்பது பெருமைப் பட வேண்டிய விடயமாகும்.

திரு.வ.நாகராஜா அவர்கள் 01.04.1991 முதல் அதிபர் பொறுப்பை ஏற்று பாடசாலையை நல்ல வழியில் நடாத்தி வந்தார். அதன்பின் திரு.வி. சச்சிதானந்தம் அவர்கள் அதிபரானார். கணித ஆசானான இவர் கணிதத்து றையிலும் விஞ்ஞானத்துறையிலும் அதிக அக்கறை காட்டி மாணவர்களைத் அதன்பால் கவர வைத்தார். இக்காலப் பகுதி போர்ச்சூழல் நிறைந்த காலமாகும். வலி - வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து இப்பாடசாலையில் தங்கியிருந்தபோது அவர்களுக்கும் இடையூறு விளைவிக்கா மல் அத்தோடு மாணவர் கல்வியிலும் குழப்பம் இல்லாது தவிர்த்து வெறுந்த தரையிலும் மரநிழல்களிலும் அமர்ந்திருந்து கல்விபுகட்டியமை குறிப் பிடத்தக்கது. இணை பாடச் செயற் பாடுகளிலும் அதிக அக்கறை காட்டி மாணவரை ஈடுபட வைத்ததும், ஒழுக்கம் கட்டுப்பாடு, சீருடை, நேர முகாமைத்துவம் என்பவற்றிலும் தனது பொறுப்பைச் செவ்வனே ஆற்றி வந்தார்.

இவரை அடுத்து, தற்போது தெல்லிப் பளைக் கல்விக்கோட்டப் பணிப்பா ளராக விளங்கும் திருவாளர். ச.கைலாச நாதன் அவர்கள் 1993 முதல் அதிபராக நியமனம் பெற்று முதன் முதலில் அதிபர் பொறுப்பை ஏற்ற பெருமையும் இப்பாடசாலைக்கே உரியது. பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக இவர் அயராது பாடுபட்டு உழைத்ததுடன் விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் சாதனை படைத்திட வேண்டும் என்பதற்காக பாடசாலைக்கு அருகே உள்ள காணியைத் துப்பரவு செய்து தற்காலிக விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்கி இல்ல மெய் வல்லுநர் போட்டிகளையும் நடாத்தி வந்தார். உடற்பயிற்சிப் போட்டிகளில் மாணவரை ஈடுபடச் செய்து வலயமட்டத்திலும் பரிசு பெற ஊக்குவித்தார். இவர் காலத்தில் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன உருவாக்கப்பட்டு பாடசாலையோடு சமூகத் தொடர்பினை ஏற்படுத்தினார். பழைய மாணவர் சங்கத் தலைவராக இப்பாடசாலை பழைய மாணவரும் அயலில் வசிப்பவருமாகிய டாக்டர் சி.தங்கவேல் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி வந்தார். இக்காலப் பகுதியில் அதிரடியாக சீட்டிழுப்பின் மூலம் பழைய மாணவர் சங்கத்திற்கு : முதன்முதலாக நிதி சேகரிக்கப்பட்டது. இக்காலம் முழுவதும் போர் நடவடிக்கைகளும் இடப்பெயர்வுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததால் இப்பாடசாலையும் இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நிலையில் பாடசாலையின் தளபாடங்கள் முக்கிய ஆவணங்கள் முதலியவற்றை வேறிடத்தில் கொண்டு சென்று

பாதுகாப்பாக வைக்க வேண்டிய தேவையும் உண்டாயிற்று அப்போது அதிபர் திரு.ச.கைலாசநாதன் அவர்களோடு ஆசிரியராக இருந்த திரு.க.பிரேமதாசன் ஆசிரியை செல்வி கௌரி அவர்களும் இக்கட்டான நிலையில் பாதுகாப்பற்ற சூழலில் பாடசாலையின் ஆவணங்களையும் தளபாடங்களையும் பேணி கோண்டாவிலில் இயங்கிய நிரு.தனியார் கல்வி நிலையம் ஒன்றில் சேர்ப்பித்து பாடசாலையின் தனித்துவத்தை பாதுகாத்து வந்தனர். மீண்டும் இடம்பெயர்ந்து மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் இப் பாடசாலை செயற்படத் தொடங்கியது. இப்பணிகளில் ஆசிரியர் திரு.க. பிரேமதாசன் அவர்களின் பங்கு போற்றத்தக்கது. இவ்வேளையில் ஆசிரியர் திருமதி.ம.இராசசேகரம் அவர்களும் அதிபரோடு நிர்வாக வேலைகளில் மிகவும் உதவியாக இருந்தார். இந்த அன்னை அனைத்து ஆசிரியர்களையும் அரவணைத்து ஒரு வழிகாட்டியாக விளங்கினார். இவர்களுடைய சேவைகளையும் இந்நன்னாளில் நினைவு கூருவது சாலச் சிறந்தது ஆகும்.

09.06.1997 - 23 .03.1998 காலப் பகுதியில் திரு.மா.நாகேந்திரசீலன் அவர்கள் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையேற்றார். கடமை, நேரத்தவறாமை என்பவற்றை மனதில் கொண்டு சிறந்த சேவை ஆற்றியுள்ளார்.

அடுத்து 24.03.98 - 02.06.02 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.க. அருணாசலம் அவர்கள் பாடசாலையின் அதிபராகக் கடமையேற்று கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டி வந்தார். இவருடைய விகடப் பேச்சு எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் வாய்ந்தது. பாடசாலையில் உள்ள நெருக்கீடுகளை உணர்ந்து செயற்பட்டார். பாடசாலைக்கு அருகிலுள்ள காணியை வாங்கி பாடசாலையுடன் இணைத்துக் கொள்வதற்கு விரும்பி முன்னுதாரணமாக தானும் பணத்தை வழங்கி, ஆசிரியர்களையும் இணைத்து காணியை வாங்கி பாடசாலையின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க உதவி நல்கினார் இவருடைய காலத்தில் பாடசாலைக்கு பணஉதவிகள் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றன. மாணவர்கள் நீர் அருந்துவதற்கு நீர்த்தாங்கி ஒன்றை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து அமைப் பதற்கு உறுதுணையாயிருந்தார். தொண்டு நிறுவனங்களை பயன்படுத்தி அதன் மூலம் கிடைக்கக் கூடிய உதவிகளுக்கும் வழிகாட்டியாக இருந்தார். இந்த வகையில் G.T.Z நிறுவனத்தினர். மாணவர்களுக்கான மலசலகூடங்கள் அமைத்துக் கொடுத்து சுகாதார மேம்பாட்டினை உயர்த்துவதற்கும் உதவியாக இருந்தார்.

தற்போது அதிபராக உள்ள திரு.கு. ஜெகநாதன் அவர்கள் 2002.06.07 திகதி இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவர் துடிப்பும் செயற்திறனும் மிக்கவர். எதிர்காலத் திட்டங்களைத் தீட்டி அதற்காக நிகழ்காலத்தில் முன்னேற்பாடுகளைச் செய்வதில் வல்லுநர் சிறந்த சிந்தனையாளர், எண்ணித் துணிபவர் பாடசாலை ஒன்றின் எழுச்சி கல்வித் துறையில் மட்டுமல்ல, விளையாட்டு மற்றும்

ஏனைய துறைகளில் வெற்றி கண்டு முன்னிலைக்குக் கொண்டு வர முடியும் என ஆரம்பத்திலேயே உணர்ந்து அதனைச் செயற்படுத்தி வெற்றியும் கண்டுவருபவர். பாடசாலையின் விளை யாட்டு மைதானத்தை புனரமைத்து ஒழுங்குபடுத்தி மாணவர்களின் உடலியக்க வெளிப்பாட்டுக்காக களம் ஏற்படுத்திக் கொடுத்தார். அதன் பயனாக நான்கு கரப்பந்தாட்ட அணிகள் உருவாக்கப்பட்டு பல மட்டங்களிலும் சாதனை படைத்து தேசிய மட்டம் வரையும் சென்று பாடசாலையின் பெருமையும் புகழையும் பொறிப்பதற்கு துணையாக இருந்து வருபவர்.

வாசிப்பு மனிதனை முழுமையாக்கு கின்றது. என்ற கூற்றை உணர்ந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுறுதிமிக்க சகல வசதிகளும் கொண்ட தரமான நூலகம் ஒன்றை 2004ஆம் ஆண்டு உருவாக்கிக் கொடுப்பதற்கு உதவி புரிந்தார். அதே கட்டடத் தொகுதியில் மாடிக்கட்டம் ஒன்றை உருவாக்கி ஆய்வுகூடம் ஒன்றை 2008ஆம் ஆண்டில் அமைப்பதற்கு உதவியாக இருந்தார். உலக உணவுத் திட்டத்தில் பாடசாலை மாணவர்க ளுக்கு வழங்கப்படும் மதிய உணவைத் தரமான முறையில் சமைத்துக் கொடுப்பதற்கு சமையலறை ஒன்றையும் கட்டிக் கொடுத்து சரியான முறையில் பேணப்பட வழிசமைத்துக் கொடுத்தார். ஆனி, ஆடி மாதம் வந்து விட்டால் எமது பாடசாலைக்கு தண்ணீர் பஞ்சமும் ஏற்பட்டுவிடும். இதனை உ ணர்ந்து எப்போதும் வற்றாத நீர்வளச் சிறப்பு வேண்டும் என்ற நோக்கில் குறையாத நீரைப் பெருக்கிக் கொடுத்தார்.

பாடசாலையைச் சுற்றி மதில் கட்டவேண்டும் என்ற எண்ணம் மனதில் விழுந்தபோது முற்றிலும் செயற்படுத்த முடியாது விட்டாலும், கூட கணிசமான அளவு மதில் கட்டுவித்தார். பாடசா லையின் அலுவலகத்தை புனரமைப்புச் செய்து வசதியான முறையில் நிர்வாக வேலைகளை ஒழுங்கமைக்கவும் உதவியாயிருந்தார். குழாய் நீர், விநியோகத்தை ஏற்படுத்தி மாணவர் களது குடிநீர் பெறுவதினை இலகு படுத்தினார். ஆசிரியர்களது வாகனங்க ளுக்காக தரிப்பிடம் ஒன்றை அமைத்த மைத்ததுடன் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளைக் கண்டு களிப்பதற்காக பார்வை யாளர் கொட்டகை ஒன்றையும் அமைத் தமை போன்றன இவரது பரந்த நோக்கில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.

பாடசாலையின் இடவசதி நெருக் கீடான போதிலும் அவசிய தேவை உணர்ந்து விளையாட்டு அறை, ஒன்றையும், களஞ்சியஅறை ஒன்றையும் அமைத்துக் கொடுப்பதற்கு உதவியாக இருந்தார். வெளியுலகத் தொடர்பை பாடசாலைக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் பாடசாலை யைச் சேர்ந்த சமூகத்தோடு நெருக்கமான தொடர்புகளையும் ஏற்படுத்தியுள்ளார். பழைய மாணவர்கள், பெற்றோர், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவ னங்கள் என்பவற்றோடு பிணைப்புக் கொண்டு அவற்றின் உதவியோடு பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி வருகிறார் குறிப்பாக அளவெட்டி வாழ் லண்டன் கனடா, மக்கள் சபைகளோடு தொடர்பு கொண்டு பாடசாலையின்

பல்வேறுபட்ட நிகழ்வுகளின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவியாக இருந்து வருகின்றார்.

மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களின் தேவைகளையும் விருப்புக்களையும் அறிந்து அதனைச் செயற்படுத்துவதிலும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். கணினி அறிவு இன்றைய கால கட்டத்தில் அவசியமென உணர்ந்து பாடசாலையிலே கணினிக் கூடம் அமைத்து கணினிக் கல்வி அளிப்பதற்கு கணினிக் கூடம் ஒன்றையும் அமைத்து உதவிய பெருமை இவ் அதிபரையே சாரும். இன்னும் தனது பதவிக் காலத்தில் பல பணிகளை ஆற்றுவாரென நம்புகின்றோம். நூற்றாண்டு விழாக் காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திக்கும் உயர்வுக்கும் ஏணிப்படிகளாக இருந்த பலர் இன்று அமரத்துவம் எய்தியுள்ளார்கள் அவர்களின் பணிகளை இன்றைய நன்னாளில் நினைவு கூர்வோமாக.

# அருணாசல அன்னையின் வளர்ச்சிப் பாதையில்....

அருணாசலம் வித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டில் காலடியெடுத்து வைக்கின்ற இவ்வேளையில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. அளவையம் பதியில் வீற்றிருக்கும் இச் சிறிய அன்னை இன்று தேசிய மட்டம் வரை தனது பெயரினைப் பதித்து வருகின்றது. இந்த வகையில் அருணாசலம் வித்தியாலயம் கடந்த பத்து ஆண்டுகளில் (2000 - 2010) படைத்த சாதனைகளைப் பற்றி சற்று நோக்குவோம். இப்பெறுபேறுகள் கல்வி இணைபாட விதானச் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

## கல்விசார் பெறுபேறுகள்

01. தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| மாணவர் பெயர் | ஆண்டு | புள்ளி |
|---|---|---|
| கு.குளோரி கிஷாந்தி | 2002 | 124 |
| ர.ஐங்கரன் | 2007 | 163 |
| சி.சாலினி | 2007 | 149 |

02. க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறு பேறுகள் :

எமது பாடசாலையில் க.பொ.த.(சா /த) பரீட்சையில் ஒவ்வொருவருடமும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை ஈட்டி வந்துள்ளார்கள். அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களது விபரங்களை நோக்குவோம்.

| ஆண்டு | மாணவர்பெயர் | பெறுபேறுகள் |
|---|---|---|
| 2001 | செல்வி.த.தர்ஷா | 5A, 2B, 3C |
| 2002 | செல்வி.ந.சுலக்ஷனா | A, B, 2C,2S |
| 2003 | செல்வன்.மு.வைகுந்தன் | 5A, 2B, C,2S |
| 2004 | செல்வன் நி.பாஸ்கரன் | 5A, B, 3C |
| 2005 | செல்வி.இ.கவிதா | 3A, B, 3C, 2S |
| 2006 | செல்வி.அ.திருமகள் | 3A, 3B, 3C,S |
| 2007 | செல்வி.த.டிஷாந்தி | 5A , 3B, C,S |
| 2008 | செல்வி.இ.குகப்பிரியா | 7A, B, C |
| 2009 | செல்வி.சி.சிறிகௌதமி | 6A, 2B,S |

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்:

ஒவ்வோர் ஆண்டுகளிலும் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டி, சமூகக்கல்வி அறிவுப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி முதலானவற்றில் கோட்ட, வலய மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றார்கள்.

விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் மாணவர்கள் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட மாகாண, தேசிய மட்டங்களில், பங்குபற்றிச் சாதனை படைத்து நிற்கின்றார்கள்.

01. கரப்பந்தாட்டம்

| | | | |
|---|---|---|---|
| 2007 | 15 வயது ஆண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | | வலயம் | 1ஆம் இடம் |
| | | மாவட்டம் | |
| 2008 | 15 வயது ஆண் } 15 வயது பெண் } | கோட்டம் | 3ஆம் இடம் |
| | 17 வயது ஆண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | | வலயம் | 2ஆம் இடம் |
| | | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | | மாகாணம் | 3ஆம் இடம் |
| | | தேசியம் | |
| 2009 | 15 வயது ஆண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | | வலயம் | 1ஆம் இடம் |
| | | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | | மாகாணம் | 2ஆம் இடம் |
| | | தேசியம் | |
| | 15 வயது பெண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | | வலயம் | 1ஆம் இடம் |
| | | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | | மாகாணம் | 2ஆம் இடம் |
| | | தேசியம் கால் | இறுதி |
| | 17 வயது ஆண் | கோட்டம் | 3ஆம் இடம் |
| | | வலயம் | 2ஆம் இடம் |
| | | மாவட்டம் | |
| 2010 | 15 வயது ஆண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | | வலயம் | 1ஆம் இடம் |
| | | மாவட்டம் | |
| | 15 வயது பெண் | கோட்டம் | 1ஆம் இடம் |

| | | |
|---|---|---|
| | வலயம் | 2ஆம் இடம் |
| | மாவட்டம் | 2ஆம் இடம் |
| | மாகாணம் | 3ஆம் இடம் |
| 17 வயது பெண் | கோட்டம் | 1ஆம் இடம் |
| | வலயம் | 2ஆம் இடம் |
| | மாவட்டம் | 2ஆம் இடம் |
| | மாகாணம் | 1ஆம் இடம் |
| 17 வயது ஆண் | கோட்டம் | 2ஆம் இடம் |

* DSI அனுசரணையுடன் இவ்வாண்டில் நடைபெற்ற மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றிய கரப்பந்தாட்ட அணிகள் பெற்ற பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| 16 வயது | பெண்கள் | 1ஆம் இடம் |
| 16 வயது | ஆண்கள் | 2ஆம் இடம் |
| 14 வயது | ஆண்கள் | 2ஆம் இடம் |

இம் மூன்று அணிகளும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ளன.

2. தடகள விளையாட்டுக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 2002 | செல்வன் அ.கோபி | உயரம் | மாவட்டம் | 2ஆம் இடம் |
| | 17 வயது | பாய்தல் | | |
| 2005 | செல்வன் ர.நிருஜன் | நீளம் | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | 13 வயது | பாய்தல் | மாகாணம் | |
| 2007 | செல்வன். ர.நிருஜன் | நீளம் | மாவட்டம் | 2ஆம் இடம் |
| | 15 வயது | 110m சட்டவேலி | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | | | தேசியம் | 4ஆம் இடம் |
| | | உயரம் பாய்தல் | மாவட்டம் | 1ஆம் இடம் |
| 2008 | செல்வன் பெ.கஜமுகன் 15 வயது | 110m சட்டவேலி | மாவட்டம் | 1ஆம் இடம் |
| 2009 | செல்வன்.சி.சிவதனுசன் | குண்டுபோடுதல் | மாவட்டம் | 1ஆம் இடம் |
| | 15 வயது | | மாகாணம் | 2ஆம் இடம் |
| | செல்வன் ர.நிருஜன் | உயரம் | மாவட்டம் | 2ஆம் இடம் |
| | 17 வயது | 110m சட்டவேலி | மாவட்டம் | 3ஆம் இடம் |

இவ்வாறு எம் மாணவர்கள் வயல, மாவட்ட, மாகாண தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றார்கள். சிறிய பாடசாலையாக இருந்தும் பெரிய பாடசாலைகளுடன் சகல துறைகளிலும் போட்டியிட்டு வெற்றியீட்டி சாதனைகள் பல படைத்து அவற்றுக்கு நிகராகத் தலை நிமிர்ந்து நிற்பதென்றால் அது அருணாசலம் வித்தியாலத்தின் வளர்ச்சி வேகத்தையே காட்டுகின்றது.

# அளவையூரின் ஆன்மீகச் செல்வர்

இந்துசமயத்தின் மறுமலர்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்த ஆறுமுக நாவலரின் பணியினைத் தொடர்ந்து சைவமும், தமிழும் ஒருங்கே வளர்வதற்கு அல்லும்பகலும் உழைத்த ஆன்மீகச் செல்வர்தான அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர் அவர்கள். அளவையம்பதியிலே நாகவரத நாராயணருக்கு அருளாலயம் அமைத்து ஆன்மீகத்தை அகிலமெங்கும் பரப்பி அடியார்களின் அல்லல்களினைத்தீர்த்து ஆறுதல்கள் அளித்துவந்தார். தன்னை தஞ்சம் என நம்பி வந்த அடியவர்களின் மனங்களில் குடியிருந்து துன்பங்களினைதுடைத் தெறிந்தார். இப்பெருந்தகை சோதிடக்கலையிலும், வல்லுநராகத் திகழ்ந்தார். இவர் கலைஞராகவும், திருவருட் செல்வராக வும் சிறப்புக்கள் பல பெற்றிருந்தார்.

கல்வித்துறையிலே நிபுணத்துவம் பெற்ற பெருந்தகை இவர் முதுகலை மாணிப்பட்டம் பெற்றதுடன் மட்டுமன்றி கலாநிதிப்பட்டமும் பெற்று சைவத்தினையும் தமிழையும் வளர்த்த செம்மல் இவர் இந்து சமயப் பேரவைத் தலைவராக விளங்கிய இவர் கவிஎழுது வதில் வல்லுநர் இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் என்ற காளமேகப்புலவர் வரிசையினைச் சேர்ந்தவர் ஆசு, மதுரம், சித்திரம், சித்தாரம் என்னும் நாற்கவியும் பாடவல்லவர் எந்த நேரமும் கவிபாட வல்ல ஆசுகவி, கதாப்பிரசங்கம் செய்வதில் ஆற்றல் மிக்கவர், தனது நாவன்மையால் சபையோரை தன் வசமே ஈர்த்து விடும் திறமை மிக்கவர் இவர் சிறந்த ஒரு ஆசான் மாணவச் செல்வங்களினை மகிழ்ச்சி கரமாக வைத்திருந்து அன்புவழியிலே எண்ணையும் எழுத்தையும் போதித்திடுவார்.



அளவையூரினை அலங்கரித்த இந்தச் செம்மலினை அறியாதவர்கள் இந்த வையகத்தில் யாருமே இல்லை. இவரின் பல்திறப்பட்ட வித்துவ ஆற்றல்களினை எண்ணிப் பெருமையடைகின்றாள் அளவை அன்னை. இவ்வாறாக சிறப்புக்களும் ஆற்றல்க ளும் படைத்த அருட்கவி.சீ. விநாசித்தம்பிப்புலவர் அருணாசல அன்னையின் அருந்த வப்புதல்வர் அவர். அன்று அருணாசல அன்னையில் அடித்தளம் இடப்பட்ட கல்வியே இன்று உலகெங்கும் இவரது புகழ் விரிந்து நிற்பதற்குக் காரணம் ஆகும். இவர் இவ் அன்னையின் முன்னைநாள் ஆசிரியராகவும் இருந்துள்ளார். என்பது சிறப்புக்குரியவிடயதாகும். இவர் இன்று எம்மத்தியில் இல்லாதமையே கவலைக குரியவிடயமாகும். நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இந்நாளில் இவரை நாம் நினைவுகூருவது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

## அருணாசல அன்னையின் வரலாற்றில் தடம்பதித்த அதிபர் பெருந்தகைகள்



திரு.அருணாசலம் சுப்பையா



திரு.சுப்பையா சிவசுப்பிரமணியம்

திரு.பரமுசட்டம்பியார்

திரு.க.கந்தையா

திரு.எம்.கணபதிப்பிள்ளை
15.02.1963 - 31.12.1964

திரு.க.நடராசா
06.01.1965 - 06.01.1966

திரு.க.கனகசபை
15.07.1966 - 29.02.1968

திரு.ந.சிவகுரு
10.09.1968 - 07.07.1969

திரு.சி.வல்லிபுரம்
08.07.1969 - 31.12.1970



திரு.க.மாரிமுத்து
01.08.1972 - 31.12.1974

திரு.க.கதிரவேலு
01.01.1975 - 1976



திரு.சு.பொன்னுத்துரை
1976 - 25.08.1979



திரு.ப.கனகரத்தினம்
26.08.1979 - 30.03.1991



திரு.வி.சச்சிதானந்தன்
01.04.1991 - 05.06.1993



திரு.ச.கைலாசநாதன்
01.12.1993 - 05.06.1897



திரு.மா.நாகேந்திர சீலன்
09.06.1997 - 23.03.1998



திரு.க.அருணாசலம்
24.03.1998 - 02.06.2002

திரு.கு.ஜெகநாதன்
02.06.2002 தொடக்கம்
இன்று வரை

# ஆசிரியர் குழாம்



இருப்பவர்கள் இடமிருந்து

திருமதி.ஜீ.சிறிதரன், திருமதி.சா.ஸ்ரீலவன், திரு.சி.திருமாவளவன், திரு.கு.ஜெகநாதன் (அதியர்) திரு.ச.நித்தியானந்தம் (உப அதியர்) திரு.உ.பிறேமானந், திருமதி . அ.இராமச்சந்திரன், திரு.தீ.ஸ்ரீபன் ரஞ்சித், திருமதி.ச.கௌரிதரன்

நிற்பவர்கள் முதல் வரிசை இடமிருந்து

செல்வி.சு.சுபாஜினி, திருமதி.ப.இராஜேந்திரன், செல்வி.சி.சுகந்தகுமாரி,திருமதி.அ.குமாரானந்தன், திருமதி.கௌ.நாகபிறேமன், திருமதி.வா.மதனகுமார். செல்வி.சு.முருகேசு, திருமதி.ல.கமலேஸ்வரன், திருமதி.ரா.கிருஷ்ணமூர்த்தி,

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை இடமிருந்து

திருமதி.சு.மதியழகன், திருமதி.தா.ஆரூரன், திருமதி.சு.நிஷாந்தன், திருமதி.கீ.கணேஷ், திருமதி.க.சிவதரன், திருமதி.உ.சிவநாதன், திருமதி.ச.திலீபன்

# கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் கற்றலுக்குத் தடையாகவுள்ள காரணிகள் பற்றிய ஆய்வும் – தீர்வுகளும்

அறிமுகம் :-

யௌவனப்பருவம், குமரப்பருவம் எனச்சுட்டப்படும் இப்பருவத்தை ஆங்கிலத்தில் 'Adolescence" என்ற சொல்லால் அழைக்கின்றனர். இதன் அடிப்படைப் பொருள் வளர்தல் என்பதாகும். இது ஆண்களில் 14 - 25 வருடங்களும், பெண்களில் 12 - 21 வருடங்களும் உட்பட்டிருக்கும். புயல் வீசும் இப்பருவத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை முதல் பல்வேறு காரணிகள் இப் பருவத்தி னரின் கற்றல் செயன் முறைகளில் கணிசமான தாக்கங்களையும் தளம்பல் களையும் ஏற் படுத் துகின் றன. சமகாலச் சமூகப்பின்னணியில் இப் பருவத்தினரது கல்வியும் பல வகைகளில் பின்னடை-வுகளுக்கு உள்ளாகி இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் வலுவாக எழுந்துள்ள நிலையில் கட்டிளமைப் பருவ பாடசாலை மாண வர்களின் கற்றலுக்குத் தடையாகவுள்ள காரணிகளை இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான பரிகார நடவடிக் கைகளை முன்மொழிவதற்காக இவ் ஆய்வு இடைநிலை உயர்கல்வி பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

மானிட வாழ்வின் முக்கிய வளர்ச்சிப் பருவங்களில் கட்டிளமைப்பருவம் சிறப் பாக நோக்கப்படுகின்றது. உடலியற் - உளவியல் மாற்றங்கள் விரைவாக ஏற்படும் பருவமான இதில் ஒருவன் பால் முதிர்ச்சியடைகின் றான். தனக்கென ஒரு தனித் தன் மையைப் பெறு கின் றான். தன் எதிர்காலம் பற்றி எண்ண எத்தனிக் கின்றான். உள - உடல் மாற்றங்கள் உடல் பருமன் அதிகரிப்பு போன்ற பன்முகத் தாக்கங் களினால் வியப்பேற்படுத்தக் கூடிய வளர்ச்சி நிலையைக் காட்டுவதால் இப்பருவத்தை இரண்டாவது பிறப்பு (Second Birth) எனவும் சிக்கலான அமைதியற்ற பருவம் எனவும் உளவியலறிஞர்கள் தெரிவிக்கின்றனர். எமது பண்பாட்டில் பெண்களுக்குக் கூண்டுகளும், ஆண்களுக்கு சிறகுகளும் கிடைக்கும். பருவம் என விபரிக்கப் படுகின்றது. இப்பருவத்தினரைச் சரியாக வழி நடாத்தினால் நாட்டில் பல பிரச்சினைகள் குறைந்துவிடும். ஆசிரியர்களும் பெற்றார்களும் இவர்களை வழிப்படுத்துவதில் மிக அவதானமாக செயலாற்ற வேண்டும்.



குறிக்கோள்கள் :

01. கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் கற்றல் மிக முக்கிய மானது என்பது தொடர்பான காட்சியை வழங்குதல்.
02. இவர்களுடைய நடத்தைகள், சிறப்பியல்புகள், மனவெழுச்சிகள்,

பிரச்சினைகளை எல்லோருக்கும் விளங்க வைத்தல், இதில் பாடசாலைகளின் செல்வாக்கை உணர்த்தல்.

03. இப்பருவத்தினரின் சமகால கற்றல் தொடர்பான குடும்பம் பாடசாலை சமவயதுக்குழு - சமூகம் ஆகிய வற்றின் செல்வாக்குகளை இனம் காணுதல்.

04. கட்டிளமைப் பருவத்தினரின் கற்றலுக்குத் தடையாகவுள்ள காரணிகளைக் கண்டறிதல்.

05. இக் காரணிகளின் தாக்கங்களில் இருந்து மாணவர்களைக் காப்பாற்றி நிவர்த்திக்கான வழிமுறைகளை முன் வைத்தலும், விழிப்புணர்வூட்டலும்

06. பரிகார நடவடிக்கைககளையும். கற்றல் ஊக்குவிப்பு முறைமை களையும் நடைமுறைப் படுத்தல் தொடர்பான செயலாற்றுகைகளை இயம்புதல்.

**ஆய்வு வினாக்கள்** (Research Questions)

யாழ்ப்பாண மாவட்ட கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் இன்றைய நிலை எவ்வாறு உள்ளது? இவர்களின் கல்வி நிலை தளம்பல்கள் - தடைகளுக்கான காரணிகள் எவை? இக்காரணிகளை இனம் காண எவ்வாறான தகவல்களைச் சேகரிக்க லாம்? இனம் காணப்பட்ட தடைக் காரணிகளை நீக்க எதும் வழிகள் உள்ளனவா? பெற்றாரும் ஆசிரியர் களும், சமூகமும் இவர்களை எவ்வாறு வழிநடாத்த வேண்டும் ? கட்டடிளமைப் பருவத்தினரின் கல்விப் பிரச்சினைகளை ஏன் பலர் உணராமல் உள்ளனர். கட்டிளமைப்பருவத்தனரின் கல்விப் பிரச்சினைகளை இனம் கண்டு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்புக்களை எவ்வாறு அதிகரிக் கலாம் குறித்த அவ் ஆய்வுக்களையும் அபிவிருத்தி தற முறைகளையும் எவ்வாறு உருவாக்கலாம்.

**மாதிரி எடுத்தல்**

தரம் 10, 11 உயர்தரம் கற்கும் குறித்த பாடசாலைகளில் இருந்து எழுமாற்றாக 100 மாணவமாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிடம் வினாக்கொத்துக்கள் நேர்காணல்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டன. மாரியாக தெரிவுசெய்யப்பட்ட கட்டிளமைப் பருவ மாணவர்கள் மிக ஆர்வத்துடன் வினாக்கொத்துக்கு பதில் எழுதியவுடன் கற்றலுக்குத் தடையாக உள்ள காரணிகள் பற்றி கலந்துரை யாடப் பட்டன. நேர்முகம் காணலில் மாணவ மாணவிகள் கண்ணீர் மல்க தமது பிரச்சினைகளை எடுத்து இயம்பினர்.

**தரவு சேகரித்தல்** (Date Collection)

1. வினாக்கொத்து - மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவருக்கு வழங்கிப்பெற்ற வினாக்கொத்து விடைகள் மூலம் பெற்ற தகவல்கள்

2. நேர்காணல் - தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்கள நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு பெறப்பட்ட தகவல்கள்

3. கணிப்பீட்டு மதிப்பீட்டு பெறுபேறுகளால் நோக்குதலும், ஆசிரியர் ,அதிபர்,பெற்றோர்கள் , சமூக வியளாலர்கள், கல்வித்துறைசார் நிபுணர்களுடன் கலந்தாய்தல், நேர்காணல்.

04. கட்டிளமைப்பருவ மாணவர் பிரச்சினைகள் அவர்களது அபிவிருத்தி

தொடர்பாக வெளிவந்த ஆய்வு வெளியீடுகள் நூல்கள், ஆவணங்கள், சுட்டறிக்கைகள், தகவல்கள் பெறப்பட்டன.

எனவே தான் பாடசாலைகளுக்குச் சென்று கட்டிளமைப்ப ருவத்தினரைச் சந்தித்து இக்கள ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. வீட்டினை அடுத்து ஒரு கட்டிளமைப் பருவத்தினருக்கு பாடசாலையே மிக நெருங்கிய அமைப்பாகவும், கூடுதலான நேரம் செலவிடப்படும் இடமாகவும், உள்ளது இவர்களின் எதிர்கால கல்வி - தொழில் வாழ்க்கைக்கு அத்திவாரம் அமைக்கும் பொறுப்பின் பெரும் பகுதி பாடசா லைக்கு உரியதாகும். நாளைய வளர்ந் தோராகும் கட்டிளமைப் பருவத்தி னரதும், இளைஞர்களதும் தேவைக ளைப் பொறுத்த மட்டில் பாடசாலை க்கே சிறப்பு வாய்ந்த பொறுப்பு உள்ளது. எனவே இப் பருவத்தினரின் வழிகாட்டல் ஆலோச னைச் சேவை நிலையங்களாகப் பாடசாலைகள் செயற்படவேண்டும்.

**தரவுப் பகுப்பாய்வும் பிரச்சினைகளும்.**

தற்காலத்தின் சமூகப்பின்னணி முன் எப்போதும் இல்லாதவாறான சிக்கலும், பிரச்சினைகளும் உடையதாகக் காணப்படுகின்றது. இதில் நீதியும். நியாயமும் அற்றுப் போகத்தக்க மனித நடவடிக்கைகள் அதிகரித்த வண்ண முள்ளன. கலாசாரச் சீர்கேடுகள், நேர்மையீனம், தவறான முதியோர் எடுத்துக் காட்டுக்கள், பாலியல் துஷ்பிர யோகங்கள், பலாத்காரம் புரிதல்கள், குடும்பங்களின் பிளவு, போதைப் பொருள் பாவனை பொருத்தமற்ற ஆடம்பரப் பொருட்களின் தாக்கங்களுக்கு உடனடியாக உட்படுவோர் கட்டிளமைப்பருவத்தினரே ஆகும். மேலும் இவர்களுக்குப் பொருத்தமான பாடசாலைக்கல்வி வீட்டுச் சூழல் வேலை உலகு, எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளும் சிதைந்த நிலையில் இலங்கையில் காணப்படுவதாக தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை எடுத்தியம்புகின்றது.

இக்கட்டிளமைப்பருவ பாடசாலை மாணவர்களின் கற்றல் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கான மூல காரணம் இப்பருவத்தினரின் விசேட சிறப்பியல்புகளை பெற்றோர் ஆசிரி யர்கள் - சமூகத்தவர்கள் உணராதமையே ஆகவுள்ளதாக மாக்கரட் மீட் என்ற உளவியலாளர் சமோவா தீவில் நிகழ்ச்சிய ஆய்வுகளில் இருந்து தெரிவிக்கின்றார். மேலும் கட்டிளமைப்பருவத்தினர் பிரச்சினைகளுடன் அல்லது பிரச்சினைகள் இன்றி வாழ்வது சமூகம் அவனை எவ்வாறு நோக்குகின்றது என்பதைப் பொறுத்தே அமைகின்றது எனவும் அவர் தெரிவிக்கின்றார். (Lovall K.unit 17 Educational Psychology) இவ்வகையில் இக்கட்டிளமைப் பருவத்தினரின் சிறப்புகளைப் பகுப்பாய்வு செய்து பின்வரும் விடயங்களாக்கிச் சுருக்கிக் கீழே தரப்படுகின்றன.

1. தன்னுணர்வு (Self Consciousness) மிகுந்து காணப்படல்.
02. உடல் - மனவெழுச்சி வளர்ச்சியில் விரைவான மாற்றங்கள்.
03. எதிர்ப்பாலாரிடையே கவர்ச்சியும், பாலுணர்ச்சி அதிகரித்தலும்.
04. சுய சார்பு பெற விழைதல்.
05. சகபாடி நண்பர்களுடன் நெருங்கிப் பழகுதல்.

06. தலைமைத்துவம் ஏற்பதில் ஆர்வம், சமூக இயக்கங்கள், திரைப்படங்கள், நாயக வழிபாடு (Hero Worship) என்பவற்றில் ஆர்வம்

07. இலட்சிய நோக்கும் யதார்த்தமும், சாதனைகள் செய்ய விழைதல் கற்பனைகளின் பெருக்கம்.

இவ்வாறான இயல்புகள் தம்முடையதாகவுள்ளதை இயம்பி நிற்கும் இவர்களிடம் வினாக்கொத்து மூலம் உமது கல்விக்குத் தடையாகவுள்ள பின்வரும் காரணிகளில் முதன்மை வகிப்பது எது? என வினவப்பட்டது. அப்போது மாணவர்கள் வெளிப்படுத்தியதை வரைபாக இங்கு தரப்படுகின்றது.

காரணிகளும் முதன்மையாக மாணவர்களைப் பாதித்த வீதங்களும்

01. புகைத்தல் போதைப்பொருள் பாவனை - (6%)

02. காதல் பிரச்சினைகள், பாலியல் தொடர்பான சிக்கல்கள், கலாசார சீர்கேடுகள் - (21 %)

03. சமவயதுக் குழுவினரின் தீய - தீவிர - தவறான வழிகாட்டல்கள் - (8 %)

04. வகுப்பறை - பாடசாலைக்கல்வி தனியார் கல்வி நிறுவனம் , தொடர்பான ஆசிரியர் - அதிபர் செலாற்றுகைகள் (14 %)

05. ஆசிரியர் பற்றாக்குறை, கற்றல் வளங்கள் போதாமை, இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் - (10 %)

06. குடும்பப் பொருளாதாரம் கடுமையான வறுமை நிலை - (18 %)

07. தொலைக்காட்சி, திரைப்படம், இலத்திரனியல், தொடர்புசாதன தாக்கங்கள் கையடக்கத்தொலைபேசி - (7 %)

08. தாய் - தந்தை குடும்பப்பிளவுகள், பிரச்சினைகள், பிள்ளைகள் மீதான அக்கறையீனங்கள் - (8%)

09. தாழ்வு மனப்பான்மை, கல்வி தொடர்பான நம்பிக்கையீனங்கள், மனமுறிவுகள், மன அழுத்தங்கள் (4 %)

10. சமகால சமூகச் சூழ் நிலையின் தாக்கங்கள் (4 %)

மேற்படி கட்டிளமைப்பருவ மாணவர்கள் தமது கல்வியைப் பாதிக்கும் காரணிகளில் முதன்மையானவற்றை எடுத்தியம்பி இருந்தனர். இவற்றைப் பகுத்து ஆராய்கின்ற போது 21 சதவீதமானோர் அவர்களுடைய பருவத்தினருக்கே உரிய காரணிகளான காதல் - பாலியல் தொடர்பான சிக்கல்கள் - குழப்பங்களினால் தம் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இவர்களுக்கு சிறந்த கல்வி வழிகாட்டல் சேவையையும், பாலியல். கல்வி தொடர்பான விழிப்புணர்வையும் வழங்க வேண்டியுள்ளது. இலங்கையில் தரம் 11, 12 இல் பயிலும் மாணவியர் கருவுறும் வீதம், அதிகரித்து வருவதாகவும், சிறுவர் இளைஞர் பாலியல் துஷ்பிரயோகத்தில் உலகிலேயே இலங்கைக்கு மூன்றாமிடம் என யுனிசெவ் 2008ஆம் ஆண்டு அறிக்கை தெரிவிக்கின்றது.

இவர்களிடம் கேட்கப்பட்ட "உங்களின் மன உணர்வுகளை சுதந்திரமாக வெளிக்காட்டுங்கள்? என்ற கேள்விக்கு..... எனக்கு ஏன் மீசை முளைக்கவில்லை எனது மார்பகம் சிறிதாகவுள்ளதே? முகத்தில் பருக்கள் ஏன் தோன்றுகின்றன? எனது பாலியல்

உறுப்புக்கள் ஏன் பெரிதாக வளர்கின்றன? எதிர்ப்பாலரிடையே பேச - பழக- தொட அன்பைப் பரிமாற மிகவும் ஆசையாகவுள்ளதே என எழுதியிருந்தனர். இவ் உணர்வுகள் இப்பருவத்தினருக்கு ஏற்படுவது இயல்பே ஆகும். இதற்கு ஓமோன் சுரப்புக்கள் காரணங்களாகவுள்ளன. இவ்வாறான பாலியலறிவு வழிகாட்டல்களை வழங்குகின்ற போதும், உளவளத்துணை சேவைகளை வழங்குகின்ற போதும், திறன்களை வேறு விருத்தி நடவடிக்கைகளில் திசை திருப்புகின்ற போதும் இவர்களுடைய ஆளுமை விருத்தியடைகின்றது. தம்மை அடையாளம் காணவும், சுய மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

அடுத்து இப்பருவத்தினரின் கல்வியைப் பாதிக்கும் காரணிகளில் வகுப்பறை பாடசாலை தனியார் கல்விநிறுவனம் தொடர்பான ஆசிரியர் - அதிபர் செயலாற்றுகை 14% மும் ஆசிரியர் பற்றாக்குறை வளப்பற்றாக் குறைகள் 10 % மாக பாடசாலை தனியார் கல்வி தொடர்பாக இவ்விரண்டையும் கூட்டும் போது 24 % மாணவர்கள் தமது கல்வி தடைப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். கூடுதல் வீதத்தினர் இதனைத் தெரிவித்துள்ளனர். பாடசாலை, தனியார்கல்விசிறுவர், அதிபர் தொடர் பான மாணவர்களின் புலக்காட்சி, நம்பிக்கையீனங்கள், இன்று பெரும ளவுக்கு இப்பருவத்தினரிடையே அதிகரித்துள்ளது. தமது உணர்வுகளைக் கல்வித் தேவைகளை புரியாமல், அக்கறை காட்டாமல் கடுமையாகவும், சிலபல பழிவாங்கல் - புறக்கணிப்புக்களிலும் ஈடுபடுவதாக 'இப்பருவத்தினர் குற்றம் சுமத்துகின்றனர். இலங்கை பாடசாலை முறைமையில் மிகப்பல குற்றச்சாட்டுக்கள் சுட்டப்படுகின்றமையை இது உறுதிப்படுத்துகின்றது. இப்பருவத்தினரின் தேவைகள் அவர்களின் எதிர்கால இலட்சியங்கள், வேலை உலகு தொடர்பாக பாடசாலைகள் வகை கூறவேண்டிய பெருமளவிலான செயலாற்றுகைகள் இன்று அவசிய தேவையாகின்றன. இது இலங்கைக் கல்வி முறைமையிலேயே தவறான பல விடயங்களை உள்ளமையைப் புலப்படுத்துகின்றது. இவற்றை விரைவாகத் தீர்க்க வேண்டிய பொறுப்பு கல்வி முகாமையாளர்களையும், கல்வியியலாளர்களையும் அரசாங்கத் தையும் சார்ந்துள்ளது. தொடர்ந்து 18% குடும்பப் பொருளாதாரம் கடுமையான வறுமை காரணமாக தமது கல்வி பாதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். இலங்கை வறிய நாடுகளில் ஒன்றாகவும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் கூடுதலாகவும் கொண்ட நாடு, மேலும் யாழ்ப்பாண குடாநாடு யுத்தம் அதன் காரணமாக தந்தை தாய் இழப்பு, பொருள் வீடு இழப்பு எல்லாத்தாக்கங்களும் குடும்பங்களின் வறுமையை மேலும் உயர்த்தி உள்ளன. இப்பருவத்தினரைத் தாக்கும் இம் மோசமான நிலையை நீக்க அரசசார்பற்ற, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவிகளைக் கூட பெறத் தெரியாமல் பெரும்பான்மை மாணவர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஆசிரியர்களும், சமூகத் தொண்டர் களும், உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வழிகாட்ட வேண்டும். இதற்கான புதிய செயற்றிட்டங்கள் தேவையாகவுள்ளன.

புகைத்தல், போதைப்பொருள், கையடக்கத்தொலைபேசி பாவனை, சமவயதுக் குழுக்களின் தீய வழி காட்டல்கள், தொலைக்காட்சி மற்றும் ஊடகங்கள், குடும்பப்பிளவுகள் ஆகிய காரணிகள் சம அளவிலான தாக்கங் களை ஏற்படுத்துகின்றன. இவற்றின் தாக்கங்களில் இருந்து இவர்களை இலகுவில் மீட்க முடியும். பெற்றார் - ஆசிரியர், ஆலோசகர்கள், தொண்ட ர்கள், ஊடகங்களின் உறவும் பங்கு பற்றலும் இதற்கு வழிவகுக்கும், மற்றும் சமகாலச் சூழ்நிலைகள். தாழ்வு மனப் பான்மை, நம்பிக்கையீனங்கள் ஆகிய காரணிகளும் இப்பருவத்தினரின் கல்வி யையும் வாழ்க்கையையும் பாதி க்கின்றன. முக்கியமாக இதுவரை நடந்த யுத்தத்தாக்கங்கள் எல்லா மாணவர் களையுமே பெருமளவு பாதித்துள்ளன. இதற்கு உளவளத் துணை வழி காட் டலும், விழிப்புணர்வுகளும், தேவையாக வுள்ளதுடன் குடும்ப உறவு நிலை களையும் வலுவூட்ட வேண்டியுள்ளது.

கட்டிளமைப்பருவம், தொடர்பாக புராண இதிகாசங்கள், தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள், கிரேக்க, உரோம எகிப்திய நாகரிக கால இலக்கிங்களில் பலவாறாகக் கூறப்படுகின்றது. நவீன உளவியல் வளர்ச்சியில் 1904 ஆம் ஆண்டு ஸ்டான்லி ஹலிங் கேஸ்ட் என்ற உளவியலறிஞர் இப்பருவத்தினரின் சமூக மனஎழுச்சி, கல்வி வளர்ச்சி பற்றிய தொழிற்பாடுகளை விரிவாக இயம் பியுள்ளார். அபிவிருத்தி அடைந்துவரும் வறுமையான எமது நாட்டில் இப்பரு வத்தினரை வழிநடாத்தும் முக்கிய பொறுப்பு பாடசாலையுடையதாகவும் குடும்பத்தினுடையதாகவும் இருக்கும் போது சிறப்பான எதிர்காலத்தை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்க முனைய வேண்டியுள்ளது. இதற்குப் பாடசாலைகளும் பெற்றார்களும் வலுவாக இணைந்து செயற்பட்டாக வேண்டும்.

இப்பருவத்தினரை சமூகத்தின் முதிர்ந்த உறுப்பினராகவும் பொறுப்பு டையவராகவும் உருவாக்கும் முயற்சி யில் பாடசாலையே சமூகத்தின் மைய மாகவுள்ளது. சமவயதுக்குழு செல்வா க்குக்கூட பாடசாலை வகுப்பறையினூ டாகவே விரிவடைகின்றது. மேலும் ஆலோசனை வழிகாட்டல் சேவை நிலையங்கள், ஏனைய கட்டிளமைப்ப ருவத்தினருக்கு வழிகாட்டும் சேவை நிலையங்கள், ஏனைய கட்டிளமைப் பருவத்தினருக்கு வழிகாட்டும் சேவை நிறுவனங்கள் பாடசாலைகளுடன் பொறுப்புக்களைப் பகிரக் கூடிய சந்தர்ப் பங்கள் அதிகம் உண்டு. இவ் விடயங்களில் இப்பருவத்தினருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகுந்த முக்கியத்துவ முடையவர்கள் சிறந்த உள வளத் துணையாளராக, நண்பராக, வளர்ப்புப் பெற்றோராக, வழி காட்டி யாக, ஆலோசனை வழங்குபவராக அன்புடையவராக, பரிவுடையவராக, கல்வி - தொழில் வழிகாட்டியாக, ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட அக்கறை செலுத்தி தம்மோடு ஒருவராக எமது ஆசிரியர் இருக்கின்றார் என்ற உணர்வுகளை, மாணவர்கள் விரும்பு வதை அவாவுறுவதை இவ் ஆய்வு வெளிக்காட்டியுள்ளது. இதற்கு ஏற்ப செயலாற்றக்கூடிய சூழ் நிலைகளை ஆசிரியர்களுக்கு பாடசாலை முகா மைத்துவம் மேலதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

**விமர்சனங்களும் மெய்மைகளும்**

கட்டிளமைப்பருவத்தினரைப் எவ் வகையான வழிகாட்டலையும், விரும் பான் என்ற பொதுவான எண்ணங் களுக்கு மாறாக, அப்பருவத்தினரின் மாறும் நிலைப் பருவத்தில் அவர்களுக்கு உதவி, காப்பு, கணிப்பு, அன்பு, வழிகாட்டல் என்பன பெரிதும் தேவைப்படுகின்றன. என இவ் ஆய்வும் உறுதிப்படுத்துகின்றது. மூத்தோரான இது போன்ற மாற்றங்களை முன்னர் அனுபவித்தவர்களான, அவர்களிட மிருந்தே இவ்வாறான வழிகாட்டலை இலகுவாகப் பெறமுடியும் என இப் பருவத்தினர் நம்புகின்றனர். எனவே பெற்றார், ஆசிரியர், அதிபர், சமூகத்த வர்கள் தமது வேலைச்சுமை பிரச்சி னைகள், சிக்கல்கள், என்பவற்றை அர்ப்பணிப்புடன் சகித்து இப்பருவத்தி னரின் கல்வி மற்றும் வாழ்க்கை வளம்பெற உதவவேண்டும். இதற்கான புதிய வேலைத்திட்டங்களை அரசாங்க மும், கல்வியமைச்சும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் கட்டிளமைப்பருவ தேவை கள் நிறைவேறுதல் யாவும் சமூக இடைத்தாக்கத்தினால் பெறப்படு கின்றது. அன்பு, பாதுகாப்பு, ஏற்பு, மதிப்பு, போன்ற அவர்களுடைய தேவைகள் சமூக கலாசார ரீதியாக ஏற்புடைய நடத்தைகளைப் பெறுவ தனாலேயே நிறைவேற்றப்படுகின்றது. சமூகமானது இப்பருவத்தினரின் தேவை கள் நிறைவேற்றுதலை பொருத்தமான வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளுடன் இணைக்க வேண்டும். சமூகத்தின் ஏற்பினால் மீளவலியுறுத்தலைப் பெறும் இப்பருவத்தினர் மற்றைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஊக்கம் பெறுவர். மீண்டும் ஏற்பையும், மதிப்பையும் பெறுவதற்கு வேறு அடைவுகளைப் பெற்றுக் கொள்ளும் ஊக்கம் தோன்றும், வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளை அடையாவிடின் தேவைகள் நிறைவேறுதல் தடைப்படும். தடைப்படுவதால் தோல்வி, விரக்தி நிலை இப்பருவத்தினரைத் தாக்கி ஒரு நச்சு வளையம் தோன்றி இயங்கி இவர்களின் கல்வி எதிர்கால வாழ்வைப் பாதிக்கும். என்பதை மூத்தோர்கள் நன்குணர்ந்து இவர்களுக்காத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கான சூழ்நிலைகளை நாமனைவரும் இணைந்து மேலும் விஸ்தரிப்போமாக, எமது குடும்பங்களையும், பாடசாலை களையும், இத்துறைசார்பாக மேலும் வலுவூட்டுவோமாக.


01.பேராசிரியர் சபா.ஜெயராசா - (2001) தமிழர் உளவியலும் கல்வியும் போஸ்கோ வெளியீடு - நல்லூர் , யாழ்ப்பாணம்.

02.பா.தனபாலன் - (2005) பிரயோக உளவியல் சுங்கை பிரிண்டேஸ் வெளியீடு யாழ்ப்பாணம்.

03.David Moshman (1999) - Adolescent Psychology Development London

04.Gene and Berliner (1984) - Educational Psychology Houghton Miffin Company Boston.

05.The First Report of the National Education Commission (May - 1992) - Government Printing Sri Lanka. Colombo - 07

06.Intet - www.unicef - org - website.

# பாம்பின் தலையிலுள்ள குழிகள் ஆபத்தைக் குறிக்கின்றனவா?

**அறிமுகம்:**

பாம்புகள் ஊர்வனக் கூட்டத்தைச் சார்ந்தவை. ஊர்வனக் கூட்டத்தைச் சார்ந்த அங்கிகள்யாவும் சூழல் வெப்பக் குருதியுடையவை. அதாவது அவற்றின் உடலின் வெப்பநிலையானது வெளிச் சூழலின் வெப்ப நிலையில் தங்கியு ள்ளது. சூழலின் வெப்பநிலை உயர்ந்தால் உடலின் அல்லது குருதியின் வெப்ப நிலை உயரும். அதேபோல் குளிரான நேரங்களில் உடல் வெப்ப நிலை யானது குறைந்து காணப்படும்.

எந்த உயிரினத்திலும் வெளிச்சூழலை அறிவதற்கு அதற்குரிய புலனங்கம் விருத்தியடைந்திருக்கும். உதாரணமாக சூழல் வெப்பநிலையை அறிவதற்கு வெப்பவாங்கிகள் காணப்படும். இவ் விடங்களில் உருவவியலில் சிறப்படையாத சுயாதீன நரம்பு முடிவிடங்கள் நிறைந்து காணப்படும். மனிதனைப் பொறுத்தவரையில் மேற்றோல், உட்தோல் முழுவதிலும் இவ்வாறான நரம்பு முடிவிடங்கள் பரந்து காணப்படுகின்றன.

ஆனால் பாம்புகளின் மேற்றோலில் சுயாதீன நரம்பு முடிவிடங்கள் காணப் படுவதில்லை. காரணம் இவற்றின் உடலானது முற்று முழுதாக வரண்ட செதில்களால் மூடப்பட்ட தொன்றாகும். அதனால் பாம்புகள் அடங்கலாக ஊர்வனக் கூட்ட அங்கிகளின் உடலின் பெரும்பாலான பகுதி வெப்பநிலையை உணரக் கூடிய ஆற்றல் அற்றவையாகும். அப்படியாயின் அவை எவ்வாறு சூழல் வெப்பநிலையை அறிகின்றன.

**சூழலை அறிதல்:**

இக் கூட்ட அங்கத்தினர்களின் மேற்றோலின் சில இடங்களில் மாத்திரம் சிறு துவாரங்கள், குழிகள் மற்றும் கரணைகள் போன்ற பகுதிகள் காணப் படுகின்றன. இப் பகுதியிலுள்ள மேற்றோல் கலங்கள் மற்றைய இடங்களிலுள்ள கலங்களை விட உயர மானவையாகக் காணப்படும் இப்பகுதியில் நரம்பானது தமது முடிவிடங்களைப் பதிக்கக் கூடியதாய் இருக்கும்.

பாம்புகளைப் பொறுத்தவரையில் செதில் அங்கங்களாக இரண்டு வகை காணப்படுகின்றன. முதலாவது வீக்கவுருக்கள் ஆகும். இவை செதில் ஒன்றிலுள்ள ஒளி முறிவடையக் கூடிய சற்றே குவிந்திருக்கும் பகுதியாகும் இது பாம்பொன்றின் தலை, உடல் செதில்களில் பெரும் பாலாகக் காணப்படும். தொட்டுணர்ச்சியுடன் தொடர்புபட்டது. இவை பொதுவாக எல்லாப் பாம்புகளிலும் காணப்படும். அடுத்ததாக குழிகள் ஆகும். இவை தலைப் பகுதியில் காணப்படும் ஆழம் குறைந்த சிறிய தவாளிப்புகள் ஆகும். இவை வெப்பக் கதிர்ப்பை உணரக் கூடிய பகுதிகள் ஆகும். ஒரு சில பாம்புகளின் மட்டுமே இவை காணப்படுகின்றன.

**குழிகள் காணப்படும் பாம்புகள்**

இரண்டு குடும்பங்களைச் சார்ந்த அங்கத்தினர் இவ்வகையான குழிகளைக் கொண்டிருக்கும் இவற்றுள் ஒன்றாக Viperidae குடும்பத்தைச் சார்ந்த புடையன்கள் அடக்கப்படுகின்றன. எல்லாப் புடையன்களும் இவற்றைக்

கொண்டிருப்பதில்லை யெனினும் குழிகளைக் கொண்டுள்ள வற்றை குழிப்புடையன்கள் (Pit Vipers) என அழைப்பர்.

Rattle snake அல்லது கிலுக்கிப் பாம்பு என அழைக்கப்படும் Crotalus sp ஆனது முகத்தில் இரண்டு குழிகளைக் கொண்டுள்ளது. இது நாசித்துவாரத்திற்கும், கண்ணிற்கும் இடையே பக்கத்திற் கொன்றாக அமைந் திருக்கும். இவற்றின் தவாளிப்பானது மண்டை யோட்டின் அனுஎன்புவரை நீண்டிருக்கும். கிட்டத் தட்ட 1.5 m நீளமான பாம்பொன்றில் 5mm ஆழமாக தவாளிப்பு காணப்படலாம்.

இலங்கையிலுள்ள புடையன்களில் மரவாழ்க்கையைக் காண்பிக்கும் பச்சைப் புடையன்கள் (Green pit Vipers) மாத்திரம் இரண்டு குழிகளை முகத்தில் கொண்டுள்ளன. மற்றையவை இதனைக் கொண்டிருப்பதில்லை.

இதேபோல் வாயை எல்லைப்ப டுத்தும் செதில்களான மேல் உதட்டுச் செதில்களிலும், கீழ் உதட்டு செதில்க ளிலும் இவ்வாறான குழிகள் காணப்ப டலாம் இவற்றிலுள்ள குழிகள் ஒவ் வொரு இனங்களிற்கேற்ப எண்ணி க்கையிலும், அளவிலும் வேறுபடலாம்.

இப்படிப்பட்ட குழிகளைக் கொண்ட அங்கத்தவர்கள் Boidae குடும்பத்தைச் சார்ந்தவற்றுள் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள வற்றில் மலைப் பாம்பு அல்லது வெங்கணாத்திப் பாம்புஎன்று அழை க்கப்படும் பாம்பில் (Python sp) இவ்வகையான குழிகள் காணப்படு கின்றன.

**பாம்புகளின் உயிர்வாழ்க்கையில் இவ் வங்கத்தின் பங்கு:**

இவ்வகையான குழிகளில் வெப்ப வாங்கிகள் காணப்படுகின்றன. அதாவது இங்கு அதிகூடிய எண்ணிக்கையில் நரம்பு முடிவிடங்களும் குருதி மயிர்தது ளைக் குழாய்களும் காணப்படுவதுடன் இப்பகுதியிலுள்ள தோலானது சூழவு ள்ள பகுதிகளை விட மிக மெல்லியதா கவும் உள்ளது. இதன் மூலம் சூழலின் வெப்பக் கதிர்ப்பை மிகத் துல்லியமாக அளவிடக் கூடியதாய் உள்ளது. இவற்றின் உணர்திறன் எவ்வளவு என்றால் புறச்சுழலின் வெப்பநிலை 0.0030C யினால் மாற்ற மடைந்தாலே இவற்றால் உணர முடியும்.

பொதுவாகப் புடையன்களும், மலைப்பாம்புகளும் இரவில் இரை தேடும் பழக்கமுடையவை. ஆழ்ந்த இருட்டில் இரைகள் கண்ணிற்குத் தெரியாத போதும் மிகச் சரியாக இரையை குறிவைத்துத் தாக்கும் வல்லமையை இக்குழிகளினால் இவை பெற்றுள்ளன.

இந்த அதிஉயர் உணர்திறன் காரணமாக இரண்டு வகையான நிகழ்வு கள் சாத்தியமாகின்றன. ஒன்று இரையிருப்பதை அறியக்கூடியதாய் இருத்தல், இரண்டாவது இரை இருக்கும் தூரத்தை துல்லியமாகக் கணக்கிடக் கூடியதாய் இருத்தல்.

இதன் மூலம் தமக்குரிய உணவை எதுவித தடங்கலுமின்றி பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருப்பதுடன் எதிரிகள் மற்றும் இரை கௌவிகளிற்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இதன் மூலம் சூழலில் தமது உயிர் வாழ்க்கையை தொடர்கின்றன.

இவற்றைவிட கற்கள், பாறைகள், மரப்பொந்துகள், நிழலான மற்றும் வெயிலான இடங்களின் தன்மைகளை அறிவதன் மூலம் தமக்குரிய வாழிடங்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய தாயும் உள்ளது.

**இவை மனிதரைக் குறிவைப்பவையா?**

இந்தப் பாம்புகள் மர எலிகள், அணில்கள், பறவைகள், போன்ற வெப்பக்குருதியுடைய விலங்குகளையும். அறணைகள், ஓணான்கள் போன்ற சூழல் வெப்பக் குருதியுடைய விலங்குகளையும் உண்கின்றன. புடையன்கள் யாவும் கொடிய விஷமுடையவை ஆனால் மலைப்பாம்புகள் விஷமற்றவை. எனினும் இரவு வேளைகளில் மறைவிடங்களில் பதுங்கியிருக்கும் இரைகளை வெப்ப கதிர்ப்பு மாற்றத்தினால் பிடிக்கின்றன.

மனிதன் ஓர் வெப்பக் குருதியுடையவனாக இருப்பதால் மனிதரிலிருந்து எழும் வெப்பக்கதிர்ப்பால் கவரப்பட்டு தற்செயலாக இப்பாம்புகள் மனிதரையும் குறிவைத்துத் தாக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. பொதுவாக தமது இரைகள் அல்லாதவற்றைத் தாக்குவதில்லை. விலகிச் சென்று விடும்.

இரவில் கவனக்குறைவாக வெளியில் செல்லும் போது அல்லது தவறுதலாக இப்பாம்புகளின் மேல் காலை வைக்கும் போது இவை கடிக்கின்றன. பெரும்பாலான விபத்துக்கள் மரணங்கள் இதனாலேயே சம்பவிக்கின்றன.

இரவில் செல்லும் போது ஏதாவது விளக்கு ஒன்றை எடுத்துச் செல்வதன் மூலமும், அல்லது நிலத்தை ஓர் தடியினால் தட்டியபடி செல்வதன் மூலமும் பாம்புக்கடியிலிருந்து இலகுவாக தப்பிக்கலாம். ஏனெனில் பாம்புகள் தாம் வரும் வழியில் ஏதாவது குழப்பத்தை உணர்ந்தால் அவ்வழியை தொடராது வேறு திசையில் சென்றுவிடும். இதன் மூலம் பாம்புக் கடியைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

கலாநிதி. திருமதி.அபிராமி சிவரூபன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# விண்ணிலே தவழும் வெண்ணிலா

விஞ்ஞானத்துறை இன்று காட்டாற்று வெள்ளம் போல ஓடிக் கொண்டிருக்கின்றது. அதில் விந்தைகளும், புதுமைகளும், மலிந்தவண்ணமுள்ளன. "ஆழ்ந்த அறிவும் தெளிந்த சிந்தையும், பரந்த அனுபவமும் கொண்டு. நீண்டநாள் ஆராய்ச்சி மூலம் தொடர்ந்த பல பரிசோதனைகள் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டு கட்டியெழுப் பட்ட சாஸ்திரமே விஞ்ஞானமாகும். நாம் வாழும் சூழலைப் பற்றி கூறும் விஞ்ஞானத்துறை இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல் , விலங்கியல் என நான்கு கிளைகளாகப் பிரிந்து மனித வாழ்வை மெரு கேற்றிய வண்ணமுள்ளது. இன்று விஞ்ஞானத் துறை பூமியில் ஏற்பட்ட சில நெருக்கீடுகளுக்கு தீர்வுகாண தனது ஆராய்ச்சிப் பார்வையை மேல்நோக்கித் திருப்பியுள்ளது. அதன்விளைவு வானியல் என்ற புதிய கிளை அரும்பியுள்ளது. அதே போன்று அணுவைப் பிளந்த பழைய கதையின் விளைவாக "இலத்திரனியல்"என்ற தளிரும் துளிர்த் துள்ளது. இளையதாகத் துளிர்த்துள்ள இரு கிளைகளும் சாதாரண அறிவு படைத்த சாமானியமக்களால் விளங்குவது எளிதல்ல ஆனால் அடுத்த புதிய கிளை எம் கண்முன்னே அகப்படும் வான் பொருள்களைப் பற்றியதாக அதன் கண் எம் சிந்தையைத் திருப்புவோம்.

வானவெளியில் எண்ணற்ற வான்பொருட்கள் வலம் வந்தாலும் வெண்ணிலா என்று அழைக்கப்படும் சந்திரனைப் பற்றிய பார்ப்போம் வான்பொருள்கள் மூன்று வகைப் படும்



1. நட்சத்திரங்கள் அல்லது உடுக்கள்
2. கோள்கள் அல்லது கிரகங்கள்
3. உபகோள்கள் அல்லது உபகிரகங்கள்

என்பனவாகும். நட்சத்திரம் என்ற வகையிலடங்கும் சூரியனைச் சுற்றி வலம் வரும் கோள்களில் ஒன்று பூமி அப்பூமியைச் சுற்றி வரும் உபகோளே சந்திரனாகும். பூமிக்கு மிக அண்மையில் இருக்கும் வான்பொருள் சந்திரனாகும். சந்திரனை விட மிகப் பெரிய வான்பொருட்கள் பல இருந்தாலும் பூமியிலிருந்து பார்ப்போருக்கு சந்திரனே மிகப்பெரிய வான்பொருளாகும். எனவே தாள் மனிதனின் விண்வெளிப் பயணத்தின் முதல் இலக்காக சந்திரன் விளங்குகின்றான கோள்வடிவான சந்திரன் ஏறத்தாழ இருநூறு மைல் குறுக்களவு கொண்டது. பூமியுடன் ஒப்பிடும் போது புவி சந்திரனைப்போல் நாலு மடங்கு குறுக் களவு கொண்டது. ஆனால் சந்திரனின் எடை பூமியை விட மிகவும் குறைவானதாகும். இதனால் சந்திரனின் கவர்ச்சி விசை, பூமியின் கவர்ச்சி விசையை விட 1/6 பங்கு குறைவாகும். கவர்ச்சி விசைக்குறைவின் காரணமாக அசைந்து கொண்டிருக்கும் வளி மூலக்கூறுகள், சந்திரனால் கவரப்படுவதில்லை. இதனால் சந்திரனில் வளிமண்டல இருப்பு

இல்லாமலுள்ளது. எனவே சந்திரனில் காலடி வைக்கும் மனிதன் உடன் காற்றையும் எடுத்து செல்லு கின்றான் இதனைவிட வேறும் பல சங்கடங்களை எதிர்கொள்கின்றான்.

பூமியில் சதுர அங்குலத்திற்கு பதினைந்து இறாத்தல் எடையோடு வளிமண்டலம் எம்மை அழுத்துகின்றது. வளிமண்டல அழுத்தமும் புவியீர்ப்பு விசையும் மனிதனைப் புவியோடு ஒட்டவைத்துள்ளது. சந்திரனின் ஈர்ப்பு விசைக்குறைவு வளிமண்டல அமுக்க மின்மை என்பவற்றால் மனிதன் பல எதிர் விளைவை சந்திக்க வேண்டி யுள்ளது. அதாவது சந்திரத்தரையில் காலூன்றி நிற்க முடியாது, மனிதனின் குருதியமுக்கத்தில் சமமான எதிர் அமுக்கம் வெளியிலிருந்து கிடைக் காமையால் குருதிக்குழாய்கள் வீங்கி வெடிக்கும் அபாயமேற்படுகின்றது. எனவே சந்திரமண்டல பயணம் இவற்றிற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகை யில் ஆயத்தமாக அமையவேண்டும்.

சந்திரனின் ஈர்ப்புவிசை புவியை விட குறைவானதால், பூமியில் நூற்றுஐம்பது இறாத்தல் எடையுடனும் பூமியில் ஐந்தடி உயரம் தாவக்கூடியவன் சந்திரனில் முப்படி உயரம் தாண்டுவான். இது போன்ற விந்தைகள் அளப்பரியன சந்திரனில் காற்று இன்மையால் வெப்பம் நிலை $130^{0}$ செல்சிய ஆக உள்ளது. திரவநீர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அத்துடன் பனிக்கட்டிப் பாறைகளும் சூழ்ந்து காணப்படுகிறன. மனித வாழ்வின் அத்தியாவசிய தேவைகளான காற்று, நீர் இன்மையால் மனிதனின் கோளப்பெயர்வு தடைப் பட்டு நிற்கிறது. அத்துடன் சந்திரன் பற்றிய ஆராய்ச்சியிலும் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

ஏனைய வான்பொருள்களை விட சந்திரனின் ஒளி எவ்வாறு குளிர்ச்சி நிறைந்தது என்பது சிந்தனைக்குரியது சுய ஒளியற்ற சந்திரன் சூரியனில் இருந்து பெற்றுக் கொள்ளும் வெப்பக்கதிர்களின் வெப்பம் உறிஞ்சப் பட்ட பின்னரே பூமிக்கு வீசப்படுகிறது. இதுவே அதன் குளிர்ச்சிக்கு காரணமாகும். இச்செயன் முறையே சந்திரனில் சூரிய ஒளிபடும் இடத்தின் வெப்பநிலை $120^{0}$ C யா நிலைத்திருப்பதற்குக் காரணமாகும்.

சந்திரனைப் பற்றிய விசித்திரமான விபரங்களை அறியத் தந்தது விண் வெளிப்பயணமாகும். இதற்கு உதவிய ரொக்கட் கண்டுபிடிப்புக்கு அடித்தள மாக அமைந்தது ஓர் சாதாரண நிகழ் வாகும். நீரின் மேல் மிதந்து கொண்டி ருந்த ஒரு பலகையின் மேல் உல்லாசமாக இருந்த ஒருதவளை இரையைக் கண்டதும் அதைப் பிடிக்கத் தாவிப் பாய்ந்த போது பலகைத் துண்டு பின்னோக்கித் தள்ளப்பட்ட சம்பவமே ரொக்கட்டின் உதயத்திற்கு ஆதாரமாக அமைந்தது. ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறு தாக்கம் உண்டு என்ற விஞ்ஞானத் தத்துவத்தின் அடிப்படையில் இயங்கு வது ரொக்கட் ஆகும். இன்றைய யுகம் ரொக்கட் யுகமாகும். இதுவரை ரொக்கட் யுகம் தந்த புதுமைகளில் அதிர்ச்சியிலிருந்து மனிதகுலம் இன்றும் மீளவில்லை. எதிர் காலத்தில் என் னென்ன விந்தைகளை மனித குலம் எதிர்கொள்ளப் போகின்றதோ யாரறிவார்?

க. அருளம்பலம்
ஓய்வு பெற்ற உபஅதிபர்,
யா / அருணோதயாக் கல்லூரி.

# எனது மனதில் எழுந்தவை

## அளவையூரில் அருணாசலம் வித்தியாலயம்

யாழ் குடாநாட்டின் வட பால் அமைந்துள்ள பெரியகிராமங்களில் ஒன்றே அளவெட்டி. அளவெட்டிக் கிராமத்தின் தெற்குத் திசையிலே எழிலுற வீற்றிருக்கும் அன்னை தான் அருணாசலம் வித்தியாலயம் இக் கிராமத்தில் ஏழு பாடசாலைகளே அமைந்துள்ளன. யா/ அளவெட்டி அருணோதயக் கல்லூரி யா / சதானந்தா வித்தியால சாலை யா / அளவெட்டி ஞானோதயா வித்தியாலயம் யா / அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை யா / அளவெட்டி தெற்கு றோ. க.த.க பாடசாலை யா / அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்பவற்றுடன் ஊரின் மத்தியில் விளங்குவதே அருணாசலம் வித்தியாலயம்.

சைவமக்கள் பெரும்பான்மை யானவர்கள் வாழ்ந்தமையால் எமது அன்னையைச் சூழ ஏராளமான ஆலயங்கள் உண்டு. அந்த வகையிலே பெருமாக்கடவை பிள்ளையார் ஆலயம், அருவம்பற்று பிள்ளையார் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம், குருவளை வைரவர் ஆலயம், நாகவரதநாராயணர் ஆலயம் என்பன அவற்றுள் சில சைவ ஆலயங்கள் போன்றே கிறிஸ்தவ ஆலயங்களும் உண்டு. அந்த வகையில் சூசையப்பர் ஆலயமும், கத்தோலிக்க தேவாலயமும், தென்னிந்திய திருச்சபையும் அமைந்துள்ளன. எமது



அன்னையயின் சுற்றாடலில் பரந்தளவிலான வயல்வெளிகளும் அவற்றிடையே அழகிய குளம் ஒன்றும் அமைந்துள்ளது. அக்குளத்தில் மாரி காலத்தில் நீர்நின்று கோடைகாலத்தில் வற்றிவிடும் இக்கோடை காலத்தில் எம்மூர் விவசாயிகளால் மாட்டுவண்டிச் சவாரி நடாத்தப்படும். இதனை யாவரும் கண்டு களிப்பர்.

அருணாசல அன்னை அருணாசல உடையாரால் 1910 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பாடசாலையின் ஆரம்பப் பெயர் நாகபூஷணி வித்தியாலயம் என்பதே ஆகும். எமது பாடசாலையின் ஸ்தாபகரினால் ஆரம்பிக்கப் பெற்ற பிறிதொரு பாடசாலையே அருணோதயக் கல்லூரி ஆகும். அருணாசலம் வித்தியாலயம் தமிழ்ப் பாடசாலை யாகவும் அருணோதயக் கல்லூரி மேல் வகுப்புக்களை உடைய ஆங்கிலப் பாடசாலையாக மகிழ்ந்தது. எமது பாடசாலையில் ஆரம்பக்கல்விக் குரிய சிறந்த தமிழ் அத்திவாரத்தினை அமைத்த பின்னரே மாணவர்கள் அருணோதயாக் கல்லூரிக்குச் சென்றார்கள். இதனையே ஸ்தாபகரும்

விரும்பினார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

எமது பாடசாலை ஆரம்பத்தில் சிறு கொட்டில்களுடனே ஆரம்பமானது இதனால் வகுப்புக்கள் நடைபெற இடவசதி பற்றாக்குறையாக இருந்தது. நீண்ட காலத்தின் பின்னர் அரசாங்க உதவியுடன் ஒடுபோட்ட திடகாத்திரமான கட்டடம் இரண்டு அமைக்கப்பட்டது அவை இன்றும் நிலைத்து நிற்கின்றன. இங்கு ஏராளமான மாணவர்கள் கல்விகற்று சிறந்த கல்விமான்களாகவும் அறிஞர்களாகவும் நிபுணர்துவ வல்லுநர்களாகவும் பெரியவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள் நானும் எனது மூன்று சகோதரர்களும் இங்கேயே கல்வி கற்று பட்டம்பெற்றுப் பணிபுரிந்தோம். நான் இங்கேயே படித்து ஆசிரியராகி இங்கேயே பல ஆண்டு ஆசிரியப் பணியைச் செவ்வனே செய்தேன்.

ஆரம்பகாலங்களின் தமிழ், கணிதம், கவின் கலைப் பாடங்களில் புலமை பெற்ற பலரால் பாடங்கள் போதிக்கப்பட்டன. எண்ணும் எழுத்தும் சிறந்தவழியில் கற்பிக்கப்பட்டன. கல்வி மேலும் வளர்ச்சியடைய பட்டதாரி ஆசிரியர்கள் பலரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பலரும் இங்கே நியமிக்கப்பட்டு கல்வி என்னும் பயிர் வளர்க்கப்பட்டது. மாணவர்கள் பிழை விடும் இடங்களினை சரியாகக் கண்டறிந்து தகுந்த முறையில் கண்டிக்கப் பெற்று ஒழுக்க சீலர்களாக வளர்ந்தார்கள் ஆசிரியகுழாமினர். சிறந்த ஆற்றல்மிக்க அதிபர்களாலும் ஆற்றல் மிக்க ஆசிரியர்களாலும் பாடசாலை வீறுநடை போட்டு வளர்ச்சியடைந்து இன்று நூறு ஆண்டுகளில் காலடி எடுத்து வைக்கின்றது. இக்கால கட்டத்தில் இவ் அன்னையின் சாதனைகளோ பல அவற்றினை நாம் சொற்களிலே வடிக்க முடியாதுள்ளது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கமைய எமது அன்னையின் புதல்வர்கள் பலர் புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்துவரும் இக்காலத்தில் எமது அன்னையின் வளர்ச்சிக்கு உதவிபுரிந்தும், உதவிபுரிய ஆவலாகவும் உள்ளார்கள்.

ஆரம்பத்தில் சிறுகொட்டிலில் ஆரம்பிக்கப்பெற்ற இப்பாடசாலையில் இன்று நூல்நிலையம், விஞ்ஞான ஆய்வு கூடம், மலசலகூடம், தண்ணீர் வசதிகள் தகுந்தமுறையிலே அமைக்கப் பெற்றுள்ள போதும் வகுப்பறைகளிகான கட்டடவசதி தான் போதியளவு இல்லா திருப்பது பெரியகுறையாக உள்ளது. "ஆல் போல தளைத்து அறுகுபோல வேரூன்றி வாழையடி வாழையாக வளம் பல பெற்று வளர்ந்து வரும் இப் பாடசாலை மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

திருமதி.செல்லம்மா சுப்பிரமணியம்
இளைப்பாறிய ஆசிரியர்
யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

# பசுமை நிறைந்த நினைவுகள்

காலத்தால் அழியாத கலைச் செல்வங்களையும், கற்றறிந்த பெரியோர்களையும், புகழ்பூத்த ஆலயங்களையும் தன்னகத்தே கொண்ட ஊர்அளவையூர். முத்தமிழும், முக்கனிகளும் மலிந்த பெருமைமிக்க இக்கிராமத்தில் உடையார் பரம்பரையில் வந்துதித்த வள்ளல் திரு. நாகமுத்து அருணாசலம் அவர்களின் சிந்தனையில் துளிர்விட்ட இரு விருட்சங்கள்தான் அருணோதயக் கல்லூரி அருணாசலம் வித்தியாலயம் ஆகியன. இவை இரண்டும் இன்று கற்பக தருக்களாகக் கல்வி என்னும் பெருஞ் செல்வத்தை வாரி வழங்கி மங்காப் புகழுடன் விளங்குகின்றன. தென் அளவையூரில் சிறு பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட அருணா சலம் வித்தியாலயம் அவ்வூர் மக்களின் அயராத உழைப்பாலும், அங்கே கடமை யாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் கடமை உணர்வு, கடின உழைப்பு ஆகியவற்றிலும் பல்துறையிலும் சிறப்புற்று விளங்கி இன்று நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாட இருக்கின்றது.

இவ்வித்தியாலயத்தில் கடமை யாற்றிய காலங்களில் நான் பெற்ற அனுபவங்களை மீட்டுப் பார்க்கும்போது அவை என் இதயத்துக்கு இதமாக இருப்பதோடு பெருமையையும் அளிக்கின்றன. 1974ம் ஆண்டு முதன் முதலாக இவ்வித்தியாலயத்திற்கு மாற்ற



லாகிக் கடமை யாற்ற வந்த பொழுது அதிபராக திரு. மாரிமுத்து அவர்கள் கடமையில் இருந்தார். அவரும், உதவி ஆசிரியர்களும் என்னை இன்முகத்துடன் வரவேற்று, ஒத்துழைப்பும் நல்கினார்கள். அவர்களை என்றுமே என்னால் மறக்கமுடியாது. இவ்வித்தி யாலயத்தில் கடமையாற்றும் பொழுது ஆசிரிய சேவையின் தேவையின் பொருட்டு இடமாற்றம் பெற்றுச்சென்றேன்.

1987ம் ஆண்டு மீண்டும் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றும் நற்பேறு கிடைத்தது. அப்பொழுது திரு.ப. கனகரத்தினம் அவர்கள் அதிபராக இருந்தார். அவரது பெரு முயற்சியினால்தான் மீண்டும் நான் இவ்வித்தியாலயத்திற்கு வரமுடிந்தது. அவர் தன் அன்பாலும், ஆளுமையாலும் சகலரையும் தன்பால் ஈர்த்தெடுத்து, இவ்வித்தியாலயத்தை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தினார். ஆசிரியர் குழாமின் ஒத்துழைப்பும், பெற்றோர்களின் ஆதரவும் கிடைத்தன. மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், சமயப்பற்று என்பனவற்றைச் செவ்வனே வழி நடாத்திச் சென்றார். அவர் தன் சேவையை இவ்வித்தியாலயத்திற்காக

அர்ப்பணித்தார் என்பதை எவருமே மறக்கமாட்டார்கள்.

அவர் இளைப்பாறியதும் 1991ம் ஆண்டு திரு. வி. சச்சிதானந்தம் அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றார். அவருடைய கடின உழைப்பாலும், கடமை உணர்வாலும் அல்லும் பகலும் வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். வித்தியாலயம் மேன் மேலும் வளர்ச்சி பெற்று சகல துறைகளிலும் பாரிய முன்னேற்றம் கண்டது என்றால் அது மிகையாகாது. கலைத்துறை, விளையாட்டுத்துறை ஆகியவற்றை ஊக்குவித்ததோடு மலர் வெளியீடு போன்றவற்றையும் திறம்பட நடாத்தி அனைவரின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றார். அவருடைய நிர்வாகத்தின் கீழ் சிரேஷ்ட உதவி ஆசிரியராக இருந்த நான் பின் உப அதிபராகப் பதவி ஏற்றேன். 1993 வரை அதிபராக இருந்து பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றார்.

1994ம் ஆண்டு திரு. ச. கைலாசநாதன் அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றார். அவருடைய காலம் தன் புன்னகையாலும், பூரண ஆளுமையாலும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் முழு ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் பெற்று வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியிலும், பல்வேறு துறைகளிலும் வளம்பல பெறவும் அரும்பாடு பட்டார். இன்று அவர் பதவி உயர்வு பெற்று தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் கோட்டக் கல்வி அதிகா ரியாகப் பணிபுரிவது எமக்கும், வித்தியாலயத்திற்கும் பெருமகிழ்ச்சி அளிக்கின்றது. அன்பாகவும் பண்பாகவும் பழகிய அதிபரையும் எனது சகல கடமைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களையும் என்றுமே மறக்க முடியாது.

எனது கல்விப் பணியில் பெரும் பங்கை இளஞ்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணித்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். இன்றும் அந்தப் பிஞ்சு முகங்கள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. நான் ஏனைய பணிகளுடன் சமயப் பணிகளிலும் பங்காற்றினேன். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று 1996ம் ஆண்டு மார்கழி மாதம் எனது சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்றேன்.

இன்று இவ்வித்தியாலயம் நூற்றாண்டுவிழாக் காண்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வித்தியாலயம் மேன் மேலும் வளர்ச்சி பெற்று விழாக்கள் பல கொண்டாட மனமார வாழ்த்துகின்றேன். நான் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய காலம் எனது நெஞ்சில் பசுமை நிறைந்த நினைவுகளாக இருக்கின்றன. இம்மலரின் மூலம் எனது நினைவுகளை மீண்டும் ஒருமுறை நினைவுகூர வாய்ப்பு நல்கிய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.


ஓய்வுபெற்ற உப அதிபர்
திருமதி. மு. இராசசேகரம்

# வாழ்க்கைப் பதிவிலிருந்து

நான் 1943ஆம் ஆண்டு அளவெட்டி தெற்கு, றோ.க.த.க பாடசாலையில் ஆரம்ப கீழ்ப்பிரிவு வகுப்பில் சேர்ந்து நிலத்தில் மணல் பரவி, மணலில் கைவிரலால் எழுதவும், படிக்கவும் கற்றேன். பின் ஐந்தாம் வகுப்பு வரை கற்ற பொழுது கற்பலகை, கற்சுடர், (கிலேட், பென்சில்) போன்ற உபகரணப் பொருட்கள் மூலம் கற்றேன். பின்பு 1948 ஆம் ஆண்டு தொடக்கம் அருணாசலம் வித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பில் இணைந்து கொண்டேன். ஆறாம் வகுப்பில் அப்பியாசக் கொப்பிகள் உபயோகிக்கப்பட்டது அப்பொழுது மைக்குப்பியில் தொட்டு எழுதும் பேனாத்தடியும் எழுது கருவியாகப் உபயோகிக்கப்பட்டது. கொப்பியில் மை சிந்தாமல் “மை” ஒற்றும் தாளும் உபயோகிக்கப்பட்டது.

பின் மேல் வகுப்பில் ஊற்றுப்போனா (பவுண்டன் பேனா) உபயோகிக்கப் பட்டது. தொடர்ந்து (S.S.C) சிரேஷ்ட பாடசாலை தராதரம் வரை கற்று 1953ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற S.S.C பரீட்சைக்கு தோற்றி ஒரே தடவையில் எல்லாப் பாடங்க ளிலும் சித்தியடைந்தேன். மேலும் H.S.C வகுப்பு இங்கு இல்லாத படியால் 1954ஆம் ஆண்டு வித்தியாலயத்தை விட்டு விலகிக் கொண்டேன்.

பின்பு ஆசிரியர் பதவி கிடைக்கப் பெற்று ஆசிரிய பணி செய்தேன். பின் அதிபர் பதவி கிடைக்கப்பெற்று பணிபுரிந்து 1997 இல் ஓய்வு பெற்றேன். பின்பு சமூகப்பணியில் ஈடுபட்டு செயல்பட்டு வந்தேன் அதன் நிமித்தம் சமாதான நீதவான் பதவி கிடைத்து பணி செய்து வருகின்றேன் இதற்கு மூலகாரணம் அருணாசல வித்தியாலய கல்விப் போதனையாகும்.



தற்பொழுது வித்தியாலயத்தில் அதிபராக திரு.கு. ஜெகநாதன் அவர்கள் கடமையாற்றி வருகிறார்கள். அவர்களின் வழிகாட்டலில் எல்லா வளங்களும் அபிவிருத்தியடைந்து வருவதை நான் அவதானித்து வருகின்றேன். வித்தியாலயம் முன்னேறி வருவதையிட்டு இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

2010 இல் “அருணாசலம்” நூற்றாண்டு மலர் வெளியீடு வெளிவருவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். வருங்காலங்களிலும் பல நூற்றாண்டு விழா நடைபெறும் என்பது எனது திடமான நம்பிக்கை அதற்கு இறைவன் அருள் புரிவாராக.


ஐ.மார்க்கண்டன் J.P
ஓய்வு பெற்ற அதிபர்,
(அளவெட்டி தெற்கு, றோ.க.த.க.பா.)
பழைய மாணவர்
(யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.)

# அளவை மண்ணை அலங்கரித்த

## கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்களது வாழ்க்கைச் சரிதம்

நினைத்த மாத்திரத்திலே எதனையும் நினைத்தவாறு நொடிப்பொழுதில் பெறக் கூடிய கணனி விஞ்ஞானம் தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன மலிந்துவிட்ட இன்றைய காலகட்டத்திலும் மன அமைதியுடனும். வாழ்வில் திருப்தியுடனும் சந்தோசமாகவும் இருக்கிறோம் என்று கூறக் கூடியவர்கள் மிகமிகச் சிறதொகையினரே ஆவார். மனிதத்தன்மை மரணித்துப் போய் மதவெறி, சமூகநெறி சாதிவெறி, ஆட்சிவெறி, அந்தஸ்துவெறி என ஒவ்வொருவரும்உள்ளம் சார்ந்தல்லாது உணர்வு பூர்வமாகச் செயற்படுகின்றனர். இத்தகைய தர்மத்தின் சீர்குலைவைத் தடுக்க இறை சிந்தையானது மானிடனில் பிரசன்னமாகி மகான்கள் எனவும் யோகிகள், சித்தர்கள் அவதார புருஷர் எனவும் உருக்கொண்டு அவதாரம் நிகழ்கின்றது. அந்த வகையில் சமய குரவர், சந்தான குரவர், வேதாந்திகள், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்திஜி ஆறுமுக நாவலர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை, சித்தர்கள் எனக் கூறிக் கொண்டே போகலாம். இத்தகைய பெரியோரில் உலகம் போற்றும் உத்தமப் பெரியார் எனவும் சமயம், சமூகம் இரண்டையும் தன் கண்போல் காப்பவராகவும் ஈழம் பெற்ற இன்ன முதாய் நடமாடும் தெய்வமாகவும் விளங்கி சில ஆண்டுகளுள் முத்தியடைந்த கலாநிதி அருட்கவி, சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்களது பணியும் அற்புதமும் போற்றற்கும் நினைத்தற்கும் பேறு தரவல்லது ஆகும்.

இந்துவின் முத்தாகிய இலங்கைத் தீபகற்பத்தில் வாழத் தெரிந்து முயன்றதனால் இன்று வையத்துயர்ந்தது யாழ்ப்பாணம் என மகாகவி போற்றும் யாழ்ப்பாணத்திலே அளவில் எட்ட முடியாத அளவெட்டிக்கிராமத்தின் மேற்குத்திசையில் முருங்கையற்பலம் (முருகபுரம்) என்னும் இடத்தில் விநாயகர் சீனியர் என்பவருக்கும் அன்னப்பிள்ளை என்பவருக்கும் மகனாக அவதரித்தவரே அருட்கவி. சீ.விநாசித்தம்பிப்பிப் புலவராவர். இரு பெண் பிள்ளைகள் பிறந்ததனால் கதிர்காம வேலன் அருளால் வரம் இருந்து பெற்ற குழந்தையே இவராவர்.

இவரது வாழ்க்கைச் செய்திகள் எங்கணும் இறைமணம் திகழ்வதைக் காணலாம். இவர் பிறந்து ஐந்து மாதங்களில் அவர் தொடையில் பெரிய ரணக்கட்டு. தாயாரும் செல்லாத வைத்தியரில்லை. இறுதியாக மருத்துவ விஷேஷம் மிக்க வைத்தியரிடம் குழந்தையை எடுத்துச் சென்றார். அவர் கட்டைப் பார்த்துவிட்டு இதற்கு நான் மருந்து தரமாட்டேன். கட்டுத்தானாகத் தான் உடையும் உடைந்ததும் குழந்தையும் இறந்துவிடும். என்று கூறிவிட்டார். வேதனையில் துடிக்கும்

குழந்தையுடன் வைத்தியரின் இப்பதிலையும் கேட்ட தாயுள்ளம் குமுறியது. தவமிருந்து பெற்ற குழந்தைக்கு கடவுளே நீ கொடுத்த பாக்கியம் இது தானா எனக் கண்ணீர் மல்கிய வண்ணம் கால்போன பாதையில் பயணமானார். ஓர் தாயின் ஏக்கத்தை இன்னொரு தாயுள்ளம் தான் உணரும் என நினைத்தவராய் அளவெட்டி மேற்கு வெளிவயல் முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு விரைந்தார். அம்மனது பாதார விந்தங்களின் கீழ் குழந்தையை வைத்து விட்டு தாயே இது என் குழந்தை அன்று உன் குழந்தை , உன் விருப்பம் என்னவோ அதன்படி நீசெய்" என்று கூறிக் கூறி எவ்வாறு கண் துஞ்சினாரோ தெரியவில்லை.

ஒரு வயோதிபக்கிழவி கையில் பிரம்புடன் அங்கு வந்து இவன் எனது அடியான். இவனுக்கு எதுவித பங்கமுமில்லை. அதோ தெரிகிற முத்தாமணக்கின்விதையை முலைப் பாலில் உரைத்துக்கட்டுப் போடு சுகம் வரும் என்று கூறினார். சரிஅம்மா என்று எழுந்தவருக்கு அப்பொழுது தான் தெரிந்தது தான் கண்டது கனவு என்று. உடனே அக் கனவில் கூறியபடியே செயற்பட்டுக்கொண்டார். குழந்தை வீறிட்டு அழுதழுது மயக்க நிலையை அடைந்து கொண்டிருந்தது. கட்டுத் தளதள என இருந்தது. தாயார் அன்னப்பிள்ளை செய்வதறியாது குழந்தையைத் தூக்கியபடி முத்துமாரி அன்னையின் வீதியை சுற்றி வந்தார். வயல் வரப்பு நிறைந்த வீதியில் தெற்குப் புற வரப்பு ஒன்றில் தடக்கி வீழ்ந்தார் குழந்தை வயலில் புரண்டு வீழ்ந்தது. ஓடிச் சென்ற போது கட்டு உடைந்து இரத்தம் பீறிட்டது. ஆலய முன்றலிற்கு ஓடினார். கட்டின் இரத்தம் குழந்தையைக் குளிப்பாட்டியது. செய்வதறியாது கனன்று நின்ற தாய்க்கு கட்டின் உருவே இல்லாது தொடை வற்றி இருப்பதைக் கண்டு பெருமகிழ்வடைந்து தாயே உனக்கே இக்குழந்தை சொந்தம். என் மகனல்ல என்று முத்துமாரியம்மையிடம் ஒப்புவித்தார். இவ்வாறு கருவிலே கதிர்காம வேலன் திருவுடையவராகவும் இறைவியால் ஆட்கொள்ளப் பட்டவராகவும் அமைந்ததால் தான் இறைபணியாற்றும் ஆசியுடையவராய் அருட்கவி விநாசித்தம்பி ஐயா விளங்கினார்.

சிறு வயதில் இருந்தே அறிவுத் தேடலில் மிக்க நாட்டம் உடையவர். தாயின் வழி காட்டலும் தந்தையின் அறிவூட்டலும் பச்சை மரத்தில் செலுத்தப்பட்ட ஆணி போன்று பதியத் தொடங்கின. அளவெட்டியில் அமைந்துள்ள அருணாசல வித்தியா லயத்தில் கல்வி ஆரம்பிக்கப் பட்டது, கற்றலை ஐயம் திரிபுறக் கற்றலும் கற்ற விடயத்தில் அன்றே தெளிவு பெறலும் இவரது வழக்கமாய் இருந்தது. குரு தலை விதிக்கிணங்க என்பது போல நல்லாசிரியக் கற்றலும் இவரைக் கற்றலில் சிறக்க வைத்தது. திரு. சி. கதிரவேலு ஆசிரியர், வை. சோமசுந்தரம் ஆசிரியர் வீ. கதிரவேலு ஆசிரியர் திருமதி சேதுப்பிள்ளை கதிரவேலு ஆசிரியை என்பவர்கள் இவரது கற்றல் விளக்குகளாகும். குறிப்பாக இவரது ஆற்றலும் பணிவும் ஆசிரியரை மேலும் ஊக்குவிக்கத் தொடங்கினது. திரு.சி. கதிரவேலு ஆசிரியர் இவருள்

மறைந்திருக்கும் கவித்துவத்தை வெளியுலகுக்குக் கொண்டு வந்தார். எனவே தான் அருட்கவி ஐயா தனது 12வது வயதிலேயெ முருக புரம் ஞானவைரவப் பெருமானுக்கு திருவூஞ்சல் பாடுவதற்கு மூலகாரணமாய் அமைந்தது. இவற்றுடன் பேச்சு, கட்டுரை, கவிதை, இசை, நாடகம், நற்சிந்தனை போன்ற இதர செயற்பாடுகளிலும் சிறந்த முதன்மை மாணாக்கராகத் திகழ்ந்தார்.

உயர்கல்வியை அளவெட்டி அருணோதயக்கல்லூரியிலும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவ பயிற்சியினையும் பெற்று ஆசிரியரானார்.1950.01.16ஆம் நாள் அளவெட்டி அருணாசல வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். அன்றுமுதல் அப்பணிக்குரிய மகத்துவத்தை அறிந்து பணி புரிந்தார். ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனி அக்கறை உடையவர். இவரது மாணவர்களின் தேர்ச்சி நிலைகண்ட பெற்றோர் இவரை தமது குழந்தைகளுக்கும் கற்பிக்க விருப்பம் கொண்டனர்.

உள்ளம் கவரும் வகையில் பாடம் நடாத்துவதில் வல்லவர் இவரது கற்பித்தலின் விளைவாக இன்று நம் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் பொறியியலாளர் மருத்துவர், முகாமையாளர், ஆசிரியர்கள் பேராசிரியர்கள் என பல அறிவியல் மேதைகள் உருவாக்கம் பெற்று உள்ளனர்.

அன்னம் என்னும் மனைவியையும் மூன்ற பெண் மகவையும் இரு புதல்வர்களையும் கொண்டஇவர் ஆற்றிய சேவைகள் அளப்பெரியது சோதிட வைத்தியப்பணி, சமயப்பணி, சமூகப்பணி,இலக்கியபணி, கலைப்பணி என இன்னோரன்ன பணிகளை ஆற்றி உள்ளார்.

ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தை நிர்மாணித்தவரும் இவரேயாவார். இவரது இறை அற்புதங்கள் சொல்லில் அடங்கா. இவரது சேவையில் முக்கிய அங்கம் வகிப்பவை திருநீறும். தீர்த்தமும், ஸ்பரிசதீட்சை, ஆசீர்வாதமும் வாக்கு வல்லமையும், காப்பு நூல் என்பவையுமா.

நீர்வேலியில் இருந்து நெஞ்சுவலி என வந்தவர் ஒருவர் கொழும்பு வரை சென்றும் மாற்ற முடியவில்லை. நீங்கள் தான் எனக்கு உபயம் சொல்ல வேண்டும் என கண்ணீர் மல்கியவாறு கேட்டார். அதற்கு அருட்கவி ஐயா சென்ன மருந்து நீர்வேலிக்கந்தனின் கடப்பமரத்து மண்ணை எடுத்து அவ்வாலயத் தீர்த்தத்துடன் குழைத்துவலியுள்ள இடத்துக்கு பூசு என்றது தான். அவரது நெஞ்சுவலி பஞ்சாய்ப் பறந்து விட்டது. இவ்வாறே கரணவாய் ஓவசியர் கணபதிப்பிள்ளை என்பவருக்கு முட்டு வருத்தம் அவரும் வைத்தியத்துக்கு செல்லாத இடம் இல்லை. இறுதியாய் சந்திக்கத்தன் கனவில் கூறியபடி அருட்கவி ஐயாவிடம் வநதார். சந்நிதிக் கந்தனால் அனுப்பப் பட்ட உமக்கு "பூனை தின்றால் சுகம் வரும்" என்றார் கண்ணை மூடியபடி அதற்கு ஓவிசியர் ஐயா நாம் சைவபோசணி என்றார் அதற்கு அருட்கவி ஐயாநாம் நான் சொன்னது பூ+ நெய் = தேன் என்றார்.

அவ்வாறே சந்நதிக்கந்தன் பூவரசின் கீழே ஒரு கரண்டி தேனைக் கந்தனைத் தியானித்து காலையும் மாலையும் அருந்தி வந்தார். சுகம் பெற்றார். இவ்வாறாக சித்துத்த ன்மையும் உள்ளர்த்தமும் நிறைந்தன இவரது வாக்கும் வைத்தியமும். ஆகும் இவ்வாறே புற்றுநோய் வயிற்றுவலி மனவியாதி எனப்பல தீராநோய்களை த்தீர்த்த வள்ளலாகவும். உயிர் நீங்கி இன்றும் உயிருடன் சங்கானையில் வாழும் சுதன் என்பாரை இறையருளால் உயிர்ப்பித்த அற்புதமும் மிக்கவர்.

இது மட்டுமல்ல. பாலர் முதல் பண்டிதர் வரை பயிலும் இலக்கிய... நூற்பணிகளையும் நூற்றுக்கணக்கான சமய, சமூகம் சார் இலக்கியப் படைப்பாளி யாகவும் காணப்படுகிறார். இசைப்பணி, நாடகப்பணி, கட்டட நிலை அளவைப்பணி, சிற்பவிக்கிரகப் பணி இன்னும் கலைப்பணிக்கும் பெரும் பங்காற்றியவர் இந்துசமயப் பேரவையின் தலைவராகவும். யாழ். பல்கலைக்கழக முதுகலைமானியாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கலாநிதியாகவும் திகழ்ந்தவர். இத்தகைய சீராளர் 11.12.2005 காசிலிங்க சொரூப நிலை எய்தினார்.

உண்மையான மேதைகளைக் காண்பது அரிது. உலகின் உண்மையாகிய சொத்தாகிய அவர்களின் வாழ்க்கையையும் செய்தியையும் கூட்டல், குறைத்தல். இல்லாமல் சந்ததிக்கு வழங்குவது என்பது அதனைவிட அரிதாகவே வரலாற்றில் காணப்படுகிறது. ஆத்மிகத்துறை என்னும் போது இன்னும் அரிதாகி விடுகிறது எனவே தான் சர்வதேச புகழ் பெற்ற கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் M.A. PHD. அவர்களது வாழ்வையும் வரலாற்றையும் மிகமிகச் சுருக்கமாகக் கூறி அமைகிறேன்.

தி.வரதவாணி
ஆசிரியர்
யா /மகாஜனாக் கல்லூரி.

# Internet

A network is a collection of computers interconnected through some physical medium so that they can Communicate. This physical medium cab be a copper cable,, fiber optic cable, or a wireless medium Such as electromagnetic waves. An inter net work connects independent LANS and WANS to form one large network. Such a net work is called an internet. There is one such global internet that stemmed form an experimental network started by the advanced Research project Agony of the united stated Department of Defense in 1960A. Now this net work spans over political an geographical boundaries. That particular internet is called the Internet.

The Internet uses different technologies to connect these networks together. Some net works are connected to each other over a public telephone networks while others are connected over satellite links. Not like the telephone system which has very limited number of Services the Internet has Unlimited number of Services. At the Same time, These Services can be offered Simultaneously based on the users fdemand. Applications which run at computers connected to the Internet Can provide these Services. Examples I. Email. Instant Massagilng, Discussion Forums.

Every day the numbers o f users are increasing. Current Stastics say that the largest protion is from US and Europe However, Asion Users are rising rapidly. The internet has become a resource irrespective of profession or status. At the same time, their usage objective varies and same individuals may have different objectives I or exaple, Children, Parents, Teachers, and researchers may access the Internet mainly for education purposes and stock brokers nad different business professionals for business propose, Anyone can connect to the Internet through telephone lines since these two networks are connected your need a device called a modern to connect your computer to internet through a telephone line.

**Miss. Sivalogini Velummylum (M.Ed)**
**(Teacher J/Alveddy Arunasalalm Vidyalayam)**

## முகாமைத்துவக் குழு



## கல்விசாரா ஊழியர்



## தமிழ் மன்றம்



# இறைவன் விரும்பிய இசை

நான்கு வேதங்களான இருக்கு யசுர், சாமம். அதர்வணம் ஆகிய வற்றுள் சாமவேத சாரமே சங்கீத மாகும். தெய்வீகக் கலையாகவே சங்கீதம் கருதப்பட்டு வருகின்றது. மனத்தை இறைவன்பால் இழுத்து இசைவிப்பது இசை. இசை ஓர்பக்திக் கலை மனிதனுடைய மனத்திலே உணர்ச்சியை எழுப்பி தெய்வீக அழகையும் மனச்சாந்தியையும் பேரின்பத்தையும் அளிக்கின்ற பண்பு இசைக் கலைக்கு உண்டு. இறைவன் நாதப் பிரமமாக விளங்குகின்றான். அவனை அடை வதற்கு மானிடர்கள் சங்கீதத்தை உபா சித்து மோட்ச பதவியை அடைந்து ள்ளனர்.

மனத்திலே இரக்க உணர்வை ஏற்படுத்த வல்லது இசை என்பதற்கு இராவணன் சாமகீதம் பாடிய கதை உண்டு கி.பி. ஆறாம் நூற்றாண் டிற்கும் 12ஆம் நூற்றாண்டிற்கும் இடையே நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனைப் புகழ்ந்து இசை பாடி இறைவன் விரும்பியதாக வரலாறு கூறுகின்றது. இறை அனுப வத்தைப் பெற்ற அடியார்களுக்கு நல்ல இசையின் பயனும் இறை அனுபவமும் ஒன்றாகவே தோன்று கின்றன.

"ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று சுந்தரராலே இசையின் பயனாக இறைவன் அமைகின்றான் எனக்கூறப் பட்டது. அத்தகைய இறைவனுடைய இணையடி நீழல் எப்படியிருக்கு மென்பதை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்று அப்பர் சுவாமிகள் பாடு கின்றார்.

குற்றமில்லாத சுத்தமான இனிய வீணை இசையினைக் கேட்டு நாம் எத்தகைய பயனைப் பெறுகின் றோமோ அத்தகைய பயனை இறைவனு டைய இணையடி நீழல் வழங்கு கின்றது. இவ்வாறு பெருமை க்குரிய இசையை இறைவன் விருமபி னான் என்றால் மிகையாகாது. மேலும் இறைவன் இசையை விரும்பி னான் என்பதற்கு இசையில் வல்ல இராவணனும் இசைத்த இசையில் தன்னை மறைந்து விசையாய் ஊன்றிய விரலதனை விரைவாய் எடுத்தான் என்பார்கள். நாயன் மார்கள் அனைவரும் நன்றாய் இசையை அறிந்து உணர்ந்து வாயாற் பாடவிடம் நீங்கியதாகவும் வானம் பொழிந்த தாகவும் இறைவன் விரும்பி எமக்கு பிடித்த அர்ச்சனை பாட்டேயாகும் என்று அசரீரி கூறிய தாகவும் புராணங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இவ்வாறு சிறப்பு பெற்ற இசையை இறைவன் விரும்பினான் என்பதற்கு

தேவாரப் பதிகங்கள் தோன்றும் போதே இசைவடிவங்களுடன் மூவர் வாக்கில் இருந்தும் தோன்றிய சிறப்பை உடையன இக்காரணத்தினாலேதான் தேவாரப் பதிகங்களுக்கு தனிச்சுவையும் பிரகாசமும் இருப்பதோடு கேட்போருக்குப் பக்தி உணர்வும் உண்டாகின்றது. இவ்வாறு இறை வனால் விரும்பப் பட்ட தேவார இசை பிற்காலத்தில் இசை வளர அத்தி வாரமாக இருந்தது என்று கூறலாம்.

இவ்வாறு இறைவனால் விரும்பப் பட்ட இசையினை இந்தியாவிலும் இலங்கையிலும் மேல்நாடுகளிலும் எல்லா இசைவாணர்களும் பிற கலைஞர்களும் இசையே மானிடர் களின் பொது மொழி ஒவ்வோர் உள்ளத்தையும் உருக்கும் மொழி என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். எத்தேசத்தினர்களையும் ஒருவன் தன் இசையால் மகிழும்படி செய்யலாம். உலக ஐக்கியபாவம் இசையால் ஏற்படுகின்றது. இசை ஓர் தனி மொழி வார்த்தை களினால் வெளியிட முடியாத நுட்ப மான கருத்துக்களை இசையின் மூல மாகத்தான் வெளியிடமுடியும். யாவரையும் வசப்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு இத்தகைய பெருமை பொருந்திய இசையை சங்கீதத்தை ஏழு பிறப்புக்கு முன்தெனினால் அபிஷேகம் செய்த வர்களுக்கு சொத்தாக இறைவன் அருளுவான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் மும்மூர்த்திகளும் இதற்கு சான்றாக உள்ளனர். இதனாலே தான் தற்காலத்து கவிஞர்கள் இசை கேட்டால் புவி அசைந்தாடும். அது இறைவன் அருளாகும் என்று போற்றிப் பாடு கின்றார்கள். மேலும் நோக்கு மிடத்து எப்படிப் பாடினரோ அடியார் அப்படிப் பாட நான் ஆசை கொண் டேன் சிவனே அப்பரும் சுந்தரரும் ஆளுடைய பிள்ளையும் அருள் மணி வாசகரும் பொருள் உணர்ந்து உன்னையே என்றும் இசையை பெருமைப்படுத்தி நிற்கிறார் கள். இத்தகைய சிறப்புகள் பொருந்திய இசையினை மானிடப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் பாட முடியா விட்டாலும் இசையை ரசித்து பருகி அதன் வசப்பட்டு வளர்க்க முன்வர வேண்டும் லலித கலைகளில் மிகவும் மேன்மையானது இசைக் கலை. உயிரினங்கள் எல்லாவற்றையும் பரவசப் படுத்தி தெய்வீக நிலையை ஏற்படுத்தும் சங்கீதம் இதற்கு காந்தர்வவேதம் என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் கையில் உடுக்கும் கண்ணன் கையில் குழலும் சரஸ்வதி கையில் வீணையும் இருப்பதிலிருந்து இக்கலை தெய்வீக மானது என்பது தெளிவா கின்றது.

சங்கீதம் பயில்வதனால் அன்பு அடக்கம், பக்தி, நட்பு மனத்திருப்தி சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தி யாகின்றன. அத்துடன் அறிவு, புத்திக் கூர்மை கற்பனா சக்தி நல்லொழுக்கம் முதலியவையும் ஏற்படுகின்றன.

ஆகவே மானிடப் பிறவி எடுத்த நாம் அனைவரும் சங்கீதத்தை பயில்வதற்கு முன்வருதல் வேண்டும். இந்தியாவைப் போல் நமது நாட்டிலும் எத்தகைய பட்டம் பெற்றாலும் எந்த வேலை பார்த்தாலும் இசையை ஓர் இறை யுணர்வை ஏற்படுத்தும் வகையில் பயில வேண்டும். இதன் மூலம் இசை வாத்தியம் வாசிப்பதற்கும் பாடகர்களை தேடுவதற்கும் உள்ள சிரமங்களை குறைத்து நல்லதோர் இசை உலகை உருவாக்க முடியும் என்பதில் ஐய மில்லை.

திரு. ச. நித்தியானந்தம்
உப அதிபர்,
யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

# மனிதனும் சூழலியலும்

இன்றைய நவீன உலகில் வீறு நடையிலும், வெற்றிப் பாதையிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற மானிட வர்க்கத்தினரின் உள்ளங்கைக்குள் வைத்து உலகையே ஆட்டிப் படைக்கு மளவிற்கு பல நவீன விஞ்ஞான தொழி னுட்பசாதனங்கள் வளர்ந்து விட்டன. மண்ணிலும், விண்ணிலும் பல சாகசம் செய்து வரலாறு படைப்போம் என்ற நிலை மாறி இன்று இயற்கை அனர்த்த ங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் ஈடாடிக் கொண்டிருக்கின்ற துர்ப்பாக் கிய நிலையேற்பட்டுக் கொண்டி ருக்கிறது.

புவியில் தாவரம், விலங்குகள் தோன்றிய பின்பே மனிதன் தோன்றி னான் மனிதனின் தோற்றம் மிகக் குறுகிய காலமாகும். ஆரம்பத்தில் வேட்டை யாடி, மந்தை மேய்த்து விவசாயம் செய்து வாழ்ந்தவன் இன்று விஞ்ஞான கணனி தொழினுட்ப யுகத்தினுள் நுழைந்து விட்டான். அந்த நாள் முதல் இந்த நாள் வரை மனிதன் மாறி விட்டான். ஆனால் வான், கடல், மலை, மண், நதி, மரம் போன்ற இயற்கை மாறவில்லை என்றார் கவிஞர். ஆனால் இன்றோ இயற்கை மாறிக்கொண்டே இருக்கின்றது. இயற்கையின் முக்கியத் துவம் அறியாமல் மனிதன் செயற் படுத்தக்கூடிய ஒவ்வொரு செயலும் மனித இனத்திற்கு எதிரானது என்பதை அவன் உணரவில்லை அன்று இயற்கையோடு இணைந்து வாழ்ந்த வரை எந்த வித பாதிப்புமில்லை. இன்றோ மனிதனின் வாழ்க்கை முறை இயற்கையின் நியதியிலிருந்து சற்று விலகிக் கொண்டேயிருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் கணனி, இணையம் போன்ற தொழினுட்ப வளர்ச்சியில் தன்னிறைவு காணும் அதே வேளையில் மருத்துவத்துறையும், பொருளாதாரத்துறையும் வளர்ச்சி பெற மருத்துவமனைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து நோயாளிகளின் எண்ணிக் கையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஏன் பூமித்தாயும் ஒரு நோயாளியாகி விட்டாள். பொறு மைக்கு பூமித்தாய் என்போம். நாம் மாத்திரம் இயற்கையை அனுபவிக் காமல் வருங்கால சந்ததியினரும் அனுபவிக்கும் வகையில் பேணிப் பாதுகாப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் மட்டுமே பாதுகாப்பான, வளமான எதிர்காலத்தை இந்த பூமி உருவாக்க முடியும் என்பது புவி உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவாகும். இன்றைய இளைய சந்ததியினருக்கு சூழலோடு இணைதல் மாத்திரமன்றி, சூழல் பற்றிய விழிப்புணர்வு, பாதுகாப்பு, பராமரிப்பு போன்றவையும் பாடத்திட்டங்களினூடாக அறிமுகப்

படுத் துவது மிகஅவசியமாகிறது. இன்றைய சூழல் பிரச்சினை களுக்கு அடிப்படைக் காரணம் பெருகிவரும் சனத்தொகையாகும். இதன் காரணமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புவியின் வளங்களை அழித்தும் பயன்படுத்தியும் வருவதனால் பசுமைப் போர்வையும் வேகமாக நீக்கப்படுகின்றது.

புவியின் வரலாற்றுக் காலநிலைக் காரணிகள் மாற்றமடைந்து வருகின்றன. இதனால் மக்கள் பாரிய பிரச்சினை ளுக்கும், அழிவுகளுக்கும் முகங்கொடுக்க முடியாமல் அவதியுறுகிறார்கள். புவிச்சூழலின் பாதுகாப்பே மனித குலத்தின் நிலைபேறாகும். சூழற் பிரச்சினை ஒரு பிரதேசமோ அல்லது ஒரு நாடோ சார்ந்தது அல்ல. சர்வதேச நாடுகள் அனைத்தும் சார்ந்ததாகும். அபிவிருத்தியடைந்த நாடுகள் பூகோளத்தில் உச்ச அளவில் சூழல் மாசடைந்துள்ளதென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எனவே இதை முன்னிட்டு யூன் - 5ந் திகதி உலக சுற்றாடல் பாதுகாப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சூழலும் அபிவிருத்தியும் என்ற செயற்திட்டத்தின் கீழ் குறிப்பாக ஐந்து சூழல் பிரச்சினைகள் ஆராயப்பட்டு இன்று முதன்மையாக அடையாளம் காணப்பட்டது.

1. பூமி வெப்பமடைந்து வருதல்.
2. ஓசோன் படையில் துவார மேற்பட்டமை
3. நச்சுக்கழிவுகளை சூழலில் வீசுதல்
4. உயிரினங்களின் பல்லுயிர்த்தன்மை அழிதல்
5. நில, நீர், வளி வளங்கள் குன்றுதல்

இவை மேலும் மேலும் அதிகரிக்காத வகையில் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது. தற்போது புவியில் வெப்பநிலை முன்னையதைக் காட்டிலும் அதிகரிக்கின்றது. அதற்குக் காரணம் வளிமண்டலத்தில் சில வாயுக்கள் பச்சை வீடு ஒன்றின் கண்ணாடி போன்று செயற்படுவதாகும். இதனால் புவிக்குத் தேவையான வெப்பம் உள்வரவிட்டு, புவியின் வெப்பநிலை வெளியேறவிடாது தடுக்கின்றது. இச் செயற்பாடு பச்சை வீட்டு விளைவு (Green House Effect) என்பர். இவ் விளைவைப் பாதிக்கும் வாயுக்களாவன காபனீரொட்சைட்டு, மீதேன், நைதரசரொக்சைட், குளோரோ புளோரோகாபன் போன்றவையாகும். வளிமண்டலத்தில் தற்போது காபனீரொட்சைட் வாயுவின் அளவு அதிகரித்துக் கொண்டே போகிறது. எரிபொருட்சக்தியின் அளவு கூடுதலான பாவனைகள் தற்போது உள்ளது. இதனால் வருடா வருடம் ஐந்து மில்லியன் தொன் $Co_2$ வளிமண்டலத்தினுள் சேர்க்கப்படுகிறது. இதனால் கடல் மட்டம் உயரும் நிலையால் சில பிரதேசங்கள் கடலில் மூழ்கும் காணப்படும் அபாயம் உள்ளதாகக் கூறுகின்றனர். யாழ் குடாநாட்டின் சில தீவுகளும் நீரினுள் மறையும் நிலையும் ஏற்படலாம் உலகில் சில பிரதேசங்களில் நீண்ட கடுங் கோடையும், அமைதியாக வீசிய காற்று புயலாக மாறும் அபாயமுள்ளது. நன்னீர் உவர் நீராக மாறும் தன்மையும் அதிகரிக்கிறது. மனிதன் பல நோய்களுக்கு உள்ளாக வாய்ப்பு உள்ளது. அடுத்த பிரச்சினையாக ஓசோன் படையில் துவாரமிருப்பதாக அதாவது அந்தாட்டிக் கண்டத்திற்கு மேல்

ஆரம்பக்கல்வி மன்றம்



ஆங்கில மன்றம்



சாரணர் குழு



துவாரமிருப்பதாக அதாவது அந்தாட்டிக் கண்டத்திற்கு மேல் புவியோட்டில் பாரிய துவாரம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக 1979ம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டது. இதனால் அதிக செறிவுள்ள சூரிய ஒளிக்கதிர்கள் புவியை வந்தடைய வாய்ப்புண்டு இதற்கு காரணம் உலகில் விரிவடைந்த இரசாயனத் தொழிற்சாலையிலிருந்து குளோரோ புளோரோ காபன் போன்ற சில நச்சு வாயுக்கள் வெளியேறுவதாகும்.

சில நச்சுக் கழிவுகள் சூழலில் வீசப்படுவதனால் நிலம், நீர், வளி என்பன மாசடைய வாய்ப்புண்டாகிறது. இன்று உலக நாடுகள் அனைத்தும் பயிர்ச் செய்கையின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக செயற்கை உரங்கள். கிருமி நாசினிகள் போன்றவற்றின் பாவனையை அதிகரித்துள்ளன.

நவீன உலகில் அணுச் சக்தியின் பயன்பாடு ஓரளவு முன்னேறியுள்ளது. அணுக்கதிர் வீச்சின் பயன்கள் பல இருந்தாலும் பாரதூரமான விளைவினையும் ஏற்படுத்தவல்லது. உதாரணமாக யப்பானிய ஹீரோசீமா நகரின் யுத்த அழிவு சான்றாகவுள்ளது.

சூழலின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உடனடியாக உணர்ந்ததால்தான் தீர்வையேற்படுத்தலாம். 2004ம் ஆண்டு டிசெம்பர் 26ம் திகதியேற்பட்ட சுனாமி பேரனர்த்தம் மனிதனை அவல நிலைக்குள்ளாக்கியுள்ளது. எனவே இவ் அனர்த்தங்களிலிருந்து விடுபட உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் வளமான, பாதுகாப்பான எதிர்காலத்தை இப் பூமியில் உருவாக்க முடியும். சூழல் முகாமைத்துவத்தை சர்வதேச நாடுகளினூடாக சட்டரீதியான ஏற்பாடுகள், ஒப்பந்தங்கள் போன்றவையினூடாக பாதுகாத்தல் வேண்டும். இல்லையேல் தனி மனிதன் ஒவ்வொருவரும் துன்பப்பட வேண்டி நேரிடும்.

திருமதி. சா. ஸ்ரீலவன்
ஆசிரியர்
(யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

# இலங்கைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பரந்துபட்ட இந்த உலகத்தில் வாழும் மக்களினால் பேசப்படும் பல்லாயிரம் மொழிகளில் தமிழ்மொழியும் தனித்துவமுடையதாக மிளிர்கின்றது. இத்தகைய சிறப்புகளினை தன்னகத்தே கொண்ட தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்றார்கள். இந்தியா இம் மக்களின் தனித்துவமான பாரம்பரிய வாழிடமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் இருந்தே ஏனைய நாடுகளிற்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து சென்று தமது குடியிருப்புக் களினை அமைத்துக் கொண்டா ர்கள். இதனை காலத்தின் கண்ணாடி களாகிய இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுள் இலங்கை தனித்துவமானது. இத்தகைய தனித்துவத்தையும், தமிழ் இலக்கிய பொதுமையையும் இணைத்து நிற்கும் ஓர் இலக்கிய மரபு இலங்கையில் தோன்றி வளர்ந்த வரலாற்றைச் சிறப்பாக எடுதது நோக்குவது காலத்தின் கட்டாய தேவையாகக் கருதலாம்.

இந்த வகையில் இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்து அவற்றினைக்கால கட்டங்களாக பாகுபடுத்தி அக்கால இலக்கியங் களினை ஆராய்ந்து பொருள்மரபு, யாப்பு, மொழிநடை, கையாளும் உத்திமுறை, இலக்கியப்பண்பு போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய வேண்டிய தேவை உள்ளது. எனினும் இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றை தமிழக இலக்கிய வரலாறு போன்று அரசியல், சமூக, சமய பொரு ளாதார அடிப்படையில் பாகுபடுத்தி நோக்குவதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்வதில் உள்ள பிரச்சி னைகளை நோக்க வேண்டியுள்ளது.

அவையாவன:

1. இலங்கையின் தமிழிலக்கிய வரலாற்றை வகுக்கும் போது தோன்றும் முதலாவது இடர்பாடாக உள்ளது யாதெனில் கிடைக்கப் பெற்ற இலக்கியங்கள் பெரும்பாலும் ஆட்சி நிலை சார்பாக காணப்ப டுகின்றது. அடிநிலை மக்களின் சமூக முக்கியத்து வத்தை எடுத்துக் காட்டு வதாக அவை அமையவில்லை.

2. பேணப்பட்ட இலக்கியங்களும் ஆரம்பகால இலக்கியங்களாக அவ்வாறு அவை யாழ்ப்பாண அரசுநிறுவப்பட்ட பின்னர் தோற் றம் பெற்ற இலக்கியங்களாகவே உள்ளன. இதனால் தமிழ் மக்களின் நிலமையை இலக்கிய சான்றுகளின் மூலம் முற்றுமுழுதாக அறிய முடியவில்லை.

3. இவ்விலக்கிய வரலாற்றை யாரோடு அல்லது எந்த நூலோடு ஆரம்பிப்பது என்ற வினாவிற்கு விடைகாண முடியாதுள்ளது.

ஏனெனில் ஈழம் என்ற சொல்லினை தனது பெயரின் அடைமொழியாக கொண்ட ஈழத்துப் பூதந்தேவனார் மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, போன்ற இலக்கியங்களில் செய்யுள் பாடியதாக அந்நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் இலங்கையைச் சேர்ந்த புலவரால் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின் எமக்குக் கிடைத்த இலக்கியம் 1310 ஆண்டு வெளியாகிய "சரசோதிமாலை" ஆகும். இந்நூல் வரையான காலப்பகுதியில் இலங்கையில் இலக்கிய வளர்ச்சி எதுவுமே இடம்பெறவில்லை? இக்காலத்திலே தோன்றிய இலக்கியங்கள் யாவை? இக்கால இலக்கிய கர்த்தாக்கள் யார்? என்ற வினாக்களிற்கு விடை வேண்டியுள்ளது.

எனவே "ஈழம்" என்ற சொல்லினை அடை மொழியாகக்கொண்ட ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவரை ஈழத்தவர் என்று கூறுவது சிந்திக்க வேண்டிய தொன்றே? அது மட்டுமன்றி தமிழகத்திலும் "ஈ கேசரி" என்ற பெயருடன் பல இடங்கள் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. எனவே ஈழத்து பூத் தேவனாரை இலங்கையர் என்று கூறுவது சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

4. ஈழத்து இலக்கிய வரலாற்றை எவ்வாறு காலகட்டங்களாக வகைப் படுத்துவது என்பதில் தமிழ் அறிஞர்களிடையே கருத்து முரண் பாடு காணப்படுகிறது. இத்தகைய வரலாற்றையும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு தமிழ் இலக்கிய வரலாற்றை பின்வரும் காலப் பகுதியாக பாகுபடுத்திக் கொள்ளலாம்.

1) யாழ்ப்பாண இராச்சியம் தோன்று வரையான காலம்
2) யாழ்ப்பாண இராச்சிய காலம் சக்கரவர்த்தி காலம் (14ம் - 16ம்) நூற்றாண்டு
3) போர்த்துக்கேயர் காலம் - (1505 - 1658)
4) ஒல்லாந்தர் காலம் - (1658 - 1796)
5) ஆங்கிலேயர் காலம் - (19ம் - 20ம் நூற்றாண்டு முற்பகுதி)
6) தற்காலம் - (20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி)

**1. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையான காலம்**

யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்திற்கு முன்னுள்ள இலங்கைத்தமிழ் இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு வரலாற்று ரீதியில் உறுதியான சான்றுகள் எவையும் இல்லை. ஆயினும் சங்க இலக்கியங்களில் வரும் ஈழத்துப் பூதந்தேவன் என்னும் பெயரைக் கொண்ட புலவரின் இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர் ஈழத்தவர் (இலங்கையர்) என்பதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. எனவே ஈழம் என்பது இலங்கையைக் குறிக்கிறதா? என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டி உள்ளது.

**2) யாழ்ப்பாண இராச்சிய காலம்:**

அடுத்து வரும் ஆரியச் சக்கவர்த்திகள் காலம் ஈழத்தில் தனித்துவமான ஓர் இலக்கியப் பாரம்பரியம் தோன்று வதற்கு அடிக்கல் நாட்டப்பெற்ற காலம் எனலாம். இந்த வகையில் இக் காலத்தில் யாழ்ப்பாண வரலாற்று மூலங்களாக கருதப்படும் "வையா பாடல்" "கைலாயமாலை" தோற்றம் பெற்றது. இவற்றை விட சமயக் கருத்தினையும் வரலாற்றுக் கருத்தி னையும் கோணேசர் கல்வெட்டு எனும் நூலின் மூலம் அறியமுடிகின்றது.

மேலும் ஆட்சியாளன் பெயரினால் அரசியல் நிலைப்பாட்டினை வெளிப் படுத்து வதாக பரராசசேகரன் உலா" காணப்ப டுகின்றது. மேலும் தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்க ளினையும் மதவழிப்பாட்டு வெளிப்பா டாகவும் "கதிரமலைப் பள்ளு" எனும் நூல் காணப்படுகிறது" கோவலன் கதை எனும் நூல் அடிநிலைக்களின் மதநம்பிக்கை வெளிப்பாடாக உள்ளது.

இவற்றினை விட ஆரியச் சக்கர வர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற அரசியலை மையமாகக் கொண்ட இரகு வம்சம் காளிதாசனின் ரகுவம்சத்தை முதன் நூலாகக் கொண்டு இயற்றப்ப ட்டது.

இவ்வாறாக பல்வேறு பொருள் மரபினை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் தோற்றம் பெற்ற இக்காலக் கட்டத்தில் போர்த்துக்கேயர் வருகையைத் தொடர்ந்து கத்தோலிக்க கிறிஸ்தவ இலக்கிய முயற்சிகள் தோன்றி யதைக் காண முடிகின்றது.

இக்காலத்தில் தோன்றிய இலக்கி யங்களை அவற்றின் பொருள் மரபினை அடிப்படையாக் கொண்டு பின்வரு மாறு வகுத்து நோக்க முடியும்.

01. சமயச் சார்பானவை:

அ. திருக்கரசை புராணம்

இது ஆலயங்களின் பெருமையைப் பாடுவது

ஆ. வியாக்கிரபாத புராணம்

இந்நூலினை முழுமையாகப் பெற முடியவில்லை

இ. கதிரமலைப் பள்ளு

இதுவே தமிழில் தோன்றிய முதல் பள்ளு இலக்கியம் என்று கூறு கின்றார்

பண்டிதர் க. வீரகத்திப்பிள்ளை

ஈ. தட்சணகைலாய புராணம்

கோணேசர் பெருமானின் பெருமை யை தன்னகத்தே கொண்டுள்ளது.

02. வரலாறு சார்ந்தவை

கோணேசர் கல்வெட்டு

இது மான்மியம் அடிப்படையில் காணப்படுகின்றது

03. மருத்துவம் சார்ந்தவை

அ. பரராசசேகரம்

ஆ. செகராச சேகரம்

04. சோதிடம்சார்ந்தவை

செகராச சேகரமாலை

05. காவிய வடிவங்கள்

அ. இரகுவம்சம்

ஆ. கோவலனார் கதை

இத்தகைய இலக்கியங்களின் அடிப்படையில் அவற்றின் பண்புகளை பின்வருமாறு வகுத்துக் கூற முடியும்.

1. பல்வேறுபட்ட பொருள் மரபுகளைக் கதைக்கருவாகக் கொண்ட இக்காலத்தில் பெரும் தொகையான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அதாவது சமயம், வரலாறு, வைத்தியம், சோதிடம் என்பவற்றைப் பொருளாகக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
2. சில இலக்கியங்கள் வேற்று மொழிகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட மொழிபெயர்ப்பு இலக்கியங்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக வியாக்கிரமபாத புராணம், வடமொழிப் புராணம் ஒன்றின் மொழி பெயர்ப்பு என்ற கருத்தும் உள்ளது இக்காலத்தில் எழுந்த காவிய அமைப்பு வடிவான இரகுவம்சம் மொழி பெயர்ப்பாகவேகூறப்படுகின்றது. காவிய வடிவிலான இலக்கிய நூல்கள் தோன்றி யுள்ளமை இக்கால இலக்கியத்தின் சிறப்பான பண்புகளில் ஒன்றாகும்.
3. பெரும்பாலான இலக்கியங்களின் செய்யுள்நடை, உரைநடை, வடமொழி, தமிழ்மொழி கலந்த மணிப்பிரவாள நடைகளில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.
4. இங்கு காணப்படுகின்ற பெரும்பாலான இலக்கியங்கள் பிரபந்தங்களாக உள்ளன. இந்த வகையில் கதிரமலைப்பள்ளு கைலாயமலை, செகராசசேகரமாலை என்பவற்றைக் கூறலாம்.
5. இக்காலத்தில் பெரும்பாலான தல புராணங்கள் தோற்றம் பெற்றன. இது தமிழ் நாட்டில் இக்காலத்தில் நிலவிய நாயக்கர் காலச் செல்வாக்கால் வந்தது எனலாம்.
6. இக்காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் விருத்தப்பா பெரும் வழக்காக பயன்படுத்தப் பட்டுள்ளது. எனினும் வெண்பா, அகவல், அந்தாதி, சிந்து, ஆசிரியப்பா, கலிவெண்பா எனப்பல வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மொழியாம் தமிழ் மொழிஇத்தமிழ்மொழியின் லக்கியங்கள் இலங்கையில் எவ்வாறு தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதனை ஆராயமுற்படும் போது பல இன்னல்கள் தோன்றுகின்றன நாம் அவற்றை சீர்செய்து கால அடிப் படையில் நோக்கும் போது யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையான காலகட்டத்தில் இலக்கியங்கள் பெரிதளவு தோற்றம் பெறாவிட்டாலும் அது ஒவ்வொரு காலகட்டமாக வளர்ச்சி பெற்று ஆங்கிலேயர் காலத்தில் மேலும் பலவகையிலும் மெருகூட்டப்பெற்று தற்காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சியானது சொற்களால் வரையறுக்க முடியாது பல்துறையிலும் வளர்ச்சிபெற்று மிளிர்கின்றது என்றால் அதனை நாம் சொற்களால் வடிக்க முடியாது உள்ளது.

இவ்வாறாக இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நாம் பல்துறைக்கோணங்களிலும் வைத்து ஆராய்ந்து நோக்கும்போது தமிழ் இலக்கியம் இலங்கையிலும் தனக்குரிய தடத்தினைப் பதித்துள்ளது எனலாம்.

திருமதி. தாரணி ஆரூரன்
ஆசிரியர்.

# ஆசிரியர்களது கடமைகள் பழையனவும் புதியனவும்

ஆசிரியர்கள் பாடசாலைகளில் பொறுப்புதாரர்களில் முதன்மையானவர்கள். பாடசாலைகள் தமக்குரிய பொதுவான குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டுமானால் ஆசிரியர்கள் அவற்றை விளங்கிக் கொண்டு உண்மை ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டும். ஒவ்வொரு வகையான பாடசாலைகளும் தமது பொதுவான குறிக்கோள்களுக்கு புறம்பாக சிறப்பான குறிக்கோள்களையும் உருவாக்கியுள்ள போது ஆசிரியர்களின் தொழிற்பாடுகள் அவற்றை நிறைவேற்றும் வகையிலும் அமைய வேண்டும்.

இந்து, கிறீஸ்தவ, பிரிவேனாப் பாடசாலைகளில் இத்தகைய சிறப்பான குறிக்கோள்களிடையே வேறுபாடுகள் உள்ளன. அரச பாடசாலைகளுக்கும், தனியார் பாடசாலைகளுக்கும் சர்வ தேசப் பாடசாலைகளுக்குமிடையே இவை தொடர்பான வேறுபாடுகள், உள்ளன. இதேபோல் சமுதாய அலலது தேசிய சூழல்களில் மாற்றங்கள் ஏற்படும்போதெல்லாம் பாடசாலைகளின் தொழிற்பாடுகளையும் அதற்கு அமைய மாற்றியமைக்க வேண்டும். அதற்கு அமைய ஆசிரியர்களின் ஈடுபாடும் நடத்தையும், தொழிற்பாடுகளும் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

பாடசாலைகளை வளர்ப்பதிலும் மாற்றியமைப்பதிலும் ஆசிரியர்களுக்குரிய வகிபாகம் மிகவும் முக்கியமானதும் வலுவானதுமாகும்.

**ஆசிரியர்களின் மரபுவழியான கடமைகள்**

ஆசிரியர்கள் எத்தகைய தொழில்சார் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென தெளிவாக வரையறுக்கும் ஆசிரியத் தொழில் வழிகாட்டி கையேடுகளும் தொழில் ஒழுக்கக் கோவையும் சரியான முறையில வழங்கப்படவில்லை. அவை பின்பற்றப் பட வேண்டியதன் அவசியமும். வற்புறுத்தப்படவில்லை.

இவை பற்றி தொழிற்சங்கங்களிற்குப் புறம்பாக எந்தவொரு புலமைசார் அமைப்பும் தெளிவாக வலியுறுத்துவதில்லை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் கலைத்திட்டம், விடுதி நெறி முறைகள் என்பன ஒழுக்கக் கோவைகளுக்கும், தொழில் நெறிமுறைகளுக்கும் துணை செய்கின்றன. ஆசிரியர் கல்வி தொடர்பான கலைத்திட்டங்கள், அவர்களது கடமை, பொறுப்பு, வகைகூறல், தொழிற்புலமை, சமுதாயத் தொடர்பு போன்ற பலவற்றையும் கருத்திற் கொண்டனவாக வடிவமைக்கப்படுகின்றன. அதேபோல் பாடசாலை

முறைமையிலும் தேசிய கலைத் திட்டத்திலும் சமுதாய எதிர் பார்க்கை களிலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கு அமைவாகவும், அவர்களது தொழில்சார் கடமைகளும் நடத்தைகளும் மாற்றியமைக்கப் படவேண்டிய தேவைகள் உள்ளன.

ஆசிரியத் தொழில் உயர் தொழிண்மை மிக்கதாக ஏற்றுக் கொள்ளப்படுவதை இத்தகைய பண்பு நலன்களே பெரிதும் நிர்ணயம் செய்கின்றன. ஆசிரியர்கள் பின்வருவன பற்றி போதிய அறிவையும் தேர்ச்சியையையும் கொண்டிருத்தல் அவசியம்.

1. கற்பிக்கும் பாடங்கள் தொடர்பான புலமையை நிறைவாகக் கொண்டிருத்தல். புதிய மாற்றங்களையும் வளர்ச்சியையும் அறிந்து பிரயோகிக்கத் தக்கவராக இருத்தல்.
2. கற்பிக்கும் பாடத்தில் அகலம், ஆழம் தொடர்பாக பல துறைப்பாட அறிவும் இணைக்கப்படுதல் வேண்டும். அறிவு ஒன்றிணைந்தது. துண்டிக்கப்பட முடியாதது என்பதை ஆசிரியர் விளங்கிக் கொண்டு கற்பதும் கற்பிப்பதும் அவசியமாக உணரப்படல்.
3. ஆசிரியர் உளப்பாங்கு மிகவும் அடிப்படையானது கற்றல், கற்பித்தல், புதிய அனுபவங்களைப் பெறுதல், சுத்தம், ஒழுங்கு, ஒழுக்கம், உடல் பாதுகாப்பு, எழில் நயம் என்பன தொடர்பாக நேரான மனப்பாங்கைப் பெற்றிருத்தல்.
4. ஆசிரியர் முன்மாதிரியானவர், வாழ்நாள் முழுவதும் ஆசிரியர்கள் சமூகத்தினால் கூர்ந்து நோக்கப்படுபவர்கள். இதனால் அவர்களை ஒரு நாணயம் எனக் கொண்டால் அதன் ஒருபக்கத்தில் தொழிற் புலமையும் மறுபுறம் அவர்களது ஒழுக்கவும் அமைதல் அவசியம்.
சுயஒழுக்கம், தொழில் ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம், என்பன ஒன்றிணைந்த வகையில் அவர்களால் பின்பற்றப்படுதல் வேண்டும்.
5. இலக்குப்பணி நோக்கி கடுமையாக உழைக்கும் விருப்பமும் திறமையும் அவர்களிடம் இருத்தல் வேண்டும். ஆற்றுகை இலக்கு அவர்களுக்கு முதன்மையானது கற்பதில் இலக்கு வேண்டும். அதை அகலப்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும்.
கற்பிப்பதில் புதிய பணி இலக்குகளை நிர்ணயம் செய்து அது தொடர்பாக கடுமையாக உழைத்தல் வேண்டும். இதற்கான விருப்பும் உழைப்பும் அவர்களிடம் அதிகமாயிருத்தல் அவசியமாகும்.
6. பல்வகைமைத் தேர்ச்சிகள் ஆசிரியர்களுக்கு அவசியமாகும். வகுப்பறையில் கற்பித்தல், பாடசாலையினுள்ளே வகுப்பறைக்கு வெளியே ஆய்வுகூடம், செயற்பாட்டு அறை, கணணி அறை போன்ற பல இடங்களிலும் கற்பித்தல், தொடர்பாடல், தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தல். கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல் போன்ற பலவகை சார்ந்த தேர்ச்சிகளையும் ஆசிரியர்கள் கொண்டிருத்தல் அவசியமாகும்.
ஆசிரியர்களிடம் மதிப்பிடும் திறன்கள் நன்கு வளர்க்கப்படல் வேண்டும். தனது செய்கைகள் பற்றிய சுயமதிப்பீடுகள் செய்யு

மளவுக்கு தேர்ச்சியும் மனப்பாங்கும் வளர்க்கப்படல் வேண்டும்.

மாணவர்களது பாடஅடைவு, திறன்கள், மொழி, தொடர்பாடல் தொடர்பாகவும் கூர்மையாக அவதானித்து மதிப்பிடும் வல்லமை கொண்டிருத்தல் வேண்டும்.

கல்வியமைச்சின் நியமங்கள், பிரமாணங்கள், விதிகள் என்பவற்றுக்கு அமைவாக அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்க ளையும் விளங்கிக் கொண்டு சரியாக மதிப்பீடுகளில் ஈடுபடுவோராக ஆசிரியர்கள் விளங்குதல் அவசியம்.

8. ஆசிரியர்களிடம் புத்தாக்க திறன்களும் படைப்பாற்றல் முனைப்பும் வளர்க்கப்பட வேண்டியதவசியம். ஆராய்ச்சி பற்றிய அறிவும், திறனும், ஊக்கமும், அவர்களிடம் வளர்க்கபடல் வேண்டும். பாடசாலை மட்டத்திலும் வகுப்பறை மட்டத்திலும் எழக்கூடிய அன்றாட பிரச்சினைகள் பற்றிய செயல்நிலை ஆய்வுகளை ஆசிரியர்கள் தனியாகவும் கூட்டாகவும் ஒன்றிணைந்தும் மேற்கொள்வதற்கான துணிவும் விருப்பமும் ஆற்றலும் அவர்களிடம் வளர்க்க ப்படல் வேண்டும்.

இவை தொடர்பான கல்வியையும், பயிற்சிநிலை பெறுதற்குரிய வசதிகள் அதிகரிக்கப்படுவதன் மூலம் மரபு வழியான கடமைகளை வினைத் திறனுடன் நிறைவேற்றுவதற்கு உதவ முடியும்.

ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், உளவழிகாட்டல், கல்விவழிகாட்டல், தொழில்வழிகாட்டல், தொடர்பான கல்வியும், திறன்களும், ஆசிரியர்களுக்கு வழங்கப்படல் வேண்டியடி தவசியம்.

மாணவர்களுடனும் சகபாடகளுடனும் பெற்றோருடனும் உத்தமமான முறையில் தொடர்பாடல்களை மேற் கொள்வதற்குரியதாக மென் திறன்கள் (Sofa Skills) சார்ந்த பயிற்சிகளை வழங்குதல் அவசியம். இதற்கு ஒரே தடைவையில் முயற்சிகள் அதிகம் பயன்தரமாட்டா. அடிக்கடி பயிற்சிப் பட்டறைகளும் செயலமர்வுகளும் கருத்தரங் குகளும் ஏற்பாடு செய்யப்படல் அவசியம்.

ஆசிரியர்களது தொழிண்மை அமைப்புக்களும் கல்வி அமைச்சும் இவற்றில் கவனம் செலுத்த வேண்டிய தவசியம்.

ஆசிரிய தொழிற்சங்கங்கள், இவற்றுக்கென தமது வளங்களில் ஒருபகுதியை ஒதுக்குவதும் பூரண ஒத்துழைப்பை வழங்குவதும் மிகவும் அவசியமாகும்.

**கற்கும் நிறுவனமாக மாற்றுதல்**

பாடசாலைகளில் கற்பித்தல் பணியும் அதனை மேற்கொள்ளும் ஆசிரியர்களும் முக்கியமானவர்கள். எனினும் கற்றல் - கற்பித்தல் தொடர்பான புதிய அணுகுமுறைக்கு அமைவாக ஆசிரியர் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். கற்பித்தல் தொடர்பாக பல பண்பு நல மாற்றங்கள் ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை பின்வருமாறு தரப்படுகின்றன.

**மரபு வழியான கற்பித்தல்**

1. ஆசிரியர்களிடம் நிறைந்த அறிவுண்டு. மாணவர்கள் கவனமாக கேட்டு கற்றுக் கொள்ள வேண்டும்.
2. மாணவர் ஆசிரியர்களிடம் கற்றதை அளவிடுவதற்கு கணிப்பீடுகளும் மதிப்பீடுகளும் போதுமானவை.
3. ஆசிரியர்கள் நிறைவான வலுவாண்மை கொண்டவர்கள். மாணவர்கள் அவர்களுக்கு கட்டுப்பட்டு செயற்படல் வேண்டும்.
4. ஆசிரியர்கள் தான் வகுப்பறைகளின் எஜமானர்கள். அவர்களது மேற்பார்வை, கட்டுப்பாடு, வெகுமதி தண்டனை அவசியம்.
5. மாணவர்களைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு ஆசிரியர்களுக்கு அவர்கள் பயந்து நடத்தல் வேண்டும்.
6. மாணவர்களது தனிப்பட்ட முன்னேற்றம். தேவை பற்றிய பணிகளையும், இலக்குகளையும், ஆசிரியர்களே தீர்மானிக்க வேண்டும்.
7. மாணவர்களது திறன் விருத்தி, மன வளர்ச்சி, மனவெழுச்சி, என்பவற்றை விடவும் அவர்களது அறிவு வளர்ச்சியே முக்கியமானது.
8. மாணவர்கள் கட்டுப்பட்டு நடப்பதால் தான் ஒழுங்கும் ஒழுக்கவும் விருத்தி பெறுகின்றது. அவர்களுக்கு சுய சிந்தனை, சுதந்திரம் என்பன முக்கிய மானவையல்ல.
9. போதனைகள் மூலமாகவே சிறந்த கற்பித்தலை மேற்கொள்ள முடியும் என ஆசிரியர்கள் நம்புதல்.
10. பள்ளிப்படிப்பு நிறைவானது. இதனால் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் போதுமானதென ஆசிரியர் நம்புதல்.

**கற்கும் நிறுவனமாக மாறும் வகையில் கற்பித்தல்**

1. எவ்வாறு கற்றுக் கொள்ள வேண்டும். எங்கிருந்தெல்லாம் கற்க முடியும் என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்த வேண்டும்.
2. மாணவர் கற்பதை அளவிடுதற்கு பல புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும். செயற்றிட்டங்கள் ஊக்குவிக்கப்படல் அவசியம்.
3. மாணவர்கள் ஆசிரியர்களை உதவுபவராகவும், ஊக்குவிப்பவராகவும் வழிகாட்டுபவராகவும் நோக்க வேண்டும். வலுவுக்கு அஞ்ச வேண்டியதில்லை.
4. வகுப்பறைகள் மாணவர்கள் சுயகற்றலுக்குரிய இடமாகும். சகபாடிகள் மூலமாகவும் கற்க முடியும். அவர்களுக்கு தேவைப்படுபவை அதிகளவான வழிகாட்டல்களே.
5. ஆசிரியர்களுக்குப் பயப்படுவதை விட அவர்களது தொழில் ஈடுபாடுகளை வியக்க வேண்டும். மதிக்க வேண்டும். கௌரவமான கலந்துரையாடலுக்குப் பழக்கப்படல் வேண்டும்.
6. மாணவர்கள் சுய தேவைகள் தம் இலக்குகளை இனங்காணக் கூடியவர்கள் ஆசிரியர்கள் வழிகாட்டினால் போதுமானது.
7. மாணவர்களிடமிருந்தும் பெற்றோர்களிட மிருந்தும் சமூகத்திடமிருந்தும் ஊடகங்களிடமிருந்து போதிய பின்னூட்டல்களை ஆசிரியர்கள் பெறமுடியும். எல்லாம் அறிந்தவர்கள் தாம் என ஆசிரியர்கள் எண்ணுதல் பொருத்தமற்றது.
8. செய்வதன் மூலமும், களப்பயணங்கள் கூர்மையான அவதானங்கள் மூலமும் கற்றுக் கொள்வது சிறந்தது.

9. வாழ்நாள் முழுவதும் கற்க முடியும் என்ற உணர்வையும் நம்பிக்கையையும் மாணவரிடம் ஆசிரியர் வளர்த்தல்.

### முடிவுரை

ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பற்றித் தெளிவாக அறிந்தும் உணர்ந்தும் கொள்ள வேண்டும். இதற்கு பாடசாலைகளும் கல்வி அமைச்சும் ஆசிரிய கல்வி நிறுவனங்களும் உதவ வேண்டும்.

ஆனால் கல்வி சூனிய பிரதேசத்தில் உருவாவதுமில்லை. வளர்வதுமில்லை. தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் பொருளாதார, தொழில்நுட்ப அரசினால், சமூக கலாசார காரணிகள் பாதிப்புக்கு உட்பட்டு தொடர்ந்து மாற்றமடைந்த படியே வளர்வதுதான் கல்வி. இதனை ஆசிரியர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உலகின் மாற்றங்களும் புதிய சிந்தனைகளும் ஆசிரியர்களை மாற்ற முயல்கின்றன. அவற்றுடன் முரண்பாடு கொள்ளாது பாடசாலை பற்றியும், கல்வி பற்றியும் கற்பித்தல் பற்றியும் உருவாகின்ற புதிய விடயங்கள், நுட்பங்கள் அணுகுமுறைகள் என்பவற்றை அறிந்து தமது தொழில் வாழ்வில் அவற்றை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செயற்படுத்த வேண்டும்.

அப்போதுதான் ஆசிரியர்களின் மதிப்பும் வலுவும், அங்கீகாரமும் தொடர்ந்தும் அதிகரிக்கும். சிறப்பான தொழிண்மை அந்தஸ்தை ஆசிரியர்களும் நிச்சயம் பெற முடியும்.

பேராசிரியர் : மா. சின்னத்தம்பி
கல்வியியல் பேராசிரியர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

* நம்பிக்கையை இழந்து விடாதீர்கள். விடிவெள்ளிக்குச் சற்று முன்பு இருட்டு வெகுஅதிகமாக இருக்கின்றது.

– தோமஸ் புலவர் -

* வாலிபம் தனில் வித்தை கற்க வேண்டும். கற்ற வழியிலே நிற்க வேண்டும்

– அளப்பனி சுரசதகம் –

* " சுத்தமாகவும் , சிக்கனமாகவும், கண்ணியமாகவும் இருப்பவர்க்கு பணம் தேவைப்படாது.

– காந்திஜீ –

சுகாதார மன்றம்



ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களுடன் மாணவ முதல்வர்கள்



இந்து மன்றம்



## "19ஆம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்கள் இலங்கைக் கல்வி வரலாற்றைப் பொறுத்தவரை புரட்டஸ்தாந்து மிஷனரிகளின் பொற்காலம்"

இலங்கையின் கல்வி வரலாற்றில் ஐரோப்பியரது வருகையின் பின்னர் கல்வித்துறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தமது மதத்தைப் பரப்பு வதனூடாக கல்வியை வழங்குகின்ற செயன்முறைகளைக் குறித்த மிஷனரிகள் மேற்கொண்டு வந்தன. இவ்வகையில் லண்டன் மிஷனரிக் குழு (1805), பப்டிஸ்ட் மிஷனரிக் குழு (1812), வெஸ்லியன் மிஷனரிக் குழு (1814), அமெரிக்கன் மிஷனரிக் குழு (1816), கிறிஸ்தவ திருச்சபைக் குழு. (1818) ஆகிய மிஷனரிகள் மிகத் தீவிரமாக இலங்கை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் செயலாற்றி வந்தன 1815ஆம் ஆண்டு கண்டி கைப்பற்றியதுடன் இலங்கை முழுவதும் பிரித்தானியர் வசம் இருந்தபோது மிஷனரிகளின் பணி மேலும் விரிவடைந்தது. இம் மிஷனரிகளின் ஒட்டுமொத்த செயலாற்றுகைகளை ஆராய்கின்ற போது 1800-1830க்கு இடை ப்பட்ட காலப்பகுதியில் அவை மதநோக்கத் தோடு செயற்பட்டாலும் கூட கல்வியை பரந்த அளவில் இலங்கையில் விஸ்தரிப்பதற்கான அடிப்படை களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என கல்விப்பாரம்பரியங்கள் என்ற நூலில் பேராசிரியர் வ.ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவ சக்தி வெளிப்பட்டதன் விளைவாக கிறிஸ்தவ சமயம் புதிய இடங்களில் விரைவாகப் பரவின. கிறிஸ்தவ சமயம் ஒரு உலகச்சமயமாக மாறிக் கொண்டிருந்தது. 19ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதாரத்திலும், பேராட்சியிலும் ஏற்பட்ட எழுச்சியோடு எதிர்பாராத சமய மறுமலர்ச்சியும் உண்டாயிற்று. மேற்கு ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு நாட்டிலிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவ மதப் பிரிவையும் இச் சமய மறுமலர்ச்சி பாதிப்பதாக இருந்தது. இக் காலந்தான் மிஷனரிச் சங்கங்களின் பொற்காலமாகும். மிஷன் பணியில் ஈடுபடுவதற்கு புரட்டஸ்தாந்து திருச்சபைகள் இயலாதவையாகவோ, ஆர்வம் அற்றவையாகவோ தான் காணப்பட்டன. எனவே இப்பணி யானது மனமுவந்து செய்ய வந்த மிசனறிச் சங்கங்களுக்கு விடப்பட்டது. அதற்கு வேண்டிய பணவுதவி புரிவதில் ஆர்வம் காட்டும் கிறிஸ் தவர்களின் நன்கொடைகளை நம்பியிருந்தன.

**பிரித்தானியர் காலக் கல்வி வளர்ச்சியில் மிசனறிகளின் பங்கு.**

கி.பி 1812ல் றொபேட் பிரவுன்றிக் இலங்கையின் ஆளுநராக நியமிக்கப பட்டது முதல், சமயக் குழுக்கள் (மிஷனரிகள்) கல்வியினூடாக சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர் பிரெளன்றிக் சமயத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவராக காணப்பட்டமையும், அதனால் அரச உதவி உறுதியாகக் கிடைக்கும் என்ற

நம்பிக்கையும், இக்காலத்தில் குடியேற்ற நாட்டு செயலாளரும் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கும், சமயப்பிரச்சாரத்திற்கும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஆளுனரிற்கு அறிவித்தல்.

பிரெளன்ரிக் இலங்கைக்கு வந்தது முதல் "பைபிள்"சங்கத்தின் கிளையொன்றை நிறுவினார். ஒக்சிலீயரி பைபிள் சொஸைடி (Auxillary bible Society ) என்ற பெயருடைய இச்சங்கம் கிறிஸ்தவ சமய நூல்களை சிங்களத்தில் அச்சிட்டு வழங்கியதுடன் கல்கத்தா அச்சகத்தில் சில கிறிஸ்தவ சிங்கள நூல்களை அச்சிட்டுக் கொடுத்தது. மிசனரிக் குழுக்களுக்கு பாடசாலையை ஆரம்பிப்பதற்கும், கல்வியினைப் பரப்புவதற்கும் ஒத்தாசை வழங்கப்படும் என ஒரு அறிக்கை விடப்பட்டது. புதிதாகப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும், உதவிகள் வழங்கப்பட்டன. கிராமப்புற திறமை சாலிப்பிள்ளைகளிற்கு கொழும்பு அக்கடமியில் கற்பதற்கு உதவிகள் வழங்கப்பட்டன.

"பெல் முறை" ஆசிரிய, மாணவர் முறையை ஆரம்பித்து பாடசாலைகளில் அதிகரிக்கும் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சி அரச பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு உதவியதுடன் பல மிஷனரிக் குழுக்களுக்கும் கல்வியினை வழங்குவதற்கு உற்சாகமளிக்கப்பட்டது.

**மிஷனரிச் சங்கங்கள்.**

1. ஆங்கில பப்டிஸ்த சங்கம். - 1792
2. இலண்டன் மிசனரிச் சங்கம். - 1795

இது ஏதும் ஒரு குறிப்பிட்ட திருச்சபையின் அமைப்பு முறையையோ, நிர்வாகமுறையையோ, தழுவாமல் கிறிஸ்தவர்கள் அல்லாதோரிற்கும் போதிக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது.

3. ஆங்கிலிக்கன் சுவிசேட திருச்சபை மிசனரிச் சங்கம். - 1799
4. வெஸ்லியன் மெதடிஸ்த சங்கம்.

இதைத் தொடர்ந்து காலக் கிரமத்தில் மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் அவற்றின் சொந்த மிசனறிகள் உருவாகின.

5.அமெரிக்க ஆணையாளர் சபை. 1810
6அமெரிக்கன் பப்திஸ்த மிசனறிமார் சங்கம். 1814

இலங்கைக்கு வருகைதந்த மிஷனரிச் சங்கங்கள்.

1. லண்டன் மிஷனரிக் குழு (1805)
2. பப்டிஸ்ட் மிஷனரிக் குழு (1812)
3. வெஸ்லியன் மிஷனரிக் குழு (1814)
4. அமெரிக்கன் மிஷனரிக் குழு (1816)
5. கிறிஸ்தவ திருச்சபைக் குழு. (1818)

லண்டன் மிஷனரிக் குழு (1805)

இக்குழு 1805ல் இலங்கைக்கு வந்து நோர்த் ஆளுநரின் உதவியுடன் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்தியது. சில காலம் பலம் குன்றிக் காணப்பட்ட இக்குழுவினருக்கு பிரெளன்றிக் ஆளுநரின் உதவி கிடைக்கவே புத்துயிர் பெற்று மீண்டும் செயற்படத் தொடங்கியது.

இக்குழுவின் குருமார்கள் காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் சேவை செய்தனர்.

### பப்டிஸ்ட் மிஷனரிக் குழு (1812)

இக்குழு 1812ல் இலங்கைக்கு வந்தது. இக்குழு சிறிய குழுவாக கொழும்பைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கியது. இக்குழுவினர்

1. சுதேசப் மொழிப் பாடசாலைகள்,
2. ஆங்கிலேயப் பாடசாலைகள்,
3. பெண்கள் பாடசாலைகள்

என மூவகையான பாடசாலைகளை தொடங்கி நடாத்தினர்.

ஆங்கிலேயப் பாடசாலைகளில் கல்வி கற்பவர்களிடம் கட்டணம் அறவிடப்பட்டதுடன் ஏனைய இரு பாடசாலைகளில் கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. கோல்புறுக் ஆணைக்குழுவின் ஆய்வின் போது இக்குழுவிற்கு 13-சுதேச மொழி பாடசாலைகளும், 2-இரு மொழிப் பாடசாலைகள் இருந்ததென்றும் அங்கு 645 மாணவர்கள் கற்றார்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது

### வெஸ்லியன் மிஷனரிக் குழு (1814)

இக்குழு 1814ல் இலங்கைக்கு வந்தது. இதற்கு பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்துடன் அரச பாடசாலைகளை பரிசோதனை செய்வதற்கும், ஆளுனர் அதிகாரம் அளித்தார். அதற்கு வேதனமாக 15 ரிக்ஸ் டொலர் வழங்குமாறும் பணித்தார். இக்குழு

1. சுதேசப் மொழிப் பாடசாலைகள்,
2. ஆங்கிலேயப் பாடசாலைகள்,
3. தினசரிப் பாடசாலைகள்,
4. ஓய்வுநாட் பாடசாலைகள்,
5. உயர் கல்வி நிறுவனம் ஆகிய வெஸ்லியன் அக்கடமி

ஆகிய நிறுவனங்களை நடாத்தியது. 1832ம் ஆண்டளவில் 90 பாடசாலைகளும், அதில் 4363 மாணவர்களும், கற்றனர். இவர்கள் காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் கொழும்பு, நீர் கொழும்பு களுத்துறை ஆகிய சகல பிரதான பிரதேசங்களிலும் பாடசாலைகளை நிறுவியிருந்தனர். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மட்டும் கூடுதலாக 21 பாடசாலைகள் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 90 பாடசாலைகளிலும் 83 பாடசாலைகள் சுதேச மொழிப் பாடசாலைகளாகவும், 7 ஆங்கிலப் பாடசாலைகளாகவும், இருந்தன. ஆங்கிலப் பாடசாலைகளில் ஐரோப்பியரின் பிள்ளைகளே கற்றனர். உயர் கல்வி நிறுவனம் செமினரி வெஸ்லியன் அக்கடமி ஆகும்.

### அமெரிக்கன் மிஷனரிக் குழு (1816)

கி.பி 1816ல் இலங்கைக்கு வந்தது. இக்குழுவை ஆள்பதி ஒரு வெளிநாட்டுக் குழுவாகவே கணித்தார். அதற்குக் காரணம் இவர்கள் ஏனைய குழுவினரைப் போல் பிரித்தானியாவைச் சார்ந்திராது அமெரிக்காவைச் சார்ந்திருந்ததாகும். அவ்வாறான குழு நாட்டில் பிரவேசித்து சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபடுவதற்கு இடமளிக்க குடியேற்ற நாட்டு செயலாளரின் அனுமதியைப் பெறும் வரை நாட்டில் பிரவேசிக்க அனுமதி மறுத்தனர்.

அத்துடன் கொழும்பில் குடியிருக்காது யாழ்ப்பாணத்தில் குடியிருக்குமாறு பணித்தார்.

அக்காலத்தில் சிறந்த கல்வியை உடையதாய் இக்குழு விளங்கியது. விஞ்ஞான, கணித அறிவு ,வேறு புதிய அறிவு ஆகியவற்றைப் பெற்றிருந்தனர். அத்துடன் பொருளாதார வளம் மிக்கவர்களாகவும் காணப்பட்டனர். அதனால் யாழ்ப்பாண தீபகற்பத்தில் உடனடியாகவே ஒரு பாடசாலை அமைப்பு முறையை தாபித்து இலவச மாகவே கல்வி வழங்கினர்.

**அமெரிக்கன் மிஷனரிக் குழுவினர்**

1. இலவச கிராமியப் பாடசாலைகள்,
2. தரும விடுதிப் பாடசாலைகள்,
3. மத்திய பாடசாலைகள்.
4. செமினரி(வட்டுக் கோட்டை உயர் கல்வி நிறுவனம்)

என 4வகையான பாடசாலைகளை நிறுவினர். இவற்றில் அதிகமானவை கிராமியப் பாடசாலைகளாகும். இவைகளில் கற்பித்தல் இந்து சமய ஆசிரியர்களால் சுதேசமொழியில் நடைபெற்றது. கிறிஸ்தவ சமயம் கிறிஸ்தவ குருமார்களால் கற்பிக்கப் பட்டது.

1832ம் ஆண்டளவில் இவ்வாறான 90 பாடசாலைகளில் 3500மாணவர்கள் கல்வி பெற்றதாக குறிப்பிடப்படுகின் றது. இப் பாடசாலைகளில் கல்வியைப் போன்று நூலகமும் இலவசமாகவே வழங்கப்பட்டது. தெல்லிப்பழை, உடுவில் எனும் இரு இடங்களில் நிறுவப் பட்டிருந்த தர்மப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களிற்கு விடுதி வசதியுடன் கூடிய உணவு, உடை, நூல்கள் கல்வி ஆகிய அனைத்தும் இலவசமாகவே வழங்கப்பட்டன. இடைநிலைத் தரத்தில் கல்வி வழங்குவதற்கு மத்திய பாடசாலைகள் என்ற பெயரில் பாடசாலைகள் அமைத்தார்கள்.

கிராமப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட திறமைசாலி மாணவர்களே இப் பாடசாலைகளிற்கு அனுமதிக்கப்பட்டார்கள். வட்டுக் கோட்டை,உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் இவ்வகையினைச் சேர்ந்த பாடசாலைகள் காணப்பட்டன. இப் பாடசாலைகளில் கல்வி பெறும் திறமை சாலி மாணவர்கள் மேலதிக கல்வி பெறுவதற்காக உயர் கல்வி நிறுவன மொன்றை நிறுவ எண்ணினராயினும் இதற்கு அரசின் அனுமதி கிடைக்க வில்லை. அதனால் "வட்டுக்கோட்டை செமினரி" எனும் பெயரில் தாம் எதிர்பார்த்ததிலும் சிறிது குறைந்த தரத்தில் ஒரு நிறுவனத்தை நிறுவினர். தமிழ் மொழி, ஆங்கிலம், புவியியல், வரலாறு, எண்கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம், அட்சர கணிதம் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன.

**அமெரிக்க மிஷனரியும் பாடசாலை அமைப்பு முறையும்.**

அமெரிக்க மிஷனரிமார் பள்ளிக்கூட அமைப்பைத் தமது முதற் பணியாகக் கொண்டமைக்கு காரணம் இளைஞர்கள் தமது மதப் பிரசாரத்தைக் கேட்டு அதன்படி செயற்படுவர் என உணர்ந்திருந்தமை. இவர்கள் பள்ளிக்கூடங்களை அமைத்ததன் நோக்கம் அப் பாடசாலை

களைத் தமது மதப்பணியின் களமாகக் கொள்வதேயாகும். இப் பள்ளிக்கூடங்களில் இந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமைக்கும் சமயமே காரணமாகும் ஆரம்பத்தில் கட்டடங்கள் அதிகம் பிரச்சினையாக இருக்கவில்லை ஏனெனில் ஒல்லாந்தர் விட்டுச்சென்ற கட்டடங்கள் அமெரிக்க மிஷனரிகளின் பாவனைக்கு வழங்கப்பட்டது.

அமெரிக்க மிஷனரிகளின் பள்ளிக்கூடங்கள் பலசிறப்புக்களைக் கொண்டு விளங்கின தொகையிலும் அவை மற்ற மிஷனரிகளை விஞ்சி நின்றன அமெரிக்க மிஷனரிமார் அமைத்த தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றிலே ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தின எனின் மிகையாகாது. இப்பணிகள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தன இவை மிஷனரிமாரின் பணித்தளங்களுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு அவர்களின் நேரடி கண்காணிப்பின் பேரில் இயங்கியமையே அவற்றின் சிறப்பிற்கு முக்கிய காரணமாகும்.

அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் சகல கிராமங்களிலும் பாடசாலைகளை அமைத்தனர். குடா நாட்டில் குடத்தனை முதல் மேற்கே நெடுந்தீவு வரை இவர்களின் பள்ளிகள் செயற்பட்டு வந்தன. வெஸ்லியன் மிஷனரிமாரும் கிறிஸ்தவ திருச்சபைக் குழுவும் நகர்ப்புறங்களில் மட்டும் தமது கல்விப்பணியை மேற்கொண்டிருக்கையில் அமெரிக்க மிஷனரிமார் கிராமங்களில் கவனம் செலுத்தியமை போற்றுதற்குரியதாகும்.

இப்பள்ளிக்கூடங்களில் சாதி, சமய வேறுபாடின்றி சகல மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டமை இன்னொரு சிறப்பம்சமாகும். இது சாதி வேற்றுமையை அகற்றுவதற்கு வழி வகுத்தது. அமெரிக்க மிஷனரிமார் தமது பள்ளிக்கூடங்களில் கற்பிப்பதற்கு தகுந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்ததோடு மட்டுமல்லாது அவர்களைத் தமது கண்காணிப்பின் கீழ் வைத்து ஆலோசனையும் பயிற்சியும் அளித்து வந்தனர். ஒவ்வொரு மிஷனரிமாரின் கீழும் குறிப்பிட்டளவு ஆசிரியர்களும் தலைமை மாணவர்களும் இயங்கி வந்தனர். இந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் வாரத்தில் ஒருமுறை சந்திப்பது மிஷனரிமாரின் வாராந்தக் கடமைகளில் ஒன்றாக அமைந்தது.

மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் இப்பாடசாலைகளின் போதனைகள் நடை பெற்றன. மிஷனரிமார் மாணவர்கள் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றுவிட்டால் இந்துசமயத்தின் நம்பிக்கைகளை விடுத்து கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொள்வார்கள் என நம்பினார்கள்.

**அமெரிக்க மிஷனரியும் பெண் கல்வியும்**

மிஷனரிமார் அமைத்த பள்ளிக்கூடங்களில் கூட இன்னொரு சிறப்பு பெண் கல்வியாகும். அமெரிக்க மிஷனரிமார் வரும்வரையில் யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி கவனிக்காது விடப்பட்டிருந்தது. பெண்களின் கல்வியில் அக்கறை கொண்டிருந்த இவர்கள் பலத்த எதிர்ப்பின் மத்தியில் பெண்களைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்க வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணப் பெண் சமுதாயத்தின் கல்வி வரலாற்றிலும் உடுவில் மகளிர் கல்லூரியின் உதயம் ஒரு முக்கியமான மைற்கல்லாகும். 1824ம் ஆண்டு உடுவில் மகளிர் பாடசாலை நிறுவப்பட்டது. இதுவே ஆசியாவிலேயே முதன் முதலாகத் தோன்றிய பெண்கள் விதிப் பாடசாலையாகும். இங்கு தமிழிலேயே பாடங்கள் போதிக்கப்பட்டன. ஆங்கிலம் ஒரு பாடமாகப் பயிற்று விக்கப்பட்டது.

மிஷனரிமார் அமைத்த தமிழ்ப் பள்ளிகூடங்கள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் மக்களின் எழுச்சிக்கும் பெருமளவு உதவி புரிந்தன பின்னர் அவர்கள் இடைநிலை உயர்நிலை கல்வியில் கவனம் செலுத்தினாலும் ஆரம்பத் தமிழ்ப்பள்ளிக்கூடங்களே அவர்களுடைய கல்வி அமைப்பினதும் சமயப் பணியினதும் ஆணிவேராக இருந்தது.

அமெரிக்க மிஷனரிமார் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் துரித வளர்ச்சியையும் மாணவர்களின் ஆர்வத்தையும் கண்ணுற்று பரிபூரணமான ஒரு கல்வித் திட்டத்தினை உருவாக்க வேண்டுமென விரும்பினார்கள். இதற்கு முதற்படியாக விடுதிச்சாலைகள் கொண்ட இடைநிலைப் பள்ளிக்கூடங்களைத் தெல்லிப்பழையிலும் வட்டுக்கோட்டையிலும் உடுவிலிலும் பண்டத்தரிப்பிலும் மானிப்பாயிலும் அமைத்தனர். இப்பள்ளிகளில் கற்ற மாணவர்களுடைய உணவுச் செலவையும் ஏனைய செலவுகளையும் அமெரிக்காவிலுள்ள தனவந்தர்கள் வழங்கினார்கள்.

**வட்டுக்கோட்டைச் செமினரி**

அமெரிக்கன் மிஷன் விடுதிப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் பேருக்கமும் திறமையும் மிஷனரிமாருக்கு உற்சாகத்தை அளித்தன. அவர்களுக்கென ஓர் உயர்கலைபீடத்தை அமைக்க விரும்பினார்கள் இதற்கெனத் தயாரித்த மனுப்பத்திரத்தில் இக்கல்விக் கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

1. ஆற்றலுள்ள சுதேசிய வாலிபர்களுக்கு ஆங்கிலத்திலே பூரண அறிவை வழங்குதல்

2. தமிழ் இலக்கியத்தை விருத்தி செய்தல்

வட்டுக்கோட்டை செமினரி தமிழ் மொழிக்காற்றிய பெரும் சேவையாகக் கொள்ளப்பட வேண்டியது தமிழ் மொழியின் சமயச்சார்பினை நீக்கி அதனை மதச்சார்பற்ற மொழியாக்கியமையாகும். செமினரியின் பணியினால் தமிழ்மொழி உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றது. தமிழ் உரைநடை விருத்தியடைந்தது. இதற்கு செமினரியில் இருந்த விரிவான பாடத்திட்டமும் தாராளா ண்மைக் கல்வியுமே முக்கிய காரணங் களாகும். வட்டுக்கோட்டை செமினரியிற் கற்பிக்கப்பட்ட பாடத்திட்ட த்தினை நோக்கும் பொழுது அவர்களின் பரந்த நோக்கும் இலட்சியமும் புலனாகும். கிறிஸ்தவத்துடன் விஞ்ஞானம் மெய்யியல் என்பன இந்நிறுவனத்தினரின் பணியின் முக்கிய அம்சமாக இருந்தன.

எனவே கணிதம், மெய்யில் இயற்கை வரலாறு வானசாஸ்திரம் இராசாயனம் ஆகிய தூய பிரயோக விஞ்ஞான பாடங்களுக்கு கூடுதலான முக்கியத் துவம் வழங்கப்பட்டது. மானிடவியல் சமூகவியற்றுறைகளை நோக்கும் பொழுது ஆங்கில இலக்கியத்துடன் கிரேக்கம், லத்தீன, எபிரேயம், சமஸ்கிருதம், புவியியல் மண்ணியல் வரலாறு, அரசியல் பொருளாதாரம் கணக்கியல் என்பன போதிக்கப்பட்டன கிறிஸ்தவ சமயத்தைப் போதிக்கும் நோக்கினால் அவர்கள் உந்தப்பட்டா லும் செமினரியில் அளிக்கப்பட்ட கல்வி தாராளாண்மை மறைந்ததாக இருந்த தென்பது மறக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். தேசாதிபதி பாண்ஸ் அவர்களது ஆட்சியின் இறுதியில் ஈழத்திற்கு விஜயம் செய்த கோல்புறூக் ஆணைக்குழுவினர் அமெரிக்க மிஷனரிமாருடைய கல்விப் பணியை வியந்து போற்றியதோடு அரசாங்கம் தாய்மொழிப் பாடசா லைகளை மிஷனரித் தாபனங்களுக்கே விட்டுவிட வேண்டுமென்று சிபார்சு செய்தனர்.

அமெரிக்க மிஷனரிகளின் மற்றொரு பணி அச்சக சேவையாகும். இவர்களின் அச்சுப்பணியில் முக்கிய பங்காக விளங்குவது அவர்கள் வெளியிட்ட விஞ்ஞான நூல்களாகும். அமெரிக்கன் மிஷனரிமார் மானிப்பாயில் நிறுவிய அச்சகம் யாழ்ப்பாணத்து வரலாற்றில் முக்கியமானதொரு சம்பவம்

அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப் பணி பற்றி ஆய்வு நடாத்திய கலாநிதி சிந்தாமணி பியரத்தின "அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் அமைத்த கல்விமுறை உற்பத்தியில் பின்தங்கியிருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டை இலங்கையின் மற்றப் பிரதேசங்களைவிட மிகக்கூடுதலாக அபி விருத்தி செய்ய உதவியது. அதனாலே இலங்கை முழுவதிலும் பொதுவான அபிவிருத்தி ஏற்பட வழி பிறந்தது அவர்கள் அமைத்த தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் கல்லூரியும் பெண்கள் கல்விக்கழகமும் வட பகுதி யின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததுடன் கல்வித்துறையில் யாழ்ப்பாணச் சமுதாயம் முதன்மை பெறவும் வழிவகுத்தது. என்று கூறுகிறார்.

த.சிவகுமார்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# சமூகமயமாக்கலில் பாடசாலையின் பங்கு

மனிதன் ஒரு சமூகப் பிராணி அவன் தனித்து வாழ்ந்து விடமுடியாது. சமூகத்தின் ஒரு அங்கத்தவராக சமூகத்துடன் இணைந்தே வாழ வேண்டும். ஒரு தனிநபர் சமூகத்திற்கு ஏற்புடையவராக வாழப் பழகுதல் சமூகமயமாக்கல் எனலாம். "அறியாப்பருவக் குழந்தை சுயவிழிப்புணர்வும் அறிவும் பெற்று மனிதனாக மலர்ச்சி பெறவும் தாம் பிறந்த சமூகத்தின் கலாசார நடைமுறைகளை அறிந்து அவற்றை பேணுவதில் திறன் பெறவும் இட்டுச் செல்லும்" செயன்முறை சமூகமயமாக்கல் ஆகும், என கிட்டின்ஸ் (Giddens) என்பவர் குறிப்பிடுகின்றார். ஒருவர் தான் சார்ந்த சமூகத்தில் உயிர் வாழ்வதற்கு அவர் சமூகமயமாக்கலுக்கு உட்பட வேண்டியது அவசியமாகும். இச் சமூகமயமாக்கல் முகவர்களாக குடும்பம், ஒத்துதவயதுக்குழுக்கள், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமுதாய மன்றங்கள், பொதுசன ஊடகங்கள் என்பன விளங்குகின்றன.

பாடசாலையானது சுயாதீனமாக இயங்க முடியாது. சமூகத்தின் இயல்பை மீள மீள உருவாக்கி கொண்டிருக்கும் தொழிற்பாடுகளையே நடைமுறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. "சமூகம் எவ்வழி கல்வியும் கல்விநிறுவனங்களும் அவ்வழி" என்பதே நடைமுறை நடப்புச் சமூக இயல்புக்கு ஏற்றவாறு மாணவர்களை தயார்ப் படுத்தலும் இசைவுள்ளவர்களாக உருவாக்கித்தருதலும், பாடசாலைகளால் மேற்கொள்ளப்படுகின்றன. குடும்பம் ஒத்தவயதுக் குழுக்கள் போலல்லாது பாடசாலையில் கல்வி முறைசார்ந்த வகையில் வழங்கப் படுகின்றது. வயது சில வேளைகளில் பால் என்பவற்றின் அடிப்படையில் பாடசாலையில் மாணவர்கள் குழுக்களாக் கப்படுகின்றனர். மாணவர்கள் இங்கு கணிப்பீடுகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். விதிகளும் விதிமுறைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் பாடசாலைகளில் குழு ஒருமைப்பாட்டினை அதிகரிக்கின்றன. மாணவர் மன்றங்கள், நேர அட்டவணைகள் ஒழுக்காற்று நடைமுறைகள் என்பனவும் மாணவர் வரவு அடைவு, ஒழுக்கம், பாடசாலைச் சேவை என்பனவும் இவற்றுள் அடங்குகின்றன. இவற்றுடன் பாடசாலை ஒன்று கூடல்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் பாடசாலைக் கீதங்கள், பாடசாலைக் கொடிகள், சின்னங்கள் என்பனவும் பாடசாலைப் பண்பாட்டு விருத்தியை அதிகரிப்பதோடு பிள்ளைகளை சமூகமயப்படுத்துகின்றன.

பாடசாலைகள் பல சமூகமயமாக்கள் பரி மாணங்களை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துகின்றன. அவை வருமாறு

01. சமூக உணர்வினை வளர்த்தல்.
02. சமூக நடத்தைகளுடன் ஒத்துப் போகச்செய்தல்.

03. சமூக விழுமியங்களை உள்வாங்கச் செய்தல்

04. சமூகப் புலக்காட்சியை ஏற்படுத்தல்

05. பண்பாட்டுக் கோலங்களை வலியுறுத்தல்.

06. சமூக அறிவையும், அனுபவங்களையும் கையளித்தல்.

07. தொழில்நுட்ப மாற்றங்களுக்கு இசைவு படுத்தல்.

08. சமூக கட்டுப்பாடுகளை பின்பற்றச் செய்தல்.

09. சமூக நடிபங்குகளை ஏற்கக்கூடிய ஆற்றல்களை வளர்த்தல்.

10. சமூக ஊடாட்டங்களையும் தொடர் பாடலையும் வளமாக்கிக் கொள்ள உதவுதல்.

11. சமூகத்துக்குரிய அரசியல் மற்றும் பொருண்மிய இயல்புகளைப் புரிய வைத்தல்.

12. சமூக கட்டமைப்பை பராமரிப்பதற்கு அறிக்கை நிலையிலும் நடத்தை நிலையிலும் உதவுதல்.

சமூக மயமாக்கல் வழியாக மரபு வழி நடத்தைகள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. சமூகத்தோடு பொருந்தச் செய்யும் அறிக்கை நடத்தையாகவும் எழுச்சி நடத்தை யாகவும் இது அமைகின்றது. சமூக மயமாக்கல் கற்றல் என்ற கட்டமைப்புக்குள் கொண்டு வரும் பணியை பாடசாலை மேற் கொண்டு வருகின்றது. பாடசாலைகள் பாடங்களை உள்ளடக்கிய கலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்து வதன் மூலம் முறைசார் கல்வியை பிள்ளைகளுக்கு வழங்கி அவர்கள் சமூகம் பற்றிய அறிவைப் பெற உதவுகின்றன. மனித உரிமைகளை அறிந்து கொள்ளலும் உரிமைகளுக்கு மதிப்பளித்தலும் கடமைகளை வழுவின்றி மேற்கொள்ளலும் சமூகமய மாக்கல் பரிமாணங்களாக இடம் பெறுகின்றன. இச் செயற்பாட்டை பாடங்கள் வழியாகவும் ஒழுங்காற்றும் செயல்மு றைகள் வழியாகவும் பாட சாலைகள் நேரடியாக மேற்கொண்டு வருகின்றன.

மேலும் பாடசாலையின் மறைவான கலைத்திட்டமும் பிள்ளை களின் கற்றலுக்கு பங்களிப்புச் செய்கின் றது. வகுப்பில் அமைதி பேணுதல் பாடங்கள் கற்பிக்கப்படும் பொழுது உரிய நேரத்திற்கு வருகை தரல் மற்றும் பாடசாலை ஒழுங்கு விதிகளை அனுசரித்தல் போன்றவற்றையும் மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணாக் கர்கள் ஆசிரியர்களின் வழிகாட்டலில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்கின்றனர். பாடசாலையில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள் கின்றனர். பாடசாலையில் பாராட்டு க்கள், முதன்மை, மற்றும் தரங்கள் என்பவற்றின் மூலம் வகுப்பறையில் பிள்ளைகள் சிறப்பான முறையில் சமூகமயமாக்கப் படுகிறார்கள்.

பாடசாலையில் மேற்கொள்ளும் செயற்பாட்டின் கட்புலனாகும் குறியீடு களாக ஆசிரியர்களும் உற்ற நண்பர் களும் விளங்குகின்றனர். பாடசாலை யில் சமயவயதுடைய பிள்ளைகள் ஒரு வகுப்பில் வைத்துக் கற்பிக்கப்படு வதாலும் பிள்ளைகள் ஒரு வகுப்பறை யில் சிறப்பான முறையில் சமூகமயமாக்க ப்படுகின்றனர். இங்கு முக்கியமாக ஒருவருடன் வாழ்க்கை முழுவதுமோ

அல்லது வாழ்க்கையின் பெரும் பகுதியிலோ இணைந்து செல்லக்கூடிய நண்பனை அல்லது நண்பியை வழங்கி நிற்பது பாடசாலையாகும். பாடசாலை உருவாக்கி கொடுக்கும் இவ்வாறான நட்பு சமூகவியலுக்கான இயங்கு விசை யாக தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். குறித்த ஒரு மாணவரின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இந்த நட்பு வலிமையான வகிபங்கை ஆற்றிக் கொண்டிருக்கும். சிலவேளைகளிலே குடும்பத்தினாற் கிடைக்கப் பெறாத உளவியற் பாதுகாப் பும் உற்சாகமும் பாடசாலை நட்புமை மையாற் கிடைக்கப் பெறுவதாக கூறப்படுகின்றது.

மேலும் பாடசாலையில் நிகழும் ஆசிரியர் மாணவர் இடைவினைகள் சமூகமயமாக்கலையும் சமூக உணர்வை யும் முன்னெடுக்கும் விசைகளாகத் தொழிற்படுகின்றன. வீட்டிலிருந்து ஆரம்பிக்கும் சமூகமயமாக்கல் செயற்பாடு ஆசிரியரிடம் கையளிக்கப் படுகின்றது. தாயின் கரங்களும் தந்தையின் கரங்களும் தழுவிய சிறார்கள் ஆசிரியர்களின் கரங்களுக்கு ஒப்படை க்கப்படுகின்றனர். வேறு விதமான ஆற்றுகைகளை மேற்கொள்ளும் ஆசிரியர் குடும்பம் மேற்கொள்ளாது விடும் சமூக மயமாக்கற் செயற்பாட்டு இடைவெளிகளை நிறைவு செய்ய முயற்சிக்கின்றனர். ஆசிரிய மாணவர்கள் இடை வினைகள் மூலமாக சமூகமயமா க்கலுக்குரிய தளம் படிப்படியாக கட்டியெழுப்பப்படுகின்றது. ஆசிரிய மாணவர் இடைவினைகளுக்கும் சமூக மயமாக்கலுக்கு மிடையே நேர்த்தொ டர்புகள் காணப்படுகின்றன. அதாவது கூடுதலான இடைவினைகளுக்கு உட்படும் மாணவர்கள் கூடிய சமூகம யமாக்கற் பண்புடையோராயிருத்தல் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறாக பாடசாலைகள் தமக்குரிய கலைத்திட்டச் செயற் பாடுகள் வழியாகவும் இணைந்த கலைத் திட்ட நடவடிக்கைகள் வழியாகவும் மறைக் கலைத்திட்ட தொழிற்பாடுகள் வாயிலாகவும் மாணவர்களை பல்வேறு பரிமாணங்களில் சமூகவியலாளராக ஆற்றுப்படுத்துகின்றன. மாணவர்க ளிடத்தில் சமூகத்துக்கு முரணாக நடத்தைகள் காணப்படுமிடத்து அவர்கள் படிக்கும் பாடசாலைகள் மீதே குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. மாணவர்களின் கல்விஅடைவுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய பாடசா லைகள் சமூக மயமாக்கற் செயற்பாடு களுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. எனவே சமூக மயமாக்கல் செயற்பாட்டில் பாடசாலைகளின் பணி அளப்பரியது


உசாத்துணை நூல்கள்:

பேராசிரியர் சபா ஜெயராசா
- கல்விச் சமூகவியல்

உலகநாதர் நவரட்ணம்
- கல்வி உளவியல்

அ.றொபின்சன்
- கல்வியின் சமூக அடிப்படைகள்



திருமதி.ராஜினி கிருஸ்ணமூர்த்தி
ஆசிரியர்
யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

## கவின்கலை மன்றம்



## கணிதவிஞ்ஞான மன்றம்



## சமூகவியல் மன்றம்



# அருணாசல அன்னையை தேசியத்தில் தடம் பதிக்க வைத்த விளையாட்டுத்துறை

நூற்றாண்டு விழாக்காணும் அறிவாலயமாம் யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமானது அளவெட்டி வாழ் மக்களுக்கு அருணாசல உடையாரால் வழங்கப்பட்ட அருங்கொடையாகும். ஓலைக் கொட்டகையில் உருவாக்கப்பட்ட இப் பாடசாலை யானது இன்று தேசியத்தில் தடம் பதித்துள்ளது என்றால் அதற்கு இப் பாடசாலையின் விளையாட்டுத்துறையே காரணமாகும். தடகளப் போட்டிகளாயினும் சரி பெரு விளையாட்டுக்களாயினும் சரி ஏனைய பாடசாலைகளுக்கு நாம் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்துக் காட்டியுள்ளனர் அருணாசல அன்னையின் பிள்ளைகள்.

இவ்வாறான விளையாட்டுத் துறையின் வளர்ச்சி பற்றி நோக்குவோமாயின் முதன் முதலாக 2002ஆம் ஆண்டு செல்வன் அ.கோபி 17வயதுப் பிரிவில் உயரம் பாய்தல் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று அருணாசல அன்னையின் பெயரை வெளியே கொண்டு வந்தார்.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில் எமது பாடசாலை மாணவர்கள் தடகளப் போட்டிகளில் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட, மாகாணமட்டங்களில் வெற்றியீட்டி தேசியப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர். 2005ஆம் ஆண்டு செல்வன்.ர.நிருஜன் 13 வயதில் பிரிவில் நீளம் பாய்தலில் மாவட்ட மட்டத்தில் 1ஆம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தார். இவர் 2007ஆம் ஆண்டு 15 வயதுப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் உயரம் பாய்தலில் 3ஆம் இடம், 110 m சட்டவேலி ஓட்டம் 1ஆம் இடம் நீளம் பாய்தல், 2ஆம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டியிலும் கலந்து கொண்டார். 2008 இல் செல்வன் பெ.கஜயமுகன் 15 வயதுப் பிரிவில் 110 M சட்டவேலி ஓட்டத்தில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டிகளுக்கும் தெரிவாகி யிருந்தார். 2009 இல் செல்வன். சி.சிவதனுசன் 15 வயதுப் பிரிவில் குண்டெறிதலில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் 1ஆம் இடமும் மாகாணமட்டத்தில் 2ஆம் இடமும் பெற்று தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டமை யானது பாடசாலையின் தடகளப் போட்டி வரலாற்றின் உயர்சாதனையாகும் அத்துடன் 2009 இல் செல்வன் ர.நிருஜன் 17 வயது உயரம் பாய்தலில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டதுடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்ற தகுதி பெற்றிருந்தார்.

தடகளப் போட்டிகளில் இவ்வாறு சாதனைகள் பல படைத்துவரும் எமது

பாடசாலை விளையாட்டுத்துறை யானது பெருவிளையாட்டுக்களிலும் தனியான ஓர் இடத்தைப் பெற்று மிளிர்கிறது.

2005 இல் 14 வயதுப்பிரிவு உதை பந்தாட்ட அணியானது கோட்ட மட்டத்தில் 3ஆம் இடம் பெற்று கால்பதித்தது 2006இல் வயதுப் பிரிவு உதைப்பந்தாட்ட அணி கோட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக் உயர்வு பெற்றுடன் 2007லும் 15 வயதுப்பிரிவு உதைப்பந்தாட்ட அணி கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அடுத்து தேசிய மட்டத்தில் பெயர் விளங்க வைத்த எமது பாடசாலை கரப் பந்தாட்ட அணியின் வளர்ச்சிப் படிகளை நோக்கின் 2006 இல் முதன்முதலாக கோட்ட மட்டப் போட்டிகளில் கரப்பந்தாட்ட அணி கலந்து கொண்டாலும் அப்போட்டி களில் தோல்வியையே தழுவிக் கொண்டது. தோல்வியை வெற்றியின் முதற்படியாகக் கொண்டு கடும் பயிற்சியும் விடா முயற்சியும் எடுத்து 2007 இல் அதே அணி கோட்ட, வலய மட்டங்களில் 1ஆம் இடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி காலிறுதி வரை முன்னேறியது. இதனை ஒரு உந்துதலாகக் கொண்டு செயற்பட்டு 2008 இல் 3 அணிகள் களமிறங்கி அவற்றுள் 15 வயது ஆண், பெண் இரு அணிகளும் கோட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றுதுடன் க.தனுரதன் தலைமை யிலான 17 வயது கரப்பந்தாட்ட அணி முறையே கோட்டம் 1ஆம் இடம் வலயம் 2ஆம் இடம், மாவட்டம் 1ஆம் மாகாணம் . 3ஆம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டு முதன்முதலாக தேசியத்தில் தடம் பதித்து சாதனை படைத்தது. இவ் வேளையில் மாணவர்களது ஆர்வமும் பெற்றோர் ஒத்துழைப்பும் அதிபரின் ஊக்கமும் ஆசிரியரின் பங்களிப்பும் உந்து சக்தியாக அமைய 2009 இலும் 3 அணிகள் களமிறங்கி ர.நிருஜன் தலைமையிலான 17 வயது ஆண்கள் அணி கோட்டம் 3ஆம் இடம், வலயம் 2ஆம் இடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்ட வேளையில் த.ரஷிந்தன் தலைமை யிலான 15 வயது ஆண்கள் அணி, அ.சயிதா தலைமையிலான 15 வயது பெண்கள் அணி ஆகிய இரு அணிகளும் கோட்டம் 1ஆம் இடம், வலயம், 2ஆம் இடம், மாவட்டம் 1ஆம் இடம் மாகாணம், 2ஆம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டன இதில் 15 வயது பெண்கள் அணி தேசிய மட்டம் போட்டிகளில் கால் இறுதி வரை முன்னேறியதும் குறிப்பிடத்தக்கது.

நூற்றாண்டு விழாக்காணும் 2010 இல் எமது பாடசாலையின் கரப்பந்தாட்ட வளர்ச்சிப்படியாக 15 வயது ஆண், பெண் அணிகள், 17 வயது ஆண், பெண் அணிகள் ஆகிய 4 அணிகள் களமிறங்கின, இவற்றினுள் ர.லோஜன் தலைமையிலான 15 வயது ஆண்கள் அணி கோட்ட வலய மட்டங்களில் 1ஆம் இடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றியது. 17 வயது ஆண்கள் அணி கோட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்று வலய மட்டப் போட்டிகளில் பங்குபெற்றியது செ.லக்ஷ்மி தலைமையிலான 15 வயது

பெண்கள் அணி அ.கவிலா தலைமை யிலான 17 வயதுப் பெண்கள் அணி ஆகிய இரண்டு அணிகளும் கோட்டம் 1ஆம் இடம் வலயம் 2ஆம் இடம், மாவட்டம் 2ஆம் இடம் பெற்று மாகாணமட்டப் போட்டிகளில் 15 வயது பெண்கள் அணி 3ஆம் இடத்தைப் பெற்ற அதே வேளை 17 வயதுப் பெண்கள் அணி மாகாண மட்டத்தில் 1ஆம் இடம்பெற்று பாடசாலை கரப்பந்தாட்ட அணி வரலாற்றில் முதல் தடவையாக மாகாணச்சம்பியனாகி சாதனை படைத்துள்ளது இது எமது பாடசாலை பெருவிளையாட்டு வரலாற்றின் உயர்சாதனை ஆகும். தொடர்ந்து நடைபெற உள்ள தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இவ்வணிகள் அப் போட்டிகளிலும் சாதனை படைக்க வேண்டும் என்பதே அனைவரதும் அவா.

DSI அனுசரணையுடன் நடைபெற்ற மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட 16 வயது ஆண்கள், 14 வயது ஆண்கள் அணிகள் 2ஆம் இடத்தையும் 16 வயதுப் பெண்கள் அணி 1ஆம் இடத்தையும் பெற்று 3 அணிகளும் தேவசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளமை மகிழ்வைத் தருகிறது.

இவ்வளவுக்கும் எமது பாடசாலை யானது மைதானவசதியோ விளை யாட்டு உபகரணங்களோ போதியளவு இல்லாத போதும் ஏனைய பாடசாலை களின் ஒத்துழைப்பும் அதிபர் ஆசிரியரதும் மாணவர் பெற்றோர்க ளதும் பங்களிப்பும் பழைய மாணவரது ஊக்குவிப்பும் இவ்வெற்றிகளுக் கெல்லாம் உந்து சக்தியாக அமைந்தன. அத்துடன் வலிகாமம் வலய உடற்கல்விப் பணிப்பாளர் திரு.மு. நடராஜா அவர்களும் உடற்கல்விப் பாட ஆசிரிய ஆலோசகர் திரு.க.சிவராசா அவர்களும் அவ்வப்போது வழங்கிய அறிவுரைகள், ஆலோசனைகளும், உந்து சக்தியாக அமைந்ததுடன் உடற்கல்விப் பணிப்பாளர் திரு.மு.நடராஜா அவர்கள் கரப்பந்தாட்ட அணிக்கான சீருடை யைத் தந்துதவியமை, பழைய மாணவன் வே.துஷ்யந்தன் கரப்பந்தாட்ட அணிக் கான சீருடை வழங்கி உதவியமை அளவெட்டி மக்கள் சங்கம் கனடா, கிளையினர் இவ்வாண்டு மாகாணமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்களுக்கான பாதணிகள் வாங்குவதற்கு ரூ 30000 ஐ அன்பளிப்பு செய்தமை புத்தூக்கமாக அமைந்தது. இதன் மூலம் நம்பிக்கையை ஆயுதமாக கொண்டு சாதனை படைக்க முடிந்தது. இன்று இவ்வணிகளின் சாதனை அறிந்து பல வழிகளிலும் உதவி வழங்க பலர் முன்வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறு வெற்றிநடை போடும் எமது விளையாட்டுத்துறையானது இனி வரும் காலங்களிலும் சகல போட்டிகளிலும் தடம் பதித்து அருணாசல அன்னையின் பேரையும் புகழையும் உலகளாவிய ரீதியில் பரப்பும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை யாகும்.

திரு. சிவகுமார். திருமாவளவன்
உடற்கல்வி ஆசிரியர்.

# வெற்றியை நோக்கி

மனித வாழ்க்கையில் வறுமை செல்வம் என்பதும் இன்பதுன்பம் என்பதும் இரண்டு சக்கரங்கள் மாதிரி யனவை வண்டி ஓடுவதற்கு இரண்டு சக்கரங்கள் தேவை வாழ்க்கையில் தொடர்ந்து வரும் வெற்றிகளோ அல்லது தொடர்ந்து வரும் தோல்விகளோ நிலையானவையல்ல அது போலவே தான் வாழ்க்கையில் ஏற்படும் வறுமை ஒன்றும் கொடியதும் இல்லை.

வறுமையை நாம் எவ்வாறு எடுத்துக் கொள்கின்றோம் என்பதில் தான் வெற்றி தங்கியுள்ளது. வறுமையிலும் ஒரு அழகு உண்டு தெளிவு உண்டு மகிழ்ச்சி , அமைதி நிம்மதி என்பனவும் உண்டு. ஒவ்வொரு நாளும் வறுமையை நினை த்து அதை வெல்லப் போராடி முன்னேறும் பக்குவம் ஒன்று இருக்கின்றதே அது தான் வாழ்க்கை இதனைத்தான் கவிஞர் கண்ணதாசனும்

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் "

என்று வாழ்க்கையின் தத்துவத்தை பாடலில் காட்டிச் சென்றிருக்கிறார். வறுமை எப்போது அதிக்கமடைகிறது என்றால் அதனையே சாட்டாக வைத்து உழைக்காது, படிக்காது, சிந்திக்காது விடும் போது எம்மை நாமே அழித்துக் கொள்கிறோம்.

வறுமைக்குப் பயந்தவன் வாழ்வ தில்லை ,வறுமையை, பசியைக் காணாத வன் முன்னேறியதுமில்லை. குப்பி விளக்கிலும், குடிசையிலும் வாழ்ந்தவன் கோபுரத்தில் வாழவில்லையா? இன்று உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பவர்களதும் அரசநிர்வாக நிறுவனங்களிலும் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருப்பவர்களின் ரிஷிமூலம் நதிமூலங்களை ஆராய்ந்து பார்த்தால் உண்மை புலப்படும். இவர்கள் எல்லோருமே வறுமை என்ற எல்லைக் கோட்டைத் தாண்டி வெற்றி பெற்றவர்களே.

தெருவிளக்கில் படித்த ஆபிரகாம் லிங்கனும், பத்திரிகை விற்றும் புளியங்கொட்டை விற்றும் தன் குடும்பத்தின் வறுமையைப் போக்கிய அறிவியல் மேதை அப்துல்கலாமும் நாட்டின் ஜனாதிபதிகளாக வரவில் லையா? இவர்களது வாழ்க்கை எமக்கு நல்லதொரு உதாரணம் நீங்கள் எல்லா வசதிகளையும் கொண்டவர்கள் ஆளுமை மிக்கவர்கள் புத்திசாலிகள் உங்களிடம் குடிகொண்டுள்ள ஆக்க சக்தியினை வெளிக்கொண்டு வாருங்கள் விரைவில் முன்னேறி விடுவீர்கள் ! உங்கள் வறுமை உங்கள் உயர்வுக்குத் தடையல்ல அது ஏணிப்படிகள். அது உள்ளபோதே ஏறிவிடுங்கள் நிச்சயம் உயர்வை அடைந்து விடுவீர்கள்.

"வறுமைக்குப் பயந்தவன் வாழ் வதில்லை"

**திருமதி.ஜீ.சிறிதரன்**
**ஆசிரியர்.**

# தேசிய மட்டத்தில் தடம் பதித்த கரப்பந்தாட்ட அணிகள்

2008 (17 வயது ஆண்கள்)



2009 (15 வயது ஆண்கள்)




2009 (15 வயது பெண்கள்)



2005 ஆண்டில் உதைபந்தாட்ட அணி (13 வயது ஆண்கள்)



# சுடர்விடும் அருணாசலம்

ஒளிமயமான எதிர்காலம் – எம்
கண்களில் தெரிகிறது
ஓங்கியே ஒலிக்கும் ஒற்றுமைக் கீதம்
ஒல்லையில் கேட்கிறது.

இருள் சூழ்ந்த இந் நிலத்தின்
இருளகற்றி ஒளிகாணப்
பிறந்த நாவலனாம்
பெருந்தகையைப் பின்பற்றி
நந்நிலமும் அவ்வழியே
நலங்காண வேண்டுமென
சிந்தைக் கினிய தமிழ்
மொழியறிவு வேண்டியுமே
சீருடைய பேராளர்
அளவை நகர் தந்த
அருணாசல உடையார்
அகமகிழ்ந்து சைவ விளக்(கு)
ஏற்றி நலம் காண்பதற்கு
வைத்த தொரு கல்விக்
கலைக் கூடம் இதுவென்று
சொல்வதிலே பெருமகிழ்வு
கொண்டோம் நாமிங்கு

அந்நியர்கள் தம் வழியை
அடியொற்றி ஆங்கிலத்தில்
சீர்பரவ எம் வள்ளல்
சிந்தையிலே உதித்த தொரு
அருணோதயம் விளங்க
சீருடையார் எம் தமிழின்
சிந்தை மிகு குளிர

"வித்தை பல கல்லெனும்"
மகுடம் முன்னிறுத்தி
அருணாசல உடையார்
ஆக்கி வைத்த கலைக் கூடம்
இதுவென்று பாடுவதில்
இறும்பூது எய்துகின்றோம் – நாம்
இறும்பூது எய்துகின்றோம்

முன் எங்கள் முது தமிழர்
தந்நிலை மனங்கொண்டு
ஆயிரத்துத் தொளாயிரத்துப்
பத்தினிலே படிப்பதற்கு
அருங்கொடையாய் வேண்டுமென
எண்ணியதால் எம்முடையார்
எழிலோலைக் குடில் நிறுவி
அவ்வாண்டிற் தந்ததுவே
அரிய கலைக் கோவிலிது
அரசிதன் கல்விக்கு
ஆகும் வழி காட்டியதால்
ஆண்டு பதினாறதனிலே
அரச நன்கொடை வழங்கும்
திறம் பெற்ற அன்னை
நாகபூஷணி வித்தி
யாலயமாய் திகழ்ந்து பின்
ஆண்டு முப்பத் தொன்பதிலே
சிவசுப்பிரமணிய சீராளக் கல்வி
அதிகாரி தன் திறத்தால்
அருணாசல உடையார் ஆக்கி
வைத்த கலையகத்தை
அவர் பெயரால் அழைப்பதுவே
திறமை மிகு திறமை யெனத்
தினம் தினமும் சிந்தித்து
வந்துதித்த பேறதனால்
அருணாசல வித்தியாலயம்
ஆகியது இக்கலையகமே

சிறு குழந்தை வடிவினிலே
கால் கோள் இட்டிடவே
ஆண்டைந்து வரையிருந்த
இப்பாடசாலையுமே
மெல்ல எழுந்து நடை
மேதினியில் இட்டு வர
கனிஷ்ட பாடசாலையெனும்
தகுதி பெற்றதுமே

பின்னும் இவள் வளர்ச்சி
மேன்மையுறக் கண்டதால்
அருணாசல உடையார்
அன்பு மகன் சுப்பையா
தன் முயற்சித் திறத்தாலே
தந்ததொரு மண்டபமாம்
இரத்தினவேல் மண்டபம்
இனிமையுற அமைந்ததுவே

அவ்வளவில் மிகு சிறந்து
அரிய கல்வி ஞானமதை
ஓங்கி ஒளிர வைத்த
உத்தமியாள் நிலையறிந்து
அறுபதிலே அரசு தன்
சுவீகாரப் புத்திரியாய்
எம்மன்னை தானானாள்
எழிலுவகை மிகு பெற்றாள்
அன்றும் அதன் பின்னும்
மேன்மை எழுச்சியுற

எழுபத்தி யொன்பதிலே
எம் மன்னை முகங்கமழ
கந்தையா சுப்பையா
சிவசுப்பிர மணியமவர்
திருப்பெயரால் ஆகிய
மண்டபங்கள் மின்னலிட
மாட்சி பெற்றாள் எம்மன்னை

இவ்விதமே நடை பயின்றாள்
இனிய கல்வித் தேன் சுரந்தாள்
ஔவியமே இன்று வளர்
அறிவாரப் பரிசளித்தாள்
இன்னும் இனிமை பெற்று
உயர்வடையத் திடங்
கொண்டாள் எம் மன்னை

இனிய பல அதிபர்
இங்கு வந்து பணியாற்ற
இரண்டாயிரத்து இரண்டினிலே
இனிய ஜெக நாதனெனும்
நல்லதிபர் துணைக் கொண்டார்
தற்றுணிவு தயாள சிந்தை
விடா முயற்சி விருப்புடைய
அதிபரவர்

இல்லறத்தில் நல்லறத்தில்
நாப்பிறளா நாணயமவர்
சொல்லறத்தில் சோரம் போகா
சிந்தனையாளரவர்
இவர் சிந்தை உயர்வாலே
இங்கித மாய் வளர்கிறாள்
இவள் வளர்ச்சி கண்டு
களிப்புறு வோம் நாமெல்லாம்.

சி.பேரினியாள்

# பரதக்கலை

இலங்கையிலே பழைய காலந் தொட்டு நுண்கலைகள் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. இங்கு வாழும் மக்களிடையே சிற்பக் கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை முதலியன நன்கு வளர்ச்சியுற்றாலும் இசை நடனம் குறிப்பாக சாஸ்திரீய இசை, நடனம் ஆகியன ஆதிகாலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தமைக்கு தக்க சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் பௌராணிக மரபின்படி இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக் கொடியோன் எனவும் கூறப்படுகிறது. அவன் சாமகானம் பாடி சிவபெருமானின் திருவருள் பெற்றான் எனவும் கூறப்படுகிறது. இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம் என்ற பெயரே யாழ்பாடி தொடர்பால் ஏற்பட்டது என்பர். மட்டக்களப்பில் உள்ள பாடு மீன்களின் இசை குறிப் பிடத்தக்கது. இவை ஜாதீகஸ்களாயி னும் இலங்கைத் தமிழ் மக்களிடையே தொன்மையாகவே சாஸ்திரீய இசை நிலவிவந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்க ளிலே நிலவி வரும் வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்து மரபுகளும் குறிப்பிடத்தக்கவை.

கி.பி 11ம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி 16ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் நிலவிய பொலநறுவை, யாப்பகூவ, கம்பளை, டெடிகம, கோட்டை அரசுகளிலே நிலவிய சாஸ்திரீய நடனம் பரதமாய் இருந்திருக்கலாம் எனப்பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனைச் சில சிற்பங்களில் உள்ள நடன உருவங்களும் சர்வதேச தூது இலக்கியங்களும் எடுத்துக் காட்டுக்கின்றன.

யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்து வந்த தமிழ் மன்னர் பரதக்கலையை ஆதரித்து வளர்ந்து வந்தனர். இக் காலத்தில் எழுதப்பட்ட வையாபாடல், கைலாயமாலை போன்ற நூல்களில் நடனம் பற்றிய சில குறிப்புக்கள் உண்டு. யாழ்ப்பாணத்தில் இருந்து பெரிய கோயில்களில் தேவரடியார், சமயப்ப ணிகளும், கலைப்பணிகளும் செய்திருக் கின்றனர். என எண்ணுவதற்கு இடம் உண்டு. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே குறிப் பிட்டவாறு நடனக்கலை ஆதரவின்றி மங்கியது. அடுத்துவந்த பிரித்தானிய காலத்தில் அது மீண்டும் தலை தூக்கியது. சமகால தமிழகத்தைப் போன்று இங்கு தேவதாசிகள் ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்ந்து வந்தனர். இதனால் ஆறுமுகநாவலர் போன்றோர் இக்கலையை கண்டித்தனர். தமிழ் நாட்டிலிருந்து தேவதாசிகள் சிலர் வணிகர்களினாலும் தரகர்களினாலும் இங்கு கொண்டுவரப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

கி. பி. 19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் கனகி எனும் தேவதாசி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஒரு நர்த்தகியாக விளங்கி

னார். இவரைப் பற்றி சுப்பையனார் எனும் புலவர் கனகி புராணம் எனும் சங்கத் இலக்கியம் ஒன்றைப் பாடியுள்ளார். 20ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் பரதக்கலையின் மறுமலர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி யவர்களில் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியும் ஒருவராவார். இவர் நடன மாணவர்கள் கற்க வேண்டிய நந்திகேஸ்வரர் இயற்றிய அபிநய தர்ப்பணம் எனும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1917இல் நியூ யோர்க்கில் வெளியிட்டார். இதனால் பிற நாட்டில் வரும் இந்திய நடனக் கலையின் சிறப்பினை அறியவும் கற்கவும் தூண்டினார்.

1940இல் கதகளி கலைஞரான கோபிநாத் பரத நாட்டிய மேதை பந்தனை நல்லூர் விஜயலட்சுமி முதலியோர் யாழ்ப்பாணத்திலும் நடனக் கச்சேரியினை நடாத்தினார். 1947இல் தேவதாசிச் சட்டம் தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தேவதாசிகள் கோயில்களில் நடனம் ஆடுவது தடைசெய்யப் பட்டது. இதன் விளைவாக கோயில்க ளில் இடம் பெற்றுவந்த கதிர் பரத நாட்டியம் பொது மன்றங்களிலும் வேறு மேடைகளிலும் இடம் பெறலாயிற்று. தமிழ் நாட்டில் காணப்பட்ட இப்போக்கு இலங்கையிலும் ஏற்பட லாயிற்று. இலங்கையின் பரதக் கலையின் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தோர்களில் திரு. ஏரம்பு சுப்பையா, திரு. M.S. பரம், கலைப்புலவர் நவரத்தினம், திரு. M. கைலாயபிள்ளை, திருமதி. மகேஸ்வரிநவரத்தினம், திரு. தொம்மக்குட்டி, வீரமணிஐயர் , வீர கத்தி, இராசநாயகம், கலையரசு சொர்ண லிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள்.

பரதக்கலையானது ஒவ்வொரு தனிமனிதனையும் ஆன்மீக வழிக்கு இட்டுச் செல்கிறது. பல்துறைக் கலைகளின் இருப்பிடமாகிய நடராஜ வடிவத்தின் புறத்தோற்றமே பரதக் கலையின் புனிதத் தன்மையைச் சுட்டி நிற்கிறது. ஆன்மீக உணர்வு அற்றவன், பொய், களவு முதலான பஞ்சமா பாதங்களையும், செய்வதற்குப் பின் நிற்க மாட்டான். எனவே சிறந்த தெய்வீக உணர்வுள்ள சிந்தனையாளர்களை உருவாக்க வேண்டுமாயின் பரதக் கல்வியானது. ஓரளவேனும் குழந்தை களுக்கு புகட்டப்படல் வேண்டும். அத்துடன் பெரியோருக்கு கீழ்படிதல் குருபக்தி பணிவு அடக்கம் முதலான நற்பண்புகளையும் பரதக்கல்வி கொடுக்கின்றது. பரதக் கலையானது தெய்வீக நிழலிலே மனிதன் தோன்றுவதற்கு முன்பே சிறப்புற்று நிற்கின்றதெனில் அது கொண்டுள்ள சிறப்பியல்பே ஆகும். யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய இடங்களில் தனியார் கலைஞர் நிலையங்களிலும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கலை நிறுவனங்களிலும் பரதக்கலை இன்று போதிக்கப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இராமநாதன் நுண்கலைக்கல்லூரி, வடஇலங்கை சங்கீதசபை, மட்டக்க ளப்பு விபுலானந்த இசை நடனக்கல்லூரி கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுடன் பாடசாலைகளிலும் நடனம் ஒரு பாடமாக ஆரம்ப, இடை நிலை உயர் நிலை மட்டங்க ளிலும் கற்பிக்கப்படுகிறது.

திருமதி. வா. மதனகுமார்
ஆசிரியர்
(யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

# 2010 பாடசாலையின் கரப்பந்தாட்ட அணிகள்

2010 மாகாண மட்டச் சம்பியன் (17 வயது பெண்கள்)



2010 மாகாண மட்டத்தில் 3ஆம் இடம் (15 வயது பெண்கள்)



2010 வலயமட்டத்தில் 2ஆம் இடம் (17 வயது ஆண்கள்)



2010 மாவட்ட மட்ட DSI போட்டியில் 2ஆம் இடம் (15 வயது ஆண்கள்)



# Develop web Sites using Multimedia Technology

Communication means exchange of information among people. Because of the advances in the technology today, we can use characters, words, images, sound, animation and videos for our exchange of information. Today, the relationship between computers and Communication provides us with great opportunity to enhance media technology with parallel development in the internet technology. These development's have provided as the concept of Global village which indicates that the societies in the world are no longer distant communities. The computers which were used for data processing few decades ago have now become the major navigator of multimedia techno logy.

What is multimedia? The simple definition of multimedia can be given as a collection of various different media. These media can be newspapers, magazines television, radio, etc when multimedia technology is defined in the context of computers that would be a collection of text, words, data, images graphics, sound, animation and videos which facilitates the exchange of information.

Today we can see multimedia based information on the Internet using the web technology invasions different fields such as engineering medical, entertainment, education, advertisement, digital arts and also in scientific research activities. In the E-Learning process which is now used in education and in computer based encyclopedia, the web based multimedia technology plays a leading role. In such applications, the information presented invarious forms such as text, sound images, 2D or 3D diagrams and additional detailed information are presented as animation and videos. In some applications the pronunciation of a language, music or sound of a bird can be presented as sounds.

Suppose you want to send a message to a friend in another country if you can send that message as a sound using your own voice as an e-mail or include that in a web page, then your friend will be happy. This will enable to reduce the distant natural between you and your friend. Then you have used multimedia technology to increase your relationship without notice. The satisfaction you gained through that is in very high level. What do you understand from this simple example? you may realize the combination of computer technology, Communication technology and multimedia technology has brought the communities and family members much closer.

**Mrs. Pakeerathy Rasendran**
**Teacher**
**J/ Alaveddy Arunasalam Vid.**

* THE GREAT END OF LIFE IS NOT KNOWLEDGE BUT ACTION

- THOMAS H.HUXLEY

* EDUCATION IS THE MOST POWERFUL WEAPON WHICH YOU CAN USE TO CHANGE THE WORLD.

-NELSON MANDELA

* GOOD THINGS , WHEN SHORT , ARE TWICE AS GOOD.

- GRACIAN

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



இருப்பவர்கள் இடமிருந்து :
திருமதி.ஜீ.சிறிதரன், திருமதி.அ.குமாரானந்தன், திருமதி.சா.ஸ்ரீலவன், திரு.கு.ஜெகநாதன் (தலைவர்) திரு.ச.நித்தியானந்தம் (பொருளாளர்)
திரு.இ.ஏரம்பமூர்த்தி (செயலாளர்), திருமதி.அ.இராமச்சந்திரன்.

நிற்பவர்கள் இடமிருந்து : திருமதி.சு.ரவிச்சந்திரன், திருமதி.த.சிவஜனந்தன், திருமதி.சு.மகேந்திரம், திருமதி.சி.நித்தியானந்தம், திருமதி.த.செல்வராசா, திருமதி.சி.தெய்வேந்திரம், திருமதி.கௌ.நாகபிறேமன், செல்வி.சி.சுகந்தகுமாரி

## பாடசாலை அபிவிருத்திக் குழு



இருப்பவர்கள் இடமிருந்து :
செல்வி.சி.சுகந்தகுமாரி (பொருளாளர்) திருமதி.சா.சிறிலவன், திரு.கு.ஜெகநாதன் (தலைவர்) , திரு.ச.நித்தியானந்தம் , திரு.க.சத்திவேல் (செயலாளர்)

நிற்பவர்கள் இடமிருந்து : செல்வி.சி.ஜஜிதா, திருமதி.சு.ரவிச்சந்திரன், திரு.வை.ராஜ்குமார், திரு.க.குகரதன்.

## பழைய மாணவர் சங்கம்



இருப்பவர்கள் இடமிருந்து :
திருமதி.க.சிவதரன், திரு.க.குகரதன், திரு.கு.ஜெகநாதன் (தலைவர்), திரு.ச.நித்தியானந்தம் (பொருளாளர்) , திரு.வை.ராஜ்குமார், திருமதி.கௌ.நாகபிறேமன்,

நிற்பவர்கள் இடமிருந்து :செல்வி.ர.விஜித்தா, செல்வி.க.லட்சிகா, செல்வி.த.சிவாஜினி, செல்வி.இ.கவிதா (செயலாளர்) , செல்வி.சி.ஜஜிதா.

# எண்ணங்கள்

நமது வாழ்வில் நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அவ்வாறு சிந்தித்து, திட்டமிட்டு செயற்படுவதன் மூலமே எமது வாழ்வில் நாம் முன்னேற்றம் காணமுடியும். சிந்திக்காமல் எதையும் செய்துவிட முடியாது. அப்படிச் செய்யும் காரியம் எதுவும் வெற்றி பெற்றதுமில்லை. சிந்தனைக்கென தனிச் சிறப்புண்டு. எமது எண்ணங்கள், சிந்தனைகள் தான் எம்மை வாழ்வின் உச்சிக்கு கொண்டு செல்கின்றன. "எண்ணுவது உயர்வு" எனும் முதுமொழி எம்மை உயர்வாகச் சிந்திக்கச் சொல்கின்றது. எமது சிந்தனை உயர்வானதாக இருந்தால் நிச்சயம் ஓர் நாள் நாம் எமது இலக்கை அடைய முடியும். சிந்திப்பதற்கு செலவெதுவுமில்லை. எனவே எமது சிந்தனை உயர்வாக இருப்பதால் எமக்கு நஷ்டமெதுவும் ஏற்படப் போவதில்லை. சிந்தனை வலுப்பெற வலுப்பெற எமக்கு வெற்றியே கிட்டும்.

உளவியல் அறிஞரின் கருத்துப்படி "ஒருவன் எதுவாக ஆக நினைக்கின்றானோ அவன் அதுவாகவே ஆகின்றான்." எனவே எமது வாழ்க்கையில் நாம் எதைச் சாதிக்க நினைக்கின்றோமோ அதனையே நாம் தினமும் சிந்திக்க வேண்டும். நாளடைவில் நாம் அதுவாகவே ஆகிவிட முடியும். சிந்தனையே வாழ்க்கையின் மூலதனம். அதனைக்கொண்டே நாம் மாபெரும் உயர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். தீய குணமுள்ள ஒருவனைக் கூட நல்லவனாக ஆக்க முடியும். "நீ நல்ல குணமுள்ளவன், நீ நல்லவனாக வருவாய், உன்னை ஒரு நாள் எல்லோரும் மெச்சுவார்கள், உன்னைப் போல திறமையாளனாக ஒருவரும் இருக்க முடியாது. போன்ற வார்த்தைகளை தினமும் அவனுக்குச் சொல்லுவதன் மூலம் அவனது சிந்தனையிலும் நடத்தையிலும் மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். நாளுக்கு நாள் அவனது சிந்தனையில் நல்லெண்ணங்கள் தோன்றி அவை அவனது செயற்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

வாழ்க்கையே ஒரு யுத்தகளம். நாம் எல்லாவற்றுக்கும் எதிர் நீச்சல் போடவேண்டும். எம்மைத் தாக்குவதற்காக பக்றீரியாக்கள் முதல் எதிரிகள் வரை தயாராகிக் கொண்டிருப்பார்கள். பக்றீரியாக்களின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாம் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதே போல் எதிரிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த சிந்தனை சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். "எண்ணங்கள் உயர்ந்தால் வாழ்க்கை உயரும் எண்ணங்கள் தாழ்ந்தால் வாழ்க்கை தாழும்" இது தான் நியதி.

கனவு கண்டவர்கள் தான் வாழ்க்கையில் உயர்ந்திருக்கின்றார்கள். நாடு சுதந்திரமடைய வேண்டுமென கனவு கண்ட பல பெரியார்களின் கனவு நனவாகி அவர்களது நாடுகளும் சுதந்திரமடைந்தது வரலாற்று உண்மை. ஆனால் இன்று நம்மில் பலர் கனவு காணவே பயப்படுகின்றோம். எங்கே

எமது கனவு நிறைவேறாமல் போய் விடுமோ என்று. "இப்படியொரு உலகம் இருக்கட்டும்" என இறைவன் எண்ணினார். அப்படியே ஓர் அழகான உலகம் உண்டாயிற்று. நாமும் எமது உலகை எண்ணுவோம். அவ்வுலகை அடைவோம்.

விதி என்பது கூட எண்ணங்கள் தான். "என்னுடைய விதி என்னை இப்படி ஆண்டவன் படைத்து விட்டான்" என நாமே எமது தோற்றத்தை எண்ணிக் கவலைப்படுவது தவறு. எம்மிடமுள்ள தாழ்வுச் சிக்கல்களைக் களைய வேண்டும். குறைகளெல்லாம் குறைகளல்ல. அவற்றை எம் எண்ணங்கள் மூலம் நிறை வானதாக ஆக்க வேண்டும். எண்ணங்கள் ஊடாக எமது குறைபாடுகளை மேம் படுத்த வேண்டும். எம்மால் ஒரு பாரத்தை ஒரே தடவையில் தூக்கிவிட முடியாது. படிப்படியாகப் பாரத் தின்அளவைக் கூட்டிக்கொண்டு போனால் இறுதியில் நாம் மிகப்பெரிய எடையைத்தூக்கக் கூடிய வலிமையைப் பெறமுடியும். அதே போல் எம் எண்ணங்களையும் சிறிது சிறிதாக ஆரம்பித்துப் பெரிய இலக்கை அடைய முடியும்.

எடுத்துக் காட்டாக ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறமுடியும். ஆபிரகாம் லிங்கன் சிறுவனாக இருந்த காலத்தில் அந்நாட்டு ஜனாதிபதியாக இருந்தவர் நடாத்திய கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தார். ஜனாதிபதி தனது உரையில் எதிர்கால இலக்குகள் பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தார். திடீரென ஆபிரகாம்லிங்கனை நோக்கி, "நீ எதிர்காலத்தில் எதுவாக வருவாய்? எனக் கேட்டார். உடனே சிறுவனான ஆபிரகாம் லிங்கன், "இந்நாட்டின் ஜனாதிபதியாக வருவேன்" எனக் கூறினார். உடனே அச்சபையிலிருந்த அனைவரும் கொல்லென்று சிரித்தனர். ஆனால் அச்சிறுவன் சளைத்துப் போகவில்லை. எண்ணங்களை வலுப்படுத்திச் செயலுருப் பெறச்செய்து அந்நாட்டு ஜனாதிபதியாக வந்தான்.

மனதில் தெளிவும் உறுதியும் வேண்டும். நேர் வழியில் சிந்திக்க வேண்டும். நல்லெண்ணம் உடையவர்களுக்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்களுமே நல்ல நாள் தான்.எந்நாளும் கெட்டநாளாக அமையாது. எண்ணங்களை வலிமைப்படுத்து வதன் மூலம் எங்களுக்குள்ளிருந்து ஒளியை ஏற்படுத்த முடியும். " இன்று புதிதாய் பிறந்தோம்", என்று பாரதி சொன்னது ஓர் புதிய எண்ணத்தின் வெளிப்பாடேயாகும். நேற்றோடு செத்தொழிந்ததை எண்ணிக் கொண்டிராமல் நிகழ்காலத்தில் புதிய எண்ணங்களோடு வாழப்பழக வேண்டும். எதிர்காலக் கனவோடு வாழ வேண்டும். கனவானது எமது சிந்தனையில் உதித்து, அதுவே எமது வாழ்வில் வெற்றியாக மலரும். எண்ணங்களை மேன்மையடையச் செய்வதன் மூலம் இயல்பான வெற்றியை அடைய முடியும்.

"சோம்பிப்படுத்தால் படுக்கையே உனக்கு சாக்காடு.
எழுந்து நடந்தால் பூமியே ஒரு பூக்காடு"
எனவே முயலுவோம். முன்னேறுவோம். நல்லதையே எண்ணுவோம், நன்மை பெறுவோம். கனவுகள் எண்ணங்களாக மாறி எண்ணங்கள் செயலுருப் பெறும் போது எமது இலட்சியங்கள் எட்டப் படுகின்றன. வார்த்தை வல்லமையுடையது. எனவே பழையனவற்றை மறந்து புதிய எண்ணங்களுடன் புறப்படுவோம். நாளைய பொழுதை நம்பிக்கையோடு ஆரம்பிப்போம்.

திருமதி .தீபாதேவி ஸ்ரீவன் றஞ்சித்,
ஆசிரியர்.

## சாதனையாளர்கள்

### தரம் 5 புலமைப்பரிசில் சித்திபெற்றோர்



கு.குளோறி கிஷாந்தி
2002 ஆம் ஆண்டு
124 புள்ளிகள்



ர.ஐங்கரன்
2007 ஆம் ஆண்டு
164 புள்ளிகள்



சி.சாலினி
2007 ஆம் ஆண்டு
149 புள்ளிகள்

### விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தோர்



அ.கோபி
2002 இல் 17 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில்
மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம்



ர.நிருஜன்
2007 சட்டவேலி ஓட்டப்போட்டியில்
தேசியமட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்.



சி.சிவதனுசன்
2009 மாகாண மட்டத்தில் 15 வயதுப்
பிரிவு குண்டெறிதல் 2ஆம் இடம்
தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றியுள்ளார்.

# கல்வியும் அதன் சமூக முக்கியத்துவமும்

கல்வியானது நுண்மதியாற்றலையும் திறன்களையும் பண்புகளையும் வளர்க்க வேண்டும். நற்பண்புகளை வளர்ப்பதன் மூலமே வாழ்க்கையின் குறிக்கோளை கல்வியால் பெற்றுக் கொடுக்க முடியும். வாழ்க்கைக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. வாழ்க்கையின் குறிக்கோளை அடையும் வழி கல்வியாகும். கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி இதனையே ஆங்கிலக் கவிவாணர் வில்லியம் வேட்ஸ்வர்த் "மனிதத் தன்மையினை மனிதர் பெறத் துணையாக விளங்குவது கல்வி" என்று கல்விக்கு வரையறை கண்டார். பெரும்பாலான நாடுகளில் கல்வி சமுதாயத் தோற்றத்துடன் அதனை அடிப்படை யாகக் கொண்டே தொடங்கியது. தொடக்க காலக் கல்வி முறையானது சமயக் கோட்பாடு களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டதாகவும், பரம்பரையாகப் பேணிப் பாதுகாப்பதாகவும் அமைந்து விளங்கியது.

"கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச் சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என்பது தொல்காப்பியனார் வாக்கு. மக்களுக்குரிய வாழ்க்கையைக் கொடுக்கும் நான்கினுள் கல்வியும் ஒன்று மனித சமுதாயத்தின் மாற்றத்திற்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் சமூக அசைவுக்கும் கல்வியே சிறந்த கருவி, ஒருவனது வாழ்க்கையில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தி அவனைச் சமூகத்தோடு ஒட்டி வாழவைப்பதும் கல்வியே. இத்தகைய கல்வியின் மேன்மையைப் பற்றி பல தத்துவ ஞானிகள் பல்வேறு கருத்துக்களைத் தத்தம் காலச் சூழலுக்கேற்ப வெளி யிட்டுள்ளனர்.

"உண்மை, நன்மை, அழகு இம் மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" என்கிறார் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ. "உடல், உளம், ஆன்மா போன்றவற்றின் இயற்கைத் தன்மை களை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெறத் தூண்டுவதே கல்வி" என்கிறார் காந்தி அடிகள் கல்வி பற்றி விளக்க மளித்த காந்தி அடிகள் "கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்த தாகவும் அதனைக் குழந்தைகளின் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்பு களை வெளிக்கொணரும் செயல் முறை"யென்றும் விளக்கமளித்தார்.

"பண்பாடுள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்வதற்குக் கல்வியே அடிப்படை" என்று தாகூர் விளக்கினார். கல்வியானது குழந்தைக்கு முழுச் சுதந்திரம் என்ற வழியில் அமைய வேண்டும் என்றும் கல்வி ஆன்மீகத் தொடர்புடைய தென்றும் கருதினார். அத்துடன் கல்விக் கொள்கைகளில் இசை, ஓவியம். நடனம்

ஆகிய நுண்கலைகளின் முக்கியத்துவம் சிறப்பாக அவரால் வலியுறுத்தப் பட்டது. மனித குலத்தின் மேம்பாட்டிற்கான கருவியாகக் கல்வி செயற்பட வேண்டுமென்பதும் மனிதப் பண்புகளெனப்படும் சிறப்புப் பண்பு களை ஒவ்வொருவரும் பெறச் செய்தல் கல்வியின் இலக்காக இருக்க வேண்டுமென்பதும் தாகூரின் கருத்துக்களாகும்.

இம் மனித விழுமியங்கள் மேம் பாட்டையும் விதத்தில் கல்வி அமைய வேண்டும் என்று ஸ்ரீ சத்தியசாயி அவர்கள் கூறுகின்றார். "கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றல் களையும் திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாது அவனது உலக நோக்கை விரிவடையச் செய்ய வேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத் திற்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். அறக்கல்வியும் தெய்வீகக் கல்வியும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வ தற்குரிய பயிற்சியைத்தரும்" என்கின்றார்.

ஆத்மீக ரீதியாகக் கல்வியை நோக்கிய சுவாமி விவேகானந்தர் அவர்கள் "மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிறைவினை (Perfection) மலரச் செய்வது கல்வியாகும்" என்கின்றார். கல்வி என்பதற்கு ஆங்கிலத்தில் வரையறை செய்தவர்கள் "கல்வியைக் குறிக்கும் 'Education" என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் "வெளிக் கொணர்தல்" என்பது எனக் குறிப்பிட்டுள்ளனர். கல்வி எனப்படுவது குழந்தைகளிடம் உள்ளடங்கி இருக்கும் பல்துறை ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொணர உதவும் செயல் முறையாகும். உயர்த்துதல் (To Raise) என்ற கற்பித்தலுக்கும் பொருள் கொள்ளப்படுகின்றது.

கல்விக்கு விளக்கமளிக்கையில் "கல்வி யானது ஆதிகாலந் தொட்டு இன்று வரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றது. "கல்" என்பதன் வினை அடியாகப் பிறந்தது கல்வி என்பர். "எடு" அல்லது " தோண்டு" என்னும் பொருளைக் கொண்டது "கல்" என்னும் சொல். ஒருவனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலைத் தோண்டி வெளிக் கொணர்வதே கல்வியின் இலக்காக அமைதல் வேண்டும்." அந்த வகையில் கல்வி மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவனது வாழ்க்கையை ஒளிபெறச் செய்கின்றது.

கல்வியூடாகவே பண்பாடு வளர்கின்றது. அத்துடன் கல்வியூடாகவே பண்பாடு பண்டைய காலந்தொட்டு பாரம்பரியமாகப் பேணப்பட்டும் வருகின்றது. "கல்வியைத் தன் மூச்சாகக் கொண்டு இயங்கி வருவது எமது சமுதாயம். கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றும் "கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றும் கல்வியை உயர்த்தி மதித்தது தமிழர் பண்பாடு, இம்மை, மறுமை ஆகிய இருமைகளிலும் ஏமாப்புடையதாகக் கல்வி கருதப்பட்டது. தற்போது கல்வியானது மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. முறைமைக் (Formal) கல்வி
2. முறையில் (In - formal) கல்வி
3. முறைசாராக் (Non - formal) கல்வி

முறைமைக் கல்வி என்பது பள்ளி என்ற ஒழுங்குபடுத்துப்பட்ட நிறுவனத்தில் நடைபெறும் கல்வியையும், முறைமையான கலைத் திட்டத்திற் குட்பட்டுப் பயிலப்படும் கல்வியையும் குறிக்கும். இங்கு கற்றல், கற்பித்தல் முறைமைக்குட்பட்டு நடைபெறும். "முறைசார்ந்த கல்வி என்பது ஆரம்பப் பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலான நடைமுறையில் உள்ள கல்வி முறையைக் குறிக்கும். இவ்வாறான கல்வி முறையில் உள்ளடங்கும் ஏனைய முழுநேரத் தொழில்நுட்ப உயர் தொழில் கல்வி நிறுவனங்களும் முறை சார்ந்த கல்வி என்ற பாகுபாட்டில் அடங்குவனவாகும்."

முறையில் கல்வி என்பது பள்ளி சாராத அனைத்துப் பட்டறிவுக் கல்வியையும் குறிப்பிடும். அதாவது சமூக அல்லது தனிப்பட்ட வழமை, மரபு சார்ந்த சமூகத்தின் குணநலன்களாற் பெறப்படும் கல்வியைக் குறிக்கும். "முறையில் கல்வி என்பது ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுவதும் தனது சூழல், குடும்பம், அயலவர்கள், நூல் நிலையம், பொதுத் தொடர்பு சாதனங்கள் என்பவற்றுக்கூடாகப் பெறுகின்ற திறன்கள், உளப்பாங்குகள். வாழ்க்கை என்பவற்றைக் குறிக்கும், அதாவது வாழ்நாள் முழுவதும் பெறுகின்ற அனுபவத்தினூடாகபெறுகின்ற கல்வியே முறையில் கல்வி என அழைக்கப்படுகின்றது.

முறைமை சாராக் கல்வி என்பது "பள்ளி" போன்று ஒழுங்கு படுத்தப் படாத நிறுவனங்கள் மூலம் முறைமைக் குட்படாது பெறப்படும் கல்வியைக் குறிக்கும். "முறைசாராக் கல்வி என்பது நன்கு நிறுவப்பட்டுள்ள முறைசார்ந்த பாடசாலை அமைப்புக்கு அப்பால் இடம்பெறும் ஒழுங்குபடுத்தபட்ட கல்விச் செயற்பாடுகளைக் கருதுகின்றது. முறைசார்ந்த கல்வியின் ஒரு அங்கமாக அமையாத கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் முறைசாராக் கல்வியின் பாற்படும்."இவ்வாறு பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் கல்வியை மூன்று வகைப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் உண்மைத்தன்மை, தெய்வீகப் பண்புகள் நிறைந்த மேன்மைகள் கொண்ட கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. "கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி" என்ற அடிப்படையில் மனித மேம்பாட்டிற்குக்குக் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது. மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கின்றது. சூழலை நன்கறிந்து அதற்கேற்ற விதத்தில் அவன் தன்னை ஆக்கிக் கொள்ள கல்வி உதவுகின்றது. தொடர்ச்சியான உலக வாழ்க்கையில் நீண்ட ஓர் மரபை, பண்பாட்டு விழுமியங்களாக கல்வியே ஒரு தலைமுறையிலிருந்து இன்னோர் தலைமுறைக்குக் கையளித்து வருகின்றது. இந்த அடிப்படையில் கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

சமுதாயத்தில் பண்பாட்டு மரபினைக் கல்வி இளம் தலை முறையினர்க்கு

உணர்த்துகின்றது. புதுக்கருத்துக்கள், புத்தாக்கங்கள் (Innovations) ஆகிய வற்றின் வளர்ச்சிக்குத் தூண்டு தலளிக்கி ன்றது. தொழில் புரிந்து வாழ்க்கை நடாத்துவதற்குப் பயிற்சி அளிக் கின்றது. சமுதாயத்தில் பிறருடன் பொருந்தி வாழத்துணைபுரிகின்றது. பயனுள்ள முறையில் ஓய்வு நேரத்தைக் கழிக்க உதவுகின்றது. ஆன்மீக உணர்வு முழுமை பெறுவதற்கும் கல்வி துணை யாகின்றது. மனித இனம் பல்லாண்டு காலம் முயன்று உருவாக்கிய பண் பாட்டை மங்காமல் பாதுகாத்து அதனை மேலும் சிறப்பாக்க கல்வி உதவு கின்றது. அத்துடன் பல்வேறுபட்ட அறிவுகளைக்கையளித்து நடத்தை முறைகளை மாற்றியமைப்பதுடன் சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டி னைப் பெறவும் உதவுகின்றது. கல்வி ஓர் இலக்கினை அடைய வைப்பதனால் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிக் கோளை உணர வைக்கின்றது. உணர்ந்த குறிக்கோளை அடையும் வழியை கல்வி மூலம் மனிதன் காண்கின்றான். அவற்றைப் பகுப்பாய்வு செய்து நல்லவற்றையும் தீயவற்றையும் கண்டு கொள்கின்றான். நல்லவற்றைத்தான் கடைப்பிடிப்பதோடு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் காட்டி நிற்கின்றான்.

கல்வி மனிதனின் அடிப்படை யாகும். ஒருவன் நல்ல அறிவைப் பெற்றுவிட்டால் அவனது குடும்பம் அதன் செல்வாக்குக்குட்படுகின்றது. "சமூகத்தில் சாதி வேற்றுமை களையும் உடையவர் இல்லாதவர் என்னும் சீர் கேட்டையும் பெரும்பான்மையானோர் வாழ்க் கை வசதியற்றோராயும் சிறு பான்மை யானோர் வசதியுள்ளவராயும் இருக்கும் சிறுமையினையும், கிரா மங்கள் நலிவுற்றுப் போவதையும் கல்வியால் எழுந்த சர்வோதய சமுதாயம் அகற்ற வேண்டும்" எனக் காந்தியடிகள் குறிப்பிடுவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் புலனாகின்றது. பல்வேறுகோணங்களில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர்கள் ஆராய்ந்து கூறி யுள்ளனர். கல்வி என்பது சமுதாயம் அழியாமல் பேணிக் கொள்வ தற்கு வேண்டிய கருவியாகும். கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு, சமூக வாழ்வையும் தொடர்புபடுத்து வதாக உள்ளது. தனியாள் சிறப்புற சமுதாயம் சிறப்புறும் எனவே கல்வி வாழ்க்கை யையும், சமூக முன்னேற்றத் தையும் ஏற்படுத்தக் கூடியது. சமூக முன்னேற்றமே சமூக நிறுவனங்களின் முக்கிய இலக்குக்கும். அச்சமூக முன்னேற்றத்தைக் கல்வி எனும் சாதனமே அளித்து வருகின்ற வகையில் கல்வி முக்கிய மடைகின்றது.

ஒருவனது வாழ்விற்குத் துணை புரிவது தொழில் அத்தொழிலுக்கு அடிப்படையாக அமைவது கல்வியே. தற்காலத்தில் தொழிலை மையமாகக் கொண்ட கல்வியையே மனிதன் நாடுகின்றான். தொழில்நுட்பம், மருத்து வம், பொறியியல், முகாமைத்துவம், கணனி முறைக்குட்பட்ட பாட நெறிகள் என்பவற்றைக் கற்க கல்வி வழிகாட்டு வதுடன் உயர்ந்த வருவாய் தரும் தொழில்களையும் கல்வியின் மூலமே பெற்றுயரமுடிகிறன்றது.நல்ல கல்வி யையும், நல்லதொழிலையும் உடைய வன் சமுதாயத்தில் நல்லதொரு இடத்தைப் பெறுகின்றான். மனிதனு க்குக் கல்வியும், தொழிலும் தற்துணி வைக்கொடுக்கின்றன. வளமான வாழ் விற்கும் இவை உதவுகின்றன. "நோயற்ற

வாழ்வே குறைவற்ற செல்வம்" என் பார்கள். அத்தகைய நோயற்ற வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டுவதும் கல்வியே எனலாம்.

இன்று நமது நாட்டிலே இலவசக் கல்வித் திட்டம் நடைமுறையிலுள்ளது. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கலவியைப் பெறும் வாய்ப்புள்ளது. இதனை அனைவரும் நன்குணர வேண்டும். கற்கும் காலம் பொற்காலம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் காட்ட வேண்டும். சில பெற்றோர் வறுமை, அறியாமை, அலட்சியம் போன்ற காரணங்களால் தமது பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்காலப்பிரஜைகளான சிறுவர்கள் கல்வி பெறும் வாய்ப்பினை இழக்கின்ற னர். வீட்டு வேலைகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும், கூலித் தொழில் களுக்கும் செல்கின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வியின் அருமையை நினைத்து வருந்த வேண்டிய நிலை உருவாகும். பெற்றோர்களின் தவறு பிள்ளைகளின் எதிர்காலத்தையே இருள்மயமாக்கி விடும். எனவே பிள்ளைகளின் ஒளிமயமானவாழ்விற்குப் பெற்றோரே வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து.

என்பது பொய்யாமொழிப் புலவரின் வாக்காகும். அதாவது நாம் ஒரு பிறப் பிலே கற்ற கல்வி என்றும் அழியாது எம்முடனே பின் தொடர்ந்து எழு பிறப்புக்களும் வரும் தன்மையை உடையது. எனவே இத்தகைய சிறப்புக் களினை எல்லாம் உடைய கல்வியை நாம் யாவரும் கற்று சிறந்ததொரு சமூகத்தினைக் கட்டி எழுப்புவோமாக.

திருமதி.கௌ.நாகபிறேமன்
ஆசிரியர்.

# விதி வரைந்த பாதை வழியே.....

காலைப் பிரார்த்தனைக்காக பாட சாலையின் இரண்டாம் மணி ஒலித்தது. மாணவர்கள் யாவரும் எறும்புகள் போல அணி வகுத்து பிரார்த்தனை மண்ட பத்தில் குழுமி இருந்தனர். மாணவி ஒருத்தி இனிமையான குரலில் கண்களை மூடியவாறு

ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே

என உருக்கத்துடன் பாடிக் கொண்டிருந்தாள் மாணவர் எல்லோ ரும் கண்களை மூடி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். பிரார்த்தனையில் ஈடுபட முடியாத மாணவர் இருவரில் ஒருவன் சரவணா,

"இன்று யாருடைய நற்சிந்தனை யடா?" என்றான். மற்றவனோ "தெரியா தடா என்றான். அந்நேரம் காலைப் பிரார்த்தனைக்கு தலைமை தாங்கிய அதிபர் "அடுத்ததாக கோமதி ஆசிரியரின் நற்சிந்தனை இடம் பெறும்" என அறிவித்தவுடனேயே மாணவர் எல்லோ ரும் காதைக் கூர்மையாக்கி அமைதி யுடன் காணப்பட்டனர். கோமதி ரீச்சரின் நற்சிந்தனையைக் கேட்ப தென் றால் ஆசிரியர் உட்பட மாணவர்கள் அனைவருக்கும் அலாதிப் பிரியம்.

கணீரென்ற ஒலி, சரளமான பேச்சு, வசீகரமான மொழிநடை இவை அனைத் திற்கும் கோமதிக்கு நிகர் அவளே தான்.

பாடசாலையின் பல மேடைகளில் கோமதியின் குரல் ஒலித்திருக்கிறது. இன்றும் கூட பாரதியின் புதுமைப் பெண்போல தனித்துவமாக மிக இயல்பாக வீரமுழக்கம்.

கை தட்டல் பலமாக ஒலிக்கிறது. நிமிர்ந்தநடை, புதுமை படைத்திட வேண்டும் என்ற தீவிரப்போக்கு, தளர்ச்சியே அறியாத உள்ளம் இவை அனைத்தும் கோமதிக்கே உரியவை.

மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தில், கூடவே நான்கு சகோதரிக ளுடன் பிறந்த தன்மையினால் என்ன வோ மிகவும் பொறுமைசாலிப் பெண்ணாக கோமதி மாற்றப்பட்டி ருந்தாள். படித்துப் பட்டம் பெற்று ஐந்தாண்டுகள் கழிந்த பின்புதான் கோமதிக்கு ஆசிரிய நியமனம் கிடைத் திருந்தது. கூடவே ஒரு வரனும் கூடிவிட அதாவது தன்னிலும் பார்க்க கல்வியறிவு குறைந்த ஒருவன் கிடைத்துவிட துணிவோடு வாழ்வை ஏற்றுக் கொ ண்டாள்.

முல்லைத்தீவிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியப்பணியும் கிடைத்து விட கணவனுடன் சென்று குடியேறி தனது பணியையும் செவ்வனே நடாத்தி குடும்பத்தையும் நடாத்தி வந்தாள். பாடசாலைப் பணிகளில் பங்கு கொண்டும், மாணவர்களின் கல்வியில் தனிக்கவனமும் செலுத்தி எல்லோரி னதும் அன்புக்குப் பாத்திரமானாள் கோமதி.

நான்கு ஆண்டுகளுக்குப் பின் பெண் குழந்தை ஒன்றுக்குத்தாயாகி விட்டிருந்தாள். மிக்க அன்புடனும் பரிவுடனும் தன் குழந்தையைக் கவனித்து வந்ததுடன் எந்த ஒரு குறைவுமின்றி தைரியமுள்ள , புத்திசாலிப் பெண்ணாக வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று திடசங்கற்பமும் பூண்டாள். அவள் நினைத்த நேரம் சரியில்லையோ. என்னவோ? வன்னிமண் மீதான யுத்தமும் பல திசையெங்கும் முடுக்கி விடப் பட்டிருந்தது. நாள்தோறும் ஆயிரக் கணக்கில் மக்கள் இடம் பெயர்வதும் வெகு சாதாரணமாகவே நடந்து கொண்டிருந்தது. மக்கள் அவலங்களுக் குள்ளாகி உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தனர் அவர்களில் ஒருத்தியாக கோமதியின் குடும்பமும் இடம் பெயர்ந்து கொண்டிருந்தது. இந் நிலையில் கோமதியின் உள்ளத்தில் இனம் புரியாத அச்ச உணர்வு மனதை ஆட் கொள்ள கணவனுடனும் குழந்தையுடனும் ஓடிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் காலைவேளை கதிரவன் உதயம் செய்தவேளை மக்களும் இன்று எப்படியோ? நல்ல பொழுதாக விடிந்தால் போதும் என மனதில் எண்ணியவாறே இருந்தபோது வழமைக்கு மாறாக ஷெல் சத்தம் இடைவிடாது ஒலிக்கத் தொடங்கியது. மக்கள் முண்டியடித்து முல்லை நில மண்ணில் ஏற்கனவே அமைத்திருந்த பதுங்கு குழிகளுக்குள் பதுங்கிக் கொள்ள, கோமதியும் குழந்தையையும் அரவணைத்துத் தூக்கியவாறு நகர முற்பட்ட போது எங்கிருந்தோ வந்த ஷெல் வெடிக்க ஷெல் சிதறல்களின் வீச்சுக்கு இலக்காகி கோமதியின் கணவன் அந்த இடத்திலேயே பலியானான்.

கதி கலங்கிப் போனாள் கோமதி. செய்வதறியாது திகைத்தாள். நிலைமையைச் சட்டென உணர்ந்து கொண்டவளாய்க் குழந்தையுடன் ஓடிச் சென்று பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்தாள். ஷெல் வீச்சுக்களின் ஓசையும் குண்டு வெடிக்கும் ஓசையும் காதைச் செவிடாக்க குழந்தைகளின் வீரிட்ட ஒலியும், மரண ஓலங்களும் எங்கும் நிறைந்த சுமார் மூன்று மணி நேரம் பதுங்கு குழிக்குள் கழிக்க நேர்ந்தது.

ஒவ்வொருவர் முகங்களிலும் கவலை ரேகைகள் படர்ந்திருக்க, கண்கள் எதனையோ தேட வார்த்தையை உதிர்க்க வாய் மறந்து விட மக்கள் மரண அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஷெல் சத்தம் சிறிது ஓய பதுங்கிக் கொண்ட மக்கள் மெதுவாக தலையை வெளியில் நீட்டத் தொடங்கினர். பிணக் குவியல்களின் மத்தியில் சதைத் துண்டங்களினுள்ளே காணாமற்போன, இழந்து விட்ட தம் உறவுகளைத் தேடிக் கொண்டிருந்தனர் மரணித்துப் போனதை உறுதிப்படுத்துவதற்கு. அக் கூட்டத்திற்கு அருகில் கோரமாகிச் சிதைந்து விட்ட தன் கணவனின் சடலத்துக்குக் கிட்டச் சென்று அழுது அரற்றினாள். எதிர்கால வாழ்வு வினாக்குறியாகி முன்னே நிற்க அவளின் மனோதைரியம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தது. நிதானத்தை வருவித்துக் கொண்ட கோமதி சட்டெனத் தன் குழந்தையில் கண் களைப் பதித்த போது தன் பிஞ்சு விரல்களினால் தந்தையின் உடலை வருடிக் கொண்டிருந்ததைக் கண்ணுற்றாள். கண்ணீர்

திவலைகள் கண்ணை மறைக்க சோகம் நிரம்பியவளாய், நீண்ட பெரு மூச்சுடன், “ஆண்டவா இப்பிள்ளை யேனும் நான் வளர்க்க நீ உதவவேணும்” என மானசீகமாக மன்றாடினாள்.

கணப்பொழுதில் நிலைமைகள் மாறிவிட துணிப் பொட்டலம் ஒன்றோடு அவ்விடம் விட்டு அகன்று வேறிடம் தஞ்சம் புகுந்தாள் கோமதி.

பசி வயிற்றைக் குடைய தாகத்தால் நாவரள, காதுகளின் இரைச்சல் இவற்றோடு வெகுவாகப் போராடிக் கொண்டிருந்தாள். எங்கு திரும்பினாலும் மரண அவலக் குரல் , உணர்ச்சியற்ற ஜடங்களாய் திரியும் மானிடர் கூட்டம் இவற்றின் நடுவில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பச்சைக் குழந்தையுடன் கோமதி வழி தெரியாது திணறிக் கொண்டிருந்தாள்.

ஒரு கணம் தானே தனியானாக இருப்பேனாகில் ஒன்றுக்கும் பயப்படாமல், தினம் தினம் அஞ்சிச் சாகாமல் துணிவுடன் வாழ்வை முடித்திருப்பாள். பாரதியின் வழிவந்த பெண் அல்லவா அவள். ஆனால் இப்போது... ஒன்றுமறியாப் பச்சிளம் பாலகி இவள் கையில்! தான் எவ்வாறாயினும் உயிர்வாழ வேண்டும் என்று உறுதி பூண்டாள். ஆயினும் தொடரும் முடிவற்ற யுத்தத்தினால் சுடுகாடாகிப் போன நிலத்தில் தான் எத்தனை நாள் உயிர் சுமந்திருக்க முடியும்?

நினைவையே மறக்க வைக்கும் குண்டுகளினால் சிறகிழந்த பறவைபோல ஓடிக் கொண்டே இருந்தாள் கோமதி. துன்பம் ஒருவனைத் துரத்திக் கொண்டே வரும் என்பது போல அடுத்தடுத்து வந்த குண்டுச் சிதறல்களினால் கோமதியின் இரண்டு கால்களும் துண்டாக்கப்பட்டு இரத்த வெள்ளத்திலே மூழ்கிக் கிடந்தாள். ஆனால் தெய்வாதீனமாக அந்தக் குழந்தைக்கு ஒன்றுமே ஏற்படாமல் பத்திரமாக இருந்தது. அந்தக் கணத்திலும் தன்னைப் பற்றி நினைவில்லாமல் தன் குழந்தையின் கதிதான் என்ன என்று மட்டுமே நினைத்து அந்தத் தாயுள்ளம்.

ஓடிக் கொண்டிருப்பவர்களிடம் அம்மா .... தம்பீ... என்று கூப்பிட்டுக் கொண்டே இருந்தாள் அந்நேரம் இவள் பேச்சைக் கேட்கும் நிலையில் யாருமே இல்லை. ஆயினும் அவள் தன் முயற்சியைக் கைவிடாது ஈனக்குரலில் கெஞ்சிக் கொண்டிருந்தாள். ஆண்டவன் தாயாக வந்துநின்றானோ என்னவோ?

இவள் முன் இளம் கணவன் மனைவி இருவர் அருகே வர தன் கைகளால் குழந்தை இருந்த இடத்தைக் காண்பித்து, தன் இரு கைகளையும் கூப்பிய வாறே,

“இந்த குழந்தையை உங்களுடன் எடுத்துச் சென்று காப்பாற்றுங்கள்” எனக் கூறியவாறே மயங்கி விட்டாள். அதற்குப்பின் பல நாட்கள்... வாரங்களாகி விட்டன. வாரங்கள் மாதங்களாகி விட்டன.மக்கள் முட்கம்பி வேலிகளுக்குள்ளே முடக்கப்பட்டு முகாம்களிலேயே வாழ்வைக் கழித்து வந்தனர்

மழைவெள்ளம், புயற்காற்று, குடிதண்ணீர், சுகாதாரம், உணவு, நோய்

எனப் பலவிதங்களாலும் துன்புற்று மக்கள் வாடி வதங்கி நின்றபோது திடீரென, தேன்மாரி பொழிவது போல ஒரு சங்கதி! அதாவது மக்கள் தாம் விரும்பும் இடங்களுக்குச் செல்லலாம் என்பதே தம்சொந்த ஊருக்கு செல்ல விரும்புவோர் யாழ்ப்பாணம் செல்ல விரும்புவோர் என்ற பதிவுகள் இடம்பெற்று பஸ் வண்டிகளில் நிறைத்து சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கொடிகாமம் போன்ற பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் யார் தயவோ அல்லது ஆண்டவன் கருணையோ தெரியாது இரு கால்களையும் இழந்த கோமதி சாவகச்சேரிப் பாடசாலை முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டாள்.

கணீரென்று குரல் வளம் படைத்த கோமதி, அறிவுச் சிகரமான கோமதி, தன்னம்பிக்கை, மனோதைரியம் கொண்ட கோமதி, இன்று எல்லா வற்றையும் இழந்து முடமாகி நிற்கிறாள்.

பாரதியின் புதுமைப்பெண் இவள் என்று பலர் புகழ வாழ்ந்த கோமதி இன்று யாரின்தயவும் இன்றி, தன்னந் தனியாய்,தான் பெற்ற செல்வத்தையும் இழந்து .....மதிய உணவுக்காக அரைந்த வண்ணம் வரிசையில் நிற்கிறாள்.

அப்போது இவள் முன்னால் தாயொருத்தியின் இடுப்பில் அழகிய குழந்தை வாயில் விரலை வைத்துச் சூப்பிக் கொண்டிருந்தது.

அவ்வளவுதான், அக்குழந்தையை வாங்குவதற்காக இரண்டு கைகளையும் நீட்டினாள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்தது.
முகத்திலே இனம்புரியாத இன்ப உணர்ச்சி! சூழ்நிலையை மறந்து,
இதோ என் குழந்தை!

என்று வீரிட்டுக் கத்தினாள். குழந்தையை வைத்திருந்த தாயோ மிரண்டாள். இந்தக் குழந்தை என்னுடையது எனக் கத்தியவாறே தன் கதைகளைக் கூறத் தொடங்கினாள் கோமதி. நாக்குழற, கண்ணீர் மல்கியபடி அவள் கூறிய கதைகளைக் கேட்டு அருகிலிருந்தோர் கண்ணீர் வடித்தனர்.

"தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பது போல குழந்தையும் கோமதியிடம் வந்து ஒட்டிக் கொண்டது. குழந்தையை வைத்திருந்த தாயும் ஒன்றும் மறைவில்லாமல் உண்மையைக் கூறினாள். ஆயினும் தமக்கு நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்ததாகவும். இறையருளால் இக்குழந்தை கிடைக்கப் பெற்றதாகவும் மிகவும் மனம் மகிழ்ந்து குழந்தையிடம் அலாதியான அன்பு வைத்திருப்பதாகவும் அதனைப் பிரிந்திருக்க முடியாது எனவும் மனம் நெகிழ்ந்து கூறினாள்.

பிள்ளையைப் பெற்றவள் மன்றாடினாள், பிள்ளையைத்தத்தெடுத்தவள், கெஞ்சி னாள், இருப்பதோ ஒரு குழந்தை!

தராசு இரு பக்கமும் சமமாகவே இருந்தது. யாரிடம் குழந்தையைக் கொடுப்பது? கூட இருந்தவர்களுக்கு தீர்ப்பு வழங்க முடியாத நிலை.

கூடவே இருந்த வயோதிபர் ஒருவர் முன்வந்து கோமதியின் நிலையைக் கருத்திற் கொண்டு கோமதியிடமே குழந்தையைக் கொடுக்கும் படியும் அவளால் குழந்தையைப் பராமரிக்க முடியாத விடத்து அவளின் ஒப்புத லுடன் கூடவே இருந்து குழந்தையை நீங்கள் பராமரிக்கலாம். என்றும் கூறவே கோமதியும், மற்றவளும் சம்மதத்துடன் தலையாட்டினர்.

எங்கிருந்தோ வானொலியில் தவழ்ந்து வந்த
"விதி வரைந்த பாதை வழியே
வாழ்க்கை ஓடுது..............."
என்ற பாடல் கோமதியின் வாழ்வை அர்த்தமுள்ள தாக்கியது.

– யாவும் கற்பனை –

திருமதி ஜீ. சிறிதரன்
ஆசிரியர்.
யா/ அருணாலயம் வித்தியாலயம்.

# KEYS OF LIFE

Living is the game of the life
Knowing is the best in the life
You born for the higher things
Every action in your life
Must be example to others

You always must think pure thoughts
You always must do pure action
As in the child hood
You must obey your parents, teachers and elders
This action pave the way for your good future

You must believe God and be honest
You should help the poor and friendly with others
These are keys of life
If you do these your life be prosperous
And the world will be in peace and harmony

**By: N. Sutharsini**
**Teacher of English**

# திருமணத்திற்கு தயாராகும் மணப் பெண்களுக்கு

ஒரு பெண்ணை தங்க ஆபரயங்களும், அழகுக் கலை நிபுணர்களின் கைவண்ணமும் அழகு தேவதையாக மாற்றும் என்றாலும் மணமகளின் முகத்திலும் மேனியிலும் ஒரு தனிப் பொலிவும் வசீகரமும் கூட வேண்டும் என்றால் அவள் அதற்காக தன்னை திருமணத்திற்கு கிட்டத்தட்ட அறு பது நாட்களுக்கு முன்னதாகவே தயார் செய்து கொள்ள வேண்டும்.

நீங்கள் உண்ணும் உணவின் பலன் உங்கள் முகத்திலும் உடலிலும் தெரியக் கூடிய அளவு இருக்க வேண்டும். அதுமட்டும் இல்லாமல் கிட்டத்தட்ட 6கிளாஸ் நீர் அருந்த வேண்டும்.

அதிகம் சர்க்கரை பொருட்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும். பேரீச்சம்பழம் தினமும் சாப்பிடு வதால் உடலுக்கும் இரத்த சுற்றோட் டத்திற்கும் மிகவும் நல்லது. பச்சைக் காய்கறிகளும். சலாட்டு வகைகளும் உடலுக்கு மிகவும் நல்லவை.

மணப் பெண்ணின் முகம், பொலிவு பெறுவதற்கு தினமும் நித்தி ரைக்குச் செல்லுமுன் சிறிதளவு ஒலிவ் எண்ணெய் எடுத்து முகம் கழுத்து போன்ற பகுதிகளில் நன்றாக பூசி மசாஜ் செய்ய வேண்டும். 7 நிமிடத்திற்கு பிறகு சுத்தமான பஞ்சினால் துடைத்துக் கொள்ள வேண்டும். (மேல் நோக்கி மசாஜ் செய்ய வேண்டும்)

கண்கள் குளிர்மையாக இருப்ப தற்கு சிறிதளவு பன்னீரில் குளிர்ந்த நீரை விட்டு அதில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் 7 நிமிடம் வைத்திருப்பதனால் கண் குளிர்மை அடைவதுடன் புத்து ணர்ச்சியும் கிடைக்கும்.

உதடுகளின் கருமை நிறம் போக கரட் சாற்றினை பூசுவதால் நல்ல பலனைப் பெறலாம். வெள்ளரிக் காயை விழுதாக அரைத்துக் குளிர வைத்து முகத்தில் தடவிக் கொள் ளவும். நன்றாக உலர்ந்த பின் வெது வெதுப்பான நீரில் முகத்தைக் கழு விக் கொள்ளவும். பருக்களைப் போக்க இது ஒரு இலகு முறையாகும்.

ஒரு மேசைக்கரண்டி கடலை மாவுடன் ஒரு மேசைக் கரண்டி பயத்தமாவையும் ஒரு துளி மஞ்சள் தூளையும் கலந்து கொள்ளவும். பின்பு சிறிது தண்ணீரை விட்டு பேஸ்ட் போல் குழைத்து கொள்ள வும். முகம் முழுவதும் பரவலாக பூசவும். காய்ந்த பின் வெது வெதுப் பான நீரில் முகத்தை கழுவிக் கொள்ள வேண்டும். இதனை தொடர்ந்து செய்வதனால் பருக்கள் கரும் புள்ளிகள் மறையத் தொட ங்கும். அழகுக் கலை நிபுணர்களின் ஆலோசனையுடன் 1 1/2 மாதத்திற்கு முதல் நல்ல தரமான Herbal Bleaching, 22k, Gold Fruit Facial செய்து முகத்தை மிகவும் பளபள ப்பாக வைத்துக் கொள்ளலாம்.

சுத்தமான நீரினால் முகத்தை நன்றாக கழுவ வேண்டும். சவர்க்காரம் அதிகம் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். Face wash உபயோகிப்பது நன்மை தரும். அல்லது கற்றாளைச் சாறு எடுத்து முகத்தை கழுவுவதனால் முகம் புத்துணர்ச்சி பெறும். கைகளையும் கால்களையும் ஒவ்வொரு மாதமும் Pedicure, Manicure செய்வதன் மூலம் அவை மிகவும் அழகாக தோற்றம் அளிக்கும்.

திருமதி. ச.கௌரிதரன்.
ஆசிரியர்.
(யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

# அளவையூர் கலைப்பாரம்பரியம் அன்றும் இன்றும்

அளவெட்டி என்னும் கிராமத்தின் பெயரினைத்தான் மருவி அளவையூர் என இசைநாதத்துடன் கூறுவார்கள் அறிஞர்கள். கலை கலாசாரம், பண்பு, அன்புடன் கூடிய உபசரிப்பு, அறம் ,தெய்வபக்தி என்பவற்றுடன் கூடிய படித்த மேதைகள், பண்டிதர்கள், கலைஞர்கள் அறிஞர்களுடன் வேளாண் தொழிலை முன்வரிசையில் கொண்டவர் களினையும் உள்ளடக்கியது அளவை யூர். நீண்ட கலைப்பாரம் பரியத்தினை தன்னகத்தே கொண்டது தான் இக் கிராமம். வீட்டுக்கோர் கலைஞன் பிறக்குமிடம் அளவையூர் என அறி ஞர்கள் பலரினாலும் விதந்து உரைக்கப் பட்டு வருகின்றது.

இசையிலே இனிமைபோல் தமிழிலும் இனிமை இரண்டறக் கலந்து ள்ளது. இயல், இசை, நாடகம் என்பன ஒன்றாக வளர்ச்சிபெறும் சிற்றூர்களில் ஒன்றாக அளவையூர் விளங்குகின்றது. அருளும்,பொருளும் அறிவும் பெருகும் மண்தான் கலைகளின் விளைநிலம், கரகம், காவடி, நடனம். நாட்டியம், கூத்து என்னும் கலைகள் நர்த்தனம் புரிய மேளதாளம் கூடிமுழங்க நாதஸ்வரம் பொழியும் கானமழையில் ஊறிச் சிவந்திருக்கும் செம்மண்பூமி அளவை யூர், ஆலயங்கள் தோறும்வளர்ந்து இசை வேளாளர் மத்தியில் கூத்தஞ்சீமாக் குறிச்சியில் ஒரு காலத்தில் ஒடுங்கிக் கிடந்தஇசை, இன்று கிராமம் எங்கணும் பரந்து பல தரப்பினரையும் தழுவி வளர்ந்து விட்டது.

இசை ஆசிரியர்கள், வாத்திய விற்பன்னர்கள், சங்கீத பூஷணங்கள், வானொலிக் கலைஞர்கள் என்று மல்கிக்கிடக்கும் பூமி இது. இத்தகைய இளங் கலைஞர்கள் திருவிழாக்கா லங்களில் கும்பிழா வளையானின் முன் வீதியில் மாஞ் சோலையின் கீழிருந்து ஒலி பெருக்கிவாயிலாகப் பொழியும் தெய்வ கீதங்கள் பக்தர்களின் செவிகளினை த்துளைக்கும், நெஞ்சை நிறைவிக்கும்.

அளவையூர் அன்னை ஈன்றெடுத்த கலைஞர்கள்பலர் மங்கல வாத்திய ங்களான நாதஸ்வரம் தவில் தொடக்கம் வாய்ப்பாட்டுவீணை, வயலின், மிருதங்கள் புல்லாங்குழல் இப்படியாக எல்லாத்துறைகளிலும் வித்துவத்திறமை படைத்தவர்கள். புராணபடனக் கலையும் இங்கு உன்னதமான நிலையில் உள்ளது.

முன்னொரு காலத்தில் நாட்டுக் கூத்துக்கு பெயர்பெற்ற இடம்தான் அளவெட்டி. மதனகாமராசன் நாடகம், பதிவிரதை நாடகம், கண்டியரசன் நாடகம், பூதத்தம்பி நாடகம், ஏழுபிள்ளை நல்லதங்காள் நாடகம் என்பவற்றை நடித்து இன்புற்றவர்கள் தான் அளவையூர் மக்கள் நாட்டுக்

கூத்துக்கள் எப்பொழுதும் வட்டக்கலரி முறையிலே நடைபெற்றன. நாடகத்தின் பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்கள் அதில் தாமும் இரண்டறக்கலந்து மெய்மறந்து நடிப்பர். அப்பொழுது நாடக் ஒருபடி மேலும்வளர்ச்சிய டைந்துவிடும். ஒருவர் தான் கூத்தில் தாங்கி நடிக்கும் பாத்திரம்மக்கள் உள்ளத்தினைக் கவர்ந்தமையால் அவரின்இயற்பெயரின் முன்னால் நாடகத்தினால் பெற்ற சிறப்புப்பெயர் நிலைத்துவிடும். யமன் சின்னப்பு வேடன் அம்பலம், பிராமணி வைத்திலிங்கன் முதலிய பெயர்கள் இவ்வகையில் ஏற்பட்டவையே இன்று கூட இவ்வூரில் இவர்களுடைய வம்சத்தவர்களினை அவர்களுடைய புனைபெயரினைக் கூறும் மரபு உண்டு.

புகழ்பூத்த நாடகக் கலைஞர்கள் பலர் இங்கிருந்து நாடகங்களை நெறிப்படுத்தி உள்ளார்கள். இவர்கள் அண்ணாவிமார் என அழைக்கப்ப டுவார். இந்த வகையில் அண்ணாவி இளையர். அண்ணாவி வல்லிபுரம் என்போர் அண்மைக்காலம் வரை உயிருடன் இருந்தவர்கள். இதற்கு ஆதாரமாக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டிச் சுடலையில் ஓர் கல்லறையில் பின் வருமாறு ஒரு வாசகம் பொறிக்கப் பட்டுள்ளது. “அண்ணா வியார் வல்லி புரம் உடுக்கு வாத்தி யத்திலும் ஒரு வல்லுநர். இவர் சுமார் 60 ஆண்டுகளிற்கு முன்னர் மஹாஜனாசபை மண்டபத்தில் மேடையேற்றிய கற்பகதரு என்ற நாடகம் யாழ்ப்பாணம் அனைத் தையுமே ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. என்பதே ஆகும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வைத்து கௌர விக்கப்பட்ட இன்னுமொரு மூத்த உடுக்கு விற்பன்னர் திரு.வை. சிதம்ப ரப்பிள்ளை இவர் அண்மையில் சிவபதமடைந்தார்.

கூத்துக்கள் என்றவுடன் எமது கண்முன்னே தவளக்கிரி முத்துமாரி அம்மனும், கைக்குழாவை பெரிய தம்பிரான் ஆலயமுமே தோன்றும் . இன் றுங்கூட இவ்வாலயங்களிலே இவ்வகையான நாடகங்களும் கூத்துக் களும் அரங்கேறுவதனைக் காண முடிகின்றது.

கரகக்கலைக்கு அளவையூர் கலைஞர்களிற்கு நிகர் அவர்களே தான். அம்மாள் தேவிக்குரிய கரக ஆட்டத்தில் கம்பத்தின் மேலும் கத்தியின் நுனியிலும் உரலின் மீது உருளும்போதும் நின்று உடுக்கின் வெறியொலி உந்த, தாளம் தவறாது தலையில் தாங்கிய கரகம் தளம்பாது நர்த்தனமாடிப் பெருமை சேர்த்த ஒருவர் கரகக்கார ஐயாத்துரை அவர்கள். கரகத்தில் ஒரு ஜாம்பவான் இவர். இளந்தலை முறையினருள் அண்மைக்காலம் வரை கரக ஆட்டத் தில் ஊறித்திளைத்த ஒரு கலைஞர் தம்மையப்பலம் விநாய கலிங்கம் அவர்கள்.

கரக ஆட்டத்தின் மூலம் அளவையூர் கிராமத்திற்கே பெருமைகள் பல உண்டு. கொழும்பு நகரில் நடைபெற்ற நிகழ்வொன்று இதற்கு தக்க சான்றாகும். அளவெட்டி வளர்ச்சிக் கழகத்தின் நிகழ்வொன்று கொழும்பு மாநகரில் கோலாகலமாக நடை பெற்றது. இது பார்க்கும் எல்லோரி னையும் பரவசமடையச் செய்தது. மேடையின் விளிம்பிலே சமாந்தரமாக விரித்த சேலை அதன் அந்தத்தில் ஒரு

சட்டை காவடி ஆட்டக்காரர் ஒருவர் மேடையின் ஒரு புறத்திலிருந்து படுத்தபடியே உருண்டு உருண்டு அந்தச் சேலையையும் உடுத்துக் கொண்டு சட்டையினையும் போட்டுக் காட்டினார். மண்டபம், பொங்கி வழிந்த சனத்திரளின் கைதட்டலினால் சரஸ்வதி மண்டபமே அதிர்ந்தது. இவ்வகையான சாதனைகளைப் புரிந்த கலைஞர் சிவராசாவை ஆரத்தழுவி மகிழாதவர்கள் யாருமே இல்லை. இவ்வாறாக முன்னைய காலத்தில் பார்ப்போர்மனங்களினை கொள்ளை கொண்ட கரகக்கலை இன்றும் மக்கள் மத்தியில் ஓரளவு இருந்த வண்ணமே உண்டு.

சின்னமேளம் என்ற கலை யும் அன்று பெருமை பெற்று இருந்தது. இது இன்று அருகிவந்து பொய்க்கா லாட்டமாக வடிவம் பெற்று ஊரி டையே நிகழும் விழாக்களில் வெளிப்ப டுத்தப் படுகின்றது.

அளவையூர் மண்ணிற்கு பெருமை சேர்த்தவர்களில் முதலிடம் பெறு பவர்கள் தவில், நாதஸ்வரக்கலைஞர்க ளேயாவர் என்றால் அது மிகையாகாது. இவர்களுடைய மங்கல வாத்தியங்கள் ஒவ்வொரு உயிரினங்களையும் இசை விக்கும் தன்மை வாய்ந்தது. ஆலயங்க ளினை மையமாக வைத்தே இக்கலைகள் மேலும் வளர்ச்சி பெற்றன. அளவெட்டி யின் வடகோடியாகிய கூத்தன் சீமையில் இருந்து வரும் நாதஸ்வர ஓசையாலே அளவையூர் காலைப்பொழுதில் புத்துணர்ச்சி பெறும்.

இந்த வகையில் சிறப்புக்கள் பல பெற்றவரான லயஞான குபேரபூபதி தவில் மேதை வி.தட்சணாமூர்த்தியின் திறமைகளை நாம் சொற்களிலே வடிக்க முடியாது. திருவிழாக்களில் நடை பெறும் மேளச்சமாக்களின் பொழுது மேடையின் நடுவே கதாநாயகனைப் போன்று வீற்றிருந்துகச்சேரியினை ஆரம்பிப்பதற்கான அடியினை எடுத்துக் கொடுத்து சகபாடிகளை உற்சா கப்படுத்தி பார்ப்போர் மனங்களையும், செவிகளையும் கொள்ளைகொண்டு விடுவார் இவரும் இவரது சகபாடிகளும்.

இராஜவாத்தியம் எனச் சிறப்புப் பெறும் நாதஸ்வரத்தின் இசையால் வசமாகா இதயங்களினை எல்லாம் வசப்படுத்தும் வல்லமை அளவையூர் நாதஸ்வர வித்துவான்களிடம் உண்டு. பண்டைக் காலம் தொடக்கம் இன்றுவரை அளவையூரின் மண்ணினை செழுமைப்படுத்திய இவர்கள் இலங்கை யின் பல பாகங்களில் மட்டுமன்றி உலகமெங்கும் தனக்கென ஒர்தனியான இடத்தினைப் பெற்றுத்திகழ்கின்றார் கள் என்றால் சொல்லவும் வேண்டுமா?

ஏனைய கலைகள் போன்றே இசை க்கலையும் இங்கு நன்கு வேரூன்றி இருந்து வருகின்றது. இசையிலே பெயர் பெற்ற பல கலைஞர்கள் இம்மண்ணினை அலங்கரித்துள்ளார்கள். இவர்களின் இசையின் ஓசையால் தாவரங்கள் தழைத்தன, செடிகள் செழித்தன. பழங்கள் கனிந்தன. பயிர்கள் முளைத்தன. இதனால் அளவையூர் தளைத்தது. சங்கீத வித்துவான்களின் இசை நாதத்திற்கு மதம் பிடித்த

யானைகளும், மருண்டோடும் மான்களும், மகிழ்ந்தாடும் மயில்களும், நஞ்சு உமிழும் நாகமும், கொஞ்சி விளையாடும் குரங்குகளும் பயிலும் சிறுவர்களும் மறந்து நிற்கச் செய்யும் ஆற்றல் உண்டு.

அளவை அன்னை ஈன்றெடுத்த சங்கீத வித்துவான்கள் அளவையூரில் மட்டும் தமது நாவன்மையைப் புலப்படுத்தாது உலகமெங்கும் புகழ் பரப்பி வருகின்றார்கள். இந்த வகையில் அண்மைக்காலங்களில் சங்கீத பூஷணம் வி.கே. நடராசா அவர்கள் வெளிநாடுகளிற்கும் சென்று இசைக்கச்சேரிகளினை நடாத்திவந்துள்ளார். வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், பண்பாட்டினையும் தரக்கூடிய இசைக்கலையினை மேலும் வளர்க்க வேண்டும் என எண்ணி இவ்வூர்க்கலைஞர்கள் இசை மன்றங்களினையும் அறநெறிப்பாடசாலைகளையும்அமைத்து மாணவர்களின் நாவில் இசை வல்லமையை ஏற்படுத்தி வருகின்றமை கண்கூடாக காண முடிகின்றது.

சிற்பம், ஓவியம் இரண்டும் இங்கே இரு கண்கள் போன்ற வளர்ச்சி பெற்று வருகின்றது. இயற்கையிலே கிடைக்கும் பொருட்களினைக் கொண்டு சிற்பங்கள் செதுக்குவதில் இவ்வூர்க்க லைஞர்கள் கைதேர்ந்த வர்கள். அதே போன்று ஓவியம் வரைவதிலும் விற்பன்னர்கள். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக அளவெட்டிக்கிராமத்தில் உள்ள ஆலயங்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களையும், ஓவியங்களையும் வரைந்தவர்கள் அளவையூர் கலைஞர்களே ஆவர். இவ்வகையில் சிறப்புப் பெற்றவர்களாக கலைஞர் பொன்னம்பலம், சுபாஸ் சந்திர போஸ் இவர்களினைக் குறிப்பிடலாம். இக்கலைஞர்கள் புலம்பெயர் நாடுகளிலும் தமது கைவண்ணத்தினைக் காட்டி வருகின்றனர். இன்று மேலும் பல இளங்கலைஞர்களால் இக்கலைகள் வளர்க்கப் பெற்று வருகின்றன.

ஏட்டில் எழுதாக்கவிகளாகிய நாட்டார் பாடல்கள் இங்கு முக்கியமான இடத்தைப் பிடித்து மிளிர்கின்றன. இந்த வகையில் தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், தொழில்ரீதியான பாடல்கள் விளங்குகின்றன. இன்றும் இவை பாடப்பெற்று வருகின்றன.

இங்கே நெசவுக்கலையும் பண்டை காலம் தொட்டு இன்று வரையும் சிறப்பிடம்பெற்ற கலையாக இருந்து வந்துள்ளது. இங்கு பின்னப்படும் புடைவைகள் உள்ளூரில் மட்டுமன்றி இலங்கையின் சகல பாகங்களிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.இங்கு பன்னவேலையும் பெரு வளர்ச்சி பெற்று வருகின்றது. இன்று நெசவுக்கலை, பன்னவேலை இரண்டும் வளர்ச்சியில் சற்று குன்றியதாக உள்ளது. இதன் எதிர்காலம் கேள்விக் குறியாகவே உள்ளது.

விளையாட்டுக்கலையும் அளவையூர் மக்களுடன் இரண்டறக் கலந்த கலையாகவே பண்டுதொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது. பாரம்பரிய விளையாட்டாகிய மாட்டுவண்டிச் சவாரி, துவிச்சக்கரவண்டி ஓட்டம், மரதன் ஓட்டம், கால்பந்தாட்டம்

என்பன புகழ்பெற்று இன்றுவரை விளங்குகின்றன.

இந்து மக்கள் எல்லோரும் அதிக கவனம் செலுத்தும் கலையாக சோதிடக்கலை காணப்படுகின்றது. சோதிடக்கலை, பண்டைக்காலம் தொட்டு இன்று வரை சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. சோதிடக்கலை வல்லுனர் சின்னப் பச்சாஸ்திரியாரினை அறியாதவர்கள் எவருமே இல்லை. அளவையூரில் சோதிடக்கலை குருசீடமுறையில் பேணப்பட்டு வருகின்றது. இந்த வகையில் சின்னப்ப சாஸ்தியாரின் மாணவன் பொன்னத்துரைச்சாஸ்திரியார் அவர்கள் இன்றும் அளவையூரில் சோதிடக் கலையை வளர்த்து வருகின்றார். அருட்கவி திரு.சீ. விநாசித்தம்பிப் புலவ ரினாலும் நன்கு இந்தச் சோதிடக்கலை வளர்க்கப்பட்டு வந்தது அவர் அண்மையில் சிவபத மடைந்தமை அளவை அன்னைக்கு ஏற்பட்ட பாரிய இளப்பாகும். இவர் இம் என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் என்ற காளமேகப் புலவர் வரிசையினைச்சேர்ந்தவர். ஆசு, மதுரம், சித்திரம், சித்தாரம் எனும் நாற்கவியும் பாடவல்லவர்.இன்றும் சோதிடக் கலையை வளர்த்து வருபவர்களுள் ஒருவராக திரு. த. செல்லத்துரை அவர்களும் திகழ்கின்றார்.

இவ்வாறக பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை சிறப்பிடம் பெறும் கலைகளாக தவில், நாதஸ்வரம், மிருதங்கள்,இசை, கரகம், காவடி, சிற்பம். ஓவியம், சோதிடம், நெசவு, பன்னவேலை, பூமாலைத்தொடுத்தல், தையற்கலை, அலங்காரக்கலை, விளையாட்டுக்கலை என்னும் இன்னோரன்ன கலைகள் காலத்திற்குக் காலம் தோன்றிய பல கலைஞர்களால் வளர்க்கப்பெற்று வருகின்றதென்றால் அது அன்னைக்குக் கிடைத்த வரப்பிரசாதமே எனலாம்.

திருமதி.தாரணி ஆரூரன்
ஆசிரியர்.

நூற்றாண்டு விழா மலர்க்குழு



நூற்றாண்டு விழா போட்டிக்குழு



நூற்றாண்டு விழாக்குழு



# நீரிழிவு

இந்நோய் பெருமளவில் நீரிழிவு நோய் என்ற பெயரினால் அழைக்கப் படுகின்றது. சலரோகம் என்பது ஆயுள்வேதப் பெயராகும். இந்நோயின் போது தென்படும் பிரதான நோய்க் குறிகள் இரண்டாகும். அதிக மாக சிறு நீர்க்கழித்தலும் சிறுநீரில் சீனி இருப்பது மாகும்.

காபோவைதரேற்று அனுசேபத்தின் ஒரு கூறாகும். இது புரத அனுசேபத் தையும் கொழுப்பு அனுசேபத்தையும் பாதிக்கும் இந்நோய் ஏற்படக் காரணம் சதையில் காபோவைதரேற்று அனு சேபத்தையும் போதுமான அளவு இன்சுலீனைச் சுரக்கச் செய்ய இயலாமை யாகும்.

உணவுச்சமிபாட்டில் சதையியினால் மிகமுக்கியமான தொழிற்பாடு நடை பெறுகின்றது. என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும் அதன் மூலம் சதையச் சாறு என்ற வெளிச்சுரப் பொன்றும் இன்சுலின் என்ற உட் சுரப்பொன்றும் உற்பத்தியாக்கப்படும் குடலினுள் புரதம் கொழுப்பு காபோ வைதரேற்கு என்பன சமிபாடு அடை தலில் உதவி புரியும்.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு வரின் அறிகுறிகள் எவையெனப்பார்ப் போம். அதிக சிறுநீர் வெளியேறுதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீரில் அதிக சீனி அடங்கி இருத்தல், என்பன முக்கியமான அறிகுறியாகும் சிறுநீரகம் வழியாக வெளியேறும் நீரின் அளவும் அதிகமாவதால் தாகம் அதிகரிக்கும். சிறுநீருடன் வெளியேறும் கலோரிக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும். ஒரு முயற்சியாக பசி அதிகரிக்கும். நிறை குறையும், சக்தி குறையும் விரைவாககளைப்படையயும் கூடும். இந்நோய் பொதுவாகக் காணப்ப ட்டாலும் முக்கிய அறிகுறி ஒன்றாகும். உடற் பருமன் அடைதல், உடலின் செயற்பாடு குறைதல்.

சிறுநீரில் குளுக்கோஸ் இருப்பதை எவ்வாறு அறிந்து கொள்ளலாம். இதை ஒரு வைத்தியர் மூலமோ அல்லது வீட்டில் குருதி சீனியைப் பரிசோ திப்பதால் உறுதிப்படுத்திக் கொள் ளலாம். சிறிய அளவில் இந்நிலைமை காணப்பட்டால் அதை உணவுக் கட்டு ப்பாடு மூலம் மாத்திரம் குணப்ப டுத்தலாம். உணவைக் கட்டுப்படுத் தாவிட்டால் இதைக் குணப்படுத்த முடியாது வாழ்நாள் முழுவதும் ஏற்படக் கூடிய ஒரு நோயாக மாறலாம்.

நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் வேறுபட்ட ஒருவராக அல்லது குடும்ப வேலைகளில் தான் ஈடுபடக் கூடாது என்ற நினைப்பதற்கு உளவியல் ரீதியாக இடமளிக்காது பார்த்துக் கொள்ளல் வேண்டும். தனது

ஆரோக்கியம் சமூகப் பங்களிப்பிற்குத் தனது சக்தியைச் சிறப்பான முறையில் அமைத்துக் கொள்வதில் தங்கியிருக் கின்றது என்பதை நோயா ளிக்கு விளங்க வைக்க ஒத்துழைப்பு வழங்குவது மிக முக்கியமாகும்.

நீரிழிவு நோயாளி ஒருவர் உடற் பயிற்சியில் ஈடுபடுவதனால் காபோ வைதரேற்று அதிகரிக்கும். சக்தி அதி கரிப்பதனால் தேவையான இன்சுலின் அளவு குறையும். ஆனால் தடிமன் போன்ற உபாதைகளின் போது கூட இன்சுலின் தேவை அதிகரிக்கும். அதிகமான வேலை செய்வதனாலும் இன்சுலின் தேவை அதிகரிக்கும். குருதியில் குளுக்கோசின் அளவிலும் அதிகரிப்பதனாலும் நாடிக் குருதிக ளிலும் குருதி நிறப் பொருளிலும் கொழு ப்பு சேமித்து வைத்திருப்பதாலும் புண்கள் குணமாக நாட்கள் செல்லும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நீரிழிவு நோயாளி தவிர்க்க வேண்டிய உணவுகள், சீனி, பேரீச்சம் பழம், கருப்பட்டி, காய்ந்த முந்திரி கைப்பழம், விளாம்பழம், வாழைப்பழம், இவ்வுணவுகளைத் தவிர்த்துக் கொண்டு நீரிழிவு நோயாளி ஒருவருக்கான ஒரு நாள் உணவை திட்டமிடல்.

காலை உணவு :- தோடம்பழச்சாறு, சீனிகலக்காது
குரக்கன் பிட்டு, முட்டைக்கறி, பால் கோப்பி சீனி சேர்க்காது.

பகல் உணவு :- தவிட்டரிசிச்சோறு
பாகற்காய், முருங்கைக்காய், தக்கா ளிச்சலாது, கட்டியாக்கியபால்
இரவு உணவு :- அவித்த மரக்கறி
அவித்த மீன் துண்டு, தவிட்டுப்பாண், பழத்தபப்பாசிப் பழம்

நாம் நல்ல ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயின் இந்நோய் உண்டா வதற்கான காரணங்களை அறிந்து அவற்றில் இருந்து விலகியும் தகுந்த உடற்பயிற்சிகளையும் உணவுகளையும் மேற்கொண்டு வாழ வேண்டும். ஆரோக்கியமான உடல் நலத்தைப் பெற்று நலமாக வாழ்வது உங்கள் கைகளிலேதான் உள்ளது.
"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் "

செல்வி சு.முருகேசு
ஆசிரியர்.

சிவசுப்பிரமணியம் இல்லம்



சுப்பையா இல்லம்



கந்தையா இல்லம்



# சரித்திரம் படைத்திடுவோம்

அளவையூர் அருணாசல உடையார்
அன்புடனே தந்திட்ட
அருணாசல வித்தியாலயத்தின்
ஒளி மயமான எதிர்காலம் – எம்
உள்ளத்தில் தெரிகிறது

அன்று
ஓலைக் கொட்டிலில் உருவானவள்
ஓங்கியே வளர்கிறாள் – இன்று
ஒப்பில்லாத நாதன் எங்கள்
ஜெகநாதன் ஒப்பற்ற அதிபர்
தன்னலம் கருதா தயாள நெஞ்சர்
தன் முயற்சி தன்னால் நூற்றாண்டு விழாவை
விருப்புடனே தொடுத்தார்

ஓர் நூற்றாண்டில் எம்அன்னை
எத்தனை சாதனை செய்தனள் தன்னை
எத்தனை வளர்ச்சி எத்தனை உயர்ச்சி
அத்தனையும் சொல்லில் அடங்கிடுமோ?

கல்வியிலே கருத்தினிலே
காசினியில் உயர்ந்திட்டாள்
கோட்டத்தில் வலயத்தில்
மாவட்டத்தில் மாகாணத்தில்
தேசியத்தில் தோற்றிவிட்டாள்
அன்றந்தக் கல்வி வட்டாரத்துள்
அடங்கியே நின்றாள்
இன்றிந்த இலங்கைத் தேசியத்தில்
இனிதாகத் கால் வைத்திட்டாள்

வட்டாரக் கல்வியினுள் வந்திடும் பரிசை
வாங்கியே நாங்கள் வந்தோம் – இன்று
தேசியப் பரிசைத் தேடியே போகிறோம்
தேர்வுகள் பல தாண்டி

இத்தனை சாதனை எய்திட எமக்கு
எத்தனை வேதனை அவள் பட்டாள்
அதிபர் அருங்குண ஔடத மதனால்
அத்தனை வேதனை அவர் மாற்றி
சரித்திரம் படைத்திட எமை யிங்கு
சாதனை வீரராய் மாற்றுகிறார்
சத்தியம் செய்கிறோம் நாமிங்கு
சாதனை படைப்போம் உறுதி .

ப.மிலக்ஸியா
தரம் 11 மாணவி

# சோமசுந்தரப்புலவர்
# (உரைச்சித்திரம்)

குரல் 1: நவாலியூர் சோமசுந்தரப் புலவரை ஈழத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது பாடசாலை செல்லும் எந்தப் பிள்ளையைக் கேட்டாலும் “ஓ ! அந்தப் பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம்” என்ற பவளக்கொடிக் கதைப் பாட்டுத் தாத்தாவா என்று தான் கேட்பார்கள். அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய பாடல்கள் பல மனதை விட்டு அகலாதவை.

குரல் 2: சோமசுந்தரப்புலவர் கி.பி.1880 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி நவாலியில் பிறந்தார் அவர் ஆரம்பக் கல்வியை மானிப்பாயில் இருந்த அருணாசல உபாத்தியாரிடமும் தன் தந்தையாரிடமும் கற்றார்.

குரல் 1: அவர் தமது 15வது வயதில் பாடல்களை ஆக்கத் தொடங்கினார்.

குரல் 2: யாப்பிலக்கணம் கற்பதற்கு முன்னரே பல தனிப் பாடல்களைப் பாடினார். தனிப்பாடல்களைப் பாடும் வன்மை அவருக்கு இயல்பாகவே அமைந்தது அதனால் அவரை எல்லோரும் வரகவி என்று அழைத்தனர்.

குரல் 1: சோமசுந்தரப் புலவர் தனிப்பாடல்களை மட்டுமல்ல கதைப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.

குரல் 2: வட்டுக்கோட்டையில் உள்ள ஆசிரியர் சின்னத்தம்பி என்பாரும் புலவரும் அவ்வூரில் ஓர் ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கினர் அங்கு 40 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

குரல் 1: 1925ஆம் ஆண்டு “உயிரிளங்குமரன்” என்னும் நாடகத்தை எழுதினார். அந்நாடகத்தின் சிறப்பை உணர்ந்து “புலவர்” என்னும் பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது.

குரல் 2: தங்கத் தாத்தா என அன்பாக அழைக்கப்பட்ட சோமசுந்தரப் புலவர் சிறுவர்க்காகப் பாடிய பாடல்கள் சிறுவர் செந்தமிழ் என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.

குரல் 2: புலவர் சிறுவர்களுக்காகப் பாடிய பாடல்களுள் ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, பவளக்கொடி முதலான பாடல்கள் சிறுவர்களால் விரும்பிப் பாடப்படுகின்றன.

குரல் 1: ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப்பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

குரல் 2: என்று தொடர்ந்து செல்கிறது இப்பாடல் பிறிதொருபாடலில் கத்தரி வெருளியை வர்ணித்த அழகே தனியழகு

குரல் 1: கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா - நன்று
காவல் புரிகின்ற சேவகா
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்உன்னைப் போல்
வேலை புரிபவன் வேறுயார்

குரல் 1: சிறுவர் பாடல்கள் மூலம் ஈழத்தமிழர் மத்தியில் புகழ்பெற்றவர் சோமசுந்தரப் புலவர் அவர்களே.

குரல் 2: எலியும் சேவலும் என்ற கதைப்பாடல் அவரது கவிதை ஆற்றலைப் பறைசாற்றுகின்றது.

குரல் 1: (சேய் எலி)
வெய்யில் கொடுமைம்மா
மேனி வியர்க்குதம்மா
பைய உலாவிவரப்
பரிந்து விடை தாருமம்மா

பொல்லாத வெப்பம் மமா! புழுங்கி யவியுதம்மா
மெல்ல உலாவிவர விரும்பிவிடை, ஈயுமம்மா

குரல் 2: (தாய் எலி)
"ஆசைமிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே " மோசம் வரும் மகனே முற்றத்தில் போக வேண்டாம். பொல்லாத துட்டர்மைந்தா புறத்தே பதுங்கி நிற்பர்
அல்லாதன புரிவார் ஐயா நீ போக வேண்டாம்.

குரல் 1: (சேய் எலி)

ஆண்பிள்ளை நானல்லோ அன்னாய் பயமுனக்கேன்
வீண்பிள்ளை யாக்காதே விடையருளிச் செய்யுமம்மா
கும்பிட்டேன் அன்னை யுனைக் குறுக்கே நீ மறிக்காதே
வெம்பிப் புழுங்கு மிங்கு வெளியே போய் வருவெனம்மா

குரல் 2: என்று தொடர்ந்து செல்கின்றது இக் கவிதை நாடகம்.

குரல் 2: சோமசுந்தரப் புலவர் இலங்கை வளம், தந்தையார் பதிற்றுப் பத்து, நாமகள் புகழ்மாலை, சிறுவர் செந்தமிழ் , விநாயகர் பாமாலை, மரதனோட்டம்.

குரல் 1: முருகன் பாமாலை , கதிரைச் சிலேடை வெண்பா, அட்டகிரிக்கலம்பகம், சுகாதாரக்கும்மி, நல்லைத் திருப்புகழ், நல்லையந்தாதி நான் மணிமாலை.
ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

குரல் 1: ஈழத்தின் தமிழ்க்கவிதை வரலாற்றில் சிறுவர் பாடல்கள் வாயிலாக முக்கிய இடத்தைப் பெற்ற நாவலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் கி.பி.*1953*ஆம் ஆண்டு யூலை மாதம் *10*ஆம் நாள் சிவபதம் அடைந்தார்.

குரல் 2: புலவரது நற்பணியினாலே தமிழ்க் கல்வியும் சைவசமயமும் வளர்ந்தன.

கு.டிதர்சன்
தரம் 11 மாணவன்

*. நான் கேட்பது மறுக்கப்படுகிறது நான் காண்பது நினைவூட்டப்படுகிறது. நான் செய்வது விளங்கிக்கொள்ள முடிகிறது.
– சீனப் பழமொழி –

* " கல்வியே மிக்கப் பெரிய ஆயுதம் நீங்கள் அதனை உலகத்தை மாற்றப் பயன்படுத்தலாம். "

* "வாழ்வில் மிகப்பெரிய முடிவு அறிவல்ல செயற்பாடு"

* வாசிப்பவர்கள் அதிகம், யோசிப்பவர்கள் குறைவு

* "எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ, அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது "
– சுவாமி விவேகானந்தர்–

# விட்டில்கள்

மதுவால்...
கண் மயங்கி விழுந்து
பின் எழுந்து
நின்று திசை தெரியாது
தடுமாறுகின்றான்......!
திக்குகள் எல்லாம் அவனின்
இருண்ட கண்களுக்கு
இருண்டு போய்க் கிடக்கின்றன.
அதனால்
வெளிச்சம் தேடி விரைகின்றான்
முடியவில்லை
விழுகின்றான் விம்முகின்றான்
நினைவு வர.....
கொண்டு வந்த புத்தகத்தை
தேடுகின்றான்
தடுமாற்றத்திலும் தடுக்கின்றது
புத்தகம்
மீண்டும் முகத்திற் பிரகாசம்
படர்ந்தது
தொலைந்ததைத் திரும்பியெடுத்த
திருப்தி
தொலைந்து கொண்டிருக்கும்
எதிர்காலத்தை மறந்து......!

ஜெ.சுகன்யா
தரம் - 06

# The Computer

A Computer is a programmable machine that receives input, stores and manipulates data, and provides output in a useful format. First electronic computers were developed in the mid-20th century. These were the size of a large room consuming as much power as several hundred modern personal computers Modern computers based on integrated circuits are millions to billions of times more capable than the early machines and occupy a fraction of the space.

Computer can be mainly divided as Hardware and Software. Hardware refers to objects that can be actually touched like disks drives, display ,screens, keyboards, printers, boards and chips. In contrast, software is untouchable. Software exists as ideas, concepts and symbols but it has no substance.

Because of the many advantages of a computer, it has become an important household item. A computer operated by an individual without any specific computer operator is called as a personal computer (PC). A PC can be a desktop or a laptop computer and can be used at home or at office. As per the requirement of the user, softwares are installed in a PC. If advantages are considered .

One can write more effectively by means of a computer. There are tools like spelling and grammar checker thesaurus and dictionary, installed in the computer. Thus it takes less time to proofread a written document and also. there is no need to open up a dictionary book to look for meanings of words. Typing is much faster than writing on a paper. If there is a need for recognizing the sentences or paragraphs one can cut and paste and make the necessary changes. Thus overall a computer allows the user to create documents edit, print, and store them.

Using a Computer, one can remain

connected to the world through Internet. Internet is a network of computers that communicates with each other and including facilities of electronic mail (e-mail) file transferring and sharing. online chat and gaming. So the Internet allows people from around the world to share knowledge ideas and experiences in any field. E-mail is a method of communication used globally and is provided with a system of creating storing and forwarding mails. It may consist of text messages with attachments of audio- visual clips. One can also download or upload files using the Internet. There are also facilities like online chatting available on the Internet. As compared to telephonic conversation. both e-mail and online chat are cost saving. Online gaming is another important one. Many online games are available, which are of common interest for any age group. In addition one can read current news check weather conditions plan vacations and make hotel and travel reservations find out about diseases and treatment methods conduct transactions learn about specific countries, seek jobs, buy products etc through the Internet.

Now day computers are widely used for education and training purposes. In schools, computer education has been made compulsory to spread awareness about computers. As a matter of fact, computers have become a learning tool for children. Also there are many universities that provide online degrees. which is very advantageous for those people staying in the remote areas and for the disabled . In fact, online education in one of the most flexible and convenient forms of learning. One can take the benefit of such online degree programs staying at home without the need of relocation. Computers are also used for training purposes. Many companies use them to train their staffs.

However in spite of the many advantages of computers. there are some disadvantages that cannot be ignored. The easy access to information through Internet has made students lazy in terms of their education since they are able to download information without exploring their topic of research. They also use computers for mathematical tables and calculations without actually solving the problems. Even if there are some disadvantages, people should try to get advantages

P. Milaxsiya
Grade - 11

# எமது பாடசாலை

எமது பாடசாலையின் பெயர் யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம். எமது பாடசாலை அளவெட்டி என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது. இசைக்கலைஞர்கள் மலிந்த எம்மூரின் மத்தியில் இசை மணத்துடன் எமது பாடசாலை அமைந்துள்ளது.

எமது பாடசாலை 1910ஆம் ஆண்டு திரு.க. நாகமுத்து அருணாசல உடையார் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எமது பாடசாலையின் மகுடவாசகம் "வித்தை பல கல்" என்பதாகும். எமது பாடசாலை அதிபரின் பெயர். திரு. கு. ஜெகநாதன். எமது பாடசாலையில் ஏறத்தாழ 400 மாணவர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். இவர்களிற்கு 25 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள். எமது பாடசா லையில் தரம் - 01 தொடக்கம் தரம் - 11 வரையான வகுப்புக்கள் உண்டு.

எமது பாடசாலையில் அழகிய நூல்நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன உண்டு. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாகக் கல்வி பயில்கின்றார்கள். எனவே நாமும் நன்றாகக் கல்வி கற்று சிறப்புக்கள் பலவற்றையும் பெற்றிடுவோம்.

த. அரங்கஜன்
தரம் - 3

*. போர்க்களத்திலே பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக் கூட நான் சம்மதிப்பேன். ஆனால், காலம் வீணாக்கப்படுவதை , இழக்கப்படுவதை மட்டும் ஒரு போதும் நான் விரும்பமாட்டேன்."

- நெப்போலியன் போனபார்ட் -

* "ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்"

- அரிஸ்டோட்டில் -

* "தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகின்றது"

# கல்வியின் சிறப்பு

செல்வங்களிலே சிறந்த செல்வம் கல்விச் செல்வம். மனிதரிடையே பொதிந்துள்ள அறியாமையை அகற்றி நல்வழிகாட்டுவது கல்விச் செல்வ மாகும். இக்கல்விச் செல்வத்தினைப் பெற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றறிந்தவனே கண்ணு டையவனெனக் கருதப்படுகின்றான். இதனையே திருவள்ளுவரும்

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்று கூறுகின்றார். கல்வியை நாம் இளமைப்பருவத்திலே கற்க வேண்டும். இதனையே "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழி கூறுகின்றது. மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டிய வற்றைக் கற்று அதன்படி ஒழுகுதல் வேண்டும்.

உலகிலே உள்ள செல்வங்கள் இரண்டு ஆகும். ஒன்று பொருட் செல்வம் மற்றை யது கல்விச் செல்வம். பொருட்செல்வம் மற்றையவர்களுக்கு கொடுக்கும் தோறும் குறைவடைந்து விடும். ஆனால் கல்விச் செல்வம் பிறருக்கு கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும். இது நெருப்பாலும் அழியாது. கள்வரால் திருடவும் முடியாது. இதனாலே தான் கல்விச் செல்வத்திற்கு நிகர் வேறு எதுவும் இல்லை என்று கூறப்படுகின்றது. எனவே மாணவர்களாகிய நாங்கள் கல்விப் பெருஞ் செல்வத்தினைப் பேணிப்போற்றி அதனை இளமையிலே கற்று அதன் பலன்கள் பலவற்றைப் பெறுவோமாக.

வோ.தனுப்பிரியா
தரம் - 03

# My Self

My name is M. Arithika. I'm eight years old. I am a SriLankan Tamil Girl. I'm studying at J/Alaveddy Arunasalam Vidiyala yam. I'm in Grade - 3. My favorite subjects are maths and English. My favorite food is cake.

My father is a farmer. His name is Mathijalakan. My mother is a house wife. Her name is kalavathy. I have a brother and a sister I want to become a doctor.

M. Arithika
Grade - 03

# எனது ஏணி

1999 இல் அருணாசல அன்னையின் மடியில் தவழத் தொடங்கிய நான் ஆரம்பத்தில் கல்வி, விளையாட்டுக்க ளில் சிறந்து விளங்கியதுண்டு. பாடசா லையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லு நர் போட்டிகளில் பல்வேறு போட்டி களில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றிருந்தேன் எனினும் 2004 இல் எமது பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியராக திரு.சி.திருமாவளவன் அவர்கள் இணைந்து கொண்ட பின்னரே விளையாட்டுத்துறையில் எனது முழு ஆற்றலும் வெளிக்கொணரப்பட்டது.

2004 இல் எமது பாடசாலையில் இணைந்து கொண்ட இவர் எனக்கிருந்த ஆர்வத்தையும் ஆற்றலையும் அறிந்து கொண்டு எனக்கு தொடர் பயிற்சியை வழங்கியதுடன் என்னை உற்சாகப்ப டுத்தியும் வந்தார். இதன் பயனாக 2005 இல் முதன்முதலாகக் கோட்டமட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றதுடன் அதிலும் உயரம் பாய்தலில் 1ஆம் இடம், நீளம் பாய்தலில் 2ஆம் இடம் பெற்று அவ்வாண்டு 13 வயதுப்பிரிவில் வலய மட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டேன். அத்துடன் நீளம் பாய்தலில் மாவட்ட மட்டத்தில் 1ஆம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பையும் பெற்றி ருந்தேன். இதேபோல தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் தடகளப் போட்டி களில் மிளிர்ந்து விளங்க காரணமாக இருந்தவர் எமது உடற்கல்வி ஆசிரியரே நேரகாலம் பாராது தொடர் பயிற்சி வழங்கி ஊக்கமளித்தவர் அவரே. தடகளப் போட்டிகளில் மட்டுமல்லாது பெருவிளையாட்டுக்களிலும் எம்மு டைய திறமைகளை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகளை உருவாக்கிக் களம் பல காண வைத்து தேசிய மட்டத்திலும் கால் பதிக்க வைத்தவர் இவர் இதனால் தேசியத்தில் எமது பாடசாலையின் பெயரை விளங்கச் செய்தவர் இவற்றுக்கெல்லாம் இவருடைய சகோதரர் திரு.சி.மயூரன் அவர்கள் உறுதுணையாக இருந்து எமக்குப் பயிற்சி வழங்கி வெற்றியீட்டு வதற்கு காரணமாக இருந்தார்.

விளையாட்டுப் பயிற்சியை வழங்கு வதுடன் நின்று விடாது அவ்வப்போது எனக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தினார். "விளையா ட்டுடன் நின்று விடாது கல்வியிலும் சிறந்து விளங்கினால் தான் விளையாட் டில் பெற்ற வெற்றிகளின் பயன் கிடைக்கும்" என்று அடிக்கடி கூறுவார். இதனால் நான் கல்வியிலும் ஆர்வம் காட்டினேன் இதற்கு எனக்குத் கற்பித்த பாட ஆசிரியர்கள் சிறந்த வழி காட்டி களாகத் திகழ்ந்தார்கள். அதிபரின் உற்சாகமான வார்த்தைகள் எனக்கு புத்தூக்கியாக அமைந்தன. இவற்றா லேயே நான் கல்வியிலும் சிறந்து விளங்க முடிந்தது.

இன்று G.C.E.O/L பரீட்சையில் சித்திபெற்று யா/ அருணோதயக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந் துள்ளேன். என்றால் அதற்கு சிறுவயதி லிருந்தே எனக்கு ஏணியாக இருந்தவர் எனது உடற்கல்வி ஆசிரியர் திருமாவ ளவன் அவர்களே. தன்னலம் பாராத இவரது பணி தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

ர.நிருஜன்
2009 G.C.E O/ L மாணவன்

# மாணவனது பூரண வளர்ச்சியிற் பாடசாலையின் பங்கு

"மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி" என்பது சுவாமி விவேகானந்தர் கூற்றாகும். உலகிலுள்ள நல்லனவற்றைத் தேடல் மூலம் பெறும் முயற்சி கற்றல் ஆகும். கற்றல் என்பது சுற்றியுள்ள உலகின் கோலங்களைப் பார்த்தலாகும். "கற்பித்தல் என்பது ஆசிரியரின் கூட்டான புரிந்துணர்வின் மூலம் மாணவர்களைப் பார்க்கச் செய்வ தற்கான நிலைமைகளை உருவாக்குதல் ஆகும்" என்கிறார் நோபல் பரிசு பெற்ற ஜோன் போலனி (John Polony) ஆம்! மனிதர்களின் இயலறிவையும். திறன் களையும் ஆற்றல்களையும், விவேக புத்தியையும், மனப்பாங்கையும் வெளிக் கொணர்வது கல்வியாகும். வாழ்க் கையில் உயருதல் என்னும் குறிக்கோள் கல்வி மூலமே எய்தப் பெறுகிறது. பண்புகளையும் திறன்களையும் உயர்த்தி வளர்ப்பதன் மூலம் மனிதனின் பூரணமான ஆளுமை வளர்ச்சிக்கு கல்வி வழி செய்கிறது. அதேவேளை சமுதாய கலை கலாசார ஆன்மீக, பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி உயிர் நாடியாக உள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், கவின்கலை, விழுமியம். பண்பாடு, சமூகம், உடற்கல்வி., ஆன்மீகம் எனப் பல்வேறுகூறுகளும் இணைந்த கல்வியாகக் கல்வியை வழங்கும் போது, ஒரு தேசத்தின் நலன், உறுதிநிலை, சுபீட்சம் என்பன வலுப்பெறும் ஏற்றத் தாழ்வுகள் அற்ற, வேற்றுமை பேதங்கள் இல்லாத , சமத்துவம், சகோதரத்துவம், நீதி, சத்தியம், நேர்மை என்னும் விழுமியங்கள் நிறைந்த ஒரு உலகை நிர்மாணிக்கக் கல்வி கருவியாக உள்ளது.

இத்தகைய கல்விச் செல்வத்தை வழங்கும் பாடசாலை ஒரு பிள்ளையி னுடைய வளர்ச்சியில் பெரும் பங்கினை வகிக்கின்றது என்றால் மிகையில்லை. இப்பாடசாலைச் சூழலே மாணவன் ஒருவனை திறமையுடையவனாகவும், அறிவுடையவனாகவும் ஆக்குகின்றது. பிள்ளையின் உளநல விருத்திக்கும். அறிவு மேம்பாட்டிற்கும், பாடசாலையே பெரும் பங்காற்றுகிறது. மாணவனது எதிர்காலத்தைத் திட்டமிடுவதால் பாடசாலைக் கல்வியே கணிசமான பங்கினை வகிக்கின்றது.

ஒரு பிள்ளை எத்தகைய குடும்பச் சூழலில் இருந்து வந்தாலும் அவனிடம் உள்ள ஆற்றல்களையும் நற்பண்புகளை யும் விருத்தி செய்வது பாடசாலையே ஆகும். "என்னிடம் உடல் நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள். அவர் கள் எத்தகையவர்கள் ஆக வேண்டும் என்று முன்னரே கூறுங்கள். பரம்பரை பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை" என்ற வாட்சன் (Watson) குற்ற இங்கு நினைவு கூரத்தக்கது. இப் பாடசாலை யானது கற்றல் செயற்பாட்டையும், ஒழுக்கச் செயற்பாட்டையும் ஒருசேர வலுப்படுத்துகிறது. தனியே கல்வியில் மட்டுமல்லாது பூரணமான நிறைவான

மனிதனை உருவாக்கும் நிறுவனமாக பாடசாலை விளங்குவது கண்கூடு.

இக் கல்விசார் செயற்பாட்டை முன்னெடுப்பவர்களாக அறிவுசார் வழிகாட்டிகள் அனைவரும் இதில் அடங்குவர். அதிபர், ஆரிரியர்கள், மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள், கல்வி அதிகாரிகள் ஆகிய உயிரினம்சார் சூழலும் பௌதீக வளங்களான பாடசாலை அழகு, கவர்ச்சி, பூங்காக்கள், நூலகம், மைதானம் ஆகியனவும் இவற்றுள் அடங்கும். இவ்வாறான வழிகாட்டிகள் அனைத்தும் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிப்பனவாக அமையும். இவர்களின் செயற் பாட்டிலேயே மாணவர்களின் முன்னேற்றம் அமையும். இவர்களிடத்தே உடையவர்களாகவே காணப்படுபவர். இத்தகைய கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்துமாணவனை வழிப்படுத்தும் பணியில் அதிபர், ஆசிரியர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். அதிபர் தெளிந்த அறிவு, சமநிலை, தொடர்பாடற்றிறன், நடுநிலை, பிறகுக்காகச் சிந்தித்தல், முயற்சிகளில் முன் நிற்றல், வழிகாட்டுதல், நலன்களுக்காக இடர்களைத் துணிவுடன் எதிர்கொள்ளல் போன்ற தலைமைத் துவப்பண்புடையவராக இருப்பது சாலச்சிறந்தது என்பது யாவரும் கண்ட உண்மை. இத்தகைய தலைமைத்துவத்தின் கீழ் வளரும்மாணவர்களும் இவ்வாறான சில பண்பகளையாவது கைக்கொள்பர்களாக வளருவார்கள் என்பதில் ஐயமில்லை. கற்றலை மேம்படுத்தல் தொடர்பாக வகுப்பறையின் சமூகச் சூழல் முக்கியமானது பாடசாலை முகாமைத்துவத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இதனை உருவாக்குவதில் பாரிய பொறுப்பு உண்டு மாணவர்கள் கற்கக்கூடிய சூழலை உருவாக்குதல் பாடசாலையின் பொறுப்பாகும். இத்தகைய கொள்கை களை நடை முறைப்படுத்தினால் மாணவன் நல்ல தொரு தலைமைத்துவம் உடையவனாக மிளிர்வான்.

ஆசிரியர் எனப்படுபவர்கள் தேவையான திறன்களை வளர்ப்பவர்களாகவும். நம்பிக்கை ஊட்டுபவர்களாகவும் நல்மனப்பான்மையை வளர்ப்பவாக்ளாகவும் இருத்தல் வேண்டும் கற்பித்தல் தொழிலில் ஈடுபடுவோர் அத்தொழில் தொடர்பாக எழுகின்ற சமூகச் சவால்களை எதிர்கொள்ளவும் அதற்கு முகம் கொடுக்கக் கூடிய கல்விசார்திறன் களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தனியே பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதிலும் பார்க்க அவர்களின் அகநலன்களிலும் கரிசனை கொள்ள வேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். தம்மிடம் கற்கும் மாணவர்களின் கற்கைக்கு வகை கூறும் பொறுப்பும் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. ஆசிரியரானவர் வினைத்திறன் கொண்டவராகவும், மாணவர்களை மகிழ்வுடன் வைத்திருப்பவராகவும் வாழ்நாள் முழுவதும் மாணவர்கள் கற்க விரும்பும் மனப்பான்மையை வளர்ப்பவர்களாகவும் ஆசிரியர் இருந்தால் ஒரு மாணவன் முழு மனிதனாக நிறைவடைவான். கற்போனின் தேவையைப் பூர்த்திசெய்பவராக ஆசிரியர் மிளிர்வாரேயாகில் மாணவன் சிறந்த நிலையை அடைய முடியும்.

ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் மாணவர்களின் முன்மாதிரியாக (Model) விளங்கினால் அதுவே மாணவனைக் கற்றற் செயற்பாட்டில் மகிழ்வுடன் ஈடுபட வழிசமைக்கும் எனலாம். நிறைவான கல்வியறிவுடையவராகவும் தெளிவான சொல்லும் செயலுமுடைய வராகவும் மனிதாபிமானத்துடன் நோக்குபவராகவும் அறிவையும் ஆற்றலையும் மாணவர் உயர்ச்சிக்காகப் பயன்படுத்துபவராகவும் அமைந் தால்மாணவர்களை ஊக்குவித்தலும் ஆசிரியர்களது மிக முக்கியமான பணி ஆகும். மாணவர்களைப் பாராட்டுதல், கூட்டுக் கல்வி, கல்விச் செயற்பாடுகளில் ஆர்வத்தை வேண்டுதல், கற்கும் விடயங் களுக்கான பின்னூட்டல், சுயநம் பிக்கையை வளர்த்தல், துணிவாற்றலை வளர்த்தல் முதலானவை மாணவனின் ஆளுமையை மேலும் வலுப்படுத்து வதாக அமையும். பிள்ளைகள் வாழ்க் கைக்காலம் முழுவதும் கற்க வேண்டிய வர்கள். அவர்களுடைய மொழித்திறனை வளர்த்தல், புலன்களைத் தொழிற்பட வைத்தல், பரந்த அறிவை ஏற்படுத்தல். உறவாடல் திறனை வளர்த்தல், சமூகத் திறன்களை வளர்த்தல், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்த்தல் ஆகிய ஆறு அம்சங்களும் மிக முக்கியமானவை ஆகும். சமூகச் சூழலோடு பொருத்தி வாழக் கற்பித்தலும் அதற்கேற்ப வழி நடத்தலும் பாடசாலையின் கடமை யாகும்.

1. அறிவதற்காகக் கற்றல்
2. செய்வதற்காகக் கற்றல்
3. ஒன்று கூடி வாழ்வதற்காகக் கற்றல்
4. வாழக் கற்றல்

ஆகிய நான்கு தூண்களைப் பாடசாலைக் கற்றல் மூலம் மாணவன் பெற வழிசெய்யப்பட வேண்டும். இத்தகைய நல்வழி நடத்தைகளோடு ஒருமாணவன் வழிப்படுத்தப்படு வானே யானால் அவன் அச்சமூகத்தின் நற்பிரசையாக விளங்குவது திண்ணம். பாடசாலையின் முக்கிய கடமை மாணவனை விளையாட்டினூடாகக் கற்பித்தலை முன்னெடுத்துச் செல்வ தாகும். வகுப்பறையையும். விளை யாட்டு மைதானத்தையும் இதற்காக பயன்படுத்தலாம். உடல் ஆரோக்கி யத்திற்கும். உடற் சமநிலைக்கும் இவ்விளையாட்டு மாணவர்களுக்கு உதவும். விளையாடடுப் போட்டி களூடாக மாணவர்களுக்குச் சில நற்பண்புகளையும் வளர்க்க முடியும். பொறுமை, விட்டுக் கொடுத்தல், வெற்றியையும் தோல்வியையும் சமனாக மதிக்கும் பண்பு ஆகியனவற்றை இதிலிருந்து பெறலாம்.

அடுத்து பாடசாலையில் நடைபெ றும் காலைநேரப் பிரார்த்தனைகளும். கூட்டங்களும் மாணவர்களுக்கு முக்கிய மானவை. இப்பிரார்த்தனையின் போது மாணவர் ஒழுங்கைப் பேணும் தன்மை, அதிபர், ஆசிரியர்கள் கூறும் நற்சிந்தனை களைக் கிரகிக்கும் தன்மை, சக மாணவ ருடன் நட்புறவாகும் தன்மை ஆகியன வற்றைப் பெற முடியும்.

மாணவர்களுக்கான பாடசாலை நூலகம் மிகவும்முக்கியமானதொரு வளர்ச்சிப் படியாகும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பதற் கிணங்க இந்நூலகத்தின் பயன்பாடு அமைதல் வேண்டும். சிறு வயதிலிருந்தே வாசிப்பதற்குத் தூண்டுவதன் மூலம் கல்வியில் மேன்மையுற வழிகாட்ட

லாம். பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் முக்கியமான தொன்றாகும். ஏனெனில் மாணவர்களது நிலைமைகளை இவ்விரு பகுதியினரும் அறிந்திருப்பது திண்ணம். இவ்விரு பகுதியினரும் கலந்துரையாடும் போது பிள்ளைகளில் உள்ள குறை நிலைகளை அறிந்து அதற்கேற்ப வழிநடத்த முடியும். பாடசாலைக் கற்றலில் முக்கியமானது ஒழுக்கமுடைய மாணவனை உருவாக்குவதாகும். அன்பு, நீதி, சத்தியம். தூய்மை உண்மை, ஜீவகாருண்யம், பெரியாரைக் கனம்பண்ணல். மனிதாபிமானம் பேணல் போன்ற நற்குணங்களை வளர்த்லும் முக்கிய கடமையாகும். கல்வி மனித ஈடேற்றத்துக்கும் கருவியாக உள்ளது. இத்தகைய ஒழுக்கக் கல்விதான் ஒருவனை வாழ்க்கையில் உயர்ச்சியடையச் செய்யும். நல்ஒழுக்கம், நன்நடத்தை என்பன சமூகத்தில் ஒருவனை உயர்ந்தவனாகக் கருத வைக்கின்றது. அத்தகைய வாழ்வுதான் ஒருவன் நல்லவன் என்பதை ஏற்றுக் கொள்ளும்.

பாடசாலையின் முக்கியமான பணியாக அமைவது சமய நெறி வழிகளில் மாணவர்களை வழிப்படுத்துவதாகும். இதற்கு காலைப்பிரார்த்தனைகளும் இவற்றுக்கு உதவும். மனித நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது சமயம். மனித ஈடேற்றத்துக்காக மனித விழுமியங்களையும், வாழ்க்கைப் பெறுமானங்களையும் அடைய வைப்பது சமயமாகும். ஒருவரை ஒருவர் மதித்து அன்பு உண்மை, நீதி, நடுநிலைமை, பொறுமை, சுயநலமின்மை, கருணை அகிம்சை ஆகிய மனிதப்பண்புகளை வளர்ப்பதும் சமயமாகும். இத்தகைய கருத்துக்களை மாணவர் மனதில் பதிய வைப்பதும் பாடசாலை யின் கடனாகும். சாந்த வழிமுறை சார்ந்த பயிற்சிகளினூடாகவும் மாணவர்களை வழிப்படுத்த முடியும்.

இத்தகைய மாணவர்களை வழிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் பாடசாலைச் சமூகத்துக்கே உண்டு. மாணவர்களின் தேவைகளைக் கவனிப்பவர்களாகவும் இவர்கள் பிரச்சினைக்குள்ளாகும் போது அவர்களைப் புரிந்து செயற்படுபவராகவும் அவர்கள் கற்பதற்கு ஏற்ற வகையிலான உதவிகளை வழங்கக் கூடிய உறவுகளைப் பேணுபவர்களாகவும் அமைந்தால் அதுவே அவர்களுக்கு நாம் செய்யும் கடமையாகும். கல்வியென்பது சூழ்நிலைக்கேற்ப வாழக் கற்றுத் தருவது மட்டுமல்ல, சிறந்த சீரிய விழுமியங்களைப் பேணி உயர்ந்த முறையில் மனிதர்களை ஒழுகச் செய்யவும் வேண்டும். இதுவே கல்வியின் பண்பும் பயனுமாகும். உலகில் மானுடத்தைப் பேணும் உயரிய முழு மனிதனை ஆக்குவதிற் பாடசாலையின் பங்கு பெரும்பங்காக அமையும் என்றால் அதில் மிகை யொன்றுமில்லை.

சி.ஜஜிதா
பழைய மாணவி

# உலகமயமாக்கல் (Globalization)

உலகமயமாதல் என்னும் செயன்முறையானது மனித சமூகத்தில் ஓர் புதிய விடயமல்ல. அது மனித வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. எனினும் இதனுடைய வளர்ச்சி வேகமானது என்றுமில்லாதவாறு சமகாலத்து உலக மக்களது வாழ்வியலில் பல மாறுதல்களை ஏற்படுத்தி உள்ளது. மக்களும் இம்மாற்றத்தை விரும்பி ஏற்பவர்களாகவே உள்ளனர். இதனால் பரந்த இப்பிரதேசமானது பூகோளக்கிராமமாக (global Village) மாற்றங் கண்டுள்ளது. இந்த வகையில் உலகமயமாதல் என்னும் பதமானது கடந்த 4 தசாப்தங்களாக வலுவிழந்து வந்துள்ளது. இருப்பினும் 90களின் பின்னர் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பதம் உலக மக்களது வாழ்வியலில் ஏக ஒழுங்கை உருவாக்கி நிற்கிறது. அதாவது உலகம் முழுவதற்குமான ஒரே சமூகப் பண்பாட்டு ஒழுங்குகளை வேண்டி நிற்கிறது. இதனால் உலகில் உள்ள ஓர் நாடு தனக்கெனத் தனித்துவங்களைக் கொண்டிருந்தாலும், அவற்றில் இருந்து நீங்கி உலகில் ஒரே சமூக முறைமையை உருவாக்குகின்றது. இது உலகமுறைமை (World system) யாகப் பார்க்கப்படும். உலகமயமாதல் தொடர்பாகப் பல்வேறு அறிஞர்களும் வேறுபட்ட வகையான வரைவிலக்கணங்களைத் தருகின்றனர். வோட்டர்ஸ் (Warders 1995) என்பவர் உலகமயமாதல் என்பதனைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தினார்.

"சமூக மற்றும் கலாசார செயற்பாடுகள் மீதானதும் சர்வதேச பொருளாதார முறைகளில் ஒன்றான சமவுடைமை முறை பின்தள்ளப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகள் மீதானதுமான, புவியியல் ரீதியான இடையூறுகள் மற்றும் இறுக்கங்கள் தளர்வடையும் அல்லது தளர்த்தப்படும்" என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வரைவிலக்கணம் ஆனது உலக நாடுகளிடையே சமவுடைமைப் பொருளாதாரம் மற்றும் புவியியல் இடர்களும் உலகமயமயமாக்கலுக்கு இடையூறாக இருப்பதை கூறியுள்ளமை கவனிக்கத் தக்கதாகும்.

டேவிட் ஹெல்ட் (David Held) என்பவர் உலகமயமாக்கம் பற்றி பின்வருமாறு கூறினார் "ஒரு தனிஅரசின் (பலம் வாய்ந்த அரசுகளினதும்) கட்டுப்பாட்டுக்கு அப்பால் விரிந்து செல்கின்ற ஒரு உலகளாவிய பொருளாதார முறைமையின் எழுச்சியாகும். இவ்வமை

ப்பினுள் இடம்பெறுகின்ற நாடுகளுக் கிடையிலான இணைப்பு வலைப் பின்னல்களினதும், தொடர்பாடல்க ளினதும் விஸ்தரிப்பு மீது குறித்த அரசுகள் மிகச்சிறிய கட்டுப்பாட்டை மாத்திரம் செலுத்தலாம். சர்வதேச நிறுவனங்களினது அபரிதமான வளர்ச்சிபலம் வாய்ந்த அரசுகளின் அதிகாரத்தையும் குறைத்து விடு கின்றது. உலகளாவிய இராணுவ ஒழுங்க மைப்பின் எழுச்சி அரசுகளுக்கும் அவற் றின் மக்களுக்கும் கிடைக்கக் கூடிய கொள்கைகளின் மீதான செயலைக் குறைத்து விடுகின்றன"

இந்த இரண்டு அறிஞர்களது வரைவிலக்கணங்களும் உலகமயமாதல் என்பது உலக மக்களிடையே அவர்க ளது பொருளாதாரம், அரசியல், சூழல், சமூக, பண்பாடு போன்ற துறைகளு க்கிடையே மாற்றங்களை ஏற்படுத்தும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் உலகமயமாதலானது உலக மக்களுக்கிடையே மேற்கூறப்பட்ட துறைகளை மையப்படுத்திய தான சமூக வலையமைப்பை (Social Network) உருவாக்கியுள்ளது. இதனால் இக் கட்டுரையானது உலகமய மாக்க லின் வகைகள், அவை ஒவ்வொன்றும் சமூகத் தின் வெவ் வேறுபட்ட துறைகளிடத்தே ஏற்படுத்திய விளைவுகளை மையமாகக் கொண்டு அவற்றை ஆராயும் நோக்கிலே எழுதப்பட்டுள்ளது.

## உலகமயமாக்கலின் வகைகள் (Types of Globalization)

உலகமயமாதல் எனும் இப்பதம் மூன்று பிரதான வகைப்படுத்தலுக்குள் பார்க்கப்படுகிறது.

1. காலனித்துவ உலகமயமாதல்
2. நிறுவன ரீதியான உலகமயமாதல்
3. திறந்த பொருளாதார உலக மயமாதல்

இங்கு காலனித்துவ உலகமயமாதல் என்பது உலகின் ஒரு நாடு பிற நாடு களைப் பின்பற்றி தமது மதம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பவற் றினைப் பரப்புவதனைக் குறிக்கும். இது உலகளாவிய ரீதியில் தற்போது குடி வரவு, குடிப்பெயர்வு மூலம் சாத்தியப்ப டுகிறது. நிறுவன ரீதியான உலகமய மாதல் என்பது உலகின் முதலாம் உலகநாடுகள் (மேலைத்தேய நாடுகள்) தமக்குக் கீழிருக்கின்ற 3ஆம் உலக நாடுகளிற்கு தமது மதம், மொழி, கலாசாரம் என்பவற்றைக் கையளிப்ப தோடு, அவர்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களையும் அவற்றிற்கு வழங்குவதைக் குறித்து நிற்கிறது. மேலும் திறந்த பொருளாதார உலகமய மாதல் என்பது ஒரு நாடு தனது பொருளாதார எல்லைகளைத் தமது நாட்டுடன் மட்டுப்படுத்தி விடாது. அதனைத்திறந்து விட்டு பிற நாடு களோடு எதுவித தங்கு தடைகளும் இன்றி பொருட்கள், சேவைகளைப்

பரிமாற்றம் செய்வதைக் குறிக்கும்.இதன் மூலம் ஒரு நாடு தன்னிடம் உள்ள மூல வளங்களை ஏனைய நாடுகளுக்கு விஸ்தரிப்புச் செய்ய முடியும். இந்த வகையில் இலங்கையில் கூட 1978ஆம் ஆண்டு திறந்த பொருளாதார முறை உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

### உலகமயமாதலின் உபபிரிவுகள்

உலகமயமாதல் என்பதை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் பலர் ஆராய்ந்துள்ளனர். இவர்களுள் "வாங்ஹீயாகியோங்" (1993) குறிப்பிடத்தக்கவர். இவர் உலகமயமாதல் உலக மக்களுக்கிடையே ஏற்படுத்திய மாறுதலகளை அடிப்படையாகக் கொண்டு 4 உபபிரிவுகளை இனங்காட்டியுள்ளார்.

1. உயிரின ரீதியான உலகமயமாதல் (Biological Globalization)

இது மனித உயிரினங்களிலும், தாவரங்களிலும் ஏற்படுத்தி வருகின்ற மாற்றங்களை உள்ளடக்குகின்றது. குறிப்பாக இன்று பொருட்கள் சேவைகள், போக்குவரத்து, சுற்றுலாத்துறை இலத்திரனியல் தொலைத் தொடர்பு வளர்ச்சியால் மனிதனிலும் ஏனைய விலங்குகள், தாவரங்களுக்கிடையேயும் பாரிய மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. இதில் உலகளாவிய ரீதியாக வளர்ந்து வருகின்ற திருமண நடைமுறைகள் உயிரியல் பரிமாற்ற முறை விருத்தியாக இனங்காண முடியும்.

2. பொருளாதார ரீதியான உலகமயமாதல் (Economical Globalization)

உலக மக்களிடையே ஏனைய உலகமயமாதலை விட அவற்றிற் கெல்லாம் அடிப்படையாக இவ்வகை காணப்படுகின்றது. இது சர்வதேச வர்த்தகத்தை மையப்படுத்தியதாக உள்ளது. இங்கே உலகில் உள்ள ஒரு நாடு தன்னுடைய அரசியல் எல்லைக்கு அப்பால் உள்ள ஏனைய உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் கட்புலனான, மற்றும் கட்புலனாகாத பொருட்கள், சேவைகளின் சட்டரீதியான, மற்றும் சட்டரீதியற்ற பரிமாற்றல்கள் அடங்கும். குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள், நாணயமாற்று நடவடிக்கைகள் நேரடி, மறைமுக முதலீடுகள், வெளிநாட்டு வர்த்தக உதவிகள், பொருளாதாரத் திட்டமிடல்கள் முதன்மை பெறுகிறன. மேலும் வன்நாணய (Hard Currency) உருவாக்கமும் முதன்மை பெறும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக உலகவங்கி (IBRD) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) என்பன தொழிற்படுகின்றன.

3. தொழினுட்ப ரீதியான உலகமயமாதல் (Technical Globalization)

இவ்வகையானது இலத்திரனியல் ரீதியான தொடர்பாடல் சாதனங்களால் உலக மக்களை ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தலைக் குறிக்கும். இதனால் உலகளாவிய ரீதியான கலாசாரத்தை வடிவமைக்கும் நிலை உருவாகியுள்ளது.

தொலைக்காட்சி அலை வரிசைகள், கணனி, செய்தித்தாள், சஞ்சிகைகள், வானொலி போன்ற ஊடகங்கள் மட்டுமன்றி இலத்திரனியல் சாதனங்களும் முதன்மை பெறுகின்றன. இவற்றுள்ளும் தற்போது ஹாட்டிஸ்க் (Hard Disk) உற்பத்தியும், அதன் செல்வாக்கும் உலக மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

4) சமூக ரீதியான உலகமயமாதல் (Social Globalization)

இவ்வகை உலகமயமாதல் உட்பிரிவானது மேற்கூறிய உலகமயமாதல் பிரிவுகளினால் ஏற்பட்ட ஒன்று குறிப்பாக மனிதனது கலை, கலாசார, சமூக விடயங்களில் கட்டுப்பாடற்ற நிலையை உருவாக்கியுள்ளது. இங்கு அனைத்து நாட்டுக் கலாசாரங்களையும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் மனநிலையை உருவாக்கியுள்ளது. மேலும் இவை பண்பாட்டுப் பரவல் மூலம் சாத்தியப்படுகிறது. இவை வெகுசன ஊடகங்கள், சமூக, பொருளாதார, அரசியல் சூழமைவுகளால் சாத்தியப்படும் ஒன்றாக உள்ளது.

இந்த வகையில் சமூகவியல் நோக்கில் உலக மக்களிடையே உலகமயமாதல் ஏற்படுத்தியுள்ள துறை ரீதியான தாக்கங்களை நோக்கலாம்.

**பொருளாதாரம்:-**

ஒரு நாட்டின் பொருளாதார அம்சங்கள் திறந்து விடப்பட்ட நிலையில் (தாராளமயமாக்கல்) உலகப் பொருளாதார ஒருமுகப்படுத்தலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக உற்பத்திகளையும், காரணிச் சந்தைகளையும் உலகளாவிய முறையில் ஒருங்கிணைத்தமையால் பொருளாதார அபிவிருத்தி, வர்த்தகப் பெருக்கம், உற்பத்திப்பெருக்கம், வேலைவாய்ப்பு பெருக்கம் என்பன ஏற்பட்டுள்ளன. இதனால் புதிய நுகர்வோர் கலாசாரம் உருவாகி யுள்ளது. இலங்கை போன்ற சிறிய நாடுகளும் இதனால் பாரிய சந்தை வாய்ப்பு மூலம் இலாபங்களை அடைந்துவருகிறது. இருப்பினும் பொருளாதாரங்கள் ஒன்றில் ஒன்று தங்கியிருத்தலும் அதனால் ஏற்படும் பலவீனங்களும் உணரப்பட்டுள்ளன.

**அரசியல்**

உலகமயமாதல் அரசியலில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அதிகாரப் பிரயோகம். அதிகார ஒருமுகப்படுத்தல். தொடர்பான சமூக ஒழுங்கு முறையினைக் குறித்து நிற்கிறது. மக்களையும், பிரதேசங்களையும் கட்டுப்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறது. ஜனநாயக விழுமியக் கருத்துக்களின் பரவல், மனித உரிமைகள் பற்றிய சிந்தனை வளர்ச்சி, பரவல் என்பனவும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் அரசியல் ரீதியில் எதிர்மறைவான எதிரிமையான விளைவுகளையும் உலகமயமாதல் நாடுகளுக் கிடையே ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக ஆயுதக் கலாசாரம் குறிப்பிடத்தக்க

பாதிப்பை உருவாக்குகிறது. 3ஆம் உலக நாடுகள் முதலாம் உலக மற்றும், இரண்டாம் உலக நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையினைத் தோற்றுவித்துள்ளது. கூடவே இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, ஈராக் போன்ற பின்தங்கிய நாடுகளும் அணுவாயுத ஆராய்ச்சிகளூடாக அவற்றை உற்பத்திசெய்து வருகின்றன. இதனால் வளர்ந்து வரும் பல நாடுகள் உலகளாவிய அமைதி நிலைக்கு அச்சுறுத்தலை உள்ளாகி வருகின்றன.

## சூழல்

உலகின் காலநிலை, மற்றும் இயற்கை வளங்களின் காப்பு, உலக சுகாதாரம் போன்ற விடயங்களுக்கு முக்கியம் கொடுக்கும் அதேவேளை உலகளாவிய ரீதியில் வளச் சுரண்டல் களும் தாராளமாக இடம் பெற்று வருகின்றன.

## சமூகமும் பண்பாடும்

சமூகத்தில் பண்பாடு என்பது மக்கள் வாழ்வியலோடு நெருங்கிய ஒன்று. இது ஒவ்வொரு நாடுகளுக் கிடையிலும் தனித்துவமாக உள்ளது. இங்கு பண்பாடு என்பதற்கான வரை விலக்கணம் ஒன்றைக் குறிப்பிடுதல் சிறப் பானது. "சமூகத்தில் ஒரு உறுப்பினர் என்ற முறையில் ஒரு மனிதன் பெற்றிருக்கும் அறிவு, நம்பிக்கை, கலை நெறிமுறைகள் சட்டங்கள், வழக்கங்கள், திறமை மற்றும் பழக்க வழக்கங்கள் முதலியவை உள்ளிட்ட தொகுதியே பண்பாடாகும். (Sir Edward B. Tylor - 1871) இத்தகைய பண்பாடு உலகமயமாதலால் புதிய நுகர்வு வடிவங்கள் (நுகர்வுப் பண்பாடு Contsumer culture) ஒவ்வொரு பண்பாட்டிலும் உணரப்படுகிறது.

மக்களின் பண்பாட்டு வடிவங்களில் உலகமயமாதல் தாக்கம் மிகுதியாக உள்ளது. சிலர் உலகமயமாதல் பண்பாட்டை பூச்சியத்தன்மைக்கு கொண்டு வருகின்றது எனவும் கூறுகின்றனர். எனினும் உலக மயமா தலை விரும்பி சமூகம் ஏற்கும் போது உள்நாட்டுப் பண்பாடு சரிவடையாது உலகப் பண்பாட்டை உருவாக்க முடியாது என்கின்றனர். இந்த வகையில் பண்பாட்டின் வகைகளில் ஒன்றான பொருள் சாராத பண்பாடான, தொட்டுணர முடியாத பண்பாட்டுக் கூறுகளான நம்பிக்கை, மனப்பான்மை, சட்டம் என்பன அதிகளவில் அழுத்தம் கொடுக்கப்படுகின்றன. மேலும் பொருள்சார் பண்பாடுகளும் (தொட்டுணரக் கூடிய பொருட்களை மையப்படுத்தியதாக மாற்றம் கண்டு வருகின்றன. குறிப்பாக நவீன தொழி னுட்ப சாதனங்களின் வளர்ச்சி, பொருளாதார இடம்பெயர்வு என்பது தனித்துவப்பண்பாடுடைய நாடுகளை பண்பாட்டு ஓரினத்தன்மைக்கு இட்டுச் செல்கின்றது. சில ஆய்வாளர்களின் கருத்துப்படி உலகமயமாதல் சமூகத்தில் பொருள்சார் பண்பாட்டிலேயே அதிகளவு செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறாக உலகமயமாதல் ஆனது பல துறைகளையும் உள்ளடக்கியதாக உலக தேசங்களின் எல்லைகளைச் சென்றடைதல் தவிர்க்க முடியாத ஒன்றாக சமகால உலகில் காணப்ப

டுகிறது. எனினும் ஒவ்வொரு நாட்டு மக்களும் தமது தனித்துவங்களை எளிதில் மாற்றிக் கொள்ள விரும்பாமலும் தன் ஒருமைப்பாடு (Self identity) உடையவர்களாகவும் உள்ளனர். மேலும் இது ஓர் தொடர்ச்சியான செயன் முறையாக இடம் பெற்றுக் கொண்டேதான் இருக்கின்றது. மூன்றாம் உலக நாடுகளில் உலகமயமாக்கலின் செல்வாக்கு கிராம மட்டத்திலும் இன்று செல்வாக்குப் பெறத் தொடங்கி விட்டது.

## உசாத்துணைகள்


1. உலகமயமாக்கல், பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு சித்திரை / வைகாசி இதழ், 3 2002

2. உலகமயமாதல், மானுடம், இதழ் - 3, சமூகவியல் சமூகம் . யாழ் பல்கலைக்கழகம் 1999/2000

3. உலகமயமாக்கலின் மறுபக்கம், யுனெஸ்கோ கூரியர், கார்த்திகை, 2000

4. T.K. கிரிதரன் உலக நாடுகளில் உலகமயமாக்கம் - யாழ்ப்பாணப் புவியியலாளன் இதழ் 14 - 15 புவியியற்கழகம் 2000 - 2001

5. மான்/பிரட்பி, ஸ்டெகர் உலக மயமாக்கல் அடையாளம் - சென்னை 2006



நி.பாஸ்கரன்
சமூகவியற்துறை,
2ஆம் வருடம் யாழ்.பல்கலைக்கழகம்.

# காயங்கள் ஆறவில்லை

எரிந்த காடுகள் தணிந்திருக்கின்றன
வானம் புகை நீங்கித் தெரிகிறது
இன்னும் சூரியன் வரவில்லை
ஆயினும் ஒளிர்கிறது ஆகாயம்.

எம்மவர்களே....
காற்றுக் குளிர்ந்து வீச
இதயமும் குளிர்கிறது
விம்மும் இதயத்தைச் சற்று அமைதிப்படுத்துங்கள்
இது அமைதியுகம்.
அன்பு
கருணை
நீதி
சமாதானம்
நல் வாழ்க்கை.......

அழியுண்ட ஊர்கள்
இடிபாடுகளின் மேல் மிதக்கும்
கண்ணீருக்குள் மூழ்கிய நகரங்கள்
துயர்ச் சேற்றின் அடியாழத்தில்
முனகலுடன் புதையுண்ட வாழ்வு
எல்லாம் மீண்டும் எழுந்திடுமென்று
செய்திகள் வருகின்றன.

வீதியில் இறங்கினால்
வீண் துன்பம் வருமென்று
வீட்டிற்கு உள்ளேயே
வீண் பொழுது போக்கினோம்!

தினமும் தினசரியில்
திடுக்கிடும் செய்திகள்
துப்பாக்கித் தோட்டாக்கள்
துளைத்திடும் உயிர் பற்றி
ஏங்கிய காலமது!

இரவு வேளையில்
கூக்குரல் போட்டாலும்
ஊரார் வரமாட்டார்
ஊரடங்கு வேளையென்று!

அடுத்தவர் வீட்டிலே
நடப்பது தெரியாமல்
அயலில் வாழ்ந்த
அந்நியர் நாங்கள் – இப்போது
விடிவைத் தேடி பயணப் பாதையில்

நண்பன் சொல்கின்றான்
நானறிந்த வரையில் சமாதானத்தின் நிறம்
சிவப்பென்று
இன் னொருவனோ
அதன் நிறம் கறுப்பென்கிறான்.
மற்றொருவனோ – அது
மாறும் நிறங்களை இயல்பாக்கிவிட்டது எ ன்கிறான்.
அது வெடி குண்டைப் போலிருக்கிறது
என்கிறான் பிறிதொருவன்.
இல்லையது
மந்திரக் கோலாகிவிட்டது என்று வாதிடுகின்றான்.
இன்னொருவன்.
அது வெண்மையாக இருந்தால்
எவ்வளவு நல்லது என்கிறோம் நாம்.
நம்பிக்கையும்
நம்பிக்கையின்மையும் சூழ
தத்தளித்துக் கொண்டிருக்கிறது

சமாதானம்
எம்முடைய சனங்களே
சமாதானத்தின் கதி என்னவென்று பார்த்தீர்களா?
போரின் சுவையூறிய
நாக்கிலிருந்து எழும் ஆயுதம்
குறிவைத்துப் பாய்கிறது
சமாதானத்தின் மீது.

சமாதானத்தின் கருவைச் சிதைத்துவிடவே
மந்திராலோசனைகள் நடக்கின்றன ரகசியமாய்
சட்டத்தின் தந்திரவளையங்களால்
அதன் உயிரை
நசுக்கி விட முயல்கிறார்
நாணயமற்ற அரசியல் வாதிகள்.

ஆனாலும்
காயமுற்ற பறவையாக
சிறகடிக்கத் திணறுது
இன்னும் அது பிரியத்தோடு
எல்லாவற்றுக்குள்ளாலும்
தப்பியோட முயலும் ஒரு ஆட்டுக்குட்டியாக
ஒரு குருவியின் சிறகில் துடிக்கும் கனவாக
காப்பாற்று வோருக்காகத் தவிக்கிறது.
நம்பிக்கையும்
நம்பிக்கையின்மையும் சூழ
அதன் தத்தளிப்பு இன்னும் அதிகமாகிறது.

பருவகால மதில்
விவசாயம் செய்திட
திரைகடலோடி திரவியம் தேட
சொந்தங்கள் சேர்ந்து
ஒற்றுமை ஓங்கவும்
போராட்டம் இல்லாத
நாடாக மலரவும்
சமாதான தேவதையே
சத்தியமாய் ஒரு தரம்

சரித்திரம் படைத்திட
கட்டளை போடம்மா
கல்வியும் செல்வமும்
கணக்கின்றிப் பெருகட்டும்
கடமையும் உரிமையும்
காலத்தால் மலரட்டும்

குறையேதும் இல்லாத
நாடாக ஒளிரட்டும்
நிறைவான மனிதர்கள்
நித்திலம் கொழிக்கட்டும்

இன்னும் காயங்களாறாத
எம்மிதயத்தின் மீது கைவைத்துக் கேட்கிறோம்
எங்கள் வாழ்வின் மீது
இனியும் ஆணியறையாதீர்
இனியும் தீ மூட்டாதீர்

ஆர்.கவிதா.
இந்து நாகரிகத்துறை,
(1ஆம் வருடம்)
யாழ்.பல்கலைக்கழகம்)

# அன்னையே நூறாண்டுகள் வாழ்க

அளவை மண்ணிலே
அருணாசலத் தாய் அவதரித்து
ஆண்டுகள் நூறு......!........!!.......!!!

அருணாசலத்தாயே....
ஆயிரம், ஆயிரம் பிள்ளைகளை
இன்றும் கூட
ஈன்றெடுத்து
உயிர் மெய் எழுத்துக்களை
ஊட்டி வளர்த்து
எல்லையில்லா கல்விக்கடலில்
ஏற்றி விட்டு
ஐயம் போக்கி
ஒளி காட்டி
ஓட விட்ட ஓடம்போல்
ஔவையான அருணாசலத்தாயே!

கல்வி தந்தாய்
கவியும் தந்தாய்
அறிவு கொடுத்தாய்
ஆற்றலும் கொடுத்தாய்

பண்புகள் வளர்த்தாய்
பணிவுகளும் வளர்த்தாய்
கடமைகளை கற்றுத் தந்தாய்
கருணையும் கற்றுத்தந்தாய்

நேசம் ஊட்டி வளர்த்தாய்
நேயமும் ஊட்டிக் கொடுத்தாய்
உண்மையை உணரச்செய்தாய்

உறுதியாய் இருக்கச் செய்தாய்
சத்தியம் நிலைக்கச் செய்தாய்
சகிப்புத்தன்மையும் பெருகச் செய்தாய்
வீரம் விளையச் செய்தாய்
விவேகமும் வளரச் செய்தாய்
வெற்றி கொள்ளச் செய்தாய்
வெளியுலகையும் அறியச் செய்தாய்
வாழ்வும் மகிழச் செய்தாய்
வாழ்த்தும் பாடிக்கொடுத்தாய்

பத்துமாதம் சுமந்த தாய்க்கு மேல்
பத்து ஆண்டுகள் சுமந்து பல்கலைகள் கற்றுத்தந்த
அருணாசல வித்தியாலயத் தாயே
வாழ்க! வாழ்க!! வாழ்க !!!
இன்னும் பல நூறு ஆண்டுகள்
வாழ்க! வாழ்க !! வாழ்க!!!

M.வடிவழகன்
பழைய மாணவன்

# Computers and internet

A short history of how the internet begun, this remarkable network that nowadays spread all over the world with an amazing speed. We cannot imagine life without it any more. Let's see how it all begun!

In a rapidly advancing world. where the needs of communication and access to information are more than necessary elements, the Internet has become the solution. available to every person.

At the very beginning, the Internet was an experimental program for the American military, in the 60's. In this project, the military paid for the costs involved in researching a network named Arpanet, which connected universities and military bases. In 1974 the first independent communication hardware was completed, in essence the first versions of TCP and IP invented by Vincent Cerf and Robert Kahn. In the 80's the military renamed 'Internet."

The year 1990 marked the beginning of the Internet revolution: Tim Berners Lee created the World Wide Web (WWW, Web, W3) with the intention of:

a. Having a method of attaching a name to all the computers on the Internet.
b. Having a method of presenting documents on different computers using the same programs.
c. Having a method of tying together parts of the same document or different documents, on the same computer or using different computers.
d. The Server Web" for document storage, the Internet representing today, a network of sub networks, all connected to the server.
e. The 'Browser" intended for the use of presenting documents on the server. Marc Andriessen created the very first graphic Browser back in 1992; this browser 's name was 'Mozaic".

Later on, it was known as "Netscape".

The Internet can be described as an open system. Through 'Open System" we understand that the structure is no secret, meaning its creator has made the design detailed enough so that other people can come along and make their own products. Other examples of open systems are UNIX and Linux . Examples of privately owned systems are Microsoft Windows and Mac OS.

The Primary function of the Internet is the exchange of data between computers; to accomplish this, every computer of the Internet network has an IP address. The most common IP nowadays is the Ipv4 In the IPV 4 the address of the computer is in a row of 32 bits ( 2 to the power of 4 - bits) this is represented by 4 octets, for example: 151.23.40.3. There is also a version that uses 128 bits (2 to the power of bits ).

**Most IP addresses of the Internet can go into 4 classi fications.**

1. The first bit in the 32 is, 'O' and represents the class A; the next 7 bits show the network's address, while the last 24 bits indicate the computer's address in the network.

2. The first 2 bits out of the 32 are '10" and they represent class B, next 14 bits show the network's address, while the last 16 indicate the computer that is on the network.

3. The first 3 bits out of the 32are '1 10' and they represent class C, the next 21 bits show the network address, while the last 8 bits indicate the computer's address that is on the network.

4. The first 4 bits out of the 32are '1110" they represent class D, the next 28 bits are used to show a single address which, in this case, is called a multicast address.

IP addresses are difficult to memorize in numeric format, that's why a method of attaching the name through a domain system (the DNS - Domain Name System) was introduced . In essence, the DNS

represents a method of naming the computer (real or virtual ) through a network based on TCP/IP (on a type of Internet) using a hierarchy scheme.

**Example:** imap des kel.ac. uk is the name of the computer that is responsible for managing the electronic mail (IMAP) from a certain department (des. kel) belonging to a sub network Internet (ac) in Great Britain (uk) Every suffix from a name is called a domain. The relationship 'des kel. ac uk<ac.uk< ac.uk<uk' where '<' means, 'included in', and shows the hierarchical nature of the notation.

The determination of the IP address, coming from the name, is done by interrogating a server for the Domain name DNS = the Multitude of all this name - Servers

Some say that everything you might need you can find on Internet, and you can live forever just sitting in front of your computer. Well you won't live forever, but you can certainly do many things, like accessing information, enjoying yourself, and even buying your groceries.

Everything under the same name: Internet!

Thavakkumar Tharsha
Old Student.

# Advantages and Disadvantages of the Internet

Internet has been perhaps the most outstanding innovation in the field of communication in the history of mankind. As with every single innovation, internet has its own advantages and disad vantages. But usually greater magnitude of advantages outweighs its disadvantages.

During his evolution journey from Neanderthals to Homo erectus and then to Homo sapiens, man has come long way. Because of his continuous quest for more and more amenities and facilities, the nineties have seen a major turn around with the invention of computers. 10 years ago, the term internet was practically anonymous to most of the people. And today internet has become the most ever powerful tool for man throughout the world. The internet is a collection of various services and resources.

Although, many people still think e-mail and World Wide Web as the principle constituents of internet, there is lot more in store than e-mail, chat rooms, celebrity web sites and search engines. It also became the best business tool of modern scenario. Today internet has brought a globe in a single room. Right from news across the corner of the world, wealth of knowledge to shopping, purchasing the tickets of your favorite movie - everything is at your finger tips. Internet has great potential and lot to offer.... however, like every single innovation in science and technology, internet has its own advantages and disadvantages.

***Advantages Communication***

